
என்னுளே
நிறைந்தாய்
ஜெய்சக்தி

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : என்னுளே நிறைந்தாய் |
| ஆசிரியர் | : ஜெய்சக்தி |
| முதற் பதிப்பு | : டிசம்பர், 2004. |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| அச்சு எழுத்தளவு | : 10 புள்ளி |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| மொத்தப் பக்கங்கள் | : 192 |
| நூல் கட்டுமானம் | : சாதா அட்டை பைண்டிங் |
| பதிப்பாளர் | : ஸ்ரீ செல்வ நிலையம்<br>32/1-107/1, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.60.00**

| | |
|---|---|
| ஒளி அச்சுக் கோப்பு | : வேலன் லேசர்<br>சென்னை-18. ☎ : 94441-01753 |
| அச்சிட்டோர் | : கே.வி.எஸ். ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>சென்னை-14. |




# என்னுளே நிறைந்தாய்

# என்னுளே நிறைந்தாய்

1



சந்திரிகா பூஜையை முடித்துவிட்டு வெளியே வந்தாள். ''என்னம்மா, பூஜை முடிச்சாச்சா?'' என்று கேட்டுக் கொண்டே அப்பா கேசவன் வந்தார்.

மகள் கொடுத்த பிரசாதத்தைப் பயபக்தியுடன் வாங்கிக் கொண்டார்.

''டிபன் ரெடி!'' என்ற அத்தையின் குரல் கேட்டு இருவரும் டைனிங் டேபிளை நோக்கிப் போனார்கள்.

''என்னக்கா டிஃபன்? ஓ! பணியாரமா! தொட்டுக்க என்ன? மிளகாய்ச் சட்னியா? பேஷ் பேஷ்! ரொம்ப நல்லதாப் போச்சு!'' அப்பா சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கையிலே சந்திரிகா அத்தையை முறைத்துக் கொண்டிருந்தாள்.

''முறைக்காதேடி, கண்ணம்மா. அவனும் இந்தப் பத்தியச் சாப்பாட்டைச் சாப்பிட்டு நொந்து போய்க் கிடக்கான். இன்னைக்கு ஒரு நாள் விட்டுடியம்மா!'' அத்தை ரொம்பக் கெஞ்சலாய்ச் சொல்லவும், சந்திரிக்காவுக்கே ஒரு மாதிரியாகப் போனது...

''போ, அத்தை நீ. நான் மட்டும் என்ன அப்பா சாப்பிடக் கூடாதுன்னா நினைக்கிறேன். அவருக்கு ஆகாதுன்னுதானே சொல்றேன்,'' என்றாள்.

''சரி சரி, இன்னைக்கு ஒரு நாள் மட்டும் விட்டுடம்மா உனக்கு ஒரு கிஃப்ட் தர்றேன்'' என்று அப்பா ஆசை காட்டினார்.

"சரிப்பா. இன்னைக்கு ஒரு நாள் சாப்பிட்டுக்கங்க. ஆனா உங்க கிஃப்ட்டுக்காக இல்லை. ரொம்ப ஆசைப்படறீங்களே, அதுக்காக!" என்றாள் சந்திரிகா.

ஒரிரு நிமிடங்கள் அமைதியாகக் கழிந்தன.

"எம்மா, என்ன கிஃப்ட்ன்னு கேக்க மாட்டியா?" என்றார் அப்பா.

கேட்கலாம் என்றுதான் நினைத்தாள். பிறகு அப்பாவே சொல்லட்டுமே என்று முடிவு கட்டிக் கொண்டாள்.

"என்பா, உங்களால சொல்லாம இருக்க முடியுமா என்ன?" என்று சிரிக்க, மகளைச் சந்தோஷமாகப் பார்த்தார்.

"சரிம்மா. நானே சொல்லிடறேன். அன்னைக்கு நம்ம நகைக் கடைக்கு வந்தப்ப ரொம்ப ரசித்துப் பார்த்தியே, அந்த வைர நெக்லஸ்தாம்மா!" என்றார்.

சந்திரிகாவுக்கு நம்பவே முடியவில்லை. "நிஜமாவாப்பா?" என்று ஆச்சரியத்தில் ஆழ்ந்து போனாள். "எனக்கே எனக்காப்பா?"

"ஆமாம்மா. அத்தனையும் பொறுக்கி பெடுத்த வைரங்கம்மா!" என்ற அப்பாவைக் கொஞ்சம் கவலையுடன் பார்த்தாள் அத்தை.

"இப்ப எதுக்கப்பா வைர நெக்லஸ்!" என்ற சந்திரிகாவைக் கையமர்த்தினார் அப்பா. "இப்பப் போடாமே வேற எப்பப் போடறதாம்!" என்று வாயை அடைத்தார்.

மேற்கொண்டு பேச்சுக்கே இடம் வைக்காமல், அப்பா கையைத் துடைத்துக் கொண்டே எழுந்து போனார். அத்தை எழுந்து பின்னோடு போனாள்.

"எப்பா... ஏதோ குண்டுவெடிப்புக்கு அப்புறமாய் ஒன்றும் சரியில்லை என்று சொன்னே" என்று அத்தை கேட்டாள்.



"அக்கா பிஸினஸ் அப்படின்னா ஆயிரம் இருக்கும். அதுக்காகக் குழந்தைகளுடைய சந்தோஷத்தைக் கெடுக்கணுமா என்ன?" என்றார் கேசவன், காரில் ஏறிக்கொண்டே.

அவர் போவதைப் பார்த்துக் கொண்டே நின்ற அத்தைக்கு ஏனோ அன்று மனசு சரியில்லை.

அதற்கு அன்று மாலையே விடை கிடைத்தது.

* * *

"ஆமாடி நிஜமாய்த்தான்!" என்றாள் சந்திரிகா.

"சூப்பர் அப்பாடி உங்கப்பா!" என்று கொஞ்சம் பொறாமைப்பட்டாள் நீலா. பிறகு சொன்னாள்: "உனக்குப் புது வைர நெக்லஸ் கிடைச்சது ரொம்ப சந்தோஷம்தான். நான் இப்ப உனக்கு எதுக்குப் போன் பண்ணினேன் தெரியுமா? எனக்கு பர்த் டே வருது. அதுக்கு ஒரு டிரஸ் எடுக்கணும், வர்றியான்னு கேக்கத்தான்," என்றாள்.

"ஓ எஸ். போலாமே!" என்று புறப்பட்டாள் சந்திரிகா.

கோவை குமரன் சில்க்ஸில் கூட்டம் அந்த நேரத்தில் குறைவாக இருந்தது. நீலாவுக்குத் தேவையான பட்டுப் புடவையைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, பக்கத்திலே ஒரு கல்யாணக் கோஷ்டி பார்த்துக் கொண்டிருந்த புடவையைக் காண்பித்த நீலா, உன்னோட வைரநெக்லஸுக்கு ரொம்பப் பொருத்தமாய் இருக்கும் என்றாள்.

பட்டுப் புடவைகளின் அணிவகுப்பைப் பார்த்துக் கொண்டிருந்த சந்திரிகாவுக்கு ஆசையாகத்தான் இருந்தது அப்பா என்ன சொல்வாரோ என்று பயமாகவும் இருந்தது.

"என்னடி நீ, என்னமோ இப்படிப் பயப்படறே? உங்கப்பா என்ன சாதாரண ஆளா? கோயமுத்தூரிலேயே பெரிய நகை வியாபாரியின் மகள். ஒரு பட்டுப் புடவை வாங்க வேண்டாம்னு சொல்வாரா என்ன?" என்றாள் ராகினி.

''இத்தனை வம்பெதுக்கு? உங்கப்பாவுக்கு ஒரு ஃபோன் அடிச்சுக் கேட்டுரு,'' என்றாள் நந்தினி.

''இது யோசனை!'' என்று பாராட்டி ஏற்றுக் கொண்டார்கள் எல்லாரும். சந்திரிகாவும் அப்பாவுக்கு ஃபோன் போட்டாள்.

மகளின் குரலைக் கேட்டதும் அப்பா, ''சொல்லு கண்ணம்மா,'' என்றார்.

சந்திரிகா விஷயத்தைச் சொன்னதும், ''என்னம்மா நீ. இதையெல்லாம் கேட்டுகிட்டு. பிடிச்சா எடுத்துக்க வேண்டியதுதானே! இதை யெல்லாம் என்னைக் கேட்கணுமா என்ன? நீ ஃபோனைக் கடை ஓனர்கிட்ட கொடம்மா,'' என்றார்.

கடை ஓனர் சிரித்த சிரிப்பிலேயே அனுமதி கிடைத்தது புரிந்து போயிற்று. ரிசீவரைக் கீழே வைத்து, ''உங்கப்பா நல்ல ஆளம்மா!'' என்று சிரித்தார். சிரித்துக்கொண்டே எல்லாரும் நகர்ந்தபோது, சந்திரிகாவை மட்டும் அருகே அழைத்து, ''இதப் பாரும்மா, உன் பிரண்டுக்குப் பிடித்த புடவையையும் வாங்கி சர்ப்ரைஸா பிரஸண்ட் பண்ணச் சொல்லியிருக்கார்!'' என்றவுடன், சந்திரிகா அசந்து போனாள்.

பெருமையில் மனமெல்லாம் நிறைந்து போனது. தோழிகளோடு ஊர் சுற்றி விட்டு வந்தபோது வீடே கனத்த அமைதியில் ஆழ்ந்திருந்தது. அத்தையைக் கூட ஹாலில் காண வில்லை. கூர்க்கா ஓடி வந்தான். ''அம்மா! அய்யாவை ஆஸ்பத்திரியில் அட்மிட் பண்ணியிருக்கு. உங்களை உடனே குப்புசாமி ஆஸ்பத்திரிக்கு வரச் சொன்னாங்கள்,'' என்றான்.

இடி விழுந்தாற்போல நின்ற சந்திரிகாவைத் தோழிகள் தான் காரில் ஏற்றி அழைத்துப் போனார்கள்.

காரில் போகும்போது அன்று தோழிகளோடு சிரித்த சிரிப்புதான் இனிப் பல நாட்களுக்குக் கடைசியாகச் சிரித்த சிரிப்பாக இருக்கப் போகிறது என்று அப்போது புரியவில்லை.

• • •



''நிலைமை இவ்வளவு மோசமாகவா இருக்கிறது? ஏன் இவ்வளவு நாளாக மறைத்தீர்கள்?'' என்று கடுமையாகக் கடிந்து கொண்ட சந்திரிக்காவுக்குக் கடையின் மேனேஜர் பொறுமையாகப் பதில் சொன்னார்.

''அம்மா, உங்களுக்கே தெரியும், பிஸினஸ் வேறே, குடும்பம் வேறே என்ற பாலிஸி அப்பாவுக்கு உண்டு. அப்படியிருக்க இதை யெல்லாம் உங்க பார்வைக்குக் கொண்டு வர வேண்டிய அவசியம் என்ன?''

அவரது வாதத்தில் இருந்த உண்மைக்குச் சந்திரிகாவால் பதில் சொல்ல முடியவில்லை. அவர் மேலும் தொடர்ந்தார். ''இதை விட மோசமான நிலைமை யெல்லாம் இதற்கு முன்னாடி வந்தது உண்டு. அப்போவெல்லாம் அலட்டிக்காம அப்பா மீண்டது உண்டு!'' என்ற மேனேஜரின் பேச்சுக்குப் பிறகு சந்திரிகா நீண்ட சிந்தனையில் ஆழ்ந்தாள்.

அத்தை அப்பாவின் அருகில் ஆஸ்பத்திரியில் இருந்தாள்.

ஒரே வாரத்தில் தன்னுடைய நிலைமை தலைகீழாக மாறிப் போனது என்பது புரிந்தது. தோழிகளுக்கெல்லாம் அப்பாவுக்கு உடல்நிலை சரியில்லை என்பது மட்டும்தான் தெரியும். நிலைமையின் தீவிரம் தெரியாது.

தான் எதையெல்லாம் சமாளிக்கப்போகிறோம்? கடையை விழுங்கக் காத்திருக்கும் பணப் பிரச்சினையையா? இல்லை, உயர் ரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுக் கைகால் வராமல் விழுந்து கிடக்கும் அப்பாவையா? தான் எவ்வளவு பைத்தியக்காரி!

நல்ல வேளை, அப்பா ஒரு நாள் சொல்லியிருந்தார். ''சந்திரிகா! சிரிப்பது எல்லார் முன்னாடியும் சிரிக்கணும். அழுவது தனியாத்தான் அழணும்!'' என்று. பேச முடியாமல் கிடக்கும் அப்பாவை எதுவும் கேட்க முடியாமல் அவர் எப்போதாவது துண்டு துண்டாகச் சொன்ன விஷயங்களை வைத்துக் கொண்டு எத்தனை நாள் கடையை நடத்த முடியும்?

அப்படி அப்பா ஒரு நாள் சொன்னதுதான், மேனேஜர் ரொம்ப நம்பிக்கையானவர் என்று. அந்த நூலிழையைப் பிடித்துக் கொண்டு இப்போது ஒரு பெரிய பயணம் தொடங்கி விட்டாள். ஏதாவது ஒரு புள்ளியில் இருந்து தொடங்கித்தானே ஆக வேண்டும்?

''சரி தம்பு அய்யா. சொல்லுங்கள். கடன் எவ்வளவு இருக்கிறது. இருப்பு எவ்வளவு இருக்கிறது. கொள்முதல் எவ்வளவு தேவைப்படும்?''

பத்து நிமிடம் ஆழ்ந்த சிந்தனையில் இருந்த சந்திரிகா முகத்தை ஒருமுறை அழுந்தத் துடைத்துக் கொண்டு கேள்விகளை மடமடவென்று வீசியத்தைக் கண்டு தம்பு மனதுக்குள் வெகுவாகச் சிலாகித்துக் கொண்டார்.

இந்த நிமிடம் வரை 'முதலாளியின் பெண்ணாயிற்றே! அவளிடம் எப்படிப் பேசுவது? சின்னப் பெண்ணாக அதிவுரை கூறும் அளவுக்குச் சுதந்திரம் எடுத்துக் கொள்வதா? அல்லது முதலாளி என்ற அளவிலே ஒதுங்கி நிற்பதா?' என்ற குழப்பம் அவருக்கு மனதுக்குள் நிறைந்திருந்தது.

இளம் வயதிலே எவ்வளவு பெரிய சோதனையை எதிர் கொள்ள வேண்டிய நிலையிலே இருக்கிறாள் இந்தக் குழந்தை என்றெண்ணிய போது அவரது மனம் உருகியது. ஆனால் அப்பனைப் போலவே மகளும் யாரும் அனுதாபம் காட்டுவதை விரும்பவில்லை என்பதையும் இந்தப் பத்து நாட்களில் அவர் புரிந்து கொண்டிருந்தார்.

அவரும் ஒரு முதலாளியிடம் எப்படிப் பேச வேண்டுமோ, அப்படி 'முதலாளியம்மா' என்று ஆரம்பித்தார். உடனே தயங்காமல் அவரைக் கையமர்த்தினாள். ''பாருங்க தம்பு அய்யா. நீங்க ரொம்ப நாளா இந்தக் கடையில இருக்கீங்க. நீங்க என்னை முதலாளியம்மானெல்லாம் கூப்பிட்டு என்னை அந்நியப்படுத்திராதீங்க. ஒரு குடும்பமா நாம இயங்கி இப்ப



கடையைக் காப்பாத்தணும்!'' என்று அவரது இரு கைகளையும் பிடித்துக் கொண்டாள்.

அந்த அன்பில் தம்பு கரைந்து போனார். கண்கள் கலங்க, ''அம்மா! நான் இருக்கேன்மா. நீங்க கவலையே படாதீங்க. நாம ஜெயிப்போம்மா, ஜெயிப்போம்!'' என்றார்.

இரண்டு பேரும் கண்களைத் துடைத்துக் கொண்டு திரும்பியபோது, அத்தையும் கண் கலங்க நின்றிருந்தாள்.

2



அப்பாவுக்கு உடல் நிலை சரியில்லாமல் போன அன்று மிளகாய்ச் சட்டினியைக் கொடுத்து நாந்தான் தம்பியோட கைகாலை முடக்கிட்டேன் என்று அழுத அத்தையை யாராலும் சமாதானப் படுத்த முடியவில்லை.

ஏதோ ஒரு ஃபோன் கால் வந்தது. அதை அட்டெண்ட் பண்ணி ரிசீவரை வைத்த நொடியிலேயே நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அப்பா சாய்ந்தார். அப்போதுதான் இப்படியானது என்று தம்பு சமாதானப்படுத்திய பின்தான் அத்தை ஒய்ந்தாள். என்ன போன்கால் அது என்று யாருக்கும் தெரியவில்லை. அதைப் பற்றி மேற்கொண்டு பேசுவதற்கு நேரம் கிடைக்கவில்லை. அப்பாவின் உயிரைக் காப்பாற்றுவதே பிரம்ம ப்ரயத்தனமாய்ப் போய்விட்டது.

எல்லாரும் அதே நினைவாய் அலைந்து கொண்டிருந்தார்கள்.

இப்போது அந்த நினைவு வந்தவுடன் தம்புவிடம் அதைப் பற்றி விசாரித்தாள். அவருக்கும் தெரியவில்லை.

கார் இப்போது ஆஸ்பத்திரியை நோக்கிப்போய்க் கொண்டிருந்தது. திடீரென்று சந்திரிகாவுக்கு ஒரு சந்தேகம் வந்தது. ''ஏன் சார், அந்த வைர நெக்லஸுக்கு பே பண்ணியாச்சா?'' என்று கேட்டாள். ஆச்சம்மா என்ற சுருக்கமான அவரது பதிலைக்

கேட்டுக் கேள்விக்குறியுடன் திரும்பினாள். அவரது பார்வை டிரைவரின் மீது நிலைத்திருப்பதைப் பார்த்தவுடன் டிரை வரின் முன்னால் அவர் ஏதும் பேச விரும்பவில்லை யென்பதைப் புரிந்து கொண்டாள்.

அனுபவத்தின் முதல் பாடம் அன்று கிடைத்தது. காரை விட்டு இறங்கிப் போகையில் தம்பு சொன்னார். "அம்மா! உங்களுக்கு வாங்குகிற எந்தப் பொருளுக்கும் உடனடியாகப் பணம் பட்டுவாடா பண்ணுவதை அவர் ஒரு பாலிஸியாகவே வைத்துக் கொண்டிருந்தார்," என்று.

பேசிக் கொண்டே போனபோது அப்பாவின் அறையை விட்டு ஒரு இளம் வயதுப் பெண் வெளியே வந்து கொண் டிருந்தாள். வந்த வேகத்தில் சந்திரிகா மேல் மோதிக் கொண் டாள். 'ஓ சாரி! சாரி!' என்று இரண்டு மூன்று முறை சொல்லி விட்டுப் போனாள். அந்தப் பார்வையில் ஏதோ இருப்பதாகச் சந்திரிகாவுக்குத் தோன்றியது. பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

அப்பாவுக்கு உடல்நிலை சரியில்லாமல் போனாலும் போனது. எதைக் கண்டாலும் தனக்கு ஒரு உள்ளர்த்தம் தோன்றுகிறது என்று சலிப்புடன் எண்ணிக் கொண்டு அப்பாவின் அறைக் கதவைத் திறந்தாள்.

'ஹலோ' என்று குரல் கொடுத்தான் பிரேம். காலையில் இருந்து முயற்சி செய்து கொண்டிருந்தான்.

ஏன் யாரும் எடுக்க மாட்டேன் என்கிறார்கள்?

மீண்டும் ஒரு முறை முயற்சிப்போம் என்று முயற்சித்தான்.

தம்பு லைனில் கிடைத்தார்.

"சார்! உங்களுக்கு விஷயம் தெரியாதா?"

"என்ன விஷயம்?"

"அப்பா ஆஸ்பத்திரியில் இருப்பது!"

பிரேம் அதிர்ந்து போனான். "அப்படியா? எப்போ ருந்து?" என்றான்.



"போன பத்தாம் தேதி மத்தியானம் மயங்கிட்டாரு. ஸ்ட்ரோக்!" என்றார் தம்பு.

"எத்தனை மணிக்கு?" என்றான்.

"இரண்டு மணிக்கு!" என்றார்.

ஒரு நிமிடம் பிரேமுக்கு ஒன்றும் ஓடவில்லை.

தான் நினைத்த மாதிரியேதான் போயிருக்கிறது. என்ன செய்வது? தன் பங்கிலிருந்து ஏதாவது உதவி தேவையிருக் குமோ?

"என்ன சார், நான் ஏதாவது உதவிக்கு வர வேண்டி யிருக்குமோ?" என்றான்.

"தேவையிருக்கலாம்னுதான் நினைக்கிறேன். எதுக்கும் அம்மாவிடம் பேசிவிட்டுச் சொல்கிறேன்."

"அம்மாவா, அது யாரு?" என்றான் ஆச்சரியத்துடன்.

"நம்ம அய்யாவோட பொண்ணு."

"ஓ! அப்படியா? சரி, நீங்க எப்ப வேணும்னாலும் கூப் பிடுங்க."

ரிசீவரைக் கீழே வைத்த போது இப்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்குத் தான்தான் காரணம் என்று அவன் உள்மனது அவனைக் குடைய ஆரம்பித்தது.

பிரேம்குமார் கோவையின் ஒரு புகழ் பெற்ற நிதி ஆலோ சகர். இளம் வயதிலேயே பல நலிந்த தொழில் நிறுவனங் களைத் தூக்கி நிறுத்திய திறமைசாலி. நூதனமான ஐடியாக் களைக் கொடுத்து மூடப் பட வேண்டிய நிலைமையிலிருந்த ஒரு நிறுவனத்தைக் காப்பாற்றுவதற்காக வடநாட்டுக்குப் போய் விட்டு இன்று காலையில்தான் வந்திருந்தான். அதனால்தான் திருமகள் ஜுவெல்லரியின் நிலைமை எதுவுமே அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

அன்று மாலை கேசவன் நிலைமையை ஆஸ்பத்திரியில் போய்ப் பார்த்ததுமே அவள் மனதுக்குள் ஒரு தீர்மானம் செய்து கொண்டு அதற்கான வழி முறைகளை ஆராயத் துவங்கினாள்.

சந்திரிகா கடைக்கு வர ஆரம்பித்துப் பத்து நாட்களாகி விட்டன. அப்பாவின் உடல் நிலையில் கொஞ்சம் முன்னேற்றம் தெரிந்தது.

கோமா நிலையிலிருந்து தேறி வந்திருந்தார் என்றாலும், இன்னும் கைகால்கள் முழுமையாகச் செயல்பட ஆரம்பிக்கவில்லை. கைகால்கள் செயல்பட ஆரம்பிப்பது என்பது எப்போது முடியும் என்று இப்போதைக்குச் சொல்ல முடியாது என்று டாக்டர் சொல்லிவிட்டார்.

வீட்டில் வைத்துப் பராமரிக்கலாம் என்று முடிவு கட்டிக் கொண்டாள் சந்திரிகா. தீவிரமான யோசனையில் ஆழ்ந்திருந்த சந்திரிகாவைச் 'சந்திரிகாம்மா' என்ற தம்புவின் குரல் இந்த உலகுக்கு அழைத்து வந்தது.

"அம்மா! இவர் மிஸ்டர் பிரேம். நம்ம அப்பாவுக்கு ரொம்ப வேண்டியவர்" என்று ஒருவரை அறிமுகப்படுத்தினார்.

சந்திரிகா வணக்கம் சொல்லியபடியே தன் எதிரே அமர்ந்த இளைஞனை அளவெடுத்தாள்.

சிவந்த நிறம். அளவெடுத்தாற் போன்ற மீசை. ஒளிரும் கண்கள். லேசான அரைப் புன்னகையுடன் அமர்ந்த அவனும் பதிலுக்குத் தன் முகத்தை அளவெடுப்பது போல் பார்ப்பதை உணர்ந்து முகம் சிவந்தாள்.

உடனே அவன் பேச ஆரம்பித்தான். "மேடம், உங்க அப்பா எப்பவாவது ஒரு விஷயத்துக்கு இரண்டு மூன்று பாஸிபிலிட்டிகள் இருக்குதான்னு பார்க்கணும்னு நெனைச்சா என்னையும் ஆலோசனை கேக்கறது உண்டு!" என்றான்.



"ஆமா. ஆனா அதுக்கு நீங்க ஃபீஸ் வாங்கிடுவீங்களோ!" என்றாள் சந்திரிகா. கலகலவென்று அவன் வாய் விட்டுச் சிரித்தவுடனே அது கொஞ்சம் சந்திரிகாவையும் தொற்றிக் கொண்டது.

"கரெக்டாச் சொன்னீங்க!" என்றான் மீண்டும்.

"மேடம் புதுசாத் தொழில்ல இறங்கியிருக்கீங்க. தம்பு சார் இருக்காரு கூட. இருந்தாலும் போட்டி நிறைஞ்ச உலகம். கொஞ்சம் அசந்தீங்கன்னா போதும். ஜாக்கிரதை!" என்ற அவன் வார்த்தைகளைக் கேட்டவுடன் ஒரு நிமிடம் திடுக்கிட்டாள்.

சுருசுருவென்று கோபம் ஏறியது. இவன் என்ன எச்சரிக்கிறானா? கவலைப்படுகிறானா? அவனை நேருக்கு நேராகச் சில விநாடிகள் பார்த்தாள்.

அவனும் சளைக்காமல் பார்த்தான். அவன் கண்களில் நிஜமான கவலை தெரிவதாகத் தோன்றியவுடன், பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.


"மேடம் - எப்போது வேண்டுமானாலும் உதவி செய்ய நண்பன் நானிருக்கேன். என்னை நம்பலாம். நான் ஏதோ உங்களை விட அறிவாளி என்ற எண்ணத்தில் இதைச் சொல்லவில்லை. உங்க அப்பாவுக்கு நான் செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் ஒரு சமயம் பெரிய உதவியொன்று எனக்குச் செய்திருக்கிறார். சரிங்களா?" என்றான்.

"அப்ப ஒண்ணு பண்ணுங்க. நாளைக்குக் காலையிலே நான் சொல்ற டைமுக்கு வரணும், சரியா?" என்றாள்.

"ஓ.கே. மேடம்."

"அப்பப் பத்துமணிக்கு வந்துடுங்க!"

"டன்!" என்று போலியாகக் குனிந்து வணக்கம் செய்து விட்டுக் கிளம்பினான் பிரேம். அவள் சிரித்தாள்.



## 3

கட்டடத்தைச் சுற்றிப் பார்த்தார்கள் பிரேம் குமாரும், சந்திரிகாவும், தம்புவும். தரைத்தளம் தவிர - மூன்று மாடி. ஒவ்வொரு தளத்திலும் நான்கு பெரிய அபார்ட்மென்ட்ஸ். இரண்டு பெட்ரூம் ஒரு ஹால், ஒரு கிச்சன், சின்னதாக ஒரு ஸ்டோர் ரூம் என்று... லிப்ட் கூட இருந்தது. அப்பா இரண்டு வருடத்துக்கு முன்பு கட்டி முடித்தது.

கீழே கார்கள் நிறுத்துவதற்கு இடம் போக, இரண்டு அபார்ட்மென்ட்கள் காலியாக இருந்தன. ஒன்று அலுவலகத்துக்கு என்றும் ஒன்று கெஸ்ட் ஹவுசாக உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்றும் சொல்லிக் கொண்டிருந்தார். இன்னும் கொஞ்சம் வேலைகள் இருந்தன. ஏனோ விட்டு வைத்திருந்தார்.

''அம்மா! ஆனா எல்லாத்தையும் போக்கியத்துக்குத்தான் குடுத்திருக்காரு!'' என்றார் தம்பு.

''ம்ஹூம்... எவ்வளவுக்கு?'' என்றாள் சந்திரிகா.

''ரெண்டு லட்சம்!'' என்றார்.

''ரொம்பக் குறைவான அமௌண்ட்டா இருக்கே!'' என்றான் பிரேம்.

''ஆமா.. அய்யா எப்பவுமே பணத்தைப் பெரிசா நினைக்க வில்லையே...'' என்றார் தம்பு.

சந்திரிகா நீண்ட யோசனையில் ஆழ்ந்தாள். பிறகு பிரேம் குமாரிடம் கேட்டாள்.

''ஏன் சார்.. உங்களுக்குத் தெரிஞ்ச ஹவுசிங் சொசைட்டியிலே ஏதாவது லோன் ஏற்பாடு செய்ய முடியுமா?'' என்றாள்.

''ம்.. ஹோம்.. இம்ப்ரூவ்மென்ட் லோன் அது... இதுன்னு... இருக்கு... ஆனா... அபார்ட்மென்ட்டுக்குத்தருவாங்களான்னு தெரியலை... ஆனா... அந்த பங்களாவுக்கு வாங்கலாம்னு நெனைக்கிறேன்.'' என்றான்.



ஆலோசித்தார்கள். சற்றுக் கழிந்து அவன், ''நான் எப்படி யாவது ஏற்பாடு செய்யறேன். எவ்வளவு வேணும்?'' என்றான்.

''பதினைந்து லட்சம்...'' என்றாள். பிறகு சட்டென்று திரும்பி, ''அங்கிள்! இந்த அபார்ட்மென்ட்ஸ் காலி செய்யறதுக்கு ஏதாவது கண்டிஷன் உண்டா என்ன?'' என்றாள்.

''இல்லம்மா... பணத்தைக் குடுத்தா...ரெண்டு மாச நோட்டீஸ்ல காலி செய்யணும். அவ்வளவுதான்,'' என்றார்.

''ம்...'' என்றாள். மீண்டும் யோசித்தாள்.''

''என்னதான்... ஐடியா வச்சிருக்கீங்க சந்திரிகா?'' என்றான் பிரேம்குமார், ஆச்சரியமாக.

''இல்லை சார். நல்லா யோசிச்சுப் பாருங்க...ஒவ்வொரு வீட்டுக்குக் குறைந்தது ஐயாயிரம், ஆறாயிரம் வாடகை... வரும். இப்ப... பதினைந்து லட்சம்... வாங்கி, ஏழு வீட்டைக் காலி செய்வோம்.

''ஏழுவீட்டுக்கும் நாப்பதாயிரம் அட்வான்ஸ் குடுப்பாங்க. அதை வாங்கி மேலும் இரண்டு அபார்ட்மென்ட்ஸ் காலி செஞ்சர்லாம்.''

''தட்ஸ் எ பிரில்லியன்ட் ஐடியா!'' என்றான் பிரேம்குமார் வியப்புடன்.

''இருங்க. நான் இன்னும் முடிக்கலை... அப்ப... ஒன்பது வீடு நம்ம பொசஷன்ல வந்துரும். ஒன்பது வீட்டுக்கும் சேர்த்து ஐம்பதாயிரத்துக்கு மேலே வாடகை வரும். டென் இயர்ஸ் கணக்குல லோன் போட்டா எவ்வளவு லோன் கட்ட வேண்டி வரும்?''

''மே... பி... பதினைந்தாயிரம்.''

''இருபதினாயிரம்னே வைங்களேன். மீதி முப்பதினாயி ரத்தில், பதினைந்தாயிரத்தை வீட்டுக்கு... பதினைந்தாயிரம்

சேமிப்புன்னு வச்சா... மீதி வீடுகளையும் கொஞ்ச நாள்ல மீட்டரிலாம்," என்றாள்.

கப்பர்ப்... கப்பர்ப்... என்று சிலாகித்துக் கொண்டான்.

கார் ஆஸ்பிட்டலை அடைந்தது. டாக்டர் ராம்பிரகாஷ் எதிரிலேயே வந்தார்.

"என்னம்மா... சந்திரிகா, எப்படி இருக்கே?" என்று வரவேற்றார். பிரேம்குமாரைப் பார்த்து, "டேய்... நீ எங்கே... இங்கே?" என்றார்.

"அங்கிள்... கேசவன் சார் எனக்கு ரொம்ப க்ளோஸ். எப்படி இருக்கார்?" என்றான் கவலையுடன்.

"கவலைப்படாதேடா... கண்டம் தாண்டிட்டார்... ஆனா... கைகால்கள்தான் கொஞ்சம் மெதுவாகச் செயல்பட ஆரம்பிக்கும். ஆனா...நல்ல வில் பவர்... உள்ளவராச்சே... சீக்கிரம்... தேறிடுவார். என்னம்மா... சந்திரிகா! மனுஷன் தன்னைச் சரியாகவே கவனிக்கக்கலை போல இருக்கு. நீ கொஞ்சம் கவனிக்கணும்!" என்றார், மிகவும் சீரியஸான குரலில்.

சந்திரிகா குற்ற மனப்பான்மையுடன் இருந்தாள். "அங்கிள்! இப்படி யெல்லாம் ஸ்ட்ரெயின் செஞ்சு, சொத்து சேர்க்கலைன்னு யார்... கேட்டா... அவரு மிஞ்சினாப் போதும் அங்கிள். வேறெதுவும் வேண்டாம்!" என்ற சந்திரிகா சற்றுக் கலங்கி விட்டாள். கண்கள் குளமாகி விட்டன.

"நோ...நோ... உன்னை ரொம்ப போல்ட்ன்னு பெருமையா சொல்லிக்கிட்டிருக்கேன். கண்ணைத் துடை... சியர் அப்..." என்று தேற்றினார் டாக்டர்.

கண்களைத் துடைத்துக் கொண்டு சந்திரிகா சிரித்தாள். அதைப் பார்த்துக் கொண்டிருந்த பிரேம் குமார் அவள் அழுத கண்களைப் பார்த்துத் தனது மனது கிடந்து தானே ஏன் தவிக்கிறது என்று நினைத்துப் போனான்.



அப்பாவைப் பார்க்கப் போனார்கள். கோமாவிலிருந்து மீண்டு விட்டார் என்றார்கள்.

லேசாகக் கண்களைத் திறந்து பார்த்தார். சந்திரிகாவைப் பார்த்ததும், முகம் மலர்ந்தது.கண்களில் கண்ணீர் நிறைந்தது. கன்னக் கதுப்புக்கள் துடித்தன.

அப்பா... என்று அவருடைய செல்ல மகளாய் அவர் முகத்தையும் கன்னத்தையும் சந்திரிகா வருடித் தடவியபோது லேசாகச் சிரிக்க முயன்றார். இடது பக்கம் அசையவில்லை. வலது கையால் தன் மார்பின் மேல் முகம் வைத்து அழுகிற மகளின் தலையைத் தடவிக் கொடுத்தார். தட்டிக் கொடுத்தார்.

அருகில் இருந்த அத்தையும் நெகிழ்ந்து நின்றாள். கண்களைத் துடைத்துக் கொண்டாள். தம்பு அவரிடம், 'ஐயா... சின்னம்மா... தான் கிளப்புறாங்க... ஒண்ணும் கவலைப் படாதீங்க... பிரேம் வேற வந்துட்டாரு.. நீங்க உடம்பு நல்லா தேறி வந்தாப் போதும்... பாப்பா... எல்லாத்தையும், சரி பண்ணிடும்," என்றார்.

அப்படியா என்பது போல, அவர் கண்களில் ஆச்சரியம் தோன்றியது. அப்பாவின் வலக்கையைத் தன் கையில் வைத்துக் கொண்டு அமர்ந்து கொண்டாள். அந்த இடைவெளியில் தம்புவை அழைத்துக் கொண்டு பிரேம்குமார் எங்கோ போய் விட்டு வந்தான்.

ஒரு மணி நேரம் அப்பாவிடம் - அவர் பதில் பேச முடியா விட்டாலும் - தான் செய்கிற முயற்சிகளை யெல்லாம் சொன்னாள். அவர் கண்களில் வியப்புத் தெரிந்தது

பிரேம் குமாரும், தம்புவும் வரவும், "சரிம்மா... நீ புறப்படு," என்பது போல் சைகை செய்தார்.

அப்பாவின் தலையைத் தடவிக் கொடுத்து, நெற்றியில் முத்தமிட்டு... அவள் கிளம்புவதைப் பிரேம்குமார் ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

சற்று நேரத்துக்கு முன்... தம்பு சார் சொன்னது நினைவுக்கு வந்தது. "அருமையான பெண்... பிரேம்... ரொம்ப தைரியமா நிலைமையைச் சமாளிக்குது... இப்பதான் டிகிரி முடிச்சிருக்கு... இன்னும் ரிசல்ட் கூட வர்லே... அவங்கப்பா மாதிரியே... தைரியம்!" என்றார்.

இப்போது அவள் காட்டுகிற பாசத்தின் வெளிப்பாட்டையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

திரும்ப வரும்போது சற்றே மௌனமாகவே வந்தார்கள். சற்று தூரம் வந்தவுடன் பிரேம்குமார் -

"சந்திரிகா, ஹவுசிங் சொசைட்டி ஆட்களைப் பார்த்துட்டு வந்திருக்கேன்." என்றான்.

"அதுக்குள்ளேயா?" என்றாள்... ஆச்சரியமாக...

"ஆமா, இப்ப அதுக்குத்தான் போனோம்..." என்றான்.

"ஓ.கே... பண்ணிரலாம்... இல்லைன்னாலும்... இன்னும் ரெண்டு மூணு... பிரைவேட் ஃபைனான்ஸ் இருக்கு. ஏற்பாடு செஞ்சிரலாம்..." என்றான்.

சந்திரிகா அப்போது... "ஏன் தம்பு சார்... நம்ம பங்களாவைக் காலி பண்ணிட்டு கீழே அபார்ட்மெண்ட்ஸ்க்கு வந்தர்லாமா?" என்றாள்.

"ஏம்மா?"

"இல்லே... கடையில சரக்கு ரொம்பக் குறைவா இருக்கு... இன்னொரு பத்து லட்சத்துக்குச் சரக்குப் போட்டா நல்லாயிருக்கும்..." என்றவள், திடீரென்று -

"ஒண்ணு செய்ங்க. என்னோட வைர நெக்லஸை வித்துடுங்க... இன்னும் ஒரு தடவை கூட யூஸ் பண்ணலை. அப்புறம் என்னோட ஜுவெல்ஸ் எல்லாமே புதுசாத்தான் இருக்கு... ஷோ கேஸ்ல மாட்டுங்க!" என்றாள்...



"அம்மா... பர்ஸனல்... நகைகளை..." என்று தம்பு தயங்கினார்.

"அங்கிள்... யோசிக்காதீங்க... நானும் ஒண்ணும்... நகைகளை விரும்பிப் போடறதில்லை... தூங்குது எல்லாம். இங்க வியாபாரத்துக்காவது பயன்படட்டும்..." என்றாள்.

"உண்மைதான்," என்று தம்பு ஒத்துக் கொண்டார்.

"அப்பா இல்லாம நொடிச்சுப் போச்சுங்கற பேச்சு வரக் கூடாது. அவரு கடைக்கு வரும்போது பர்...பெக்டா கடையை அவர் கைல குடுக்கணும்..." என்றாள்.

தம்புவும், பிரேமும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

தம்புவை வழியில் இறக்கி விட்டார்கள்.

பிரேமும் அவளும் மட்டும் போய்க்கொண்டிருந்த போது,

"சந்திரிகா... நான் கொஞ்சம் பணம் தந்தா... வாங்கிப்பீங்களா?" என்றான்.

"எவ்வளவு?" என்றாள்.

"மே...பி... ஒரு ... பைவ் லாக்ஸ்!" என்றான்.

அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

"இன்ட்ரஸ்ட்... வாங்கிப்பீங்களா?" என்றாள்.

"நோ... ஐ' ம் நாட் இன்ட்ரஸ்டட்!" என்றான் அவன் சிரித்துக் கொண்டு. அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். "தென்... ஐம் ஆல் ஸோ நாட் இன்ட்ரஸ்டட்!" என்றாள்.

அவன் ஒரு நிமிடம் திகைத்து விட்டான். "ஓ.கே. ஓ.கே. வாங்கிக்கறேன். ஆனா இப்ப வேண்டாம்... பிஸினஸ் ஸ்டெடியாகிப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் போது... ஓ.கே." என்றான்.

"ம்... சரி" என்று அவள் அரை மனதாய் ஏற்றுக் கொண்டாள்.

"மிஸ்டர்... பிரேம்..." என்று ஏதோ ஆரம்பித்தபோது,

"ஹலோ... நான்தான் ஃபிரண்ட்ன்னு சொல்லிட்டேனே... அப்புறம் என்ன... மிஸ்டர் பிரேம்..." என்றான்.

அவள் புன்னகைத்தாள்.

"ஓகே... பிரேம்... அப்பா இன்னைக்குக் கொஞ்சம் தெளிவா இருந்தாங்க. சீக்கிரம் வீட்டுக்குக் கூட்டிட்டு வந்தர்லாம்னு இருக்கேன்..." என்று தனது திட்டங்களை அவனுடன் பகிர்ந்து கொண்டாள்.

கார் வீடு நோக்கிப் போகாமல் வேறெங்கோ... போய்க் கொண்டிருந்ததைக் கவனித்து -

"எங்க போறோம்?" என்றாள்.

"அதுதான்... அந்த ஹவுசிங் சொஸைட்டி ஃபிரண்டைப் பார்த்தர்லாம்," என்றான் பிரேம்குமார்.

போனார்கள். பேசினார்கள். அவன் கேட்ட தொகைக்கு ஒத்துக் கொண்டார்கள்.

வெளியே வந்தபோது சந்திரிகாவின் மனம் லேசாகி இருந்தது. ஓரளவு நிலைமையைச் சமாளித்து விடலாம் என்று தோன்றியது. முகம் மலர்ந்திருந்தது.

ஓரக் கண்ணால் அவள் முகம் மலர்ந்த விதம் பார்த்துக் கொண்டான் பிரேம். சற்று தூரம் மௌனமாகப் போனபின்,

"தாங்க்ஸ்... பிரேம்..."என்றாள் ஆத்மார்த்தமாய்.

அவன் அவள் முகம் பார்த்துப் புன்னகைத்தான்.

"சும்மா... வெறும் தாங்க்ஸ்தானா? ஒரு ஐஸ்கிரீம்... வாங்கித் தர்றது... அட... ஒரு கப் காஃபி வாங்கித் தர்றது..." என்றான்.



அவள் கலகலப்பாகச் சிரித்தாள்.

"அடேயப்பா... பெரிய ஃபைனான்சியல் அட்வைசர்... உங்களுக்கு வெறும் காஃபியா... வாங்க, எனக்குப் பசிக்குது... சாப்பிடவே சாப்பிடலாம்..." என்றாள்.

அன்னபூர்ணா ஹோட்டலுக்குக் காரைத் திருப்பினான். டிஃபன் வாங்கிக் கொடுத்தான்.

சற்று நேரம் கலகலவெனப் பேசினார்கள். சிரித்தார்கள். அவன் நகைச்சுவைக்கு அவள் விழுந்து விழுந்து சிரித்தாள். பிறகு...

"அப்பாடா... இன்னைக்குத்தான்.. அப்பாவைச் சுயநினைவோட பார்த்ததுக்கப்புறம்தான் சிரிக்கவே தைரியம் வருது..." என்றாள்.

அவன் அவளைப் பரிவாகப் பார்த்தான். "புரியுது... சந்திரிகா... நல்லாப் புரியுது... நானும் இது மாதிரி... ஒரு சிச்சுவேஷன்ல இருந்திருக்கேன்..." என்றான்.

அவள் கேள்விக் குறியுடன் பார்க்க... "அதெல்லாம் இன்னொரு நாளைக்குச் சொல்றேன்," என்றான். பிறகு ஆழ்ந்த குரலில் -

"சந்திரிகா நான்... ஒன்று சொன்னால் கேட்பீங்களா?" என்றான்.

"அதுக்கு சார்ஜ் பண்ணாம இருந்தாச் சரி..." என்றாள் சிரித்தபடி.

அவன் சிரித்தான். "அதெல்லாம் ஆட்களைப் பொறுத்து மாறுபடும்!" என்றான்.

"ஏன், நாங்க என்ன இலவச கேஸா?" என்றாள் குறும்பாக.

"இலவச கேஸ் இல்லை... ரொம்ப வேல்யுபிள் கேஸ். மதிப்பு மிக்கவர்..." என்றான்.

"தாங்க்ஸ்!" என்று சிரித்தாள்.

"நிஜமாத்தான்... சந்திரிகா.. ஐ லைக் யு... அண்ட் யுவர் போல்ட்னெஸ்... எவ்வளவு அழகாகப் பிரச்சினைகளைச் சந்திக்கறீங்க..." என்று ஆழ்ந்த குரலில் பாராட்டினான்.

அவள் முகம் மலர்ந்தது... மீண்டும் நன்றி சொன்னாள்.

"அப்பா மட்டும் தேம்பாயிட்டா போதும். யோசிச்சுப் பாருங்க இந்த அஸெட்ஸ் எல்லாம்... அவரில்லேன்னா... எதுக்காம்?" என்றாள்.

அவனும் அதை ஏற்றுக் கொண்டான்.

பிறகு, "என்னமோ சொல்ல வந்தீங்களே?" என்றாள்.

"ஆமா...சந்திரிகா. இந்த பங்களாவைக் காலி செய்யறேன்னு சொன்னீங்களே... அது வேண்டாம். அது ஏதோ... நீங்க தொழில்ல... ரொம்ப கீழே போன மாதிரி தோற்றத்தை ஏற்படுத்திரும்... நல்லவேளை... உங்களுக்குச் சொத்துக்கள் இருக்கு... அதை வைச்சு மேனேஜ் பண்ணவும் தெரிஞ்சிருக்கு... யு கேன் மேனேஜ்!" என்றான்.

அவள் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். பிறகு யோசனையில் ஆழ்ந்தாள். அவன் தொடர்ந்தான்.

"நீங்க அபார்ட்மெண்ட்டுன்னு சொன்னா நிலைமை மோசம்னு அப்பா மேலும் அப்செட்டாகலாம்... இல்லையா?" என்றான்.

"ஆமாம்!" என்றாள் உள்ளடங்கிய குரலில்.

"அதுக்கு நீங்க எங்கிட்டயே பணம் வாங்கிக்கலாம்..." என்றான்.

"யோசிக்கறேன்..." என்றாள்.

"அப்பாடா... யோசிக்கறேங்கறதே பெரிய விஷயம்..." என்றான் சிரித்தபடி.

சற்று கழித்து... "ரொம்பத் தேங்க்ஸ் பிரேம்... நீங்க எவ்வளவு இன்ட்ரஸ்ட் காட்டறதுக்கு" என்றாள்.



"அது என் கடமை!" என்றான். "மேடம்... உங்க அப்பா... எனக்கு ஒரு பெரிய உதவி செய்திருக்கார்ன்னு சொன்னேனே..." என்றான்.

அவள் முகம் பெருமையால் மலர்ந்தது.

"ஆமா... அப்பா... யார் யாருக்கோ... சத்தமே இல்லாமல் உதவி செய்வார்...கேட்டா நாலுபேர் மனசார வாழ்த்தினா... நீ நல்லாயிருப்பியேம்மா... என்பார்... ஆனா... அவரைப் பத்தி யோசிக்கவேயில்லை..." என்றாள்.

"அப்பாவுக்கு என்ன வயசு?" என்றான்.

"நாப்பத்து நாலு... ரொம்ப சின்ன வயசிலேயே கல்யாணமாம். அம்மாதான் எட்டு வருசத்துக்கு முன்னாடி... ஆக்ஸிடென்ட்ல அடிபட்டு ஆறே மாசத்துல இறந்துட்டாங்களே... எனக்காக... எனக்காகன்னே வாழ்ந்துட்டாரு...!" என்றாள்... அப்பாவின் நினைப்பே அவள் முகத்தில் இளக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

"ரொம்ப கிரேட்தான்... சந்திரிகா... அவரு... ஒண்ணுமில்லே... சமீப காலமா...லேசா... ஒரு லேடி... என்னை ரொம்ப இம்ப்ரெஸ் செய்றாங்க... அவங்க நினைப்பு வரும்போது எனக்கே ஒண்ணும் ஓடறதில்லை... அவரு முப்பத்தாறு வயசிலேயிருந்து... கட்டுப்பாடா இருக்கறதுங்கறது கஷ்டம்தான்... ஹி இஸ் க்ரேட்!" என்றான்.

அதற்குள் சந்திரிகா, "அவரை விடுங்க... அது யார் பிரேம், உங்களை இம்ப்ரெஸ் பண்ணின ஆள்...?" என்று கேலி செய்தாள்.

அவன் சட்டென்று எழுந்தான்... அவளுக்கு முகம் காட்டாமல் திரும்பியபடி, "கண்டுப்பா... அது யாரென்று முதல்ல உங்ககிட்டதானே சொல்லப்போறேன்... நான் நினைக்கறது நடக்கறதும் நடக்காததும் உங்க கையிலதானே இருக்கு!" என்றான்.

"ஓ! அவங்ககிட்டே பேசணுமாக்கும். கண்டிப்பா... ஹெல்ப்... பண்றேன்." என்று அவள் யதார்த்தமாகச் சிரித்தாள்.

அவன் அதற்குப் பிறகு ஒன்றும் பேசவில்லை. அவளை வீட்டில் இறக்கி விட்டு விட்டுப் போகும் வரையிலும் கூட.

4



தினமும் அதிகாலையில் ஐந்து மணிக்கு எழுந்தாள் சந்திரிகா.

குளித்து முடித்துவிட்டு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கரின் புத்தகங்கள் ஏதாவதொன்றில் நான்கைந்து பக்கங்கள் படிப்பாள். பிறகு அப்பாவின் அறைக்குப் போவாள்.

என்னதான் நர்ஸ்கள் இருந்த போதிலும் அவளே பல் துலக்கி விடுவாள். மெதுவாகக் கைகால்களை அசைக்கத் தேவையான எக்ஸர்ஸைஸ்களை நர்ஸ்கள் உதவியுடன் செய்ய மேற்பார்வை செய்வாள்.

குளிக்கச் செய்வாள். சக்கர நாற்காலியில் உட்கார வைத்துப் பூஜை அறைக்கு அழைத்துச் சென்று பூஜை செய்து பின் திரும்ப அறைக்கே கொண்டு வந்து படுக்கச் செய்வாள்.

பிறகு உணவு கொடுக்கப் படுவதை மேற்பார்வை செய்வாள். நல்ல சங்கீதக் கேசட்டுகள், நல்ல இலக்கியச் சொற்பொழிவுக் கேசட்டுகள் என்று நிறைய வாங்கிக் குவித்திருந்தாள்.

"கடையைப் பத்தி ஒன்னும் கவலைப் படாதீங்க. எல்லாம்... நல்லாப்போயிட்டிருக்கு" என்று அவருக்கு உறுதி சொல்வாள்.

பிறகுதான் உணவருந்தச் செல்வாள். உணவுண்ட பின் அத்தையிடம் சொல்லிக் கொண்டு புறப்படுவாள்.



கடையிலும் அவளுக்கு டென்ஷன் நிறைய இருந்தது. தங்கத்தைத் தொழிலாளர்களிடம் நம்பிக் கொடுத்து வாங்க முடியாத சூழ்நிலை. நல்ல வேளையாக அவள் அப்பா கடையின் பின்புறமாகவே பட்டறை வைத்திருந்தார். அங்கேயே ஆட்களை வைத்து வேலை வாங்கினார்கள்.

வியாபார நுணுக்கங்களையும் தெரிந்து கொள்ள வேண்டி இருந்தது. வேலை கொடுத்து வாங்குவதெல்லாம் தம்பு பார்த்துக் கொண்டதனால் அவளுக்குக் கவலையில்லாமல் இருந்தது.

கடையில் இருந்த நகைகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. இன்னும் கொஞ்சம் டிசைன்கள் இருந்தால் நன்றாக இருக்கும் போல் இருந்தது.

ஒரு நாள் சந்திரிகாவின் தோழி ஒருத்தி...வந்திருந்தாள். பவித்ரா... என்ற பணக்காரப் பெண்.

"சந்திரிகா... நான் உங்க கடையில இருக்கிற டிசைன்ஸ்ல செலக்ட் பண்ண வர்லே... எனக்கே எனக்கென்று தனியா ஒரு டிசைன்ல முத்துப் பதித்த நெக்லஸ் வேணும். முடியுமா?"என்றாள்.

சந்திரிகா யோசித்தாள்.

"ரெண்டு நாள் டைம் குடு." என்றாள்.

"ரெண்டு நாள் என்ன? ஒரு வாரம் எடுத்துக்க. ஆனா, கடிதார்ல பட்டுல எல்லாம் ஒரே ஒரு பீஸ்தான்னு எக்ஸ்க்ளுசிவா செய்யறாங்க, பாத்தியா. அது மாதிரி எனக்கே எனக்குன்னு ஒரு பீஸ் வேணும்," என்றாள்.

சந்திரிகா மார்க்கெட்டில் உள்ள எல்லா டிசைன்களின் ஃபோட்டோக்களையும் வரவழைத்துப் பார்த்தாள்.

வீட்டில் தனியாக அமர்ந்து விதவிதமாக வரைந்து பார்த்தாள். பத்துத் தனித்தனியான டிசைன்கள் தயாரித்தாள். அவளுக்கே பிடித்துப் போயிற்று.

தன் தோழி பவித்ராவிடம் காட்டினாள். அவளுக்கு மிகவும் பிடித்துப்போயிற்று. "ஏய்... பத்து டிசைன்லையும் நான் நகை வாங்கிக்கிறேன். செட்டாய்ப் பண்ணிக் குடு. ஒண் ணொண்ணுலயும் வேற வேற ஜெம்ஸ்..." என்றாள்.

சந்திரிகா மகிழ்ச்சி யடைந்தாள்.

பத்து டிசைனையும் கொண்டு போய் அப்பாவிடம் காட்டினாள். இப்போதெல்லாம் அப்பாவின் முகம் கோணிக் கொண்டிருந்தது மாறி லேசாகச் சிரிக்க ஆரம்பித்திருந்தார். முகமெல்லாம் சிரிப்பாக மகளின் தலையை வலக்கையால் கோதிக் கொடுத்தார்.

தம்புவும், "சந்திரிம்மா... இது ரொம்ப கஷ்டமான வேலைம்மா... அருமையா செஞ்சிருக்கீங்க..." என்று பாராட்டிக் கொண்டார்.

பிரேம் அன்றிரவு அவர்கள் வீட்டுக்கு வந்த போது, அவ னிடம் காட்டினாள். அவன் அவற்றை ஆழ்ந்து பார்த்தான். "இட்ஸ் ரியல் டேலண்ட்!" என்று சிலாகித்துக் கொண்டான்.

'சந்திரிகா... உடனே தம்பு சாரை வரவழைங்க," என்றான்.

தம்புவும் வந்தார். "தம்பு சார்... சந்திரிகா ஹேஸ் காட் ரியல் டேலண்ட். 'சந்திரிகாஸ் டிசைன்ஸ்'ன்னு இதைப் பதிவு பண்ணிப் பேடண்ட் ரைட் வாங்குங்க..." என்றான். பின் இன்னும் சற்று யோசித்து -

"உங்களிடம்... உங்களிடம் மட்டும் இருக்க வேண்டிய நகை என்று நினைக்கிறீர்களா? அணுகுங்கள்... சந்திரிகாஸ் டிசைன்ஸ்... என்று விளம்பரம் செய்யுங்கள்!" என்றான்.

"சந்திரிகா ஜுவெல்லரியின் விளம்பரங்கள் நிறைய வருகிற மாதிரி ஏற்பாடு செய்யுங்கள்..." என்றான். மிகவும் மகிழ்ச்சி யாக ஆலோசனை சொல்லிவிட்டுக் கிளம்பிப் போனான்.

சந்திரிகாவும், தம்புவும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.



"பணம்... பணத்துக்கு என்னம்மா செய்யறது?" என்றார் தம்பு.

சந்திரிகா ஒரு நிமிடம் யோசித்தாள். பிறகு, "தம்பு சார்... நம்ம கஷ்டத்தை யாருக்கும் சொல்லிக்கிட்டிருக்க வேண் டாம். என்னோட நகைகளை யெல்லாம் பிளெட்ஜ் பண் ணுங்க... பணம் ஏற்பாடு செய்யலாம்!" என்றாள்.

தம்பு வருத்தமாக அவளைப் பார்த்தார்.

"நோ... செண்டிமெண்ட்ஸ்... நாம வளர்ச்சிக்குத்தான் அந்தத் தொகையைப் பயன்படுத்தப் போறோம். ப்ளீஸ்... யோசிக்காதீங்க..." என்றாள்...

அவர் சமாதானமானார். லாக்கரில் முடங்கிக் கிடந்த நகை களை எடுத்து வந்து அடகு வைத்துப் பணம் தயார் செய்தார்கள்.

அந்தத் தை மாதத்தில் அந்தப் பெரிய மில் ஓனர் மகள் பவித்ரா... ஒரு பெரிய வீட்டுக் கல்யாணத்துக்கு அந்த நகைகளில் ஒன்றிரண்டை அணிந்து சென்றது மட்டுமல்லாமல், பேடண்ட் ரைட் உள்ள டிசைன்ஸ். எங்கிட்ட மட்டும்தான் இருக்கு என்று அலட்டிய அலட்டலில் கோவையில் இருந்த அவர்களது பணக்கார வாடிக்கையாளர்கள் எல்லாம் ஃபோன் செய்து தம்புவிடம் உரிமையாகக் கோபித்துக் கொண்டார்கள்.

"இப்படியொரு வசதி இருக்கறதை - ஏன்... எங்களுக்குச் சொல்லலே? ஏன் நாங்கள்லாம் உங்க வாடிக்கையாளராய்த் தெரியலையா?" என்றார்கள்.

"இல்லீங்கம்மா... பவித்ராம்மா... அப்படி வேணும்னு கேட்டாங்க... அதனாலேதான் இந்த ஐடியாவே வந்தது. ஆனா... நீங்க தனியா டிசைனிங்குக்கு சார்ஜ் கொடுக்க வேண்டி இருக்குமே!" என்றார்.

சந்திரிகா சட்டென்று திரும்பி வியப்பாகப் பார்த்தாள். தம்பு "ஷ்" என்று வாயில் விரல் வைத்துக் காட்டிப் புன்னகைத்தார்.

"எவ்வளவு...? எவ்வளவோ வாங்கிக்கச் சொல்லுங்க..." என்றார் அந்தப் பக்கம் இருந்த பெண்மணி.

"சரிங்கம்மா... நீங்க ஒரு நடை வந்து உங்க எதிர்பார்ப்பைச் சொல்லிட்டீங்கன்னா... எங்க மேடம்... டைம் எப்பக் கொடுக்க முடியுமோ... அப்படி டிசைன் செஞ்சிடுவாங்க..." என்றார்.

அந்த நேரம் கடையில் பிரேம் அமர்ந்திருந்தான். "சரிதான். தம்பு சார்... தேறிட்டீங்க!" என்றான்.

"இல்லீங்க... தம்பி... நான் சொன்னது நிஜம்தான்... ஒவ்வொரு டிசைனுக்கும் பாப்பா... எவ்வளவு ஸ்ட்ரெயின் செய்யுது தெரியுங்களா?" என்றார் ஆதங்கத்துடன்.

"உண்மைதான்..." என்று புன்னகைத்துக் கொண்டான் பிரேம்.

அன்றைக்கு அவனே அழைத்துக் கொண்டு வந்தான் காரில்.

"சந்திரிகா... நேத்து சன்டேயாச்சே... உங்களைப் பிடிக்கலாம்னு பார்த்தா... ஆள் கிடைக்கலையே... எங்க போனீங்க...?" என்றான்.

அவள் அவனைப்பார்த்துப் புன்னகைத்தாள்... "பிரேம்... இந்த டிசைனிங் எனக்கு ரொம்ப இன்ட்ரஸ்ட்டா இருக்கு... கோரியோகரா...பி! துணிமணிகள் டிசைனிங்கற மாதிரி... இதுவும் ஒரு ஸ்பெஷாலிட்டிதான் இல்லே?" என்றாள்.

"ஆமா... சந்திரிகா..." என்றான், அவள் முகத்தை ஆழப் பார்த்து.

"அதனாலே... நேத்து ஒரு சரித்திர நாடகம் நடத்தற ஒரு ட்ரூப்பைப் போய்ப் பார்த்தேன். அவங்க வச்சிருக்கிற இமிடேஷன் நகைகளையெல்லாம் ஃபோட்டோஸ் எடுத்துக்கிட்டு வந்தேன்.



"டெம்பிள்... ஜூவெல்லரி! பாரம்பரியமா அரச குலத்தார்களெல்லாம் போட்டிருந்த நகைகள் பற்றிய டிசைன்கள் எல்லாம் கலெக்ட் செய்யப் போறேன்."

"தட்ஸ்... குட்!" என்று பாராட்டினான்.

"அதுமட்டுமல்ல, அதுகளையெல்லாம் கொஞ்சம் மாடர்னைஸ் செஞ்சா... நிறைய டிசைன்ஸ் கிடைக்கும்... தெரியுமா?"

அவள் கண்கள் படபடக்க உற்சாகமாகப் பேசுவதை அவன் மௌனமாகப் பார்த்துக் கொண்டு ஆனால், கவனமாகக் கேட்டுக் கொண்டான்.

"இப்பவெல்லாம்... கோவில்களுக்குப் போனால்... விசேஷங்களுக்குப் போனால்... இதிலேதான் ஐடியா போகுது... அது மட்டுமில்ல... தரையில விழுற நிழல், வானத்திலே மிதக்கற மேகம்ன்னு எல்லாத்திலயும் டிசைன்ஸ்... பற்றிய கற்பனை... வருது... முந்தா நேத்து... கிராமத்தில ஒருத்தர் வீட்டுக்குப் போனேன். அங்கே... பனையோலையில தென்னை ஓலையில எல்லாம் தடுப்புக்கள் இருக்குமில்ல... புள்ளி, புள்ளியா... வெய்யில் நுழையறது.... அதுல இருந்து கூட டிசைன்ஸ் உருவாக்க!" என்று தான் போட்டு வைத்திருந்த ரஃப் ஸ்கெட்சுகளைக் காட்டினாள்.

அவன் கண்களில் பாராட்டுத் தெரிந்தது. சந்திரிகாவின் வீடு வந்து சேர்ந்தார்கள். அங்கேயே அவனும் சாப்பிட்டான். பிறகு அவர் அப்பாவைப் பார்த்து விட்டு வந்து ஹாலில் சற்று நேரம் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

'பிரேம், இப்ப இந்த டிசைன்களுக்கு இருக்கற தேவையைப் பார்த்தா பணம் நிறையத் தேவைப்படுது. அதுதான்... என் நகைகளைப் பிளெட்ஜ் செய்திருக்கிறேன்." என்றாள்.

அவன் சற்றே வேதனையுடன் அவளைப் பார்த்தான்.

"ஐயோ... அப்படிப் பார்க்காதீங்க... எனக்கொண்ணும் வருத்தமில்லை. லாக்கர்ல தூங்கற பெட்டி காப்பிட்டல் உயிர் வந்து நடமாடப் போகுது. அவ்வளவுதானே!" என்றாள்.

அவன் முகம் தெளிவடைந்தது. "இன் ஃபாக்ட்... வித் தாலம்னு நெனைச்சேன்... ஆனா அப்பா வருத்தப்படு வாரோன்னு இருக்கு!" என்றாள்.

"பேசாம வித்திருங்க... சந்திரிகா..." என்றான் பிரேம்குமார்.

"ம்... அப்படியா... சொல்றீங்க...?" என்றாள் ஆச்சரியமாக.

"ஆமா... எல்லாத்தையும் வேண்ணா போட்டோ எடுத்து வையுங்க... அப்புறம் இதே மாதிரி செஞ்சா போகுது..." என்றான்.

"ஆமா... இல்லே...?" என்றாள்... சற்றே நிம்மதியாக...

"இப்ப என்ன சொன்னீங்க... ஆமாவா... இல்லையா?" என்று அவன் சீரியஸாகக் கேட்கவும், அவள் ஒரு நிமிடம் திகைத்துப் பின் சிரித்து விட்டாள்.

"ஜுபோ... பிரேம்..." என்றாள்... அவன் இதமாகப் புன்னகைத்தான்.

"போதும்... பணக் கவலை... தொழில் கவலை... எல்லாம்... கொஞ்சம் வேற பேசலாம்..." என்றான்.

"என்ன... பேசறது?" என்றாள்.

"சரி... கொஞ்ச நேரம் கார்ட்ஸ் விளையாடலாமா?" எனவும்... "தம்பி... எனக்கும் ஒரு கை போடுங்க..." என்று அத்தையும் வந்தாள்.

"அப்பா... ரூமுக்குப் போயிரலாம்," என்று அங்கே போய் விளையாடினார்கள். அவர்கள் போடுகிற பொய்ச் சண்டையை அவரும் சுவாரசியமாய்க் கவனித்துச் சிரித்துக் கொண்டார்.

பத்து மணிக்கு மேல், 'நான் கிளம்பட்டுமா?' என்று கிளம்பினான் பிரேம்.

"இருப்பா... நான் கொஞ்சம் ஹார்லிக்ஸ் கொண்டு வரேன்," என்று அத்தை அந்தப் பக்கம் போனபோது, சந்திரிகா அவனைச் சிந்தனையுடன் பார்த்தாள்.



"பிரேம்... இவ்வளவு பண நெருக்கடி அப்பாவுக்கு வர வேண்டிய அவசியமே... இல்லை... எங்கேயோ... ஒரு இடைவெளி தெரியுது... உங்களுக்கு ஏதாவது ஐடியா இருக்கா...?" என்றாள்.

"ம்... கொஞ்சம் தெரியும்... கொஞ்சம் டைம் குடுங்களேன்... நான் விபரமாச் சொல்றேன்," என்றான்.

அப்ப சரி என்று நிம்மதியானாள்.

வாசல் வரை அவனோடு சென்றாள் அத்தை... "தம்பி... நீ வந்தாத்தான் கொஞ்ச நேரம் கலகலன்னு இருக்கறா. அடிக்கடி வாப்பா!" என்றாள்.

'சரிங்கத்தை..' என்று புன்னகைத்தான். அவன் சென்று அரை மணி நேரம் இருக்கும். சந்திரிகாவின் செல்போன் ஒலித்தது.

"சந்திரிகா... நாளைக்கே பிளெட்ஜ் பண்ணின நகையை மீட்டுரலாம்... ரெண்டு பார்ட்டி ரெடியா இருக்காங்க... அட்வான்ஸ் பேமென்ட்... ஓ.கே..வா..?" என்றான்.

"சரிங்க பிரேம்.." என்றாள்.

பிறகு அவன் சந்திரிகா... என்று அழைத்து ஒரு நிமிடம் நிறுத்தினான்.

"சொல்லுங்க... பிரேம்..." என்றாள்.

"சந்திரிகா, உங்களோட டிசைன்ஸ் எல்லாம் அசத்துது... யு ஆர் ரியலி பிரில்லியன்ட். கலை, அறிவு, அழகு, தைரியம். ரொம்ப ரேர் காம்பினேஷன் இது. யு ஆர் ரியலி... வொண்டர்புல்... அம்மா கிட்டே சொன்னேன். யாருக்கு அதிர்ஷ்டமோ அப்படிங்கறாங்க!" என்று சிரித்தான்.

இந்தப் புறம் சிவந்த முகத்துடன், "தாங்க்ஸ்... பிரேம்!" என்றாள்.

"எதுக்கு?"

"எல்லாத்துக்கும்தான்... குட் நைட்." என்று ஆஃப் செய்தாள்.

## 5



பிரேம் அன்றிரவு வீட்டில் தன்னறையில் அமர்ந்தபடி சிரித்துக் கொண்டான். உள்ளே சந்திரிகாவின் முகம் வந்து வந்து போய்க் கொண்டிருந்தது.

இரண்டு மூன்று வருடங்களுக்கு முன் தங்கள் வீட்டிலும் அதே போல ஒரு பிரச்னை எழுந்தது நினைவுக்கு வந்தது. பிரேம்குமார் வீட்டில் மூன்றாவது மகன். பெரியவர்கள் இருவரும் தங்கள் தங்கள் தொழிலில் நன்றாகக் காலூன்றி விட்டார்கள். இவன்தான் படிப்பை முடித்திருந்த நேரம்.

அப்பா... தனது அறுபதாவது வயதில் சொத்துக்களைப் பிரித்துத் தந்து விடுவதற்கு யோசித்தபோதுதான், சொத்துக்களின் மீதும் பணத்தின் மீதும் மனிதர்கள் வைக்கிற மோகம் அவனுக்குப் புரிந்தது.

பெரிய அண்ணன் மதன் குமாரும், அடுத்தவன் சுரேஷ் குமாரும், பிரேம் குமாருக்கு இப்போது பிரித்துக் கொடுக்கக் கூடாது என்றார்கள்.

அடிதடி கைகலப்பு வரை போனதை அவன் வேதனையோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்பாவிடம் வந்து, "அப்பா! எனக்கு... உங்க சொத்தே வேண்டாம். நீங்க நிம்மதியா இருந்தாப் போதும். நான் என் ஃபிரெண்ட் ஒருத்தன் பாம்பேல இருக்கான். அங்க போறேன்," என்று கிளம்பிவிட்டான்.

இரண்டு ஆண்டுகள் அவனோடு நிதி ஆலோசகராகப் பணி செய்தான். பல தொழில் நுணுக்கங்களைக் கற்றுக்



கொண்டான். எந்தத் தொழில் வளரும், தோற்கும் என்றெல்லாம் முன் கூட்டிக் கணிக்கக் கற்றுக் கொண்டான். இப்போது இவன் இந்தியாவின் மிக முக்கியமான நிதி ஆலோசகர் மட்டுமல்ல, பொருளாதாரம் தொடர்பான அவனுடைய கட்டுரைகள் உலக அளவில் பிரபலமாயின. உலகில் பல சங்கங்களில் இருந்து அவனை உரையாற்ற அழைத்தார்கள்.

இதுவரை அவன் தன்னைப் பற்றி யோசித்ததே இல்லை. ஆனால், சந்திரிகா பற்றிய ஏதோ ஒன்று அவனை ஈர்த்தது.

அழகா என்றால் இவளை விட அழகிகளுடனெல்லாம் பழகியிருக்கிறான். தொட்டால் சிவந்து போகிற நிறமும், கண்ணை உறுத்துகிற வளைவுகளுமாக அந்த பிந்து நட்கர்னி எவ்வளவு முயற்சித்தாள்! எரிச்சல்தானே வந்தது.

எத்தனை பெரிய இடத்துப் பெண்களோடு பழகியிருக்கிறான். ஆனால், ஒரு இளம் மலரைப் போல் உலக அனுபவமே இல்லாமல் இருந்த பெண், நோய் வாய்ப்பட்ட அப்பாவை வைத்துக் கொண்டு தன்னந்தனியாக எப்படிப் போராடுகிறாள்! எப்படி எல்லாவற்றையும் சீராக்க முயற்சிக்கிறாள்!

எளிமையாக இருக்கிறாள். யதார்த்தமாக இருக்கிறாள். அழகாகவும்... கூட... தன்னறையில் மேலும்... கீழும் நடந்து கொண்டிருந்தான்.

அதே சமயம் கீழே... ஃபோன் என்று அழைத்தார்கள். போனவன் 'ஹலோ' என்றான்.

"ஓ... படேல் சாரா? சார்... என்னோட இந்த மாத எங்கேஜ்மெண்ட் எல்லாத்தையும் ஒரு மாசம் போஸ்ட் போன் பண்ணிருங்க. நான் இங்க ஒரு முக்கியமான அசைன்மெண்ட்ல இருக்கேன்..." என்றான்.

அம்மாவும், அப்பாவும் ஆச்சரியமாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு மலர்ந்த முகத்துடன்

அப்பாவின் அருகில் அமர்ந்து கொண்டான். ஒரு வாரமாகவே அவன் நடவடிக்கைகளில் ஏற்படுகிற மாற்றங்களைக் கவனித்துக் கொண்டிருந்தார் அப்பா. இந்த இருபத்தாறு வயதில் உலக அளவில் அவன் பெயர் பெற்றதற்குப் பிறகு அவர் அவனைத்தான் குடும்பத்தின் கௌரவம் என்று சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் என்ன? வீட்டில் இருக்கமாட்டான். அவ்வப்போது... நான்கு நாட்கள்... பின்னே ஓட்டம்தான்.

"என்னப்பா?" என்று மகனைப் புன்னகையுடன் பார்த்தார் ரங்கசாமி.

அவர் முகம் பார்த்துப் புன்னகைத்தவன் கேசவனைப் பத்தி யெல்லாம் சொன்னான். சந்திரிகா எடுக்கும் முயற்சி களைப் பத்திச் சொன்னான். அவர் அவன் முகத்தில் தோன்றும் உணர்ச்சிகளையெல்லாம் பார்த்தபடி கேட்டுக் கொண்டார்.

"ஆமாம்ப்பா... நல்ல ஆளு அவரு... பேசாம... ரெண்டாவதா ஒரு கல்யாணம் பண்ணியிருக்கலாம்..." என்றார்.

"ஆனா... சந்திரிகாவைக் கவனிக்கணும்கறதுக்காகவே கல்யாணம் செஞ்சுக்கலையாம்!" என்றான்.

பிரேம் குமார் பாம்பே போன போது நண்பர்கள் இருவரும் சேர்ந்து இரண்டு லட்ச ரூபாய் செலவில் ஒரு அலுவலகம் ஆரம்பிக்க முற்பட்ட போது, தனக்குத் தேவைப்பட்ட ஒரு லட்சத்தைக் கேசவனிடம்தான் வாங்கிக் கொண்டு போனான். அப்பாவிடம் வாங்கவில்லை. விரைவாகவே திருப்பிக் கொடுத்தான் என்றாலும் தன்னை நம்பிக் கொடுத்ததை அவன் மறக்கவே இல்லை.

சந்திரிகாவைப் பத்திப் பேசும்போதெல்லாம் மகனின் முகம் மலர்வதைக் கண்ட தந்தை தனக்குள் சிரித்துக் கொண்டார்.

"நீ சொல்றதைப் பார்த்தா... அந்தப் பொண்ணே சமாளிச்சுடுவா... போல இருக்கே..." என்றார்.



"சமாளிக்கும்ப்பா... ஆனா... கேசவன் சாருக்காக நான் கூட இருந்து மாரல் சப்போர்ட் குடுக்கணும்னு நெனைக்கிறேன்," என்றான்.

"எப்படியோ... ஒரு மாசத்துக்குக் கால் சக்கரத்தைக் கழற்றி வச்சுட்டேன்னு... சொல்லு..." என்று சிரித்தார்.

"அது மட்டுமில்லப்பா... அந்த ஸ்ட்ரோக்குக்கு நானும் ஒரு வகையில் காரணம்," என்றான்.

"வாட்?" என்று அதிர்ந்தார்.

அவன் முழுதும் விவரம் சொன்னான். அவர் பெருமூச்சு விட்டு, "காரியம் ஆகலேன்னு சொன்னதுனாலேயே நீ காரணமாயிட முடியுமா என்ன? ஆனா பிரச்னையைத் தீர்க்கணும்னா சொல்லு... நான் டெல்லியில மூவ் பண்றேன்..." என்றார்.

"தாங்க்ஸ்ப்பா... அவசியம்னா கேக்கறேன்," என்றான்.

"சரிப்பா... குட்நைட்..." என்று அறைக்குக் கிளம்பினான்.

"ஏம்ப்பா... தம்பி...?"

"அப்பா..." என்றான்.

"அந்த சந்திரிகாவை ஒரு நாளைக்குக் கூட்டிட்டு வாயேன்," என்றார்.

"சரிப்பா..." என்றான் உற்சாகமாய்.

சந்திரிகா டைரியை மூடிவைத்துவிட்டு நிமிர்ந்தாள். அதில் முக்கியமான நிகழ்வுகள் கணக்கு வழக்குகளைக் குறித்துக் கொள்வாள்.

இரவு உணவு லைட்டாகச் சாப்பிடுவாள். சாப்பிட அமர்ந்ததும் அத்தையும் வந்து அருகில் அமர்ந்து கொண்டாள்.

"சந்திரிகா... இன்னைக்கும் அந்தப் பொண்ணு வந்து அப்பாவைப் பார்த்துட்டுப் போனா...!" என்றாள்.

''ஓ...!'' என்று கேட்டுக் கொண்டாள். பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை அத்தை. ''பிரேம் குமார் ரொம்ப நல்ல மாதிரி இல்லை! தம்பு சொன்னார்,'' என்றாள்.

''ஆமாங்க அத்தை... ரொம்ப... ஹெல்ப்... இன்னைக்கு ரொம்பப் பெரிய ஹெல்ப் செஞ்சிருக்காரு...'' என்றாள். சற்று நேரம் அவனைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அறைக்கு வந்தவள், டிரஸ்ஸிங் டேபிள் முன்னால் நின்று பார்த்துக் கொண்டிருந்தவள், பிரேம் குமார் தனது பின்னந் தலையை லேசாகத் தடவிக் கொள்வது போல் மானரிசம் செய்து பார்த்துச் சிரித்துக் கொண்டாள்.

படுக்கையில் படுத்துக் கொண்ட போது அது அவளுக்குத் திடீரென்று உறைத்தது.

பிரேம் நேற்று என்ன சொன்னார்? முதல்ல உங்ககிட்டே தானே சொல்வேன்! அது... நடக்கறதும்... நடக்காததும் உங்க... கைவிலேதானே இருக்குன்னு... என்ன பொருள்... அவள் இதயம் படபடத்தது. இன்னைக்கு வேற யாருக்கு அதிர்ஷ்டமோ அப்படிங்கறார். என்ன அர்த்தம்?

அது நீதான் என்பதை அப்படிச் சொன்னாரோ? அப்படியும் பொருள் வருமோ? சுயோ... நாமாக... எதையாவது நினைத்துக் கொண்டு... அதுவும்... அப்பா... இப்படி இருக்கும் போது... ஒருவேளை... ஒருவேளை... அதனால்தான்... மறைமுகமாகச் சொன்னாரோ... என்ற எண்ணங்கள் ஓடியபோது அவள் எழுந்து அமர்ந்து கொண்டாள்.

உறக்கம் பிடிக்கவில்லை. இது என்னடா புதுச் சோதனை என்று அவள் மனமே கேலி செய்தது... 'ஏன், பிடிக்கலையா?' என்று இன்னொரு மனம் கேட்டது.

'பிரேம் குமாரை யாருக்காவது பிடிக்காமல் போகுமா? அவர் கம்பீரம், சிரிக்கிற அழகு, பின்னந்தலையைத் தடவிக்



கொண்டு விட்டுப் பார்ப்பது... இதற்கெல்லாம்... நிறைய அர்த்தங்கள் இருக்குமோ...' என்று திணறிக் கொண்டிருந்தபோது... அவனிடமிருந்தே ஃபோன் வந்தது.

''சந்திரிகா... என்ன தூங்கிட்டீங்களா?'' என்றான்.

''இல்லை...'' என்றாள்.

''சந்திரிகா... அப்பா உங்களை ஒரு நாள்... வீட்டுக்குக் கூப்பிட்டு வரச் சொல்றார்,'' என்றான்.

''வர்றேன்,'' என்றாள் மெல்லிய குரலில்.

''தாங்க்ஸ்...'' என்றவன், ''சந்திரிகா... உங்ககிட்ட இன்னொரு விஷயம் சொல்ல வேண்டியிருக்கு. நேற்றுக் கூடக் கேட்டிங்களே...'' என்றான்.

''சொல்லுங்க...'' என்றாள்.

''உங்க அப்பாவுக்கு ஏன் ஸ்ட்ரோக்... வந்ததுன்னு எனக்குத் தெரியும்...'' என்றான்.

''ஏன் வந்துச்சு... சொல்லுங்க...'' என்றாள் பதட்டமாக.

அவன் விவரமாகச் சொன்னான்... அவள் திகைத்துப் போய்க் கேட்டுக் கொண்டாள். விவரமாகச் சொல்லி முடித்தபின், ''அந்த ஃபோன் கால் செய்தது நான்தான். அந்தச் செய்தி கேட்டுத்தான்... உங்கப்பா... அதிர்ச்சியானார்... அதனாலதான் எனக்கு ஒரு கில்ட்டி ஃபீலிங்!'' என்றான்.

''பரவாயில்லே... இதுல உங்க தப்பு எதுவுமில்லை... நீங்க முயற்சி செஞ்சீங்க... முடியல... முடியலங்கறதைச் சொன்னீங்க... செய்தியோட அதிர்ச்சி அப்பாவுக்குத் தாங்கலை!'' என்றாள், ஆழ்ந்த பெருமூச்சுடன்.

''தாங்க்ஸ் சந்திரிகா... ரொம்ப தாங்க்ஸ்... இப்பத்தான் பாரம் இறங்கின மாதிரி இருக்கு. ஆனா இப்ப ஒரு நம்பிக்கை வந்திருக்கு. அதனாலதான் உங்ககிட்டே சொல்றேன். எங்க

அப்பா ஹெல்ப் வேண்ணா கேன்றா... நான் மூவ் பண்றேன்னு சொல்லியிருக்கார். அவர் இறங்கினாருன்னா... ப்ராப்ளம் சால்வ் ஆயிடும்!'' என்றான்.

.......!

''அது மட்டுமில்லை... அப்பாகிட்டே எதுக்கும் நான் ஹெல்ப்னு கேட்டதில்லை. இதைக் கேக்கலாம்னு இருக்கேன். கண்டிப்பா நடக்கும்...'' என்றான்.

''தாங்க்ஸ்... பிரேம்... ரொம்ப தாங்க்ஸ்...'' என்றவள் மெல்லத் தயங்கி... ''ஓ! அதனாலதான்... அந்தக் கமிட்மென்ட்னாலதான் இவ்வளவு ஹெல்ப் செய்றீங்களா?'' என்றாள்.

அவன் மெல்லிய குரலில் சிரித்தான். மெதுவாகப் பின்னந் தலையை நீவியபடி நடந்து கொண்டே பேசுவதை அவளால் இங்கிருந்தே கற்பனை செய்து கொள்ள முடிந்தது.

''அப்படித்தான் ஆரம்பிச்சது...'' என்று சிரித்தான்.

''இப்ப... எப்படியாச்சு...?'' என்று கேட்க நினைத்தவள் சட்டென்று நிறுத்திக் கொண்டாள். படபடக்கும் இதயத்துடன், 'பிரேம்... முதல்ல உங்ககிட்டேதான் சொல்வேன். நடக்கறதும், நடக்காததும் உங்க கையிலதான்னு சொன்னீங்களே...? அதுக்கு என்ன அர்த்தம்?'' என்றாள்... ஆழ்ந்த குரலில்...

அந்தப் பக்கம் அவன் இறங்கிய குரலில், ''சந்திரிகா... இப்ப சொல்ல வேண்டாம்... உங்க அப்பா... தேறட்டும்னு... நினைச்சேன்... ஆனா... உளறிட்டேன்...'' என்றான்.

அவள் மௌனமாகக் காத்திருந்தாள். அவள் இதயம் அடித்துக் கொள்ளும் ஓசை அவளுக்கே பெரிதாகக் கேட்டது.

அவன் அந்தப்புறம் மீண்டும் சிரித்தான். ''நீங்கதான் ஹெல்ப் பண்றேன்னு சொன்னீங்களே! செய்ங்க...'' என்றான்.



அவளுக்குப் பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டது... ஏன்... அப்படி உள்ளம் உணர்கிறது... என்ற கேள்வியும் கூடவே எழுந்தது.

''சொல்லுங்க... யார்கிட்டே... கேட்கணும்... கேட்டுச் சொல்றேன்...'' என்றாள் அடங்கிய குரலில்.

அவன் மீண்டும் கிறக்கமாகச் சிரித்தான். ''கேளுங்க... உங்க இதயத்துக்கிட்டேயே கேளுங்க... ஏதாவது அப் ஜெக்ஷன் இருக்கான்னு... கேட்டுச் சொல்லுங்க!'' என்றான்.

அவள் சட்டென்று செல்லை ஆஃப் செய்து விட்டாள். உடம்பெல்லாம் சிலிர்ப்பு ரேகை ஒன்று ஓடி மறைவதைப் போல் இருந்தது. தலையணையில் முகம் புதைத்துக் கொண்டாள். ஏன் அவன் வந்தாலே தன் மனம் மலர்ந்தது. யானை பலம் வந்தாற்போல உணர்ந்தது என்பதற்கெல்லாம் ஒரு நொடியில் பதில் கிடைத்துவிட்டது. தாமரையாய்த் தன் இதயம் பூப்பதை உணர்ந்தாள்.

மீண்டும் ஃபோன் ஒலித்தது. நடுங்கிய கரத்தால் எடுத்தாள்.

''ஹலோ...'' என்றாள்.

''சந்திரிகா... பதிலே... சொல்லலே?'' என்றான் அவன், ஏக்கம் நிறைந்த குரலில்.

''........ .....!''

''சந்திரிகா ப்ளீஸ்... இப்படி மௌனமா இருந்தா எப்படி?'' என்றான் மீண்டும்.

திடீரென்று அவளுக்குத் துணிவு வந்தது போல் இருந்தது.

''இருங்க... பிரேம்... இப்பதான் கேட்டுக்கிட்டிருக்கேன்... இதயம் பதில் சொல்லட்டும்...!'' என்றாள்... அந்தக் கணத்தில் அவள் மனம் புரிந்தது என்று அந்தப் பக்கம் அவன் நிம்மதியானான். கலகலவென்று சிரித்தான்.

"ம்... ஹூம்... இதயம் என்ன சொல்லுதாம்?" என்றான் வெகு ஆர்வமாக.

"அது சொல்லுது..." என்று இழுத்தாள்.

"ம்...?!"

"அது... சொல்லுது... பாவம் போனாப் போகுது... சரின்னு சொல்லிடுங்குது..." என்றாள் வெட்கத்துடன். அவன் வெகுவாக உற்சாகமானான்.

"ஆமா... சந்திரி... ரொம்பப் பாவம்தான்... தூக்கம் வரமாட்டேங்குது. தனக்குத் தானே சிரிக்கிறது... தூக்கத்திலே உளர்றது... ஏன் கேட்கற...?"

சட்டென்று அவன் ஒருமைக்குத் தாவி விட்டதைக் கவனித்துக் கொண்டாள்.

"இன்னொன்னை விட்டுட்டீங்களே!" என்றாள்.

"ம்... சொல்லு..." என்றான்.

"பின்னந்தலையைத் தடவிகிட்டு ஆட்களை ஊடுருவுகிற மாதிரிப் பார்க்கிறது..." என்றாள்.

அவன் பெரும் குரலெடுத்துச் சிரித்தான். அந்தப் பக்கம் நிஜமாகவே அவன் அப்படித்தான் நின்று கொண்டிருந்தான். கையை வெடுக்கென்று எடுத்துக் கொண்டான். 'ஹேய். நேர்ல பார்த்த மாதிரியே சொல்றே!" என்றான்.

அவளும் வெட்கம் நிரம்பச் சிரித்தாள்.

"சந்திரிகா..."

"ம்...!"

"இப்ப சொல்லவாமா... வேண்டாமான்னு... ரொம்ப யோசிச்சேன். டாக்டர் அங்கிள் இன்னைக்கு அப்பா இனித் தேறிடுவார்னு சொன்னாரா. அது ஒரு சந்தோஷம்...



அதுவுமில்லாம... சில நேரங்கள்ல தனியாப் போராடற மேன்னு... எண்ணம் உனக்கு வரக் கூடாது... சொல்றதுக்கு இதுதான்... நேரம்னு தோணிச்சு... யு ஷுட் நாட் ஃபீல் லோன்லி... அதான்..." என்றான்.

"தாங்க்ஸ்... பிரேம்..." என்றாள். பிறகு, "ஆனா இப்ப யாருக்கும் சொல்ல வேண்டாம் பிரேம்..." என்றாள்.

"சரி, அதுவும் சரிதான்," என்றான். பிறகு, "ஆனால்... சந்திரி! நான் எப்பவும் உன் பின்னாடி... பக்கத்திலே... இருக்கறேங்கறதை ஞாபகம் வைச்சுக்க..." என்றான்.

"என்ன... நீங்க... சும்மா... சும்மா... பக்கத்துலேங்கறீங்க?" என்று அவள் சற்றே கோபமாகவும், அவன் திகைத்துப் போய்,

"என்ன சொல்றே?"என்றான்.

'இதயத்துக்குள்ளேன்னு சொல்லுங்க..." என்றாள்.

அவன் பெருங்குரலெடுத்துச் சிரித்தான்... 'யப்பா... நெத்தியடி அடிக்கட்டே... சந்திரிகா... ஏய்..." என்று சிரிக்கவும் -

"குட்நைட்!" என்று அவள் ஆஃப் செய்தாள்.

.....

பிரேம் செல்போனைக் கன்னத்தில் தேய்த்துக் கொண்டே திகைத்துப் போய் நின்றிருந்தான்.

சந்திரிகாவும் அதே நிலையில்தான் இருந்தாள். என்ன தைரியத்தில் அவனிடம் அப்படிப் பேசினோம் என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டாள். நாளைக் காலையில் அவர்களுடைய நிலங்களைப் பார்ப்பதற்காக வருகிறேன் என்று சொல்லியிருந்தான். வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவரை அழைத்து வருவதாய்ச் சொல்லியிருந்தான்.

எப்படி முகத்தில் விழிப்பது என்றும் இருந்தது. எப்போது பார்ப்போம் என்றும் தோன்றியது.

மனித மனத்தின் விசித்திரத்தைத்தான் என்ன சொல்ல... என்று எண்ணிக் கொண்டான். பல நாட்களுக்குப் பின் நிம்மதியாக உறங்கினான் என்றால், அவள் அதற்கு மாறாக வெகு நேரம் உறக்கம் இல்லாமல் புரண்டு கொண்டிருந்தாள்.

## 6



விடுவிடென்று மாடிப் படிகளில் இறங்கி வருகிற சந்திரிகாவை அத்தை மகிழ்ச்சியாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஹாய்... அத்தை!" என்று கட்டிக் கொண்டு ஒரு சுற்றுச் சுற்றி வந்தாள். அத்தை சிரித்தாள்.

முன்பெல்லாம்... 'இன்னும் என்னடி சின்னப் பிள்ளையாவே இருக்கறே...!' என்று செல்லமாகத் திட்டுவாள். ஆனால், ஒரு சரிவின் போது அவள் எழுந்து நின்ற விதம் பார்த்தவளாயிற்றே! அதனால் இப்போது அப்படிச் சொல்லத் தோன்றவில்லை.

'பாவம்... ரொம்ப நாள் கழிச்சுக் கலகலப்பாய் இருக்...றாள்... இருக்கட்டும்!' என்று எண்ணிக் கொண்டாள்.

...டிஃபன் சாப்பிட்டு முடித்தாள். "இந்தா ஹார்லிக்ஸ்!" என்று ...டுத்தாள். குடித்தாள். டம்ளரை வைத்துவிட்டு மீண்டும் ...த்தையைக் கட்டிக் கொண்டாள். "அத்தை... நான் இன் ...க்கு ரொம்ப சந்தோஷமா இருக்கேன்!" என்று அத்தை ... கன்னத்தில் அழுந்த முத்தமிட்டாள்.

"ஏய்... பெண்ணே விடுடி!" என்று சிரித்தாள்.

...ரோ கனைக்கும்சத்தம் கேட்கத் திரும்பிப் பார்த்தார்கள். ...குமார் கண்களில் குறும்பு கூத்தாட நின்று கொண்



டிருந்தான்... அவள் சட்டென்று அத்தையிடம் இருந்து விலகினாள். முகம் சிவந்து போனது.

அவன் கண்டு கொள்ளாதவன் போல மீண்டும் புன்னகைத்தான்.

"பிரேம்... வாங்க!" என்றாள் சிவந்த முகத்துடன்.

"ரெடியாய் இருக்கீங்களா? போலாமா...?" என்றான்.

"ம்... போலாம்..." என்றாள் உற்சாகமாக... பிறகு, "தம்பு சார் வர்லையா?" என்றாள்.

"புரொபசர் வண்டி ரிப்பேராம்... அதனால என் காரில வாங்கன்னு அவங்ககிட்டயே காரைக் கொடுத்து அனுப்பியிருக்கேன். உன்னோட காரில் நாம போயிரலாமா?" என்றான்.

"ம்..." என்றாள்... அத்தையிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டார்கள்.

பேரூரைச் சுற்றுத் தாண்டி வெள்ளியங்கிரி மலைக்குப் போகிற வழியில் அவர்களுக்கு ஒரு இருபது ஏக்கர் இருந்தது... அதிலே என்ன விளைந்தால் இம்ப்ருவ்மெண்ட் இருக்கும் என்று ஆலோசனை செய்வதற்காகப் போய்க் கொண்டு இருந்தார்கள்.

போகிற வழியில் மீண்டும் தம்புவிடம் இருந்து போன் வந்தது. பேராசிரியர் வருவதற்குச் சற்று நேரம் ஆகும் என்று தகவல் வந்தது. ஊரைத் தாண்டும் வரை அமைதியாகக் காரோட்டினான்.

பிறகு...

"சந்திரிகா..." என்றான், கிறக்கமான குரலில்.

ம்... என்றாள்... அவள், குனிந்து கைவிரலில் நகம் பார்த்துக் கொண்டு.

''அத்தைக்கு இன்னைக்கு அதிர்ஷ்டக் காற்று போல...'' என்று சிரித்தான்.

அவன் வரும்போது அத்தையைக் கட்டி கொண்டு முத்தம் வைத்ததைச் சொல்கிறான் என்பது புரியவும், நாணம் மேலிடத் தலை குனிந்து கொண்டாள்.

''நமக்கு... அந்த அதிர்ஷ்டம் எப்பக் கிடைக்குமோ...?'' என்றான் மீண்டும்.

அவள் முகம் சிவக்க அசௌகரியமாக வெளியே பார்த்துக் கொண்டு வந்தாள்.

''என்ன... பதிலைக் காணோம்!'' என்று அவள் முகம் பார்த்தான்.

''ப்ளீஸ்... பிரேம்...'' என்று அவள் தவித்துப் போனாள்.

''சரி... சரி,'' என்று சிரித்தான். பிறகு வேறு பேச்சுக்குத் தாவினான். அவள் இயல்பானாள்.

''பிரேம்... பேரூர்... கோவிலுக்குப் போலாமா...?'' என்றாள் ஆர்வத்துடன்.

''போலாமே...'' என்றான்.

இருவரும் அந்தச் சிற்பங்களின் அழகைப் பார்த்து ரசித்தனர்.

அவளைப் பார்த்துக் கோவில் சேர்ந்தவர்கள் அவள் தந்தையைப் பற்றி விசாரித்தார்கள். அவனிடமும் அவன் தந்தையைப் பற்றி விசாரித்தார்கள்.

கோவில் தரிசனம் முடிந்து வரும்போதே அரை மணி நேரம் ஓடிவிட்டது.

மீண்டும் காரை எடுத்தவன், சந்திரிகா... என்று பாக்கெட் நீட்டினான்.

மல்லிகைப் பூச்சரம்... அவள் வாங்கி வைத்துக் கொண்டாள். அவன் நிறைவாய்ப் பார்த்துக் கொண்டான்.



பிறகு தனது வெளிநாட்டு அனுபவங்களை யெல்லாம் கதைபடச் சொல்லிக் கொண்டு வந்தான். அவள் கலகலவெனச் சிரித்துக் கொண்டும் பேசிக் கொண்டும் வந்தாள்.

திடீரென்று, ''உன் முழுப் பெயரே சந்திரிகாவா?'' என்றான்.

''சந்திரிகா தேவி!'' என்றாள்.

''அப்படின்னா... எனக்கு நீ இனிமே தேவிதான்!'' என்றான்.

''உங்க இஷ்டம்!'' என்று புன்னகைத்தாள்.

''எங்க இஷ்டம் நிறைய இருக்கு... எல்லாம் நிறைவேறுமா... என்ன?'' என்றான், சற்று ஒதுக்கமான இடத்தில் காரை நிறுத்தி.

''ஐயோ... இப்ப எதுக்கு காரை நிறுத்தறீங்க?'' என்றாள் கலவரமாக.

அவன் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக ஆழமாக அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். மீண்டும் அவள் கலவரமாகப் பார்க்கவும்...

''ஹேய்... பேசாம... உட்கார். ஒரு பத்து நிமிஷம்... பேசணும். அவ்வளவுதான்... உன்னை முழுங்கிடமாட்டேன்,'' என்றான் சற்றே எரிச்சலுடன்.

அவள் திகைத்துப் போய் அமர்ந்து விட்டாள். ''ஹேய்... தேவி...'' என்று அவளைத் தன்பால் இழுத்தான். நெற்றியில் முத்தமிட்டான். லேசாக அணைத்துக் கொண்டான். அவள் தடுக்கவில்லை. ஆனால் உணர்ச்சி மயமாய் இருந்தாள். ''தேவி...'' என்றான் மீண்டும் கிறக்கமாக...

''ம்...!''

''யாருக்கும் சொல்ல வேண்டாம்னே, ஏன்?'' என்றான்.

அவள் மெல்ல விலகிக் கொண்டாள்.

''ஆமா... அப்பாவுக்கு உடம்பு சரியில்லேன்னவுடனே, நான் என் வழியைப் பார்த்துக்கிட்டேன்னு யாரும் நினைக்கக்கூடாதில்லை? இப்ப அப்பா மட்டும்தான். அவர் உடம்பு தேறணும். அதான் முக்கியம்!'' என்றாள்.

''அது கரெக்ட்தான்...'' என்று ஏற்றுக் கொண்டான். பிறகு... ''அப்பப்ப நம்மளையும் கொஞ்சம் கவனி!'' என்றான்.

அவள் ஓரக்கண்ணில் நிமிர்ந்து பார்த்துவிட்டு... ''என்ன... கவனிக்கணுமாம்?'' என்றாள்...

''பெருசா... ஒன்னும் வேண்டாம்பா... இப்ப அது மதிச்சியே... சின்னதா... ஒரு இது... லேசா... ஒரு அணைப்பு...'' என்று அவன் குறும்பாக விவரிக்க...

''சும்மாயிருங்க பிரேம்!''என்றாள் வெட்கத்துடன்.

''முடியலியே... நேற்று நைட்டெல்லாம் தூக்கமே வரலை... தூங்கும்போது மணி ரெண்டு... எல்லாம் தேவியார் ஒப்புதல் கொடுத்த சந்தோஷம்தான். இன்னைக்குப் பேச வாய்ப்புக் கிடைக்குமான்னு பார்த்துக்கிட்டிருந்தேன். புரொஃபசர் புண்ணியம் தேடிக்கிட்டார்!'' என்று சிரித்தான்.

''நம்ம தோட்டத்துக்குப் போயிரலாம்... அங்க தோப்பு இருக்கு!'' என்றாள்.

''ஏய்... பேச்சை மாத்தறே...'' என்று சிரித்துக் காரை எடுத்தான்.

அவர்கள் தோப்பில் பேராசிரியருக்காகக் காத்துக் கொண்டிருக்கையில் தன்னுடைய டிசைன்கள் பற்றிச் சொன்னாள். அவனுடைய ரசனைகள் பற்றிக் கேட்டுக் கொண்டான்.

தாராள மயமாக்கல், உலகமயமாக்கல்... பற்றியெல்லாம் விரிவாகச் சொன்னான். அவள் ஆர்வமாகக் கேட்டுக் கொண்டாள். இடையில் சந்தேகங்கள் கேட்பாள். சற்று நேரம்



கழித்து மீண்டும் ஃபோன் செய்த தம்பு, ''பிரேம் தம்பி... சார் வீட்ல இருந்து கிளம்பரப்ப கெஸ்ட் வந்துட்டாங்க... என்ன செய்யலாம்...'' என்றார்.

''எப்பத்தான் வர முடியும்னு கேளுங்க...'' என்றான்.

''மத்தியானம் ரெண்டு மணிக்கு வரேன்றார்.''

''சரி. அழைச்சுட்டுவாங்க. அதுவரை நானும் சந்திரிகாவும் இங்கயே இருக்கோம்,'' என்றான்.

சந்திரிகா... பண்ணையாட்களை அழைத்து உணவு தயாரிக்கச் சொன்னாள். பண்ணையாட்கள் சுற்றிலும் இருந்தாலும் சற்றுத் தொலைவில் இருந்து கொண்டார்கள்.

அதனால் ஃப்ரீயாகப் பேச முடிந்தது.

சற்று நேரம் கார்ட்ஸ் விளையாடினார்கள். பிறகு தோப்பில் காலார நடந்தார்கள்.

அவன் அவளைத் தொடவேயில்லை. ஆனால், வார்த்தையால் மட்டும் அவ்வப்போது சற்றுச் சீண்டிக் கொண்டான்.

அவள், ''சும்மாயிருங்க... பிரேம்!''என்று முகம் சிவந்தாள் மட்டும் -

''சும்மாதான்... இருந்தாகணும்... சுத்தியும் உங்க ஆளுக... முதலாளியம்மாவைத் தொட்டா சும்மா... இருப்பாளுகளா... பின்னிர மாட்டாளுக!'' என்று கலாட்டா செய்து சிரித்தான்.

தோப்புக்குப் பின்னால் ஒரு கால்வாய் அவர்கள் நிலத்துக்குள்ளேயே ஓடியது. தண்ணீரைக் கண்டவுடன், ''ஹேய்! ஒரு குளியல் போடவா? அடடா, ஸ்பேர் டிரஸ்... இல்லையே...!'' என்றான் ஏமாற்றத்துடன்.

''அப்பாவோட லுங்கியும், பனியனும் இருக்கு தரட்டுமா?'' என்றாள்.

முதல்ல... ஒடு... எடுத்துக்கிட்டு வா..." என்றான்.

அவன் தண்ணீரில் அளைந்து நீந்துவதை ஒரு நிமிடம் நின்று பார்த்துவிட்டு முறுவலித்தபடி நகர்ந்தாள்.

பண்ணையாள் ஒருவரைக் கூப்பிட்டு, "பிரேம்சார் வெளியே வந்தவுடன் வந்து சொல்லு!" என்று போனாள்.

அவன் அரைமணி நேரத்துக்குப் பிறகுதான் வெளியே வந்தான். சமையலறையில் இருந்து அவள் துளைந்து துளைந்து நீந்துவதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டாள்.

சமையல்காரம்மாவிடம் சொல்லிச் சூடாகக் கேசரி செய்து பஜ்ஜி போடச் செய்து, தானே தேநீர் எடுத்துக் கொண்டு போனாள். குளியலுக்குப் பிறகு... 'சூடான ஐட்டமா, கொண்டா...' என்று அவன் ருசித்துச் சுவைத்துச் சாப்பிடுவதையும் ரசித்துத் தேநீர் அருந்துவதையும் அருகில் இருந்து பார்த்துக் கொண்டாள்.

பண்ணையாட்களெல்லாம் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"பாவம், சின்னம்மா... பெரியய்யாவுக்கு நேற்றுத்தான் சுயநினைவு வந்திருக்கின்னவுடனேதான் சந்தோஷமாயிருக் காங்க..." என்று பேசிக் கொண்டார்கள்.

"ரொம்ப சுகமா இருக்கு... தேவி... ஓடி ஓடி அலுத்துப் போச்சு... அதுவும் உன் கையால டீட்... அய்யாவுக்கு இன் னைக்கு ராஜ யோகம்தான்!" என்று கலாட்டாவாகச் சிரித்தான்.

இள வெயிலாக இருந்ததால் அங்கேயே சேர் போட்டு அமர்ந்தார்கள். அவன் திடீரென்று தீவிரமாக, 'ஏன் சந்திரி... வைர நெக்லஸை விக்கிறதுன்னே முடிவு செஞ்சுட்டியா என்ன?" என்றான்.

அவள் ஒரு கணம் அமைதியானாள். பிறகு, "ஆமா... பிரேம்... வாங்கறதுக்கு முன்னாடி அப்பா கேட்டிருக்கலாம்.



அப்பா... ஆசையாய்... வாங்கியது..." என்று ஒரு கணம் நிறுத்தினாள். ஒரு சிறு பெருமூச்சு விட்டாள். பிறகு சிரித்தாள்.

"எனக்கு அவ்வளவு காஸ்ட்லியான ஐட்டத்திலே இன்ட்ரஸ்ட் இல்லை. ஆனா அப்பாவுக்கு அது மாதிரி எனக்கு நிறையச் செய்யணும்னு ஆசை..." என்றாள்.

அவன் ஏதோ சொல்ல வரவும்... "வேண்டாம்... பிரேம்... இன்னும் வேணா பணம் தரேம்பீங்க... இப்ப உங்ககிட்ட வாங்கக் கூடாது," என்றாள்.

"ஹேய்... சந்திரி... என்னைப் பிரிச்சுப் பார்த்துத்தானே பேசறே?" என்றான் சற்றே வருத்தத்துடன்.

அவள் ஒரு நிமிடம் மௌனமானாள். பிறகு அவனை நிமிர்ந்து நேராகப் பார்த்தாள். "பிரேம்... எப்ப சரின்னு சொன்னேனோ... அப்ப இருந்தே... சுயம்ங்கறது எனக்கு இல்லை... ஆனா... அதை வெளிப்படுத்திக்கறது கல்யாணத் துக்கு அப்புறம்தான்..."என்றாள்.

அவன் உலகத்தையே மறந்து போனான். அவளை விழுங்கி விடுவது போலப் பார்த்தான். "ஹேய்... அந்த முதல் வாக்கியத்தை இன்னொரு தடவை சொல்லு," என்றான் தாபம் நிறைந்த குரலில்.

அவளும் குரலே எழும்பாத ஒரு குரலில் அதை மீண்டும் சொன்னாள். அவன் மௌனத்தில் ஆழ்ந்து கிடந்தான். அவர்கள் இருவருக்குள்ளும் ஏதோ பரிமாற்றம் நிகழ்வதை இருவரும் உணர்ந்து... பேச்சற்ற மௌனத்தில் ஆழ்ந்தார்கள். தலை குனிந்து அமர்ந்திருந்த அவள் மெதுவாக நிமிர்ந்து அவன் கிறக்கப் பார்வையை எதிர் கொள்ள முடியாமல் லேசாக நடுங்கினாள். "பிரேம்... அப்படிப் பார்க்காதீங்க...!" என்றாள் தயங்கிய குரலில்.

"ஓ... ஐ'ம் சாரி..." என்று தன்னை மீட்டுக் கொண்டான். ஆனால், "உங்க அத்தைக்குக் கிடைச்சது மாதிரி நாறு ஒண்ணாக் கிடைச்சாப்போலே இருக்குது... சந்திரி!" என்று சிரித்தான்.

அவள் மீண்டும் தலை குனிந்தாள்.

"பாரு... சந்திரி... இனி... நீ தனியில்லை... நானும் தனியில்லை... இந்தக் கணத்தில்... நாம இணைஞ்சாச்சு... உடல் இணைப்பு... அதைவிடு... அது எப்படியோ இருக்கட்டும், இந்தக் கால்வாய் சாட்சி... அந்தக் கதிரவன் சாட்சி..." என்றான் உணர்ச்சி நிறைந்த குரலில்.

அவள் மௌனமாய்த் தலையாட்டிக் கொண்டாள்.

"சரி, நீ... ஓடு... இங்கே எதிரில இருந்தாச் சரி வராது... ஏதாவது படிக்கக் குடுத்தனுப்பு." என்று சிரித்தான்.

"ஐயே! அழகுதான்!" என்று அழகு காட்டி விட்டுப் போவதை மகிழ்ச்சியாய்ப் பார்த்துக் கலகலவென்ச் சிரித்தான்.

\- - - - -

மெதுவாகத் தன்னருகில் அமர்கிற பிரேம்குமாரை அம்மா பார்வதி அதிசயமாய்ப் பார்த்தார்.

இரவு பத்து மணி இருக்கும். சற்று நேரம் ஹாலில் சோபாவில் அமர்ந்திருப்பார். அன்றும் அப்படி அமர்ந் திருந்தார்.

"என்னப்பா?" என்றார் பரிவாக.

அவன் அம்மாவின் மடியில் படுத்துக் கொண்டான். அந்த சமயம் அந்தப் பக்கம் போன அப்பா...

"என்ன... செல்லப் பிள்ளை கொஞ்சறான்!" என்று சிரித்து விட்டுப் போனார்.



பிரேம் குமார் அப்படித்தான். நான்கு நாட்கள் வீட்டில் இருந்தாலும், அம்மாவின் பின்னாலேயே சுற்றுவான். கட்டிக் கொள்வான் கொஞ்சிக் கொள்வான்.

அவன் அம்மாவின் முகம் பார்த்துப் படுத்தான்.

"என்னப்பா..." என்றார்.

"அம்மா... நீ அண்ணிங்க ரெண்டு பேருக்கும் வைர நெக்லஸ்... வாங்கித் தந்தியே... அது மாதிரி எனக்கு வர்றவளுக்கும் வாங்கித் தருவேதானா?" என்றான்.

"ஆமா... அதிலென்ன சந்தேகம்?" என்றார் வியப்பாக.

"அப்படின்னா... நான் ஒரு இடத்திலே ஒரு அருமையான பீஸ் செலக்ட் செஞ்சு வச்சிருக்கேன். வாங்கித் தருவியா?" என்றான்.

"ஓ... யெஸ்!" என்றார் சந்தோஷமாக... அவன் உடனே தம்புவுக்கு போன் செய்து விசயம் சொன்னான்... "வாங்குவது நாங்கள்தான் என்பதைச் சந்திரியிடம் சொல்ல வேண்டாம்," என்றான்.

அவர் உடனே போய் ஒரு பார்ட்டி கேக்கறாங்கம்மா... என்று சொல்லி வைர நெக்லஸைச் சந்திரிகாவின் வீட்டில் இரும்பு பீரோவில் இருந்து எடுத்து வந்தார். அம்மாவுக்குப் பிடிக்க உடனே செக் போட்டுக் கொடுத்தார். தம்பு நன்றி சொல்லிப் புறப்பட்டார்.

வைர நெக்லஸைக் கையில் வைத்துக் கொண்டு லேசாக வருடியபடி பார்த்துக் கொண்டிருந்த மகனை அப்பா புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

அம்மா அதை வாங்கி மறுபடி திருப்பிப் பார்த்தார்.

"எம்ப்பா... நகை மேல ஆசையில்லாத பொண்ணுதான் வேணும்னே!" என்றார் ஆச்சரியமாக.

அவன் எச்சரிக்கையாக மௌனம் சாதித்துச் சிரித்துச் சமாளித்தான். பிறகு மெதுவாக எழுந்து நழுவினான்.

"பார்வதி... அவன் வைர நெக்லஸ் மட்டும்தான் செலக்ட் பண்ணியிருக்கானா... இல்லை... போடறதுக்கு ஆளும் செலக்ட் பண்ணிட்டானா... கேளு..." என்று அப்பா கிண்டல் செய்வது காதில் விழாதவன் போல் போய்விட்டான்.

## 7



**கை**தட்டல் வெடித்து அடங்கிற்று. சந்திரிகா மலைத்துப் போய் அமர்ந்திருந்தாள்.

பிரேம் குமார் மார்க்கெட்டிங், விளம்பரத்துறை என்று விரிவாக ஒரு லெக்சர் கொடுத்திருந்தான். அவன் ஊரில் இருப்பது தெரிந்ததும் சங்கங்கள் மொய்த்தார்கள். ஒன்றிரண்டு லெக்சர் மட்டும் ஒத்துக் கொண்டான்.

புரந்தரதாசர் ஹாலில் அவன் கொடுத்த அந்த உரை கேட்க அவளும் போனாள். அங்கேதான் அப்படி உட்கார்ந்திருந்தாள். கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவன் பதில் சொன்ன விதம், அவனுக்குக் கொடுக்கப்பட்ட மரியாதை, அவன் புகழ் எல்லாம் கேட்டு அதிசயித்துப் போய் அமர்ந்திருந்தாள்.

அவளும் தம்புவும் வந்திருந்தார்கள். "சந்திரிம்மா... சொன்னேனே... பெரிய ஜீனியஸ்ன்னு..." என்றார் தம்பு.

ஆமா... என்றாள் மலைத்துப் போய்.

"பொதுவா... பெண்கள்கிட்டே... பழகமாட்டாரு. ஆனா... உங்களைப் பிடிச்சுப் போச்சு..." என்றார். பிறகு மெதுவாக... "ஏம்மா... தம்பி... ஏதாவது உங்ககிட்டே... கேட்டதா?" என்றார்.

அவள் அவரைக் கேள்விக் குறியாய்ப் பார்த்தாள்.



அவர் அவள் பதிலை எதிர்பார்க்காமல் தொடர்ந்தார். "அப்படி மட்டும் கேட்டா... அதைவிடப் பெரிய லக் எதுவும் இல்லம்மா... எந்தக் கெட்ட பழக்கமும் கிடையாது... பர்ஃபெக்ட் ஜென்டில்மேன். உங்க மேல ஆர்வம் மாதிரி தெரியுது..." என்று சொல்லும்போதே...

"போலாமா... சந்திரி?" என்று சிரித்துக் கொண்டே... அவர்களை நோக்கி வந்தான்.

தம்புவை இறக்கிவிட்டு விட்டு, அவளையும் இறக்கிவிட வந்து கொண்டிருந்தான். அவள் அவன் முகம் பார்த்து,

"பிரேம்!" என்றாள்.

"ம்... மீட்டிங் நல்லாப் போச்சு... இல்லை..." என்றான்.

"நீங்க ஒரு ஜீனியஸ்..." என்றாள் வியப்பாக.

"அஞ்சாறு ஜீனியஸ் எல்லாரும் படிச்சிட்டு மறந்தர்றாளுக. நான் கொஞ்சம் ஞாபகம் வச்சுட்டுச் சொல்றேன். அதுக்கென்ன... நீ கூடத்தான்... பெரிய பிஸினஸ் மேக்னெட்டாம். பேசிக்கறாங்க!" என்று சிரித்தான்.

"அது நீங்க கிரியேட் செய்த இம்ப்ரெஷன்!" என்றாள்.

உண்மையாகவே கடந்த பத்துப் பதினைந்து நாட்களாகவே திருமகள் ஜுவெல்லரி அதிபர் சந்திரிகா நான்கைந்து திறப்பு விழாக்களில் கலந்து கொள்கிற மாதிரி ஏற்பாடு செய்திருந்தான். இரண்டு பத்திரிகைகளில் அவள் பேட்டி வருகிற மாதிரி ஏற்பாடு செய்தான்.

"சந்திரி... யு மஸ்ட் அன்டர்ஸ்டான்ட் ஒன் திங்... காதலுக்கு ஜீனியஸ் எல்லாம் ஒண்ணும் தேவையில்லை..." என்றான்.

"மக்கா இருந்தாலும் பரவாயில்லைங்கறீங்களா?" என்றாள் அவள் பொய்க் கோபத்துடன்.

அவன்சிரித்தான். அந்த டிரைவ் இன் ஹோட்டலில் காரை நிறுத்தி ஐஸ்கிரீம் ஆர்டர் செய்தான்.

"சந்திரி... எனக்குச் சில கொள்கைகள் இருக்கு... உனக்கும் புகழ் கிடைப்பதற்கான தகுதிகள் இருக்கு... இல்லேன்னா... வலியச் செய்ய மாட்டேன். அது பெண்டாட்டியா இருந்தாலும்... தான்!" என்றான் தீவிரமான குரலில்.

அவள் முகம் வெகுவாகச் சிவந்து போனது. அவன் அவளைப் பார்த்த பின் தன் வார்த்தைகளின் பொருள் உணர்ந்தான். பிறகு, "சந்திரிகா நல்லா யோசிச்சுப் பாரு. நாம பேசிக்கிற விஷயங்கள் எல்லாம் சாதாரண... காதலர்கள் பேசிக்கிறது போல இல்லை... அந்த மாதிரி உலகப்பொருளாதார விஷயங்கள் எல்லாம் நீ வருவாப் புரிஞ்சுக்கறே... பேசறே... நீ அன்னைக்கு என்ன சொன்னே... அப்பா... கடைக்கு வரும்போது பர்பெக்டா... கையில குடுக்கணும்னு. அது எனக்கு ரொம்பப் பிடிச்சது... அந்த மெண்டாலிட்டி... ஐ லைக் தட்..." என்றான்.

அவள் மகிழ்ச்சியாய் அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்... "தாங்க்ஸ்... பிரேம்!" என்றாள்.

"ஹேய்... நீ... நாளைக்கு எங்க வீட்டுக்கு வரியா?" என்றான்.

"என்ன விசேஷம்?" என்றாள்.

"எங்கப்பாதான் இன்வைட் பண்ணச் சொன்னார். நாளைக்கு அவரோட கடைசிப் பையனுக்கு பர்த் டேயாம். கூப்பிடச் சொன்னார்."

"பிரேம்! சொல்லவேயில்லை!" என்றாள் குதூகலமாக.

"அதான் இப்ப சொல்லிட்டேனே... காலை பிரேக் ஃபாஸ்ட்டே எங்க வீட்லதானாம். லஞ்சும் அங்கேதானாம்..." என்றான்.



"சரிங்க..." என்றாள்.

இரவு பன்னிரண்டு மணிக்கு, "ஹாப்பி பர்த்டே!" என்று மெசேஜ் அனுப்பினாள்.

மறுநாள் காலையில் இளம் ரோஜா வர்ணத்தில் அழகான ஒரு கைத்தறிப் புடவை அணிந்து அவன் காரில் வந்து இறங்கினாள்.

"ஹாப்பி... பர்த்டே..." என்று ஒரு கிஃப்ட் நீட்டினாள்.

அழகான ஒரு பிரேஸ்லெட்... "தாங்க்ஸ்... சந்திரிகா..." என்று வாங்கிக் கொண்டான்.

குடும்பத்தவர் சுற்றிலும் இருந்ததால் எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

மேஜையைச் சுற்றி அமர்ந்தபோது, "என்னம்மா... கூட்டத்தைக் காணோமேன்னு பார்க்கிறியா... அவன் எப்பவுமே கிராண்டா செலிபரேட் பண்றதில்லை. குடும்பத்தாரோட மட்டும்தான் நேரம் செலவு செய்வான்." என்றார். கண்களில் லேசாகக் குறும்பு கூத்தாடினாற்போல் இருந்தது.

"ஓ..." என்றாள். மையமாகப் புன்னகைத்து வைத்தாள்.

நீயும்... குடும்பத்தவள்தான் என்கிறாரோ என்று தோன்றியது... பிரேமைப் பார்த்தால், அவனே கூட ஆச்சரியமாக அப்பாவைப் பார்த்த மாதிரி இருந்தது.

பிரேம்குமாரிடம் சகோதரர்கள் இருவரும் பிரியமாகவும், மரியாதையுமாகப் பழகுவதைப் பார்த்தாள். பிஸினஸ் பற்றி அவனிடம் ஏதோ ஆலோசனை கூடக் கேட்டார்கள்.

"டேய்... பிறந்த நாளன்னைக்கு கூட என்னடா பிஸினஸ் டிஸ்கஷன்!" என்று அப்பா அதட்டவும்தான் பேச்சை மாற்றினார்கள்.

சந்திரிகா அவரவர்களுக்குத் தகுந்த மாதிரி உரையாடுவதை அப்பா ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டார். மதன்குமாரின் மனைவியிடம் ஜுவெல்லரி, டிசைன்ஸ் என்று பேசினாள். சுரேஷ்குமாரின் மனைவியிடம் சமையல் முறைகள் பற்றிப் பேசினாள். பார்வதியிடம் திருப்பாவை, திருவெம்பாவை பற்றிப் பேசினாள். ஆனால் அவரிடம் மரியாதையான தூரத்திலேயே நின்றாள்.

அவள் அந்தப் பக்கம் கைகழுவப் போனபோது, அண்ணிகள் இருவரும், "என்ன... தம்பி... அதிசயமா... ஒரு கெஸ்ட் கூப்பிட்டிருக்கீங்க... அதுவும் இப்படி ஒரு அழகான பொண்ணு!" என்று கலாட்டா செய்ய -

"நான்... கூப்பிடலே... அப்பாதான் கூப்பிடச் சொன்னார்!" என்றான்.

அவர்கள் கப்சிப்... என்று ஆகி விட்டார்கள்.

பார்வதி எதிர்பாராத விதமாக அவளிடம் அந்த வைர நெக்லஸைக் காட்ட அவள் பிரேமை ஒரு நிமிடம் பார்த்து விட்டு, "எங்க கடை டிஸைன்தான்!" என்றாள்.

"ஓ... ரொம்ப நல்ல டிஸைன்தான்!" என்று அவள் சிலாகித்துக் கொண்டாள்.

அவன் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருக்க, அவள் நெக்குருகிக் கொண்டு நின்றிருந்தாள்.

"சரி... நான் கடைக்குப் புறப்படறேன்..." என்று புறப்பட்டபோது தம்பு செல்லில் கூப்பிட்டார்.

"சந்திரிம்மா... நான் கடையைப் பார்த்துக்கிறேன். என்னமோ விசேஷமாம். பிரேமோட அப்பாவே ஃபோன் செய்தார். நீங்க இன்னைக்கு லீவு எடுத்துக்கங்க," என்றார்.

ரங்கசாமி ஒன்றும் அறியாதவரைப் போல் அமர்ந்திருப்பதைப் பார்த்ததும், 'மகனுக்கு மேல் அப்பா!' என்று நினைத்துக் கொண்டாள்.



அண்ணன்களும், அண்ணிகளும் மாலை வருவதாகச் சொல்லிப் போனார்கள். அருகருகே இருந்தாலும் தனித்தனிக் குடும்பமாகத்தான் வசித்தார்கள்.

பிரேம் ஏதோ வேலை என்று சற்று வெளியே போனான்.

சந்திரிகா பார்வதியிடம் வெகு எளிதாக ஒட்டிக் கொண்டாள். இரண்டு பேரும் கலகலவென்று சிரித்துக் கொண்டிருக்கையில் ரங்கசாமி சாவதானமாக டைனிங் டேபிளில் வந்து அமர்ந்தார்.

"அப்ப... சரி... பாதி ப்ராப்ளம் முடிந்தது. மாமியாருக்குப் பிடிச்சாச்சு..." என்று சிரிக்கவும், திடுக்கிட்டுப் போனாள்.

"அம்மா... இங்க வா..." என்றார். அவள் திகைத்துப் போய் நின்றதைப் பார்த்து.

அவள் அருகில் போய் நின்றாள்.

"அம்மா... ரெண்டு பெரிய பயலுகளும் சொத்துக்கு அடிச்சிட்டானுங்க... அப்பா... எனக்கு உங்க சொத்தே... வேண்டாம்ப்பா... உங்க நிம்மதி போதும்ப்பானுட்டு... பாம்பே... போனான். மூணே வருஷத்துல பெரிய ஆளா... வந்தான்... அவன் மனசுக்குப் பிடிச்ச ஆளு யாருன்னு பார்க்கணும்னுதான் வரச் சொன்னேன்," என்றார்.

அவள் பணிவாக ஆனால் முகம் சிவக்க நின்றாள்.

"பிரேம்... எதுவும் தனக்கு வேணும்னு கேட்க மாட்டான். ரொம்ப நல்ல பையன். அவன் கேக்கறதுக்கு முன்னால... சம்மதம் குடுக்கணும்னுதான் வரச் சொன்னேன்!" என்று சிரித்தார்.

"சந்தோஷமா... இருங்க..." என்றார்.

அவள் கண்கள் கலங்கத் தலையாட்டினாள். அவர்கள் பேசிக் கொண்டே திரும்ப, அங்கே பிரேம் பிரமித்துப் போய் நின்று கொண்டிருந்தான்.

"வாடா..." என்றார்.

அருகில் இருவரையும் அமர்த்திக் கொண்டார். "அப்பா... உடம்பு சரியில்லாமல் இருக்கறப்ப... அங்க... இங்கன்னு எண்டர்டெயின்மெண்ட்... நினைக்க முடியாது. இல்லைன்னா சினிமா போயிட்டு வாங்கன்னு அனுப்பி வைப்பேன். போங்க... போயி அவன் ரூமிலே கொஞ்ச நேரம் பேசிட்டு வாங்க!" என்றார்.

அவள் திகைப்பாய்ப் பார்க்க, 'பயப்படாதே அம்மிணி, என் மகன் ரொம்ப டீசண்டான ஆளு!'' என்று வெடிச் சிரிப்பு சிரித்தார்.

கனவில் நடப்பது போல இருவரும் போவதைப் பார்த்துக் கணவன், மனைவி இருவரும் சிரித்துக் கொண்டனர்.

அறை மிகவும் அழகாக இருந்தது. ஒரு பெரிய படுக்கையறை. ஒரு ஹால். ஒரு லைப்ரரி என்று காம்பாக்டாக இருந்தது. அழகழகான படங்கள் மாட்டி வைத்திருந்தான். அவள் சுற்றிப் பார்த்தாள்.

"ரூம் பிடிச்சிருக்கா? நீ வந்ததுக்கப்புறம் உன் டேஸ்ட்டுக்கு மாத்திக்கலாம்," என்றான்.

"ம்... ரூம் பிடிச்சிருக்கு... அதை விட..." என்று இழுத்தாள்.

"ம்?" என்றான்.

"உங்க அப்பாவை ரொம்பப் பிடிச்சிருக்கு" என்றாள்.

அவன் சிரித்தான். "நானே எதிர்பார்க்கலை சந்திரி!" என்றான் அவனும் ஆச்சரியமாக. அவள் அவன் லைப்ரரி புத்தகங்களைப் புரட்டினாள். நல்ல புத்தகங்கள் சேகரித்து வைத்திருந்தான். தன் துறை சார்ந்த புத்தகங்களும் நிறைய வைத்திருந்தான்.



அவள் ஏதோ ஒரு புத்தகத்தில் ஆழ்ந்து புரட்டிக் கொண்டிருந்தபோது திடீரென்று அரவமே இல்லையென்று திரும்பிப் பார்க்க, அவன் அவளை விழுங்கினாற் போல் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

"ஹேய்... பிறந்த நாளுக்கு ஒன்னும் பரிசு இல்லையா?" என்றான்.

"கொடுத்தேனே!" என்பது போல் பார்க்க... "நான் எதிர்பார்க்கற மாதிரி பரிசு..." என்றான்.

அவள் நாணம் பொங்க நின்றாள். "அப்பா சொன்ன மாதிரி ரொமான்ஸுக்கான சூழ்நிலை இப்ப இல்லை. ஆனா, நானும் மனுஷன்தானே... ஏதாவது கொஞ்சம் கிடைத்தா... அந்த நினைப்பில் கொஞ்ச நாள் ஓட்டுவேனே..." என்றான்.

அவள் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டு, "என்ன வேணும்?" என்றாள், கிசுகிசுப்பான குரலில்.

அடுத்த கணம் அவன் உலகம் மறந்தான். அருகில் இழுத்து அணைத்து முகம் முழுக்க முத்தமாரி பொழிந்தான். தன்னை மறந்து அவளும் இழைந்து கொடுத்தாள். ஒரு சில நிமிடங்கள் கழித்துத்தான் நிலவுலகிற்கு வந்தார்கள்.

அவள் அவன் தாபப் பார்வையிலிருந்து தப்பிப்பதற்காக அவன் மார்பிலேயே சாய்ந்து கொண்டாள். அவன் கிறக்கமாகக் கொஞ்சக் கேட்டு மேலும் வெட்கம் பொங்க முகம் பதித்துக் கொண்டாள். பிறகு மெதுவாக விலகிக் கொண்டாள்.

"தாங்க்ஸ்... தேவி... தாங்க்ஸ்..." என்றான் பின்னர் தலையைக் கோதியபடி. அவள் மெதுவாக அவன் முகம் பார்த்து... "பிரேம்... நெக்லஸை வாங்கினதைச் சொல்லவேயில்லையே..." என்றாள்.

அவன் புன்னகைத்தான். 'நீதான் கூடுதலா பணம் வாங்கிக்கமாட்டேங்கறே. அதான்... அம்மா... எப்படியும் தன் மருமகளுக்கு ஒன்னு வாங்குவாங்க... ரெகமண்ட் செய்தேன்!'' என்றான் - மீண்டும் தன்னருகில் இழுத்து.

''சொன்னா சிரிப்பீங்க! பிரேம்! ஆனா, நகைகள் எனக்கு ரொம்பப் பிடிக்கறதில்லை!'' என்றாள்.

''போச்சரா... ஏய், தொழிலுக்கே... துரோகம் செய்யாதே...'' என்று கலாட்டா செய்தான்.

''ஆனா... பெண்களுக்கென்று கொஞ்சம் அஸெட்ஸ் வேணுமில்லையா? அந்தப் பாயின்ட்ல பார்க்கும்போது ஓ.கே.தான் தாங்க்ஸ்... பிரேம்... தாங்க்ஸ்... ஃபார் மாரல் சப்போர்ட் யு ஆர் கிவிங்... மி...'' என்றாள்.

அவன் அவள் தலையைக் கோதி மீண்டும் நெற்றியில் முத்தமிட்டான்.

அவள் தொடர்ந்தாள். ''ஆனா... அதுக்காக என் பிரச்சினைகளைத் தூக்கி உங்ககிட்டே கொடுக்க மாட்டேன். நீங்க மாரல் சப்போர்ட் மட்டும் கொடுத்தா... போதும்... இப்பவும்... உங்ககிட்டே வாங்கற பணத்துக்கு இன்ட்ரஸ்ட்தான்!'' என்றாள்.

''சரிம்மா தாயே... குடு... வாங்கிக்கறேன். ஆனா அப்பப்ப... வேற ஏதாவது கொஞ்சம் இன்ட்ரஸ்ட்டா குடு...'' என்றான்.

''அந்தப் பாயின்ட்லயே இருப்பீங்க...'' என்றாள் அவனை ஓரக் கண்ணால் பார்த்து.

''ஐயோ, அப்படிப் பார்க்காதே... என்னமோ பண்ணுது...'' என்று கிறுகிறுத்து விழுகிறாற் போல் நடித்துக் கலாட்டா செய்தபோது, கையில் இருந்த புத்தகத்தாலேயே அவன்



தோளில் ஒன்று வைக்க... அவன் சிரித்தான். பிறகு... ''சந்திரி... பிரச்னைகளைச் சந்திச்சுப் பழகு.'' அதான் நல்லது...'' என்று பொடி வைத்தான்.

''ஏன்?'' என்றாள்.

''இல்லை... நான் ரொம்பப் பிரச்சினையான ஆளு... என்னையும் சமாளிக்க வசதியா இருக்கும்!'' என்று மீண்டும் சிரித்தபடி சோஃபாவில் அமர்ந்தான்.

''ம்... இது ரொம்பக் கரெக்ட்!'' என்றாள்.

''எது...''

''பிரச்சினையான ஆளுன்னு சொன்னீங்களே... அது...'' என்று கலகலவென அவள் சிரிக்க... ''சந்திரி... நீ எப்பவும் இப்படிச் சிரிக்கிற மாதிரி நான் பார்த்துக்குவேன்!'' என்று நெகிழ்ந்தான்.

8



'அம்மா, வணக்கம்.'

தன் முன்னால் பதவிசாக வந்து நின்ற பெண்ணை அத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அமைதியான முகம்... ஆனால், அந்த முகத்தில் ஏனோ சோகம் தேங்கியிருப்பதாய் உணர்ந்தாள்.

''யாரம்மா, நீ... என்ன வேணும்?''

''நான் யாருன்னு சொல்லிக்க முடியாத துரதிர்ஷ்டசாலி. என் பேரு சகுந்தலா,'' என்றாள் அந்தப் பெண்.

''அது சரிம்மா. உனக்கு என்ன வேணும்?''

''எனக்கு வேறென்ன வேணும்? ஐயாவைப் பார்க்கணும்!''

அத்தை அந்தப் பெண்ணைக் கேசவன் இருந்த அறைக்கு அழைத்துப் போனாள்.

படுக்கை மறைவில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த சேவனைப் பார்த்தவுடன் பொங்கிப் பொங்கி அழுதாள் அந்தப் பெண்.

அத்தைக்கே ஆச்சரியமாய்ப் போனது.

அதற்குள் அறையிலிருந்த நர்ஸ் -

"அம்மா! இங்கே சத்தம் செய்யக் கூடாது!" என்று சொன்னதும் இருவரும் வெளியே வந்தார்கள்.

'பாவம்! சேவன் இவளுக்கு ஏதோ பெரிய உதவி செய்திருப்பான் போலும். இந்தப் பெண் இப்படி வருத்தப்படுகிறாள்' என்று அத்தை நெகிழ்ந்து போனாள்.

"வா அம்மா. இப்படி உட்கார். என்னசெய்யறது. கடவுள் எங்க சேவனை எப்படிச் சோதிக்கிறார் பார்,"என்று புலம்பிக் கொண்டு உள்ளேபோய்ச் சமையற்காரனைக் காஃபி போட்டு வரச் சொன்னாள்.

கைப்பையை இறுகப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள் அந்தச் சகுந்தலா.

அதிகம் பேசாமல், சொல்லப் போனால் மௌனமாக, அந்த அறையைச் சுற்றிச் சுற்றிப் பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தாள்.

கார் வரும் சத்தம்கேட்டது.

"சந்திரி வந்துட்டா" என்று அத்தை வாசலுக்குப் போனாள்.

"அப்ப நான் வரேன்!" என்று புறப்பட்ட சகுந்தலாவை, "இரு. இரு. சந்திரிகாவைப் பார்த்துட்டுப் போவியாம்!" என்று அமர்த்தினாள்.

சந்திரிகா வந்ததும் அறிமுகப்படுத்தினாள்.

சந்திரிகாவுக்கு அந்தப் பெண்ணை முன்பே எங்கேயோ பார்த்த மாதிரி இருந்தது அட. ஆமாம். இந்தப்



பெண் ஆஸ்பத்திரிக்குக்கூட வந்திருந்தாளே என நினைவு வந்தது.

"சகுந்தலா, எங்க அப்பா உங்களுக்கு ரொம்பப் பழக்கமா?" என்றாள், சந்திரிகா.

"என்னன்னு சொல்றதும்மா? உங்கப்பாதான் எனக்கு வாழ்க்கையே குடுத்தவர். அவர் மட்டும் இல்லன்னா இன்னிக்கு நான் உயிரோடவே இருக்கமாட்டேன்!" என்றாள்.

"ஓ. அப்படியா? என்ன செய்யறது. எங்களுக்காகப் பிரே பண்ணிக்கங்கம்மா!" என்றாள் சந்திரிகா.

"சரிங்க. நான் வரேன்," என்று கிளம்பிய சகுந்தலாவிடம் ஏதோ ஒரு பதட்டம் தெரிந்தது.

வேகமாகக் கிளம்பிய அவளது காலில் சோஃபா இடித்தது. தடுக்கி விழப் போனாள். சோஃபாவின் கைப்பிடியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

கையிலிருந்த கைப்பை எகிறி விழுந்தது.

பைக்குள்ளிருந்து ஒரு ஃபோட்டோ விழுந்தது.

ஃபோட்டோவை எடுக்கச் சந்திரிகாவும் சகுந்தலாவும் ஒரே சமயத்தில் குனிந்தனர். ஃபோட்டோ சந்திரிகா கையில் கிடைத்தது. எதேச்சையாக அதைப் பார்த்த சந்திரிகா அதிர்ந்து போனாள்.

ஃபோட்டோவில் மாலையும் கழுத்துமாக இந்தச் சகுந்தலாவும் அப்பாவும்.

வெறித்தபடி அந்த ஃபோட்டோவையே சந்திரிகா பார்த்துக் கொண்டிருக்கையில் அந்தப் பெண் அதை வெடுக்கெனப் பறித்துக் கொண்டு வேகமாய் ஓடிவிட்டாள்.

சந்திரிகா தொடர்வதற்குள் கேட்டைத் தாண்டிப் போய் ஒரு ஆட்டோ பிடித்துப் போயே போய்விட்டாள்.

திகைத்த சந்திரிகாவைப் பார்த்து, "அந்தப் போட்டோவிலே யாரு?" எனக் கேட்டாள் அத்தை.

"அப்புறம், சொல்றேன் அத்தை." என்று அறைக்குள் போய்க் கதவைச் சாத்திக் கொண்டாள் சந்திரிகா. திகைத்துப் போய் நின்றாள் அத்தை.

கடந்த இரண்டு மாதங்களில் எத்தனை பிரச்னைகளைச் சந்தித்தபோதும் கலங்காத சந்திரிகா, அந்த ஃபோட்டோவைப் பார்த்ததிலிருந்து கலங்கிப் போனாள்.

கண்ணீர் மடை திறந்த வெள்ளமாய்ப் பொங்கி வழிந்தது.

இது சாத்தியமாய் இருக்குமா? அப்பா இப்படி யெல்லாம் செய்யக் கூடியவரா என்ன?

ஃபோட்டோவில் ஏதாவது ட்ரிக் இருக்குமா என்ன?

அப்படி யெல்லாம் ஒரு பெரிய பணக்காரர் வீட்டிலே போலியான ஃபோட்டோவை வைத்துக் கொண்டு ஏமாற்ற ஒரு பெண் முன் வருவாளா என்ன?

அப்பா அப்படிப்பட்டவரா?

'என்ன, நீ அப்படிப்பட்டவரா? அப்படிப்பட்டவரா? என்று கேட்டுக் கொண்டிருக்கிறாய். அவரும் மனிதர்தானே. உனக்கு 12 வயது இருக்கும்போது உன் அம்மா இறந்து போனாள். உனக்காக இரண்டாம் கல்யாணம் வேண்டாம் என்று தீர்மானித்தார் என்றாலும் இள வயது. தியாகம் என்ற பெயரில் உணர்ச்சிகள் இல்லாத ஜடமாக ஒரு மனிதர் இருக்க வேண்டுமா என்ன? இன்னைக்கெல்லாம் இருந்தால் அப்பாவுக்கு வயது 44 தானே. முப்பத்தைந்து வயதிலிருந்து ஒரு மனிதர் எல்லாவற்றையும் தியாகம் செய்ய வேண்டுமா என்ன?' என்று உள் மனது எதிர்க் கேள்வி எழுப்பேது தன்னுடைய மனத்திலிருந்தே எழுந்த வீரிய மிக்க



அந்தக் கேள்வி சந்திரிகாவை ஒரு கணம் திக்குமுக்காட வைத்தது.

சரி, அப்படியே இருக்கட்டும். அந்தப் பெண்ணைப் பார்த்தால் ரொம்பவும் இள வயசாகத் தெரிகிறது. தன்னை விட ஒரு இரண்டு வயது பெரியவளாய் இருப்பாள் போலிருக்கிறது. இவளுடனா சகவாசம் வைத்துக் கொள்வார் அப்பா.

மீண்டும் உள் மனது கெக்கலித்தது.

'இந்த விஷயமெல்லாம் எப்ப ஆரம்பிக்கும், எப்படிப் பத்திக்கும் னெல்லாம் சொல்லவே முடியாது. ஏதோ தொடர்பாகி விட்டது. இப்போது என்ன செய்யப் போகிறாயாம்? அவனவன் கிழடு கட்டைகளெல்லாம் இரண்டாவது மனைவி, மூன்றாவது மனைவி என்று ஜோசியத்தைச் சாக்கிட்டுக் கொண்டு கல்யாணம் செய்து கொள்ளவில்லையா? பகுத்தறிவுச் சிங்கங்கள் மட்டும் என்ன வாழ்ந்ததாம்? பாவம் அப்பா. ஏதோ ஒரு பலவீனமான நேரத்தில் விழுந்திருப்பார்!' என்றும் எண்ணிக் கொண்டாள்.

ஒரு பக்கம் மனது வலித்தது. தான் எவ்வளவு உயர்வாய் நினைத்த அப்பா, தனக்கே தனக்கென்று எண்ணியிருந்த அப்பா, இன்று அவருக்காகவும் ஒரு வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார். சொல்லியிருக்கலாம். வெளிப்படையாக இருந்திருக்கலாம். இப்படிச் செய்திருக்க வேண்டியதில்லை.

அதே சமயத்தில் இன்னொரு மனது இடி இடியென்று சிரித்தது.

"ஏன்... நீ மட்டும் பிரேமை மனதில் சுமக்கவில்லையா? அவன் அணைப்புக்கு ஏங்கவில்லையா?

'வாழ்க்கை என்னவென்றே தெரியாத உனக்கே இப்படியென்றால் எல்லாவற்றையும் அனுபவித்த அந்த மனிதருக்கு

ஏக்கங்கள் இருக்கக்கூடாதா?' என்ற ஏகப்பட்ட கேள்விகள் உள்ளே படையெடுத்தன.

ஆனாலும் மனது ஜீரணிக்க மறுத்தது.

'இப்போது இந்த விஷயங்கள் வெளியானால் எவ்வளவு கேவலம்! இதை எப்படிக் கையாள்வது? அத்தையிடம் சொல்லலாமா? அதிர்ந்தே போவாள். அவள் ஒரு பக்கம் படுத்துக் கொண்டாள் என்றால் அவ்வளவுதான்.

'தம்பு சாரிடம் சொல்லலாமா? ஆனால் முதல் நாளிலேயே பிசினஸ் வேறே, குடும்பம் வேறே என்று அப்பா நினைத்ததாகச் சொன்னாரே! என்ன இருந்தாலும் தங்களிடம் சம்பளம் வாங்குபவர். அவரிடம் போய் அப்பாவைப் பற்றிய விஷயங்களை, அதுவும் இது போன்ற விஷயங்களைப் பேசுவதா? சே...!'

பிரேம்...?

தன்னைப் புரிந்து கொள்கிறவன். நாலு இடம் பார்த்தவன். பெரிய குடும்பங்களோடு பழகியவன். அவனுடைய உதவியை நாடினால் என்ன?

செல்ஃபோனை எடுத்து நம்பரைப் போட்டாள். பிறகுதான் மணியைப் பார்த்தாள்.

நள்ளிரவு இரண்டு மணி.

ஆஃப் செய்தாள். என்ன பைத்தியக்காரத்தனம்!

எதற்கும் நேரம் காலம் என்று ஒன்று இல்லையா? அதற்குள் இன்னொரு கோணத்திலும் யோசித்தாள்.

இதுவரைக்கும் அந்தப் பெண்ணால் எந்தப் பிரச்னையும் வரவில்லை.

இனி, அடுத்து என்ன செய்கிறாள் என்று பார்ப்போம். அதற்குப் பிறகு என்ன செய்வது என்று முடிவெடுக்கலாம்.



ஓரளவு தெளிவு ஏற்பட்டது.

உறக்கமும் மெதுவாக அவள் கண்களைத் தழுவியது.

பத்துப் பதினைந்து நாட்களுக்குப் பிறகு அன்றைக்குத் தான் சற்றுப் புத்தகங்கள் படிக்கிற ஆர்வம் வந்தது பிரேமுக்கு.

இரண்டு வாரமாகப் பார்க்காமல் வைத்திருந்த வணிகத் தொடர்பான பத்திரிகைகளை யெல்லாம் பார்த்து விட்டுப் படுத்தான்.

கலகலவென்ற சந்திரிகாவின் சிரிப்பும், பல நாட்களுக்குப் பிறகு மலர்ந்து விளங்கிய அவள் முகமும் அவன் மனதில் நிறைந்து ஒரு நிறைவான உணர்வை ஏற்படுத்தியது.

அப்பாவின் ஒப்புதல், அவளது பரிவு, அவள் அப்பாவுக்குச் சுயநினைவு திரும்பியது என்று நடந்த நல்ல விஷயங்கள் எல்லாம் தெம்பைக் கூட்டியது. நல்ல உறக்கம் கிடைத்தது.

இரண்டு மணியிருக்கும். செல்ஃபோன் ஒலிக்கத் தூக்கக் கலக்கத்திலேயே எடுத்தான். ஆனால் ஆஃப் செய்திருந்தாள்.

புன்னகைத்துக் கொண்டான். பேச நினைத்துக் கொண்டிருப்பாள். இந்த நேரத்திலா என்று வெட்கத்தில் ஆஃப் செய்திருப்பாள் என்று எண்ணிக் கொண்டான்.

கடையில் வேலை செய்கிற ஆட்களிடம், பண்ணையில் வேலையாட்களிடம், அவள் காட்டுகிற கண்டிப்பான பரிவு, தம்புவிடம் அவள் காட்டுகிற மரியாதை கலந்த அன்பு, தன் தந்தையிடம் காட்டிய பணிவு எல்லாம் நினைவில் ஓடியது. ஆனால் தன்னிடம் மட்டும் வெட்கம் ததும்ப அப்போதுதான் பூத்த மலரைப் போல் நிற்கும்போது எவ்வளவு அழகாக

இருக்கிறது! நேர்த்தியாய் உடை உடுத்திக் கொள்கிற விதம், தன்னிடம் மட்டும் கலகலவென்ச் சிரிப்பது என்று சந்திரிகாவின் நினைவு அவன் நெஞ்செல்லாம் நிறைந்த போது துன்பமாகவும் இருந்தது. இன்பமாகவும் இருந்தது. இந்த வேதனை கலந்து உணர்ந்த இனிமைக்குப் பெயர்தான் காதலா என்று தனக்குத் தானே சிரித்துக் கொண்டான்.

குப்புறப் படுத்துத் தலையணையில் முகம் பதித்துக் கொண்டான். அப்போது திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது. ஒரு வேளை ஏதாவது பிரச்னையோ என்று.

திரும்ப அவன் அழைத்தான். அவள் செல்ஃபோனை ஆஃப் செய்து வைத்து விட்டிருந்தாள் போலும். பதில் கிடைக்கவில்லை.

சரி, காலையில் பார்த்துக் கொள்ளலாம் என்று உறங்கி விட்டான்.

## 9



அதிகாலையிலேயே பிரேம் வந்தான். அப்பாவைப் பார்த்துவிட்டுச் சந்திரிகாவிடம் வந்தான்.

"என்ன, சந்திரி, நைட் கூப்பிட்டியா... என்ன?"

"ஆமா, என்னவோ கேக்கணும்னு நினைச்சேன்," என்றாள்.

"என்ன தேவி?" என்றான்.

"இப்ப மறந்திடுச்சு... ஞாபகம் வரட்டும், சொல்கிறேன்," என்றாள். அவனை நேராகப் பார்க்காமல் இல்லை என்பதைக் கவனித்துக் கொண்டான். அவள் பொய் சொல்கிறாள் போலவும் அவனுக்குத் தோன்றியது.

"சரி... அவளே சொல்ல விரும்பாத போது என்ன செய்ய முடியும்?" என்று விட்டு விட்டான். ஆனால் தம்புவுக்கு



ஃபோன் செய்து சந்திரிகா கடையில் எப்படி நடந்து கொள்கிறாள், வாட்டமாக இருக்கிறாளா, மகிழ்ச்சியாக இருக்கிறாளா என்றெல்லாம் கவனிக்கச் சொன்னான்.

உணவுக்கு அவன் வீடு சென்றபோது கடை சாத்திவிட்டுத் தான் ஃபோன் செய்தார். ஒரு மணி முதல் மூன்று மணி வரை முன்பு கடை சாத்துவார்கள். சந்திரிகா அதையும் கூட மாற்றி விட்டாள். ஒரு மணி நேரம் இடைவேளை என்று வைத்து அவளோ தம்புவோ மாற்றி மாற்றிக் கடையில் இருக்கிற மாதிரிப் பார்த்துக் கொண்டாள்.

வியாபாரம் நன்றாகச் சூடு பிடிக்க ஆரம்பித்திருந்தது. சந்திரிகா நகரில் முக்கியப் பிரமுகர்களில் ஒருவராக ஆகிக் கொண்டு வந்தாள்.

கடையிலேயே ஒரு ஜோசியர், நியூமராலஜி என்று அமர்த்தலாம் என்று ஒருவர் ஆலோசனை சொன்னபோது சந்திரிகா மறுத்துவிட்டாள்.

யாரையும் மனோரீதியாகப் பயமுறுத்தி வியாபாரம் செய்யக் கூடாது என்றாள். ஆனால் தங்கள் குடும்பத்துக்கு மிகவும் வேண்டிய ஒரு ஜோசியர் கேட்ட போது தங்கள் கட்டடத்திலேயே ஒரு அலுவலகம் வைத்துக் கொள்ள மட்டும் அனுமதி தந்தாள். நகை வாங்க யாரையும் வற்புறுத்தக் கூடாது என்ற கண்டிஷனோடு எளிய மக்கள் அணிந்து கொள்கிற மாதிரி விலை குறைவாக, ஆனால் ரிச் லுக் இருக்கிற மாதிரி டிசைன்களை அவளே வடிவமைத்தாள்.

'சந்திரிகாஸ் டிசைன்ஸ்' என்று விளம்பரம் செய்தார்கள். நல்ல வரவேற்புக் கிடைத்தது. ஒரு நாள் பிரேம் தன் அம்மாவுடன் கடைக்கு வந்தான். நல்லதாக ஒரு மோதிரம் வேண்டுமென்றார்கள். அவளே எடுத்துக் காட்டினாள். பார்வதி டிசைன் செலக்ட் செய்தார். அளவு கேட்டதற்கு

'அநேகமாக உன் கை அளவுதான் இருக்கும்!' என்று கலாட்டா செய்து ஆர்டர் செய்துவிட்டுப் போனார்கள்.

இப்படி எல்லாம் மகிழ்வாகக் கூடிவருகிற நேரத்தில் இந்தச் சகுந்தலா பிரச்னை பூதாகரமாக எழுகிறதே என்று சந்திரிகா வாடிப்போய் அமர்ந்திருந்தாள் வீட்டில்.

தம்பியின் ஃபோன் செய்தி கேட்ட பிரேம் சிந்தனையில் ஆழ்ந்தான். வேறு ஏதோ பிரச்னை வந்திருக்கிறது போலும், சொல்ல மறுக்கிறாள். 'அதுக்காக என் பிரச்னைகளைத் தூக்கி உங்ககிட்டே கொடுத்தற மாட்டேன்!' என்று அவள் அன்றைக்குச் சொன்னது நினைவுக்கு வந்தது.

சொல்லட்டும்... அவளே சொல்லட்டும் என்று விட்டு விட்டான். ஆனால் ஹவுசிங் லோன் பணம் ஏற்பாடு நிறைவுறுகிற மாதிரிப் பார்த்துக் கொண்டான். தினமும் கடையிலோ, வீட்டிலோ வெளியிலோ கொஞ்ச நேரமாவது அவளோடு நேரம் செலவு செய்கிற மாதிரிப் பார்த்துக் கொண்டான்.

இரண்டு நாள் சென்றிருக்கும்.

மறுபடியும் சகுந்தலா வந்தாள். அவளை எங்கே காண்டாக்ட் செய்வது என்று இரண்டு நாட்களாகவே சந்திரிகா யோசனை செய்து கொண்டிருந்தாள்.

இந்த முறை ஒரு இரண்டு வயதுக் குழந்தையுடன் வந்தாள். குழந்தை அவளுடைய சாயலில் அழகாக இருந்தது.

''அவரைப் பார்க்க மட்டும் அனுமதிச்சீங்கன்னா போதும்...'' என்றாள்.. பிற்பகலில் சந்திரிகா இருக்கிற நேரமாகப் பார்த்து வந்தாள்.

சந்திரிகா அனுமதித்தாள். கேசவனைப் பார்த்ததும் குலுங்கிக் குலுங்கி அழுதாள். அவர் கண்களும் கலங்கின.



'அழாதே!' என்று சைகை செய்தார். குழந்தையை அவர் அருகில் கொண்டு போய்க் காட்டி, 'ஆசிர்வாதம் செய்ங்க!' என்று அழுதாள். அவர் ஆசிர்வாதம் செய்தார்.

கேசவனிடம் உதவி பெற்ற எத்தனையோ பேர் வந்தார்கள். அவரைப் பார்த்து அழுதார்கள். அவரைத் தேற்றினார்கள். அது போலத்தான் இதுவும் என்று அத்தை எண்ணிக் கொண்டாள்.

சந்திரிகா அப்பாவின் முகத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள். சகுந்தலாவைப் பார்த்தவுடன் அவர் முகத்தில் ஒரு கனிவு தோன்றியதே தவிர, வேறெதுவும் தெரியவில்லை. தனிமை கொடுத்து வெளியே போகலாமா என்று அவள் சென்ற போது, அவர் அவள் கையைப் பிடித்து, 'இரும்மா' என்பது போல் சைகை செய்தார்.

பிறகு ஹாலுக்கு வந்தார்கள். மற்றவர்களுக்குக் கேட்காத தொலைவுக்கு அவளை அழைத்து வந்தாள்.

''அந்த ஃபோட்டோவில் இருந்தது நிஜமா?'' என்றாள்.

சகுந்தலா தலை குனிந்து கொண்டாள். ''பொய்யான ஒன்றை வைத்துக் கொண்டு நான் ஏன் அலைய வேண்டும்?'' என்றாள்.

சந்திரிகா விழித்தாள்.

''நான் அவர்கிட்டே எதையும் எதிர்பார்க்கலை. எதுவும் வேண்டாம்...'' என்றாள் அந்தப் பெண்.

''நீங்க அப்படி நினைக்கலாம். எதுவும் தெரியாத வரையிலும் சரி... தெரிந்ததுக்கப்புறம் அதுக்கு ஏதாவது முடிவு வேணுமில்லை,'' என்றாள் சந்திரிகா.

''அவரு நிம்மதிதான் எனக்கு முக்கியம். அவரை நான் எந்த விதத்திலும் தொந்தரவு செய்ய மாட்டேன். என் பிரச்னைகள் என்னோட போகட்டும்!'' என்றாள்.

சந்திரிகா ஒரு நிமிடம் நெகிழ்ந்தாள் என்றாலும், தன் உணர்வுகளைக் காட்டிக் கொள்ளவில்லை.

"இந்தக் குழந்தை யாருது?" என்றாள்.

அவள் சந்திரிகாவைப் பார்த்தாள். பிறகு, "எங்களது தான்!" என்றாள்.

சந்திரிகா திடுக்கிட்டுப் போனாள் என்றாலும், எந்த ரியாக்ஷனும் காட்டாமல் அழுத்தமாக அமர்ந்து கொண்டாள்.

"அப்பா செலவுக்கு ஏதாவது பணம் கொடுப்பாரா?" என்றாள்.

அவள் ஒன்றும்பேசவில்லை. ஒரு நிமிடம் கழித்து, "அவர் கிட்டே வாங்கறது வேற.." என்றாள்.

சந்திரிகா தன் கைப்பையிலிருந்து இரண்டாயிரம் ரூபாய் எடுத்துக் கொடுத்தாள்.

"எங்கப்பாவினால் இதுவரை யாருக்கும் எந்தக் கெடுதலும் ஏற்பட்டதில்லை. இனிமேலும் ஏற்படாது. ஆனா, எதையும் பொய்யா நிஜமான்னு தெரிஞ்சுக்கணுமில்லை?" என்றாள். சகுந்தலாவை ஊடுருவிப் பார்த்தாள்.

அவளும் நேருக்கு நேராகப் பார்த்தாள். சந்திரிகா அந்தக் குழந்தையைப் பார்த்தாள். இரு கைகளை நீட்ட, தாவிக் கொண்டு வந்தான். இருபத்தோரு வயதாகும் தனக்கு இரண்டு வயதில் ஒரு தம்பி... அவளுக்குச் சிரிப்பாக வந்தது. வேதனையாகவும் இருந்தது. ஆனால், அப்பாவின் சாயல் துளிக்கூடக் குழந்தையிடம் இல்லை.

நீண்டதொரு பெருமூச்சு விட்டாள்.

"உங்க வீடு எங்கேன்னு தெரிஞ்சுக்கலாமா?" என்றாள்.

"வேண்டாம்!" என்றாள் சுருக்கமாக.



சமையல்காரரிடம் சொல்லிக் குழந்தைக்கும் அவளுக்கும் உணவு கொடுத்துச் சாப்பிடச் செய்தாள். புத்தம் புதிதாக ஐந்தாறு புடவைகள் கொடுத்தாள். மறுக்க மறுக்க ஒரு பையில் போட்டுக் கொடுத்தனுப்பினாள்.

அவள் புறப்படும்போது, "ரொம்பத் தாங்க்ஸ். நான் யார்கிட்டேயும் சொல்ல மாட்டேன். நீங்களும் யார்கிட்டேயும் சொல்லத் தேவையில்லை!" என்று போய் விட்டாள். அவளுடைய வார்த்தைதான் சந்திரிகாவை மேலும் குழப்பியது. எதையும் எதிர்பார்க்காதவள் எதற்காகப் பொய் சொல்லப் போகிறாள் என்று.

அன்று மாலை அப்பாவிடம் போய் அமர்ந்து கொண்டாள். ஒரு மணி நேரம் அவருக்குப் புத்தகம் ஒன்று படித்துக் காட்டினாள். அவரோடு நேரம் செலவழித்தாள்.

அப்பாவிடம் வெகுவாக முன்னேற்றம் தெரிந்தது. இடது கையும் காலும் லேசாக அசைக்க ஆரம்பித்தார். ஆனால் இன்னமும் பேச்சு வரவில்லை. பேச்சு வந்தால் எல்லாக் குழப்பமும் தீர்ந்து விடும் என்று எண்ணிக் கொண்டாள்.

அன்று மாலை அவள் புறப்படும் முன் பிரேம் வந்தான். அவன் தந்தையிடம் பேசிக் கொண்டிருந்தான். பிறகு, 'அங்கிள்... அந்தத் தமிழழகன் பிரச்னை அநேகமாகத் தீர்ந்துரும். அப்பா தலையிடறேன்னு சொல்லியிருக்காரு. நான் அதைத் தமிழழகன்கிட்டே சொன்னேன். உடனே பயந்துட்டான். ஐயோ! பெரியவரை யெல்லாம் இதுல வரவேண்டாம்னு சொல்லுங்க. எப்படியோ நான் பாதியாவது தர்றேன், அப்படிங்கறான். நான் அப்பாகிட்டே சொன்னேன். அவரு, பாதியென்னடா பாதி... வட்டி போட்டு நான் வாங்கித் தரேன்... நீ சும்மாயிரு, அப்படிங்கறாரு." எனவும் அவர் முகம் மலர்ந்தது.

'அப்படியா, கிடைச்சுருமா?' என்பது போல் பார்க்கவும், 'ஆமா... அங்கிள் கிடைச்சுரும்... இனி நீங்க தெம்பா எழு

வேண்டியதுதான் பாக்கி. எழுந்தா சந்திரிக்காவுக்கு மாப்பிள்ளை பார்க்க வேண்டியதுதான்...'' என்று அவளைப் பார்த்துச் சிரித்தான்.

தன் தந்தையின் அருகில் அமர்ந்து அவரை மீண்டும் தெம்பாக்குவதற்காக அவன் செய்கிற முயற்சிகள், பேசுகிற வார்த்தைகள் எல்லாம் அவளுக்குள் ஒரு நெகிழ்ச்சியை ஊட்டின. அப்படிப்பட்டவனிடம் மறைக்கிறோமே என்று தோன்றியது.

'ஆனால்... என்ன செய்ய முடியும்?' என்று பெருமூச்சு விட்டபடி திரும்பினாள். பிரேம் அவளை ஊடுருவிக் கவனித்துக் கொண்டிருந்தான். அவள் சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''நீங்க பேசிக்கிட்டிருக்கீங்களா? நான் கடைக்குக் கிளம்பறேன்!'' என்று கிளம்பினாள்.

''இரு... சந்திரி... நானும் வரேன்!'' என்றான். ''வா... என் காரிலேயே போகலாம். உன்கூட ஒரு இடத்திற்குப் போக வேண்டும்,'' என்றான்.

அவள் கடையில் ஒன்றும் சொல்லவில்லை. ஏழு மணி வரை அவளோடு கடையில் இருந்தான். அவள் தம்புவோடு அமர்ந்து கணக்கு, வழக்குகளெல்லாம் நேர் செய்து விட்டுக் கடையைப் பூட்டுகிற பொறுப்பைத் தம்புவிடம் ஒப்படைப்பது வரை பொறுமையாகக் காத்திருந்தான்.

ஹோட்டலுக்கு அழைத்துப் போனான். ''என்ன விசேஷம்?'' என்றாள். அவன் ஒன்றும் சொல்லவில்லை.

''இந்த வாரம்... ஒன்னும் டிசைன்ஸ் போடலையா?'' என்றான்.

''இல்லை...'' என்றாள்.

''ஏன்...?''



''நேரம் இல்லை...''

''நேரம் இல்லையா... இல்லை மூட் வரலையா?'' என்றான்.

''ரெண்டும்தான்...'' என்றாள்.

''என்ன பிராப்ளம்?'' என்றான் - அவள் கண்களை ஊடுருவிப் பார்த்துக் கொண்டு.

''ஒன்னுமில்லையே...'' என்றாள் - அவள் வேறெங்கோ பார்த்துக் கொண்டு. அதற்குப் பிறகு அவன் வேறு விஷயங்களுக்குத் தாவினான்.

வழக்கம் போல் சிரிக்க வைத்தான். கிண்டல் செய்தான். அவளும் கலகலப்பாகி விட்டாள். அவளே எதிர்பார்க்காத விதமாக அவன் தட்டிலிருந்து ஸ்வீட் எடுத்துக் கொண்டு அவள் கலாட்டா செய்தாள்.

அவள் சிரிப்பதைக் கண்டு, வழக்கம்போல் தன் பின்னந்தலையைத் தடவிக் கொண்டு, அவளை விழுங்குவது போல் பார்க்க...

''சும்மாயிருங்க... பிரேம்!'' என்றாள்.

அந்தக் கணம் எல்லாப் பிரச்னைகளும் மறந்து போயின. அவன் தொடர்ந்து அப்படியே பார்க்கவும், தன்னை மறந்து, ''உதை வாங்குவே... பிரேம் குமார்!'' என்றாள்.

''ம்... அப்படியா...!'' என்று அவன் மேலும் சிரித்தான்.

''சே...'' என்று அவள் திரும்பி அமர்ந்து கொண்டாள்.

'சரி... சரி... கோபிச்சுக்காதீங்க மேடம்... தோப்புக் கரணம் வேண்ணா போடறேன்!'' என்று அவன் சரணாகதி அடையவும் சிரித்தாள்.

திரும்ப வரும்போது அவளை இறக்கி விடும்போது அவனும் இறங்கி வந்தான். அவள் நிமிர்ந்து அவன் முகம் பார்த்து,

"தாங்க்ஸ்... பிரேம்... கொஞ்ச நேரத்துக்கு அந்தச் சகுந்தலா பிரச்னையை மறந்து நிம்மதியா இருந்தேன்!" என்று சொன்னவள், நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

பிரேம் மௌனமாய், ஒன்றும் சொல்லாமல் பார்த்துக் கொண்டு நின்றான். தான் உளறி விட்டதை அறிந்து அவள் குற்றம் செய்து சிக்கிக் கொண்ட சிறுமியைப் போல் நின்றாள்.

"ஏய்... தேவி... நீயும் நானும் வேற இல்ல.. உன்னோட பிரச்னைகளில் சந்தோஷங்களில் எல்லாம் எனக்கும் பங்கு இருக்குன்னு நான் நினைச்சிட்டுருக்கேன். ஆனா... நீ இன்னமும் என்னை அந்நியமாத்தான் நெனைக்கிறே..." என்று சொல்லியவனின் வருத்தம் அவன் குரலில் தெரிந்தது. அவள் விக்கித்து நின்றாள்.

அவன் முகத்தில் தெரிந்த ஆழ்ந்த வேதனை அவளை உலுக்கியது. அவன் சட்டென்று கோபமானான். ஒன்றும் சொல்லாமல் போய்க் காரை விர்ரென்று கிளப்பிக் கொண்டு போய் விட்டான்.

சந்திரிகா கார் போன வழியைப் பார்த்துக் கொண்டு திகைத்து நின்றாள்.

## 10



செல்போன் ஒலிக்கவும், பிரேம் எழுந்தான். ஆனால், சந்திரிகா எனத் தெரியவும் ஆஃப் செய்தான்.

சந்திரிகா தவித்துப் போனாள். நேற்றிரவிலிருந்து தொடர்பு கொள்ள மறுத்தான். காலையில் கடையில் ஒன்றும் ஓடவில்லை. பதினொரு மணியாகி இருந்தது. இதுவரை பத்து முறையாவது முயற்சித்திருப்பாள். கிடைக்கவில்லை. வீட்டுக்கு ஃபோன் செய்தாள்.

பார்வதி எடுத்தாள். "ஆன்ட்டி, பிரேம் எங்கே?" என்று கேட்டாள்.



"ரூமிலேதான் இருக்கான். காலையில இருந்து வெளிய வர்லை. டிஃபன் கூட அங்கேயேதான் அனுப்பினேன்!" என்றார்.

"அத்தை... நான் அவர்கிட்டே பேசணும்," என்றாள் பதற்றமான குரலில். அவள் அத்தை என்றழைத்ததற்கு உள்ளுக்குள் சிரித்துக் கொண்ட அவர், "நான் கூப்பிடறேன்... பொறும்மா..." என்றார்.

ஆனால் ஒரு நிமிடம் கழித்து, "சாரி... சந்திரிகா. பேச விருப்பமில்லைன்னு சொல்லுங்கங்கறான். என்னம்மா பிராப்ளம்?" என்றார்.

"அத்தை... எனக்கொரு பிரச்னை. அது என் சம்பந்தப்பட்டதாய் மட்டும் இருந்தால் அவர்கிட்டே சொல்லாம யார்கிட்டே சொல்வேன். ஆனா இதுல வேறொருத்தர் கௌரவமும் அடங்கியிருக்கு. நான் சொல்லலேன்னு கோபிக்கக்கிறார். எனக்கு என்ன செய்றதுன்னு தெரியலே..." என்றாள்.

"ஓ..." என்றார்... பிறகு, 'சந்திரிம்மா... என் மகனைப் பத்தி ஒரு விஷயம் தெரிஞ்சுக்க. அவனை நம்பணும். பூரணமா நம்பணும்னு எதிர்பார்ப்பான். நம்பிச் சொன்னா ரகசியம் காப்பாத்துவான். ஹெல்ப் பண்ணுவான். அதுவும் உன்னை ரொம்ப நேசிக்கிறான். எப்பப் பாரு, சந்திரி அப்படிச் சொன்னா, இப்படிச் சொன்னான்னு உன் பேச்சுத்தான். இப்படி ஒரு மாசமெல்லாம் தொடர்ந்து அவன் வீட்டில் இருந்தது இல்லை. உனக்காக இருக்கான். நீ எதையாவது மறைக்கறேன்னா அவனுக்குத் தாங்காது..." என்றார்.

"அத்தை! எனக்கு என்ன செய்யறதுன்னு தெரியலையே!" என்றாள்.

"கூட வாழப் போறவ... தெரிஞ்சுக்க... கோபம் அவ்வளவு சீக்கிரம் வராது. வந்தா நியாயமாகத்தான் வரும்... வந்ததுக்கப்புறம் சமாளிக்கறது ரொம்பக் கஷ்டம்..." என்று சிரித்தார்

"ஆனா... உன் விஷயத்தில் எப்படியோ... உன் சாமர்த்தியம் பொறுத்தது!" என்றார்.

"சரிங்கத்தை..." என்று சுரத்தேயில்லாமல் ஃபோனை வைத்தாள்.

மாலை வரை கூடக் கிடைக்கவேயில்லை.

வியாபாரத்தில் மனம் செல்லாமல் தவித்துக் கொண்டிருந்த அவளைப் பார்த்துத் தம்புவுக்கு இரக்கம் மேலிட்டது.

"என்னம்மா பிரச்னை?" என்றார்.

"பிரேமுக்கு என் மேல கோபம்!" என்றாள், தவிப்புடன்.

அவருக்குப் பாவமாகிப் போனது. "அம்மா... நமக்காக ரொம்ப உதவிகள் செய்யறார். அவருகிட்டே என்னம்மா... பிரச்னை?" என்றார்.

அவள் முகம் சிவந்தது கண்டு, 'பர்சனல்னா... சொல்ல வேண்டாம்மா... ஆனா, கடையை நான் பார்த்துக்கறேன். நீங்க நேரில் போய்ப் பேசுங்க," என்றார்.

அவள் தயங்கினாள். அதற்குள் அவரே பார்வதியிடம் பேசினார். "எங்க சந்திரிகாம்மா இப்ப அங்க வர்லாமா?" என்று கேட்டார்.

"ஃபோனை அவகிட்டே கொடுங்க..."

அவள் வாங்கினாள்.

"மக்குப் பொண்ணே... இந்தக் கேள்வியை இவ்வளவு லேட்டா கேக்கறே? அவன் காலைல டிஃபன் சாப்பிட்டது தான். மத்தியானமும் சாப்பிடலை. டிவியை அறை விட்டுக் குப்புறப்படுத்திருக்கான். நீ வந்துபேசு!" என்றார்.

"நீங்க டிரைவ் பண்ண வேண்டாம்மா..." என்று தம்பு டிரைவரை அனுப்பினார். இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த அவன் வீட்டுக்குப் போவதற்குள் ஏழு கடல், மலை தாண்டிப் போவது போல் இருந்தது.



அவள் வருகிற அரவம் கேட்டு அவன் எழுந்தான். உணர்ச்சியே இல்லாமல் பார்த்தான்.

"இப்ப எதுக்கு வந்தே?" என்றான்.

அவள் அடிபட்டாற் போல் பார்த்தாள்.

"உன் பிரச்னையைத் தூக்கிக் குடுக்க மாட்டே சரி, சொல்லவாவது செய்யலாமில்ல. ஒரு ஃப்ரெண்டா மதிச்சிருந்தாகூட மறைக்கத் தோணியிருக்காது!" என்றான்.

"ப்ளீஸ்... பிரேம். புரிஞ்சுக்கங்க. இதில இன்னொருத்தர் கௌரவமும் அடங்கி இருக்கு..." என்றாள் கெஞ்சலாக.

"அப்ப... எங்கிட்டே கௌரவம் பார்க்கறே... இல்லை...?" என்றான் காட்டமாக.

அவள் கண்கள் கலங்கி விட்டாள். "பிரேம்! இப்ப நீங்களும் கோபிச்சுட்டீங்கன்னா, என்னால தாங்க முடியாது. எனக்கு ஏற்கெனவே பிரச்சினைகள் நிறைய..." என்று வெடித்து அழுதாள். அவன் மார்பில் முகம் புதைத்தாள்.

அவன் உடனே இளகி விட்டான். இறுக அணைத்துக் கொண்டான். "ஹேய்... தேவி... உன் சக்திக்கு மீறி நீ சுமக்கறே... என்கிட்டே எல்லாப் பிரச்னையையும் விட்டுருன்னுதானே சொல்றேன்... சரி... வேண்டாம். அட்லீஸ்ட்... பங்கு போட்டுக்கலாமில்ல!" என்றான் ஆதங்கத்துடன்.

அவள் வெடித்து அழுவதைப் பார்த்து வேதனையுடன் நின்றான். தட்டிக் கொடுத்துத் தேற்றினான்.

"நீ இந்த மாதிரி கண்ணீர் விடக்கூடாது. என்னால தாங்க முடியாது தேவி... உன்னை எப்பவும் சிரிச்ச முகத்தோட பார்க்கணும். என் கிட்டயே வச்சுக்கணும்னுதானே... நான் இவ்வளவு முயற்சிகள் எடுக்கறேன்... ஆனா நீ என்கிட்டயே ஈகோ... பார்க்கறே!" என்று அவன் சொல்லும் போதே அவன் கண்களும் கலங்கின.

அவள் நிமிர்ந்து பார்த்து விட்டு அவன் கண்களைத் துடைத்தாள். "ஐ...ம்... சாரி... பிரேம்... ஐ...ம்... வெரி சாரி... சொல்றேன். உங்ககிட்டே சொல்லாம யாருகிட்டே சொல்லப் போறேன்!" என்றாள். பிறகுதான் அவள் முகம் தெளிந்தது.

"ஆனா, அதுக்கு முதல்ல சாப்பிடுங்க... காலைல டிஃபனுக்கப்புறம் சாப்பிடவே இல்லையாம்..." என்றாள்.

அவன் பின்னந் தலையை நீவிக் கொண்டு புன்னகைத்தான். "மூணு நாளா நீ மட்டும் வேதனையைச் சுமக்கலையா?" என்றான். அவள் நெகிழ்ந்து போனாள்.

தன் வருத்தம் பார்த்து இவ்வளவு வருந்துகிறான். அவனிடம் போய்... நமக்கென்ன கௌரவம்... என்று எண்ணிக் கொண்டாள்.

அவள் கீழே போன போது அத்தை டிஃபன் டிரேயைத் தயாராக வைத்துக் கொண்டு சிரித்தாள். அவள் வெட்கத்துடன் வாங்கிக் கொண்டு போனாள்.

அவன் சாப்பிடச் சாப்பிட... சகுந்தலா... வந்தது... ஃபோட்டோ பார்த்தது. பிறகு குழந்தையுடன் வந்தது என்று எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னாள். அவன் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டான். அந்த சமயத்தில்தான் சென்னையில் ஒரு பிரபல தொழிலதிபர் இரண்டாவது கல்யாணம் மூன்றாவது கல்யாணம் பிரச்னை... என்று செய்திகள் வெளியாகிக் கொண்டிருந்த சமயம்.

அவன் முழுவதையும் கேட்டுக் கொண்ட பிறகு, "இதுல எங்கிட்டே மறைக்க என்ன இருக்கு?" என்றான்.

அவள் ஆச்சர்யமாய் அவனைப் பார்த்தாள். "என்ன பிரேம்... இப்படிக் கேக்கறீங்க? அது மட்டும் உண்மையா இருந்தா அப்பாவோட கௌரவம்... என்ன ஆகறது? குடும்ப



கௌரவம் என்ன ஆகறது? நீங்க அவரைப்பத்தி என்ன நினைப் பீங்க?" என்று சரமாரியாகக் கேள்விகள் எழுப்பினாள்.

"எல்லாத்துக்கும் முதல்ல அந்தச் சகுந்தலா சொல்றது உண்மையான்னு கண்டு பிடிக்கணுமில்லை? அது உண் மையா... பொய்யான்னு... தெரியாம எதுக்குக் கவலைப் படணும்?" என்றான்.

"ஆமா..." என்றாள் அடங்கிய குரலில்.

"உங்கப்பாவை இத்தனை நாள் பாக்கற இல்லை. உனக்கு... என்ன தோணுது...?" என்றான் பிரேம்.

அவள் அவன் முகம் நிமிர்ந்து பார்த்தாள். "இரண்டு மாசத் துக்கு முந்தி வந்து யாராவது இப்படிச் சொல்லியிருந்தா, நான் நம்பி இருக்க மாட்டேன்... ஆனா.... இப்ப எது சரி... எது நியாயம்ங்கறதுல என் கருத்துக்கள்... மாறி... இருக்கு!" என்றாள்.

"எப்படி?" என்றான், குமிழ்ச் சிரிப்புடன். அவள் டபாய் விளிம்பைத் தடவிக் கொண்டே, "என் மனசே என்னைக் கேள்வி கேட்குது." என்றாள்.

"என்ன கேட்குது?" என்றான்.

"நீ மட்டும் பிரேம் நினைப்பாகவே இருக்கலையா! சாப்பிடும் போது... தூங்கும் போது... குளிக்கும்போது நடக்கும் போது... நிற்கும்போதுன்னு... நினைக்கலையா? உங்கம்மா இறக்கும் போது உங்கப்பாவுக்கு முப்பத்தைந்து வயசுதானே... அவரும் மனுஷன்தானே... அவருக்கும், ஆசாபாசங்கள் இருக்கக் கூடாதான்னு கேட்குது!" என்றாள்.

அவன் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டான். பிறகு, 'இந்தக் கேள்வி யெல்லாம் விடு... உங்கப்பா இன்வால்வ் ஆகியிருப்பாருன்னு நெனைக்கிறியா... இல்லையா?" என்றான்.

"அது தெரியலை பிரேம்... ஆனா, அப்பா உங்களை மாதிரித்தான்... எதையும் திருட்டுத்தனமா செய்யற பழக்கம் இல்லாதவரு. அது மட்டும் உறுதியாத் தெரியும்!" என்றாள்.

அவன் கலகலவென்று சிரித்தான். பிறகு, "ஆனா... இந்த விஷயங்கறதுனாலே சந்தேகமும் வருது இல்லை?" என்றான்.

"அதுவும் அந்தச் சகுந்தலா எதுவும் வேண்டாம்... அவரு நல்லா இருந்தாப் போதும்னு வேற சொல்றாங்க..." என்றாள்.

அவன் சிந்தனையுடன் அவளைப் பார்த்தான்.

"இரண்டாயிரம் குடுத்தப்ப வாங்கிக் கிட்டாங்கதானே?" என்றான்.

"ஆமாம்... இல்லை?" என்று வியப்பாய்ப் பார்த்தாள்.

"மக்கு...!" என்று அவன் தன்னருகில் இழுத்துக் கொண்டான்.

"என்ன... அம்மாவும் பையனும் ஒரே மாதிரித் திட்டறீங்க..." என்றாள் கொஞ்சலாக... அவன் விவரம் கேட்டுக் கொண்டு சிரித்தான். "அம்மாவா அப்படிப் பேசினாங்க!" என்று மீண்டும் புன்னகைத்துக் கொண்டான்.

சற்று மேலும் கீழும் நடந்தான். "சந்திரிகா... அடுத்த தடவை அந்தப் பொண்ணு வந்தா எனக்கு ஃபோன் பண்ணு... முதல்லை... பொய்யா... நிஜமான்னு கண்டுபிடிப்போம்... அதுக்கப்புறம்... என்ன செய்யறதுன்னு பார்க்கலாம் என்ன?" என்றான்.

அவள் 'சரி'யென்று ஒத்துக் கொண்டாள்.

"சந்திரிகா தேவியார் கொஞ்ச நேரத்துக்கு முன்னால் ஒரு உண்மையை ஒத்துக்கிட்டாங்க... தெரியுமா?" என்றான்.

"என்ன?" என்று புரியாமல் பார்த்தாள்.



"சாப்பிடும் போது... தூங்கும் போது... குளிக்கும் போது, நடக்கும்போது... நிற்கும் போது... பிரேம்னு ஒருத்தரோட நினைப்பு வருதாமே!" என்று அவன் கேலி செய்யவும் அவள் படபடப்பாகி முகம் திருப்பி நின்று கொண்டாள்.

"சே...!இப்படியா உளறி வைப்பார்கள்?" என்றுதன்னைத் தானே திட்டிக் கொண்டாள். சத்தமே இல்லாமல் இருக்கவும் லேசாக நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள். அவன் கிறக்கமும், தாபமுமாக அவளைப் பார்த்துக் கொண்டு நின்று கொண் டிருந்தான்.

அந்தப் பார்வையைத் தாங்காமல் அவள் மீண்டும் அவனிடமே அடைக்கலமானாள். "சந்திரி..." என்றான் அவன் கிறக்கமாக.

"ம்..."என்றாள் அவளும் அதே போல்.

"எப்பவும் மனசோட ஆழ்மனசோட குரலை உத்துக் கேட் கணும்... பெரும்பாலும் அது... தப்பு செய்யாது!" என்றான்.

அவள் மௌனமாகவே இருந்தாள்.

"உன் மனசு என்ன சொல்லுச்சு... உடனே எனக்கு ஃபோன் செய்யச் சொல்லுச்சு... ராத்திரி ரெண்டு மணிக்குக் கூப்பிட்டிருக்கே. ஆனா காலையிலே என்கிட்டே பொய் சொல்றே... அதைத்தான் என்னால தீர்மானிக்க முடியலே!" என்றான்.

"மன்னிச்சுக்கங்க... பிரேம்!" என்றாள்.

"இப்ப... மன்னிப்புக் கேட்கறதுக்காக மன்னிக்கறதா... இல்லை... ஆனா கொஞ்ச முன்னாடி சொன்னயே... அதுக் காக மன்னிக்கலாம்..." என்று அடிக் குரலில் சிரித் தான்.

"சாப்பிடும்போது... தூங்கும்போது சரி... அப்புறம் ஏதோ சொன்னியே! என்று அவன் மீண்டும் கிறக்கமாகச் சிரிக்கவும், அவள் சட்டென்று விலகி டிரேயை எடுத்துக் கொண்டு, ஓடி விட்டாள். அறைக்கு வெளியே போய் ஒரு நிமிடம் நின்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு, கீழிறங்கிச் செல்கிற அவளைப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால், அவள் அந்த வெட்கம் பார்த்து அதற்குப் பிறகு அதைப் பற்றிப் பேசவில்லை. ஆனால் தான் நேசிக்கிற அளவுக்கு அவளும் தன் மேல் நேசம் வைத்திருக்கிறாள் என்பது வெளிப்பட்ட அந்தக் கணத்தைத் தன் நெஞ்சில் வைத்துப் பூட்டிக் கொண்டான்.

அவளை வீட்டில் விட்டுத் திரும்பிய போது, அவன் அம்மா அவனிடம்,

"ஏன்டா... நான் காலையில இருந்து எத்தனை தரம் சாப்பிடக் கூப்பிட்டேன்... வரமாட்டேன்னே.... அவ வந்து டிரேயைக் கொண்டு வரவும் உடனே சாப்பிடறே..." என்றார் பொய்க் கோபத்துடன்.

"என்னம்மா... நீ... நீதானே குடுத்தனுப்பிச்சே!" என்று தாடையைப் பிடித்துச் செல்லம் கொஞ்சவும் சிரித்து விட்டார். அவன் சிரித்துக் கொண்டே அறைக்குப் போனதற்குப் பிறகு ரங்கசாமி, பார்வதியைப் பார்த்து, "என்ன பார்வதி?" என்றார்.

அவர் சிரித்துக் கொண்டே, "ரெண்டுகளும்... சண்டை போட்டுக்கிட்டு இப்பதான் சமாதானம் ஆகியிருக்கு!" என்றார்.

ஓ...ஹோ... என்று அவரும் சிரித்துக் கொண்டார்.

"நீ கூடத்தான்... அந்தக் காலத்துல..." என்று அவர் ஆரம்பிக்கவும் -

"ஐயோ... போதும்... போங்க... வழியாதீங்க..." என்று சிரித்துக் கொண்டே நகர்ந்து விட்டார்.



11



சந்திரிகாவின் மெசேஜ் கிடைத்தவுடன் பிரேம் வந்து விட்டான்.

"இவங்கதான் சகுந்தலா!" என்று அறிமுகப் படுத்தினாள்.

பிரேம் வருவதை அவள் எதிர்பார்க்கவில்லை போலும். திடுக்கிட்டாற் போல் அமர்ந்திருந்தாள்.

"சாருக்கும், உங்களுக்கும் எப்படிப் பழக்கம்?" என்றான் நேரடியாக.

"நான்...நானும் என் சிஸ்டரும்... சோஷியல் வொர்க்குல ரொம்ப இன்ட்ரஸ்ட்டெட். அப்படி ஒண்ணு ரெண்டு ஃபங்ஷன்லே பார்த்துப் பழக்கமாச்சு..." என்றாள்.

"எத்தனை வருஷமா?" என்றான்.

"மூணு வருஷமா..." என்றாள் சற்றும் தளராமல்.

"ம்..." என்று ஒரு விதமாக இழுத்துக் கொண்டான்.

"சந்திரி... கொஞ்சம்... டீ கிடைக்குமா?" என்றான். அவள் எழுந்து போனாள். சந்திரிகா அந்தப் பக்கம் போனவுடன் -

"பாரும்மா.... உனக்கு எலிஜிபிள் பாச்சலர்ஸ் நிறைய இருக்காங்க... இங்க எதுக்கு வந்து கலாட்டா... செஞ்சுட்டிருக்கே!" என்றான்.

அவள் திகைத்துப் போய்ப் பார்த்தாள்.

அவன் ஒரு விதமாகச் சிரித்துக் கொண்டு, "நானும் உன்னை மாதிரிதான் ஒரு முக்கியமான விஷயத்துக்காக ஓட்டிக்கிட்டிருக்கேன்..." என்றான்.

அவள் மேலும் திகைத்தாள்.

"டோண்ட்... வொரி... காட்டிக் கொடுக்க மாட்டேன் ஏனோ... எனக்கே உன்னைப் பிடிக்கப் போச்சு..." என்றான்.

அவன் சற்றே கோபமானான். "சார் எனக்கும்... அவருக்கும்..."

"குழந்தையே இருக்காக்கும்... இந்தக் கதையை இங்க விடாதே அம்பிணி! அவரு சந்திரிகாவோட அம்மா இருக்கறப்பவே... ஃபாமிலி பிளானிங் ஆபரேசன் ஆனவரு!" என்றான் அதிரடியாக.

"நான் வரேன்..." என்று எழுந்தான். "இரு... இரு... அவசரப்படாதே... சந்திரிகாவுக்குச் சந்தேகம் வரும்... டீயைச் சாப்பிட்டு விட்டுக் கிளம்பு... நான் சொன்னது புடிச்சிருந்தா... இந்த நம்பருக்குக் காண்டாக்ட் பண்ணு!" என்று விசிட்டிங் கார்டைக் கொடுத்தான்.

சந்திரிகா வந்தவுடன் ஒன்றுமே தெரியாதவன் போல் அமர்ந்து கொண்டான். சகுந்தலா போனவுடன், "என்ன சொன்னாங்க?" என்றாள்.

"ஒரு மாசம் பொறு. கதையவே மாத்திக் காட்டறேன்!" என்றான்.

அந்தச் சகுந்தலா தன்னுடைய கதையையும் மாற்றப் போகிறாள் என்று சந்திரிகாவுக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை.

இரண்டு நாள் போயிருக்கும். "சந்திரி... நாம ஞாயிற்றுக் கிழமை ஒரு இடத்துக்குப் போறோம்," என்று போன் செய்தான்.

சந்திரிகா ஆவலுடன் காத்திருந்தாள். வரும்போது எதிர் பாராத விதமாக டாக்டரும் வந்தார். மூவருமாக ஒரு இடத்துக்குப் போனார்கள். அங்கே ஒரு பெண்மணியை அறிமுகம் செய்தார்கள் 'சாருமதி' என்று.

டாக்டரும், சாருமதியும் மிகவும் இயல்பாகப் பழகினார்கள்.



"சாருமதி எனக்கு ஜூனியர். ரெண்டு வருஷம் மெடிக்கல் காலேஜ்ல படிச்சட்டு சூழ்நிலையால டிஸ்கண்டினியூ பண்ணிட்டாங்க!" என்றார் டாக்டர்.

சாருமதி அழகாகவும் எளிமையாகவும் இருந்தார். முப்பத்தேழு வயது என்றார். ஆனால், முப்பது வயதுக்கு மதிக்கலாம் போலத்தான் இருந்தார்.

டாக்டர் ராம்பிரகாஷை அண்ணா, அண்ணா என்று வாஞ்சையாய் அழைத்தார்.

இரண்டாமாண்டு மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது தாய், தந்தை இருவரும் ஒரு விபத்தில் இறந்து போகத் தன் படிப்பை நிறுத்திவிட்டு, வங்கியில் வேலைக்குச் சேர்ந்தார்.

மூன்று தங்கைகளாம். அப்பா, அம்மா விட்டுப் போன சொத்தை விற்று இரண்டு, தங்கைகளுக்கும் திருமணம் செய்து வைத்தாராம். பேங்கில் வந்த வருமானத்தில் சிக்கனமாக இருந்து மூன்றாவது தங்கைக்குத் திருமணம் செய்து வைத்தாராம்.

தன்னுடைய பணிக் காலத்தில் தான் லோன் போட்டுக் கட்டிய வீட்டில் மூன்று போர்ஷன்களை வாடகைக்கு விட்டுவிட்டு, போதும் அலைச்சல் என்று வீட்டில் தங்கி விட்டாராம். ஆனால், இப்போது தனிமை உணர்வில் கஷ்டப்படுகிறார் என்று வரும்போது டாக்டர் சொல்லிக் கொண்டு வந்ததைக் கேட்கச் சந்திரிகாவுக்கு மனதே உருகி விட்டது.

சில பெண்களுக்கு இறைவன் எப்படி எல்லாம் சோதனை வைக்கிறான் என்று எண்ணி உருகிப் போனாள். பிரேமும் கூடச் சற்றே நெகிழ்ந்து போனான்.

ஆன்ட்டி, ஆன்ட்டி என்று சந்திரிகா உடனே ஒட்டிக் கொண்டாள்.

சமையலறையில் விதவிதமாக ரெஸிப்பிகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது, உள்ளே வந்த ராம் பிரகாஷ், 'எப்படியோ... எல்லாத்தையும் கலந்தடிச்சு... ஒரு டிஃபன் குடுங்கப்பா. பசிக்குது...'' என்றார்.

''ஆச்சு... ஆச்சு...'' என்று சாருமதி எடுத்துக் கொண்டு வந்தார். சந்திரிகாவும் இயல்பாக உதவிக்குப் போனாள்.

சூப்பர் டிபன் என்று பாராட்டிக் கொண்டார்கள் பிரேமும்,ராம்பிரகாஷும்.

''மினிபோனாபாத்!'' என்றார் சாருமதி.

''என்னவோ... ஒரு பாத்... ஆனா... நாட் பேட்!'' என்றான் பிரேம்.

''பார்றா பேய்...உனக்கு வர்றவ... வெறும் பிரட்டை டோஸ்ட் பண்ணி வைக்கப் போறா... பாரு...நம்மாளு... மாதிரி'' என்று சிரித்தார். பிறகு ''யாருக்குத் தெரியும்? நீ அவ முகத்தைப் பார்த்துக்கிட்டே முழுங்கித் தொலைச்சாலும் தொலைப்பே...'' என்றார்.

பிரேம் அலட்டிக் கொள்ளாமல் ரசித்துச் சிரித்தான்.

''டேய்... அனுபவசாலி சொல்றேன். கேட்டுக்க... கல் யாணமான புதுசில... அந்த மயக்கத்திலே... காலையில... 'ரொம்ப சிரமப்பட்டுக்காதே. வைஜு... சும்மா... பிரெட் டோஸ்ட் பண்ணினாக் கூடப் போதும்!'னு சொல்லிட்டேன்டா. அன்னைக்கு மாட்டினதுதான். அன்னையிலேருந்து இன்னை வரைக்கும்... அந்த டோஸ்ட்தான். வேற... டேஸ்ட்டாவது... ஒண்ணாவது. அதுக்குத்தான்ப்பா ஆரம்பத்தில் வாயை விடக் கூடாதுடா!'' என்று புலம்பவும், எல்லாரும் சிரித்தார்கள்.

''காதலிக்கக் கல்யாணம் செஞ்சீங்க...'' என்று சாருமதி சிரித்தாள்.



''அதான்டா... காதலிக்கலாம். ஆனா கல்யாணம் செஞ் சுக்கக் கூடாது!'' என்று மீண்டும் சிரித்தார் ராம்பிரகாஷ்.

மீண்டும் வெடிச் சிரிப்பு.

''டாக்டர்... அங்கிள்... பிரேம் நல்ல பையன்னு அடிக்கடி எங்கத்தை சொல்வாங்க. நீங்க அவரைக் கெடுத்துருவீங்க போலருக்கு!'' என்றாள் சந்திரிகா.

''இவன்... இவனா... நல்ல பையன்? முகத்தை ரொம்ப அப்பாவியாய் வச்சுக்கறதைப் பார்த்து நம்பிடாதேம்மா... எமகாதகன்... எத்தனை பேருக்கு டிமிக்கி கொடுத்திருக்கான் தெரியுமா?'' என்றார்.

''அங்கிள்... நான் நிஜம்மாவே ரொம்ப நல்ல பையன். பத்துப் பேர் காதலிக்கறேன்னு மேல விழுந்தா... அத்தனை பேரையும், காதலிக்க முடியுமா? அதெல்லாம்... நமக்குச் சரி வராது... நமக்கென்று ஒரு ஆள் எங்கயாவது இல்லாமயா இருக்கும். அந்த ஆளுக்காக வெயிட் பண்ணிட்டிருக்கேன்...'' என்றான்.

''பாவம்... அந்த ஆள்!'' என்ற சந்திரிகா சிரித்தாள் - முகத்தை அப்பாவியாய் வைத்துக் கொண்டு. அவன் பார்வை அவள் மேல் படிந்து மீண்டது. அவனும் அப்பாவி போல் அமர்ந்து கொண்டான்.

சந்தோஷமாகக் கழித்துவிட்டுப் புறப்பட்டபோது, 'தாங்க்ஸ் அண்ணா, ரொம்ப நாள் கழிச்சு இன்னைக்கு மனசாரச் சிரிச்சேன். இந்தச் சந்திரிகாவை எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு...'' என்றார் சாருமதி. அவளை லேசாக அணைத்துக் கொண்டு.

ராம் பிரகாஷை இறக்கிவிட்டு விட்டுவரும்போது -

''என்ன...'' சாருமதி ஆன்ட்டிக்கும் உன்னைப் பிடிச்சுப் போச்சாம்... எல்லாரும் நமக்குப் போட்டிக்கு வராங்கப்பா...'' என்றான் பிரேம்.

சந்திரிகா புன்னகைத்தாள்.

அப்போதுதான் பிரேம் அந்த யோசனையைச் சொன்னான்.

சந்திரிகாவுக்கு அந்த யோசனை மிகவும் பிடித்தது.

"உனக்குப் பிடிச்சதுன்னா, டாக்டர் அங்கிள் சாருமதி ஆன்ட்டிகிட்டே பேசறேன்னு... சொல்றார்..." என்றான்.

"பேசச் சொல்லுங்க," என்றாள் மகிழ்ச்சியாக.

"கொஞ்சம்... பொறு. அதற்கொரு நேரம் வரும்!" என்றான் அவன் சிந்தனையுடன்.

அன்றிரவு.

பிரேமைப் பற்றிய யோசனையுடன் அறையில் படுத்துக் கொண்டிருந்தாள்.

எவ்வளவு உரிமையாகக் கோபித்துக் கொண்டான். கடந்த இரண்டு மாதமாகப் பிரச்னைகள். பிரச்னைகள் என்று எவ்வளவு நொந்து போனாள். சாய்ந்து கொள்ள அவன் தோள் கிடைத்ததுதான் எவ்வளவு சுகமாக இருக்கிறது.

நேற்று அவன் இதழ் பதித்த விதத்தை எண்ணிக் கன்னம் தடவிக் கொண்டாள். அந்தச் சகுந்தலாவிடம் என்ன சொன்னானோ தெரியவில்லை அதற்குப் பிறகு இரண்டு நாட்களாக ஆளைக் காணவில்லை.

"அவங்க கிட்டே என்ன சொன்னீங்க?" என்று கேட்டதற்கு,

"விடு தேவி... இனி அவ இங்கே வரமாட்டா!" என்றான் அழுத்தமாக.

"அப்ப... அவங்க சொன்னது பொய்தானே!" என்றாள்.

"அதிலென்ன சந்தேகம்? ஆனா, அதை அவ வாயாலே ஒத்துக்க வைக்கணும் இல்ல... அதை எங்கிட்டே விடு... நான் பார்த்துக்கறேன்..." என்றான்.



அப்பாடா என்றாகி விட்டது அவளுக்கு.

பிரேம்... மை... ஸ்வீட்... பிரேம்... என்று எண்ணிக் கொண்டாள். இப்ப யாருக்கும் தெரிய வேண்டாம் பிரேம் என்று சொன்னதற்கு எப்படி ரகசியம் காப்பாற்றுகிறான்.

நேற்றுச் சாருமதியின் வீட்டிலிருந்து வரும்போது, "தேவி... உன்னை இப்பவே தூக்கிட்டுப்போயிடணும் போல இருக்கு... ஆனா... உங்க அப்பா...உடம்பு தேறணும். அவரு இப்படி இருக்கறப்ப... இந்தப் பேச்சை ஆரம்பிக்கவே முடியாது..." என்றான் சிந்தனையுடன்.

"ஆமா... அதுவுமில்லாம... அப்பாவை இப்படி விட்டுட்டு... என்னால நிம்மதியாக இருக்க முடியுமா?" என்றாள்.

"டாக்டர் ராம்பிரகாஷ் இனிமே அவர் ஃபிஸியோ தெரபிக்குப் போக வேண்டும். எக்ஸர்சைஸ் ஆரம்பித்தால்... முன்னேற்றம் ஏற்படும் என்கிறார்," என்றான்.

"அதற்கு அப்பாவுக்குத் தினமும் உதவி செய்ய வேண்டும்..." என்றாள்.

'அதான் நர்ஸ் இருக்காங்களே... நான் ஊரில் இருக்கும் போது வரேன். நீயும் பார்த்துக்க," என்றான்.

"அப்ப... ஊருக்கு ஏதாவது போகப் போறீங்களா?" என்றாள்.

"ஆமா... தேவி...இப்ப உன் பணப்பிரச்னைகள் ஓரளவு முடிந்தது. வியாபாரத்தை நீ பார்த்துக்குவே... ரீட்மென்ட் அங்கிள் பார்த்துக்குவார். அதனால நான் ஒத்துக்கிட்ட சில அசைன்மென்ட்ஸ் இருக்கு... முடிக்கக் குடுத்துட்டு வர்றேன்," என்றான்.

"ஓ!" என்றாள் முக வாட்டமாக.

''ஏய்! எனக்கு மட்டும் கஷ்டமாக இல்லையா... என்ன? தொடர் சங்கிலியா, கொஞ்சம்... லெக்சர்ஸ்... லண்டன்ல... அப்புறம் இன்னொரு அசைன்மென்ட்...''

''என்னது?''

''அதான் இந்தச் சகுந்தலாவை வழிக்குக் கொண்டு வர்றது...'' என்றான்.

''ம்...'' என்றாள் அரை மனதாக.

''அட... என்ன புஸ்வாணமாயிட்டே... நாம போடற பிளானுக்கு... சகுந்தாவை நகர்த்தினாத்தானே... சரி வரும்!'' என்றான்.

''ஆமா!'' என்றாள் சிந்தனையுடன். பிறகு... ''எப்படி வழிக்குக் கொண்டு வருவீங்க?'' என்றாள்.

''முயற்சிப்போம். இல்லை... நாம அவளோட வழிக்குப் போயிற வேண்டியதுதான். அவளும் அழகாத்தான் இருக்கா...'' என்று சீண்டினான்.

''ம்... என்று முறைத்த சந்திரிகா... அடி, அடி விழும் கண்ணா!'' என்றாள்.

''அழகுப் பெண்களின் கையாலே அடி விழுந்தாலும்... சந்தோஷம்... அது ஒரு மாதிரி உல்லாசம்...!'' என்று அவன் பாட, அவள் கோபம் காட்டி அமர்ந்து கொண்டாள்.

''ஹேய்... நீ கோபத்திலகூட அழகுதான்!'' என்று அவன் சமாதானம் செய்ய ஆரம்பித்தான்.

அப்போது... சந்திரிகாவுக்குத் தெரியவில்லை. இந்தச் சகுந்தலா பிரச்னையை உள்ளே இழுத்துத் தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்கிறோம் என்று.



12



பிரேம் லண்டன் போய்ப் பத்து நாட்களாகி விட்டன.

நேரம் கிடைக்கும் போது ஃபோனில் அழைத்தான். ஈமெயில் அனுப்பினான். சாட் செய்தார்கள் என்றாலும், அவனைப் பார்க்காத ஏக்கம் அவள் மனத்தை வலித்தது.

இரண்டு மாதங்களாகத்தானே அவனிடம்... பழக்கம்... அதற்குள் ஏன்... இப்படி என்று அவளுக்கே ஆச்சரியம்.

அவன் புறப்படுவதற்கு முதல் நாள், ''பிரேம்... நீங்கள் பங்கு கொள்கிற கருத்தரங்கில்... ஏதாவது ஒன்னாவது நீங்க பேசறப்ப... வீடியோ எடுத்துட்டு வாங்க...'' என்றாள்

''உத்தரவு மேடம்...'' என்றான்.

''எப்போது வரப்போறீங்க?'' என்றாள்.

''சஸ்பென்ஸ்...'' என்றான்.

''திடீர்னு வந்து நிற்பேன்!'' என்றான். இதற்கிடையில் ஒருநாள் போன் செய்து, ''விந்தியா... அங்கே வந்தாளா?'' என்றான்.

''விந்தியாவா... அது யார்'' என்றாள்.

''அதுதாம்மா... உங்க சகுந்தலா... அவளோட உண்மையான பேரு... விந்தியா!'' என்றான்.

''ஓ...'' என்றாள் அதிர்ச்சியாக.

''அப்புறம்... இன்னும் என்னென்ன கண்டுபிடிச்சிருக்கீங்க...?''

''நிறைய. அதெல்லாம் உனக்கெதுக்கு? நீ பாட்டுக்கு நிம்மதியாயிரு!'' என்றான்.

''எப்படி நிம்மதியா யிருக்கிறது?'' என்றாள்.

"ஏன்?"

"நீங்கதான் ரொம்ப தூரத்திலே இருக்கீங்களே..." என்றாள்.

"ஏய்... பொய்... சொல்லாதே... நான் அங்கதானே... உன் இதயத்துக்குள்ளேயே இருக்கேன்!" என அவன் சிரிக்கவும்,

"ஐயோ! புல்லரிக்குது!" என்று கிண்டல் செய்தாள்.

"நீங்க சொல்லலைன்னா என்ன...நீங்க எப்ப வர்றீங் கன்னுதான் நான் கண்டுபிடிச்சுருவேனே... அதற்குத்தானே... அத்தைக்கு ∴புல்லா இல் வச்சிருக்கேன்!" என்று எண்ணிக் கொண்டாள்.

இரண்டு மூன்று நாள் போயிருக்கும். பார்வதி ∴போன் செய்தார்.

"பொண்ணே... உன் ஆளு மெட்ராஸ் வந்தாச்சு... காலை சில ப்ளு மவுண்ட்டன்ல கோயமுத்தூர் வர்றான்!" என்றார்.

பிறகு இரகசியம் போல், "நான் சொன்னேன்னு சொல்லாதே!" என்றார்.

சந்திரிகா சிரித்துக் கொண்டாள். அவர் ஏதோ விளையாட் டாகத்தான் சொன்னார் என்றுதான் நினைத்துக் கொண்டாள். ஆனால் உண்மையாகவே தான் எந்த வண்டியில் வருகிறோம் என்பது அவளுக்குத் தெரியக் கூடாது என்று அவன் நினைக்கிறான் என்பது அடுத்த நாள்தான் தெரிந்தது.

அதிகாலையில் ஐந்து மணிக்கே தயாராகித் தானே காரை எடுத்துக் கொண்டு ஸ்டேஷனுக்குக் கிளம்பினாள். வழக்கம் போல் வண்டி தாமதம் என்றார்கள்.

எந்த கோச் எனத் தெரியாததால் பொதுவாக ஒரு இடத்தில் நின்றாள். அந்த அதிகாலையில் குளிரும், பிரேம் வரப் போகிறான், பார்க்கப் போகிறோம் என்ற உணர்வும்... இதமாக



இருந்தன. வண்டி வருவதற்கான அறிவிப்பு வந்ததும், பரபரப்பும் மகிழ்ச்சியுமாக வந்தாள். பத்து நிமிடம் வரை ஆள் நடமாட்டம் இல்லாதுபோல் இருந்த அந்த பிளாட்பாரத்தில் எப்படித்தான் கூட்டம் வந்ததோ, ஒரே தள்ளு முள்ளாக இருந்தது. அவள் அவனைத் தேடினாள்.

கூட்டம் கலையட்டும் என்று நின்றாள். சற்று தூரத்தில் அவனுடைய கம்பீர நடை தெரிந்தது. நின்றுபார்த்துக் கொண்டு இருந்தாள்.

அவள் பிளாட்பாரத்தின் இந்தக் கோடியில் இருந்தாள். அவன் அந்தக் கோடியில் வந்து கொண்டிருந்தான்.

சற்றுக் கழித்துத்தான் அவள் கவனித்தாள். அவனோடு இன்னொரு இளைஞனும் இளம் பெண்ணும் வந்து கொண்டிருந்தார்கள். இன்னும் நாலு எட்டு வந்ததற்குப் பின்னால்தான் தெரிந்தது. அது... சகுந்தலா... அல்ல அல்ல வித்தியா என்று.

ஏனோ... சந்திரிகா... முகம் வாடிப் போனாள். அவன் வருகை தனக்குத் தெரியவில்லை... இந்த வித்தியாவுக்குத் தெரிந்திருக்கிறது. சிந்தனையுடன் நின்று கொண்டிருந்த போதுதான், அவன் அவள் நிற்பதைப் பார்த்தான்.

"ஹாய் சந்திரிகா!" என்று உற்சாகமாகக் கையாட்டிக் கொண்டு வந்தான். சற்று முன்னால் அடி எடுத்து அவளை நோக்கி வந்தான்.

"ஹேய், வாட் எ சர்ப்ரைஸ்!" என்றான். அவளுக்கு மட்டும் கேட்கும்படியாக, "ஹேய் ∴பிரஷ்ஷா... நின்னு கலக்கறே... ஸ்டேஷனா வேற போச்சு..." என்று கிசுகிசுக்கவும், அவள் கோபம் விநாடியில் மறந்து போனது. "பின்னே சஸ்பென்சா வச்சா... நான் கண்டுபிடிக்க மாட்டே னாக்கும்!" என்றாள்.

அவர்கள் தங்கள் அருகில் வரவும் திரும்பி, "டேய்... குப்தா... திஸ் இஸ் சந்திரிகா தேவி... தி... பேமஸ் ஜுவல்லரி ஓனர் அண்ட் எ க்ளோஸ் ஃபிரண்ட் ஆப் மைன்...!" என்றான்.

"ஹலோ மேடம்..." என்றான் அவன்.

"ஹலோ!" என்றாள்.

"இது... வித்தியா... தெரியுமில்லை!" என்றான் பிரேம்,.

"ம்... தெரியும்" என்று புன்னகைத்தாள். பொதுவாகப் பேசிக் கொண்டே கேட் வரை வந்தார்கள்.

"சந்திரிகா... நான் குப்தாவோட போறேன். அப்புறமா... வந்து பார்க்கறேன். தேங்க்ஸ் ஃபார் கமிங்..." என்றான்.

வித்தியாவும் அவர்களோடு காரில் போனாள். தன்னோடு வருவான். கொஞ்சம் பேசலாம் என்று ஆசையாய் வந்த சந்திரிகா பலத்த ஏமாற்றத்துக்கு உள்ளானாள்.

காரை மீண்டும் தனியாய் ஓட்டிக் கொண்டு வந்தபோது வெகுவாகத் தனிமை அவளைத் தின்றது.

வீட்டுக்கு வந்தவள் சற்று நேரம் அப்பாவின் அருகில் போய் இருந்தாள். அவரது எக்ஸர்சைஸ்களுக்கு உதவியாய் இருந்தாள்.

பிறகு கடைக்குப் புறப்பட்டாள். வீட்டுக்குப் போனதற்குப் பிறகாவது தொடர்பு கொள்வான் என்று பார்த்தாள். தொடர்பு கொள்ளவில்லை. வியாபாரம் சற்றுச் சூடு பிடிக்கவும் மற்றதெல்லாம் மறந்தாள்.

அன்றைக்கென்னவோ வரிசையாகக் கஸ்டமர்ஸ் வந்தார்கள். அவளுக்கும் நேரம் இருக்கவில்லை. அன்றிரவும் பிரேம் தொடர்பு கொள்ளவில்லை. அத்தைக்கு ஃபோன் போட்டாள்.

"அத்தை... பிரேம் இல்லையா?" என்றாள்.

"இல்லை... சந்திரிகா. அவன் ஃபிரண்டு யாரையோ கூப் பிட்டு வந்திருக்கான். எட்டுமணிக்கு ஒரு பொண்ணு வந்தா...



ரெண்டு பேரும் அவனோடு எங்கேயோ போயிருக்காங்க." என்றார்.

சந்திரிகா சத்தமாகவே தன்னிலை இழந்தாள். சை... இந்தச் சகுந்தலாவை அவனுக்கு அறிமுகப்படுத்தியே இருக்கக் கூடாது என்று தோன்றியது.

இரண்டு நாட்கள்-

முழுமையாக இரண்டு நாட்கள்... தொடர்பு கொள்ள வில்லை.

ஒரு எல்லைக்கு மேல் சந்திரிகாவுக்கு வெறுத்துப்போனது. ஆனபடி ஆகட்டும் என்று விட்டு விட்டாள்.

மூன்றாம் நாள்தான் மாலை கடைக்கு வந்தான்.

அவனைப் பார்த்ததும் தன் அகமும்... முகமும் ஏன் இப்படி மலர வேண்டும் என்று தன் மீதே அவளுக்குக் கோபம் வந்தது. ஆனால், தம்புவின் முன்னால் எதையும் காட்டிக் கொள்ள முடியவில்லை. சற்று நேரம் இருந்தான்.

"வர நேரமாகுமா... சந்திரி?" என்றான்.

"அம்மா... நீங்க போங்க... நான் பார்த்துக்கறேன்..." என்று தம்பு வற்புறுத்தி அனுப்பி வைத்தார்.

அவனுடைய காரிலேயே புறப்பட்டார்கள். அவள் பேசா மலேயே வந்தாள். அவன் ஏதோ பேச ஆரம்பித்தவுடன்...

"பேசாதீங்க!" என்றாள் கோபமாக.

"ஹேய்... நான்... சொல்றதைக் கேளு..." என்று ஆரம்பிக்கவும் -

"மூணு நாள்... மூணு நாள்... ஊர்ல இருந்துகிட்டு நீங்க எங்கிட்ட பேசலை..." என்றாள் கோபமாக.

"சாரி... சந்திரி... நான் உள்ளூர்ல இருக்கலை. நான் குப்தா... வித்தியா மூணு பேரும் பெங்களூர் போயிட்டோம்!" என்றான்

"நீங்க வர்றது எனக்குத் தெரியலை... அந்த விந்தியாவுக்குத் தெரிஞ்சருக்கு!" என்று அவள் சண்டை போடுவதை அவன் ரசனையுடன் பார்த்தான்.

"ஹேய்... சந்திரிகாவுக்குப் பொறாமை பார்றா!" என்று சிரித்தான்.

"ஆமா... பொறாமை. நீங்க பெரிய ஹீரோ... அவ பெரிய ஹீரோயின்... அதனாலே பொறாமை...!" என்றாள் எரிச்சலாக...

அவன் சிரித்தான்.

அவள் கண்களில் கண்ணீர் நிறைவதைப் பார்த்தவுடன், "ஏய்... சாரி... சாரி... நான் சொல்லியிருக்கணும். தப்புத்தான்!" என்றான்.

"உங்களுக்கு மட்டும் அன்னைக்குக் கோபம் வந்துச்சு... இப்ப நீங்க மட்டும் இப்படிச் செய்யலாமா?" என்றாள் தழுதழுத்த குரலில்.

"சரி... சரி... வீடு வந்தாச்சு. நம்ம சண்டையை மேலே போய் வச்சுக்கலாம்... என்ன?" என்றான். அவளும் சட்டென்று கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

பார்வதியிடமும் ரங்கசாமியிடமும் எதையும் காட்டிக் கொள்ளாமல் வழக்கம் போல் பணிவாகச் சிரித்துப் பேசினாள்.

அப்போது ரங்கசாமி... "பொறும்மா சந்திரிகா. அந்தத் தமிழ்மகன் பயல் இன்னுமொரு பத்து நாள் டயம் கேட்டிருக்கான். அது மட்டும் முடிஞ்சதுன்னா... உங்கப்பா ரெடியாயிருவாரு..." என்றார்.

"சரிங்க... அங்கிள்..." என்றாள் மகிழ்ச்சியாய்.

"டிஃபன் சாப்பிடுங்க..." என்றார்.

அதற்குள் பிரேமின் மனம் புரிந்தவர் போல் பார்வதி. "இந்தா... சந்திரிகா... நீ டிஃபனை மேலேயே கொண்டு போய்



ரெண்டு பேரும் சித்த பேசிகிட்டு சாப்பிட்டுட்டு வாங்க!" என்று அனுப்பி வைத்தார்.

அவள் பசியோடு இருப்பானென்று தன் சண்டையை எல்லாம் சற்று ஓரங்கட்டி வைத்து விட்டுக் கைகழுவித் திரும்பினாள்.

அவன் பின்புறமிருந்து தழுவினான்.

"ஹேய்...கிட்டத்தட்ட அரை மாசமாச்சு... தேவியார் கிட்டே... ஃப்ரீயாப்ப் பேசி..." என்று கொஞ்சி மகிழ்ந்தான். அவள் தடுக்கவில்லை. ஆனால், பதில் கொடுக்காமல் நின்றாள்.

"ஹேய்... கோபமாக்கும்!" என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை.

"எல்லாம் உனக்காகத்தான். உன் பிரச்னைகள் முடியணும்னுதான்... அதுல தீவிரமாய் இருந்தேன்... இப்பப் பார், நிம்மதியாய் உன்னோட டைம் செலவழிக்க முடியுது!" என்றான்.

"ஆமா... எனக்காகத்தான் சொல்லாம... கொள்ளாம போனீங்களாக்கும்!" என்றாள்.

"அட... ஆமா...நான் ஊருக்கு வர்றதே தெரியாம வச்சிருந்து, பிரச்னைகளையும் ஓரளவு சரி செய்து, அப்புறம் உங்கிட்டே... வந்து சர்ப்ரைசா சொல்லணும்னுதான் நெனைச்சேன்," என்றான்.

"ஓ!" என்றாள்.

"என்ன ஓ.பி.கிட்டு... ஆர்.எஸ்.டின்றுக்கிட்டு!" என்று அவன் எரிச்சலானான் பிறகு சிரித்துக் கொண்டு நடந்ததை யெல்லாம் விவரமாகச் சொன்னான்.

# 13



பிரேம் எதிர்பார்த்தது போலவே சருத்தலா தொடர்பு கொண்டான்.

"நான் உங்ககிட்ட பேசணும்..." என்றான்.

"பேசலாம்... எங்க வச்சு?" என்றான்.

அவன் ஒரு ஹோட்டல் சொன்னான். அவன் சற்றுத் தயங்கி விட்டுச் சரி என்றான் அவனிடம். அவன் நண்பனின் ஹோட்டல்தான். கோடி காட்டவும் அவன் ஏ.சி. அறை புக் செய்து கொடுத்தான். இருப்பினும் ஒரு சர்வரைச் சற்றுத் தொலைவில் நிற்கச் சொல்லி இருந்தான். நண்பன் அதைக் கேட்டுச் சிரித்தான்.

"ஆமாம்ப்பா... இந்த மாதிரி லேடிஸ் கூட எல்லாம் தனியா பேசக்கூடாது!" என்றான் பிரேம். ஆனால் விந்தியாவிடம் பேசியவுடன் அவன் எண்ணம் மாறி விட்டது.

அவள் பேரம் பேசுவாள் என்ற எண்ணத்துக்கு மாறாக, அவள் அவனிடம் கை கூப்பிக் கொண்டு, "சார்... உங்களைப் பார்த்தா... என் சகோதரனாய்த் தெரியுது. காப்பாத்துங்க!" என்றாள்.

அவன் சற்றே ஆச்சரியமானான்.

'எதிலிருந்து...?' என்றான்.

"இந்த ஈனத்தனமான பிழைப்பில் இருந்துதான்!" என்றாள்.

பிறகு விபரம் சொன்னாள்.

விந்தியா தாய், தந்தை இல்லாதவள். ஒரே ஒரு சகோதரி சந்தியா என்று. அந்தச் சந்தியாதான் இத்தனைக்கும் காரணம்.

சோஷியல் வொர்க்கர் என்று பேர் பண்ணிக் கொண்டு அவள் விதவிதமாகச் சம்பாதிப்பாள். விந்தியாவையும் வற்புறுத்துவாள். ஆனால் விந்தியா பெரிதாக இடம் கொடுக்க மாட்டாள். ஆனால் இந்த முறை நான் சொல்



வதற்குச் சம்மதிக்க வேண்டும். இல்லை யென்றால் வேற விதமான தொழிலில் ஈடுபடுத்துவேன் என்று பயமுறுத்தினாள்.

டாக்டர் ராம்பிரகாஷ், கேசவன் இருவரும் ஒரு பெரிய தொண்டு நிறுவனத்திற்கு உதவி செய்து வந்தார்கள். அங்கு அடிக்கடி வருகிற விந்தியா, கேசவன் சமீப காலமாக வரவில்லையே என்று டாக்டரிடம் விசாரித்தாள்.

"ஓ... அவரா... திடீர்ன்னு, அவருக்குப் பக்கவாதமா பிடுச்சு. ரொம்ப கிரிட்டிக்கல் பொசிஷன். பேச்சு வருமான்னு தெரியலை!" என்றார். உடனே, ரொம்பத் திட்டம் போட்டு இந்த ஐடியா குடுத்திருக்கா.

"அதுக்குத் தகுந்த மாதிரி ஏதோ ஒரு ஃபங்ஷன்ல ஏழெட்டுப் பேருக்கு மாலை போட்டு மரியாதை செஞ்சுருக்காங்க. அப்ப மாமாவும் இவளும் பக்கத்துல பக்கத்துல நின்னிருக்காங்க. அதை வச்சுட்டுப் பெரிய நாடகமே நடத்த முடிவு செஞ்சுருக்காங்க..." என்றான் பிரேம்.

முதல் தடவை சந்திரிகாவைப் பார்த்துவிட்டு வந்த விந்தியா வெகுவாக வருத்தப்பட்டாள். அக்காவிடம் போய்,

"அக்கா... பாவம்... அந்தப் பொண்ணு... ஏற்கெனவே அப்பாவுக்கு இப்படி ஒரு பக்கம் பிஸினஸ் பிரச்னை இருக்கும் போல இருக்கு. சின்னப் பொண்ணு. நீ வேற இப்படி டார்ச்சர் செய்யறயே..." என்று அழுதாள்.

சந்தியா... முறைத்தாள். "பாருடி, உன்னை வேற அப்பா... அம்மா... என் தலையில கட்டிப் போட்டுப் போயிட்டாங்க. எனக்கு ஆகாவழிப் புருசன். உன்னைக் கரையேத்த வேண்டாமா? பாரு... இது இரண்டையும் காப்பாத்தித் தொலைய வேண்டாமா?" என்று தன் குழந்தைகள் இரண்டையும் காட்டினாள்.

அதில் பெரியவள் ரொம்பவும் குறுகுறுவென்று பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் தலையிலே ஒன்று வைத்து, "போடா... ஒட்டுக் கேட்கறதைப் பாரு!" என்று அந்தப் பக்கம் அனுப்பினாள்.

"அக்கா... அவருக்கு நாளைக்கே பேச்சு வந்து... எல்லாம் வெட்ட வெளிச்சமாயிட்டா..." என்று கேட்டாள்.

"போடி... புரியாதவளே... டாக்டர். சொல்றதைப் பார்த்தா... தேர்றதுக்கு ரொம்ப நாளாகும் போலிருக்கு... அப்படியே தேறினாலும் உன் கல்யாணத்துக்குப் பணம் சேர்க்கறதுக்காக அப்படிச் செய்தோம்னு கால்ல விழுந்து அழ வேண்டியதுதான். இரக்கப்படற ஆளுதான்!" என்றாள்.

வித்தியா அக்காவைப் புழுவைப் பார்ப்பது போல் பார்த்தாள்.

"இத பார்றி... இப்படிப் பார்த்தா...உறைக்கிற காலமெல்லாம் மலையேறிப் போச்சு... ஆகற வழியைப் பாரு" என்றாள் சந்தியா சற்றும் அசராமல்.

வித்தியா மனசில்லாமல்தான் வந்தாள். ஆனால், பிரேம் போட்ட போட்டில் அரண்டு போனாள். ஆனால், கூடவே அவன் மேல் தனக்கு ஆர்வம் போல் அவன் பேசியதையும் அக்காவிடம் சொன்னாள். விசிட்டிங் கார்டைப் பார்த்த அக்கா -

"ஏய்... இது யாரு தெரியுமா? கோயமுத்தூர்ல பெரிய புள்ளி, ரங்கசாமியோட கடைசிப் பையன். அவன் உன்னைக் கல்யாணமே பண்ணலைன்னாலும் பரவாயில்லை. அப்பப்ப வந்து போனாக்கூடப் போதும்பா... உனக்குப் பணத்துக்குப் பணமும் ஆச்சு. பாதுகாப்பும் ஆச்சு!" என்றாள்.

பிரேம் இதைச் சொல்லும்போது சந்திரிகாவின் முகத்தில் கடுப்பேறியது.



'இந்த நினைப்பு வேற இருக்கா?' என்பது போல் -

"ஐயோ... நமக்கு அந்த மாதிரி ஐடியாவெல்லாம் இல்ல. சாமி. நான் ரொம்ப செல்ஃப் டிசிப்ளின்ட்ப்பா..." என்றான்.

அவள் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

"உண்டு இல்லைன்னு பண்ணிருவேன்!" என்றாள்.

"யாரை?" என்றான் திடுக்கிடுபவன் போல.

'குறுக்க வர்றவங்களை... இடம் கொடுக்கறவங்களையும் தான்!" என்று மிரட்டி விட்டுச் சிரித்தாள்.

அந்தக் கணத்தில் அவன் பார்வை மாறியது. முகத்தில் கிறக்கம் ஏறியது.

"ம்... அப்படியா?" என்றான்.

அவள் வேறு பக்கம் பார்த்துக் கொண்டு, "ஐய்யோ... வம்பு ஆரம்பிச்சாச்சு... ப்ளீஸ்... பிரேம்... சொல்ல வந்ததை முழுக்கச் சொல்லுங்க!" என்றாள் வெட்கம் ததும்ப.

"ம்... இப்பவே மிரட்டறே...!" என்று சிரித்தான்.

அவள் மௌனமாகக் குனிந்து கைவிரல்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நான் யோசிக்கப் பார்த்தேன். தேவி... பணத்தேவை தானே... அவள் அக்காவை இந்தப் பாடு படுத்துகிறது. வாழ்க்கைக்கு ஏதாவது வழி செய்வோம் என்று.

"அந்தச் சமயத்தில் என் ஃப்ரெண்ட் குப்தா... தென்னிந்திய முகத்தோடு ஒரு நல்ல மாடல் புதுமுகம் கிடைச்சா தேவலைன்னு சொன்னான்.

"வித்தியாவோட ஃபோட்டோஸ் வாங்கி அனுப்பினேன். பிடிச்சுப் போச்சு. நம்ம வீட்டுக்கும் குப்தாவை ரொம்ப நாளா கூப்பிட்டுட்டு இருந்தேன். அதனால், ரெண்டு வேலையையும் ஒண்ணா வச்சுக்கிட்டோம்," என்றான்.

"பெங்களூரில் அவனுக்குப் பெரிய அட்வர்டைசிங் ஏஜென்சி யோட தொடர்பு இருக்கு. அங்க வித்தியாவை அழைச்சுகிட்டுப் போயி அறிமுகப்படுத்தி அக்ரிமெண்ட் போட்டு எல்லா ஏற்பாடுகளும் செய்தோம்.

"வித்தியா மாடலா நடிக்கிற விளம்பரங்களை இனி டி.வி. யிலே பார்க்கலாம். அது மட்டுமில்ல. வித்தியாவை இனி அனாவசியமா தொல்லை பண்ணக்கூடாதுன்னு சந்தியாவை யும் மிரட்டியிருக்கேன்!" என்றான்.

"ஏன்... இதையெல்லாம் எங்கிட்டே சொல்லியிருக்கலாம் இல்லை..." என்றாள்.

"தேவி... எல்லாம்... ரொம்ப ஃபாஸ்ட்டாப் போச்சு... குப்தா ரெண்டு நாள்... டைம்ல... வர்றான்... வித்தியாவுக்கும் வழி பிறக்கும், நமக்கும் ஒரு பெரிய தொல்லை தீரும்..." என்றான்.

அவள் நெகிழ்ந்து போனாள். "தாங்க்ஸ் பிரேம்... ரொம்ப தாங்க்ஸ்!" என்றாள்.

"ஹேய்... இது நியாயமா?" என்றான்.

அவள் புரியாமல் பார்க்க...

"நாலு அடி தள்ளி நின்னுகிட்டுத் தேங்க்ஸ் சொல்றியே..." என்றான் ஏக்கமாய். அவள் வெட்கத்துடன் அருகில் வந்தாள். அவன் நெருங்கி அணைத்துக் கொண்டான். "உனக்கென்று நிறையப் பரிசுகள் வாங்கிட்டு வந்திருக்கேன்!" என்றான்.

"எனக்கு எதுக்கு பிரேம்? திங்ஸ் நிறைய இருக்கு!" என்றாள். பிறகு அவன் முகம் பார்த்து, "வேண்ணா, இனிமே ஒண்ணு செய்யுங்க. எனக்கு ஒவ்வொரு பொருள் வாங்கும் போதும் அதோட விலையில் கொஞ்சம் பணம் எடுத்து ஒரு பக்கம் வச்சிருங்க!" என்றாள்.



"எதுக்கு..." என்றான்.

"பிரேம்... இங்க வடபள்ளியில் 'சொந்தம்'னு ஒரு அனாதை இல்லம் இருக்கு. போய்ப் பாருங்க. எல்லாம் சின்னக் குழந்தைங்க பிரேம்... அவங்களுக்கு ஏதாவது செய்யலாம்... என்ன?" என்றாள்.

அந்தக் கணத்தில் அவள் மேலான காதல் அவனுக்கு அதிகரித்தது.

"ஸ்வீட் லிட்டில் டார்லிங்!" என்று இன்னும் இறுக்கமாக அணைத்துக் கொண்டான்.

"சந்திரி... நான் ஒண்ணு சொல்லட்டுமா... இரண்டு வருஷத்துக்கு முன்னால ஒரு தடவை உங்க கடைக்கு நான் வந்திருந்தப்ப நீ உன் ஃப்ரண்ட்ஸோட வந்தே... அப்ப இந்தப் பொண்ணுக்கெல்லாம்... வாழ்க்கை எப்படிப் புரியப் போகுதுன்னு கேலியாக்கூட நினைத்தேன். ஆனா, உன் பிரச்னைகளைச் சமாளிக்க நீ நிமிர்ந்து நின்ன விதம் பார்த்துத்தான் நான் மயங்கிப் போனேன்..." என்றான்.

"அப்ப ஆளைப் பார்த்து லைக் பண்ணலையா...?" என்றாள்.

அவன் சிரித்தான். சற்றுத் தள்ளி அவளை நிறுத்தி மேலும் கீழும் பார்த்தான்.

"ஆளும்... மோசமில்லை!" என்றான்.

"ரொம்பத்தான்... உனக்கு!" என்று அவள் சிரிக்கவும், அவன் உணர்ச்சி வசப்பட்டான். "எங்கே இன்னொரு தடவை... சொல்லு!" என்று கேட்கவும்தான் என்ன சொன்னோம் என்பது அவளுக்கே புரிந்தது.

"ஐயோ..." என்று அந்தப் பக்கம் அவள் நகர்ந்து விட்டாள்.

"சரி... சரி... வா..." என்று அருகில் இழுத்துக் கொண்டான். சோஃபாவில் எதிரெதிரே அமர்ந்து கொண்டார்கள்.

"அப்புறம் இதைக் கேளு... குப்தா... நீ மாடலிங் செய்வியான்னு கேட்கறான்!" என்றான்.

அவள் திடுக்கிட்டுப் போனாள்.

"நீங்க என்ன சொன்னீங்க?" என்றாள்.

"கேட்டுச் சொல்றேன்னேன்." என்றான்.

பிறகு "என்ன அப்படிப் பார்க்கறே? உனக்கு விருப்பம்னா... செய்யலாம்.. எந்தத் தொழிலிலும் நேர்மையா இருக்கறவன் இருப்பான். கெட்டுப் போறவன் கெட்டுத்தான் போவான்!" என்றான்.

"உண்மைதான்..." என்றாள்.

"அது மட்டுமில்ல... வாழ்க்கைன்னா நம்பிக்கைதான். நானும் அடிக்கடி ஃபாரின் போறவன். என்னை நீயும் நம்பி அனுப்பத்தான் வேணும்." என்றான்.

"உங்க மேல நம்பிக்கையில்லாமலா?" என்றாள்.

"தேனி... எங்க பெரிய அண்ணன் பல விஷயங்கள்ல பலவீனமானவன். அவன் நிறையச் சிக்கிட்டுத் திணறியதைப் பார்த்திருக்கேன். அது மட்டுமில்லை. என் மனசில் இடம் பிடிக்கிறவளுக்குத்தான் என்னுடைய மனம் உடல் எல்லா மென்று நான் எப்பவோ தீர்மானிச்சுக் காத்துக்கிட்டு இருக்கேன்!" என்றான்.

அவள் முகம் மலர்ந்தது. பின் சிந்தனையுடன் அவனைப் பார்த்தாள்.

"பிரேம்! நீங்க இதைப் பத்தி யோசிச்சதில்லையா?" என்றாள்.

"எதைப் பத்தி?"

"இல்லை... அப்பாவுக்கு... எப்ப உடம்பு குணமாகி... நான் எப்ப... கல்யாணத்துக்குத் தயாராகி..." என்று இழுத்து நிறுத்தினாள்.



அவன் வாஞ்சையாய்ப் புன்னகைத்தான். "லெட் திங்ஸ் டேக் தெயர் ஓன் டைம்... சந்திரி... என்ன ஒரு இரண்டு வருஷம் காத்திருக்க வேண்டி வருமா? காத்திருக்கேன்!" என்றான்.

அவன் சற்றும் எதிர்பாராத விதமாக அவள் எழுந்து தன் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

"தாங்க்ஸ்... பிரேம்!" என்று நெற்றியில் முத்தம் பதித்துக் கீழிறங்கிப் போய்விட்டாள்.

ஆனால், காலம் அவர்கள் நினைத்ததற்கு நேர் மாறாகத் தான் விஷயங்களை நடத்தப் போகிறது என்று அவர்களுக்கு அப்போது புரியவில்லை.

## 14



அன்றிரவு.

சந்திரிகா மகிழ்ச்சியாய் வீடு வந்து சேர்ந்தாள். இன்னும் கூட மகிழ்ச்சி அவளுக்குக் காத் திருந்தது.

சமீப காலமாகக் கேசவன் லேசாகக் கைகால் களை அசைக்க ஆரம்பித்தார். குரல் குழறலாக வர ஆரம்பித்திருந்தது.

பிரேம் அன்றொரு நாள் வந்து தமிழழகன் பற்றிய முயற் சியைச் சொன்னதற்குப் பிறகு அவரது உடல்நிலையில் வெகுவாக முன்னேற்றம் தெரிந்தது.

உடம்பு தேற வேண்டும் என அவரும் மிகவும் மனம் வைத்து முயற்சிப்பது தெரிந்தது. அன்றிரவு ஒன்பது மணி வாக்கில் டாக்டர் ராம்பிரகாஷ் வந்து சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

"கேசவன்... நான் எதிர்பார்த்ததை விட வேகமாக... முன் னேற்றம்... தெரியுது. மெதுவாக டிரை பண்ணினா கொஞ்ச நாள்ல எழுந்து உட்காரலாம்," என்று சொன்னார்.

"ஸ்பீச்... தெரபியில கூட இம்ப்ருவ்மெண்ட் தெரியுது..." என்றார்... பிறகு... சந்திரிகா பரிமாற, அவர் சாப்பிட்டார். அன்று ஏனோ அவ்வளவு சீக்கிரம் புறப்படவில்லை.

"சந்திரிகா..." என்றார் தயங்கி.

"சொல்லுங்க... அங்கிள்..." என்றாள்.

"கேசவனை நான் ரொம்ப நாளாப் பார்க்கறேன். இளம் வயசிலே... பிரைம் யூத்ல... கட்டுப்பாடா இருக்கறது எவ்வளவு கஷ்டம் தெரியுமா? இப்ப... உங்கிட்டே இதையெல்லாம் பேசலாமா..." என்றார் தனக்குத் தானே தலையாட்டிக் கொண்டு.

"சொல்லலாம்... தப்பில்லை..." என்றார்.

பிறகு... அவள் கேட்கிறாளோ, கேட்கவில்லையோ என்பது பத்திக் கவலைப் படவில்லை. தொடர்ந்தார்.

"எனக்கு நல்ல பர்சனல் பிரண்ட்... நான் கூடச் சொன்னேன்... செகண்ட் மேரேஜ் பண்ணிக்கடான்னு... சிரிப்பான்... 'தோணலைடா' என்பான்.

"ஏன்னு... கேட்டா... 'நல்லா யோசிச்சுப்பாரு. இப்ப சந்திரிகாவுக்குப் பன்னிரண்டு வயது. இந்தச் சமயத்துல ஒரு பொண்ணைக் கொண்டு வந்து அம்மான்னா எப்படி இருக்கும்? வர்றவளுக்குத்தான்... இப்படி ஒரு பெரிய பொண்ணை மகளா ஏத்துக்கறதுக்கு எவ்வளவு கஷ்டம்? வேண்டாம்ப்பா... அந்த விஷப் பரிட்சையெல்லாம். நான் இப்ப நிம்மதியாய் இருக்கேன்' அப்படிம்பான்.

"கொஞ்ச நாள் கழித்து இன்னொரு முறை பேசிப் பார்த்தேன்... அப்ப... 'சந்திரிகா நல்ல பொண்ணுடா... அவளே இப்ப ஒரு தாய் மாதிரி என்னைப் பாத்துக்கறா... அவள் சுதந்திரம் பாதிக்கப்படக் கூடாதுடா... அக்கா... வந்ததினால ஒரு அம்மாவின் அரவணைப்பும் அவளுக்குக் கிடைச்சது...



எல்லாத்துக்கும் மேல மீனாவோட நிறைவா வாழ்ந்துட்டேன்... போதும்டா...' ம்பான்.

"அப்புறம் நானும்... அத்தையும் பேசி ஒரு பெண்ணைப் பார்த்தோம்... எங்களுக்குப் பிடிச்சது... நீ பார்க்க வான்னு கூப்பிட்டப்பத்தான் அந்த உண்மையைச் சொன்னான்... 'பாரு, ராம்பிரகாஷ்! மீனாவுக்கு ரெண்டாவது ஒரு குழந்தை பிறந்தா கஷ்டம்னு டாக்டர்ஸ் சொன்னாங்கன்னு நான் ஆபரேஷன் பண்ணிக்கிட்டேன்...' அப்படிங்கறான்!" என்றார்.

"எவ்வளவு பெரிய மனசு... மீனாவை ரொம்ப ஆழமா நேசிச்சான். சிஸ்டர் போனதுக்குப் பிறகு அத்தனை அன்பையும் சேர்த்து உன் மேல வைச்சான்!" என்றார்.

சந்திரிகா, 'இதெல்லாம் இப்ப எதுக்கு?' என்பது போல் பார்க்க... அவர் சிந்தனையுடன் தொடர்ந்தார்.

"ஆனா... இப்பத் தோணுது... பிஸினஸ் டென்ஷன், ஃபிஸிகல் நீட்ஸ் எல்லாமாய்ச் சேர்ந்து கூட இந்த அதிர்ச்சிக்கு ஒரு காரணமாய் இருக்கலாம்னு தோணும்," என்றார்.

சந்திரிகா அவரைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவர் தொடர்ந்தார். "இந்த ரேஞ்சில போனா... அநேகமா ஆறு மாசத்துக்குள்ளேயே பழைய மாதிரியாகிடுவான். ஆனா... அதுக்கப்புறம்... உன் கல்யாணப் பேச்சு வரும். உன்னைப் பிரிஞ்சு... எப்படி இருப்பான்னு தெரியல..." என்றார்.

"அங்கிள்... அப்பாதான் இப்ப முதல்ல... மத்ததெல்லாம் அப்புறம்தான்," என்றாள்... சந்திரிகா.

"சொல்றதுக்கு நல்லாருக்கும்மா... ஆனா வாழ்க்கையில நடக்கணுமே..." என்றார்...

அத்தையும் இத்தனை நேரம் நடந்த பேச்சுக்களை எல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்... பிறகு சொன்னாள்.

"ஆமா... தம்பி... இப்ப... எனக்கும் இந்தக் கவலைதான்!" என்றாள்.

சந்திரிகா... குறுக்கிட்டு, "அங்கிள்.... அந்தக் கவலையெல்லாம் இப்ப வேண்டாம். அப்பா... முதல்ல... தேறட்டும்!" என்றாள்.

அது... கரெக்ட்தான் என்று அவரும் ஒத்துக் கொண்டார். புறப்பட்டுப் போனார். ஆனால்... சந்திரிகா அன்று வெகு நேரம் உறங்கவில்லை.

எவ்வளவு நல்லவர் அப்பா... தனக்காகத்தான் இளமை உணர்வுகளைத் தியாகம் செய்து... இப்போது நன்றாகப் புரிகிறது... அதுவும் பிரேம் தன் வாழ்க்கையில் வந்த பிறகு... பிரேமின் வருகைக்காகத் தான் ஏங்கும் போது... அவன் வந்தால் மகிழும் போது.... இது எல்லாம் இயற்கைதானாம்... மனித வாழ்வில் நியதியாமே... பிரேம் சொல்கிறார்.

ஒருவேளை இந்த நியதியிலிருந்து விலகியதால்தான் அப்பாவுக்கு இப்படி நேர்ந்ததோ...

பிரேம் கண்டிப்பாக வீட்டுமாப்பிள்ளையாய் வரமாட்டார். அப்பாவும் அப்படிக் கேட்க மாட்டார்.

ஆனால், ஒன்று மட்டும் முடிவு செய்து கொள்வோம். அப்பாவைத் தனிமையில் தவிக்க விட்டுத் தான் மட்டும் துணை தேடிப் போவது எந்த வகையில் நியாயம்? கூடாது... கூடவே கூடாது என்று எண்ணிக் கொண்டாள்.

பிறகு என்னதான் வழி? அவளுக்குப் புரியவில்லை. பிரேம் ஏதோ அன்று பேசும் போது, 'சந்திரிகா... நினைப்பதும் உழைப்பதும் நம் கையில் முடிவு அவர் கையில்...' என்றாரே. அது மாதிரி இப்போது... யோசித்து... யோசித்து ஏன் மண்டையைக் குழப்பிக் கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டே உறங்கிப் போனாள்.

அன்றைக்கும் சந்திரிகா ஏதோ ஒரு ஹால் திறந்து வைக்கப் போவதாகப் பத்திரிகையில் செய்தி வந்திருந்தது. அதற்குப் பிறகு நடக்கிற நிகழ்ச்சியிலும் அவள் கலந்து கொள்வதாக



இருந்தது... ஆனால், பிரேம்குமார் புறப்படாமல் வீட்டில் இருந்தான்.

ரங்கசாமி யோசனையுடன் பார்த்தார்.

"என்னடா... நீ போகலையா...?" என்றார்.

"இல்லைப்பா..." என்றான்.

"ஏன்டா?"

"இல்லைப்பா... சந்திரிகாவோட அப்பா குணமாகி அவர் கிட்டே பர்மிஷன் வாங்கறவரைக்கும் ரொம்ப வெளிப் படுத்திக்க வேண்டாம்னு சந்திரிகா ஃபீல் பண்றால்ல... அதனால.... எல்லா... ஃபங்ஷனுக்கும் நான் போனா... மீடியாக்களும் மோப்பம் பிடிப்பாங்க. நான் வர்லேன்னுட்டேன்," என்றான்.

"ஓ..." என்றார். பிறகு மனைவியைப் பார்த்துக் கண் சிமிட்டினார். "ஏன் பார்வதி... நமக்குக் கூட அந்த ஃபங்ஷனுக்கு அழைப்பு வந்துருக்கு இல்லே," என்றார்.

பார்வதி புன்னகைத்தார்.

சந்திரிகா ரிப்பன் வெட்டி விட்டு நிமிர்ந்தாள். எல்லாரும் கைதட்டினார்கள். உடனடியாக மேடைக்கு அழைத்துப் போனார்கள்.

சந்திரிகா மேடையில் எப்படி நடந்து கொள்வது என்று ஓரளவுக்குக் கற்றுக் கொண்டு விட்டாள். மேடையில் போய் அவர்கள் அமர்கிற இடைவெளியில் ஹால் நிரம்பியது. வேறு ஏதோ முக்கியஸ்தரைப் பேச அழைத்திருந்தார்கள்.

ஹாலில் இரண்டாவது வரிசையில் இரண்டு, மூன்று சீட்கள் காலியாக வைக்கப்பட்டிருந்தன. 'சே... பிரேம் வராமல்... ஏதோ ஹாலே காலியாக இருக்கற மாதிரி... இருக்கு!' என்று எண்ணிக் கொண்டாள்.

திடீரென்று சலசலப்பு ஏற்பட்டது. ரங்கசாமி, பார்வதி... பிரேம் பின் தொடர உள்ளே நுழைந்தனர். குப்பென்று

அவளுக்குள் சந்தோஷம் நிறைந்தது. காலியாக இருந்த இருக்கையில் அவர் அமர முற்பட்டபோது சந்திரிகா மேடையில் எழுந்து நின்று வணக்கம் செலுத்தினாள்.

'உட்கார், உட்கார்!' என்று அவசரமாக அவர் சைகை செய்தார். அவள் அமர்ந்து கொண்டாள்.

மேடையில் பேசிய அனைவரும் ரங்கசாமியையும் ஒரு முக்கிய விருந்தாளியாகக் குறிப்பிட்டுப் பேசியதைச் சந்திரிகா ஆச்சரியமாகக் கவனித்துக் கொண்டாள். அவளும் சுருக்கமாகப் பேசி அமர்ந்தாள். முக்கியப் பேச்சாளர் வெகு நகைச்சுவையாய்ப் பேசினார். அரங்கம் சிரித்து மகிழ்ந்தது.

கலை நிகழ்ச்சிகள் முடியும் வரை அமர்ந்தார்கள். அவள் மேடையை விட்டு இறங்கியவுடன் நேராகப் பார்வதியை நோக்கி வந்தாள். அவர் அருகில் அமர்த்திக் கொண்டார்.

பிரேம் எதையும் காட்டிக் கொள்ளாமல் பின்னணியில் இருந்து கொண்டான். நிகழ்ச்சி முடிந்ததற்குப் பின் சிறப்பு விருந்தினர்கள் எல்லாரும் ரங்கசாமியிடம் வந்து மரியாதையுடன் பேசிச் சென்றார்கள். எல்லாரிடமும், "நமக்குக் கேசவன் ரொம்ப நெருக்கமாச்சே... அவர் மகளாச்சே!" என்று பிரமாதப் படுத்தினார்.

திரும்ப வரும்போது தம்புவிடம், "நீங்க போங்க... நான் புள்ளைய நம்ம வீட்டுக்குக் கூப்பிட்டுப் போயிட்டு அனுப்பறேன்," என்று அனுப்பினார்.

நல்ல ஹோட்டல் ஒன்றுக்கு அழைத்துச் சென்று உண வருந்தச் செய்தார். அப்பா இருக்கும் போது பிரேம் அதிகம் வாயடிக்காமல் அடக்கமாக இருப்பதைப் பார்த்துச் சந்திரிகாவுக்கு உள்ளுக்குள் சிரிப்பு... ஆனால், அவளும் பதவிசாக நடந்து கொண்டாள்.

திரும்ப வரும்போது சந்திரிகாவின் வீட்டுக்கும் பார்வதியோடு வந்தார். சந்திரிகா பரபரப்பாக உபசரித்தாள்.



அத்தைகூட அன்பாக உபசரித்தாள்.

கேசவனைப் போய்ப் பார்த்தார்கள். கேசவன் இப்போது எழுந்து அமர ஆரம்பித்திருந்தார். புத்தகம் படித்துக் கொண்டிருந்தார். இவரைக் கண்டவுடன் வலது கையைத் தூக்கி வணக்கம் செய்தார்.

மற்றவர்களை வெளியே போகச் சொல்லி விட்டு, அவரிடம் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார். கேசவன் இப்போதெல்லாம் சிலேட்டில் எழுதிக் காண்பிக்க ஆரம்பித்திருந்தார்.

"என்ன கைம்மாறு செய்யப் போறேனோ?" என்று எழுதிக் காண்பித்தார்.

"கைம்மாறு? கண்டிப்பாகக் கேட்பேன். மறுக்காமக் குடுக்கணும்..." என்று சிரித்தபடி வெளியே வந்தார்.

புறப்படுவதற்கு முன் சந்திரிகாவிடம், "அம்மா... பிரேம்... இல்லாம இருந்தாலும் சரி... எப்ப எது வேணுமோ... கேட்கணும்... சரியா?" என்றார்.

"சரிங்க..." என்றாள். சந்திரிகா. இதையெல்லாம் பிரேம் ஒரு விதமான உற்சாகப் பரவசத்துடன் மௌனமாகக் கவனித்துக் கொண்டிருந்தான். திரும்பக் காரில் வரும்போது, "என்னடா... ஃபியூச்சர் பிளான்?" என்றார்.

"இன்னும் ஒண்ணும் முடிவாகலைப்பா... கேசவன் அங்கிள்... இப்படி இருக்கும் போது... என்ன செய்யறது..."

"அவர் தேர்றதுக்கு எப்படியும் ஒரு வருஷமாவது ஆகும். எப்படி அப்பாவைத் தனியே விடுவேன் அப்படிங்கறா சந்திரிகா? நியாயம்தானேப்பா..."

"நீ என்ன சொன்னே?"

ரெண்டு வருஷமானாலும் காத்திருக்கேன், அப்படின்னு சொல்லியிருக்கேன்," என்றான்.

"நீ காத்திருப்பே... நாங்க காத்திருக்கணுமே...!" என்று முணுமுணுத்தார்.

''அப்பா... என்ன சொல்றீங்க...'' என்றான் புரியாமல்.

ஒன்னும் இல்லை... அப்புறம் சொல்றேன்,'' என்றார்.

வீட்டுக்கு வந்தவுடன் அப்பாவின் அருகில் சற்று அமர்ந்திருந்தான். பிறகு எழுந்து அறைக்குப் போகும் போது அப்பாவிடம் நின்று 'தாங்க்ஸ்ப்பா' என்றான்.

'எதுக்குடா..?'' என்றார் ஆச்சரியமாய்.

''எல்லாத்துக்கும்தான்!'' என்று புன்னகைத்தான்.

'அடப்பயலே' என்று மகிழ்ச்சியாய்ச் சிரித்தார். தட்டிக் கொடுத்தார். அவன் கனவில் செல்வது போல் அறைக்குப் போனான்.

பார்வதி கணவரைப் பார்த்துப் புன்னகைத்தார்.

''என்ன பார்க்கறே... பார்வதி... எல்லாம் இயற்கைதான். அந்தக் காலத்துல நமக்கு நிச்சயம் ஆனப்ப ஏதாவது காரணம் சொல்லிக்கிட்டுப் பார்க்க வருவேன் இல்ல. அது மாதிரிதான்!'' என்று சிரித்தார். பிறகு.

''பாரு... இந்தப் பிரேம் பயலை எனக்கு ரொம்பப் பிடிக்குது. மத்த ரெண்டு பயலுகளும் பணத்தைத்தான் மதிச்சாளுங்க. ஆனா இவன் நாம வேணும்னு நெனைச்சான். அதுமட்டுமில்ல, கல்யாணமானா கூட இவன் நம்ம கூட இருக்கணும்னுதான் பிரியப்படுவான். தனியாப் போக மாட்டான்...பாரு... நான் அந்தக் காலத்துல அப்படித்தான்... ரொம்ப சுயமரியாதை...'' என்றார் பெருமையாக.

பார்வதி சிந்தனையுடன் பார்த்தார்.

''ஏங்க... சந்திரிகாவோட அப்பாவுக்காகத்தானே ரெண்டும் யோசிக்குதுங்க. அவர் கொஞ்சம் தேறினாலும்... கல்யாணத்தைப் பண்ணிடலாம். அவரு நல்லாத் தேற வரைக்கும் அங்கயே இருங்கடா... அப்புறம் இங்க வந்துக்கலாம்னு நாமளே சொல்லிட்டா?'' என்றார்.



''அட... இதுவும் யோசனைதான்...'' என்றார்.

''ஆமாங்க... அவன் என்னதான் பெருந்தன்மையா இரண்டு வருசம்னாலும் காத்திருக்கேன்னு சொன்னாலும் அந்தச் சந்திரிகா வர்றப்ப அவன் முகத்தைப் பார்க்கணுமே... அவ போனதுக்கப்புறம் கொஞ்ச நேரம் தனக்குத்தானே சிரிச்சுக்குவான். எனக்கே பொறாமையா இருக்கும்!'' என்றார்.

''பார்வதி...'' என்றார் ரங்கசாமி திடுக்கிட்டுப் போய்.

''சும்மா... சொன்னேங்க... நீங்க சொன்ன மாதிரி... இவன் தான் நமக்கு ஒரே குழந்தைங்கற மாதிரி இப்பல்லாம் தோணிப் போச்சு. அவன் சந்தோஷமா இருந்தாப் போதுங்க...'' என்றார்.

அவரும்... அதை ஏற்றுக் கொண்டார்.

பிறகு சிந்தனையுடன் சொன்னார். ''ரெண்டு பேருமே பொறுப்பான குழந்தைங்க... அதுலயும் அந்தச் சந்திரிகா... புள்ள, தன்னோட வயசுக்கு மீறின சோதனைகளைப் பார்த்திருக்கு. அது இங்க வந்ததுக்கு அப்புறம் ஒரு மகளா நடத்தணும். இந்த மாதிரி பொறுப்புள்ள குழந்தைங்க சந்தோஷப்பட வேண்டியது நியாயம்!'' என்றார்.

''அதென்ன... வந்ததுக்கப்புறம்கறீங்க... இப்பவே... நான் அப்படித்தானே நெனைக்கிறேன். பார்த்தீங்கல்ல... ஃபங்ஷன்ல... நேரா எங்கிட்டத்தானே வந்தா'' என்றார் பார்வதி பெருமையாக.

''ஆமாப்பா!'' என்றார் ரங்கசாமி குறும்பாக.

''அதென்ன நீங்க எங்கயும் ஃபங்ஷனுக்கு வரமாட்டீங்க... இன்னைக்கு அதிசயம்?''

''பய இங்க இருப்பான்... மனசு பூரா அங்க இருக்கும்... அதான் நானே கூப்பிட்டுப் போனேன்!'' என்று சிரித்தார்.

அதே சமயத்தில் பிரேம் செல்ஃபோனில், 'ஸ்வீட் அப்பா!' என்று சொல்லிக் கொண்டிருந்தான். பிறகு, 'சந்திரி, எந்த டிஸ்டர்பன்ஸ்ஸும் இல்லாம தேவியாரை முழுமையா சுறு

மணி நேரம் தரிசனம் செய்தேன்...' என்றான்... வெடிச் சிரிப்புச் சிரித்துக் கொண்டான்.

அதே நேரத்தில் ரங்கசாமி டாக்டருக்கு ஃபோன் செய்து, "ராம் பிரகாஷ், நாளே நாள்ல தமிழழகன் வர்றான். கேசவனைத் தயார் செய்ங்க," என்றார்.

'அந்தப் பயலா...' என்று டாக்டர் திகைத்தார்.

15



"ஏம்ப்பா... தமிழழகன் வர்றான், வர்றான்னு பூடகமாய்ப் பேசிக்கறீங்களே, என்னதான் பிரச்னை?" என்றாள் அத்தை பிரேமிடம்.

சந்திரிகாவும், அவனும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு பிரேம்குமாரே விவரத்தைச் சொன்னான்.

கோவையில் முக்கியமான வியாபாரப் புள்ளியாகக் கேசவனும், டாக்டர்களில் ஒருவராக ராம்பிரகாஷும், அரசியல்வாதியாகத் தமிழழகனும் பெயரெடுத்திருந்தாலும், இவர்களெல்லாம் ஒரே தெருக்காரர்கள். ஆர்.எஸ்.புரம் பகுதியில் வளர்ந்தவர்கள். போடா, வாடா என்று ஏக வசனத்தில் பேசிக் கொள்கிற அளவுக்கு நெருங்கியவர்கள்.

வாழ்க்கையில் திசைகள் மாறிய பிறகு தமிழழகன் அரசியலுக்குப் போனான். தேர்தல் சமயத்தில், அவ்வப்போது நிதி கேட்பான், கேசவனும் கொடுப்பார். கடனாகவும் தொகைகள் கேட்டதுண்டு. ஒரு மாதம் அல்லது இரண்டு மாத இடைவெளியில் கொடுத்து விடுவான்.

சென்ற முறை சட்ட மன்றத் தேர்தலின் போது பத்து லட்சம் கேட்டான். கேசவனும் கொடுத்தார். பாராளுமன்றத் தேர்தலின் போது இரண்டு முறை மறுபடியும் கேட்டான். தனது வீட்டுப் பத்திரத்தை வேறு கொண்டு வந்து திணித்தான்.



பெரிய தொகையைக் கொடுப்பதற்குக் கேசவனுக்குத் தயக்கமாய் இருந்தது. தேர்தலுக்கு முன் திடீரென்று தற்கொலை முயற்சியில் இறங்கினான். அவனைச் சார்ந்து பெரிய குடும்பம். மனசு இளகிப்போய்க் கேசவன் பணம் கொடுத்தார்.

இருபத்தைந்து லட்சத்துக்கும் மேல் அவனிடம் மாட்டியிருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன் அபார்ட்மெண்ட் கட்டியதில் கேசவனின் பணம் முடங்கிப் போய் விட்டது. இருந்த தொகையை வைத்துக் கொண்டு கடை நடத்திக் கொண்டிருந்தார். அதில் இவ்வளவு பெரிய தொகை துண்டு விழுந்தது ஒரு பக்கம், சமீப காலமாகக் கோயமுத்தூரில் நகைத் தொழில் நலிவு ஒரு பக்கம் என்று பெரிய அடி.

தவிர்க்க முடியாத சூழ்நிலையில் பணத்தைத் திருப்பிக் கொடுக்கச் சொல்லி நெருக்குதல் நடத்திய போது தமிழழகன் ஆளே மாறிப் போயிருந்தான்.

உன்னால் முடிந்ததைப் பார்த்துக் கொள்... வேண்டுமானால் வீட்டை விற்றுக் கொள் என்ற தோரணையில் பேசினான். அதனால்தான் பிரேம் குமாரை விட்டுவிசாரிக்கச் சொன்னார்.

பிரேம் குமார் விசாரித்துப் பார்த்த போது வீட்டுப் பத்திரம் போலிப் பத்திரம் என்று தெரிய வந்தது. ஏற்கெனவே வீட்டை விற்றுத் திருப்பூர் பக்கம் வீடு வாங்கி விட்டானாம்.

பிரேம்குமார் நேரடியாகப் போய்க் கேட்டான். அப்போது அவனுக்குப் பிரேம்குமார் ரங்கசாமியின் மகன் என்று தெரியாது. லாவகமாகப் பேசி, வரும் பத்தாம் தேதி ஒரு தொகை வருகிறது, தருகிறேன் என்று அனுப்பினான்.

பத்தாம் தேதி அன்று ஃபோன் செய்த போது, "பணம் ஆகலையே... தம்பி... கொஞ்சம் பொறுக்கச் சொல்லு... ஒரே வருஷத்துல பணத்தை வீசிடறேன்," என்றான். அதற்குப் பிறகுதான் வீட்டுப் பத்திரம் போலி என்பதைப் பிரேம்குமார் ஃபோனில் கேசவனுக்குச் சொன்னான்.

அதிர்ச்சி தாளாமல் கேசவனுக்கு ஸ்ட்ரோக் ஏற்பட்டு விட்டது.

பிரேம் குமாரின் அப்பா ரங்கசாமி பரம்பரைப் பணக்காரர். அவருடைய தந்தையார் அந்தக் காலத்தில் அரசியலில் ஒரு முக்கியப் புள்ளி. மத்திய அளவில் பெரிய பொறுப்புகளில் இருந்தவர். ஆனால் ரங்கசாமி அரசியலுக்கு உள்ளே போகவில்லை. மாறாக வெளியே இருந்து கூட இலரும் சக்தி உள்ளவராய் இருந்தார்.

"அது எந்தக் கட்சியா இருந்தாலும்... சரியப்பா... கோய முத்தூர்ல ஜெயிக்கணும்னா ரங்கசாமி அய்யாவோட பார்வை படணும்பா..." என்று பேசிக் கொள்வார்கள் அரசியல்வாதிகள்.

இன்றைக்கும் டெல்லிவரைக்கும் அவருக்குச் செல்வாக்கு இருந்தது. போன மாதத்தில் பிரேம்குமாரிடம் இருந்து எல்லா விவரங்களையும் கேட்டுக் கொண்டார். பிரேம்குமாரை விட்டே, "அப்பா தலையிடணுமா இல்லை ஒழுங்காகக் குடுக்கறீங்களா?" என்று கேட்கச் செய்தார்.

தமிழழகன் அரண்டு போனான். ஒரு மாதம் டைம் கேட்டான். போன வாரம் ரங்கசாமியே பேசினார்.

"கேசவன்... நமக்கு ரொம்ப வேண்டியவரு... ஒழுங்கா பணத்தை வட்டியோட கொண்டு வந்து சேத்துரு... இல்லை... என்னைத் தெரியுமில்லை... உன்னோட அரசியல் வாழ்க் கையச் சின்னா... பின்னம் பண்ணிப் போடுவேன்!" என்றார். வைத்து விட்டார்.

அதற்குப் பிறகு தமிழழகன் விழுந்து விழுந்து ஃபோன் செய்தான். "பணம் தயார் செஞ்சுகிட்டே இருக்கேன். கொஞ் சம் பொறுங்க!" என்று தவணை கேட்டுக் கொண்டான்.

சந்திரிகாவுக்குக் கூட இப்போதுதான் முழு விவரங்களும் தெரிய வந்தன. பிரமித்துப் போனாள்.

தமிழழகன் வந்தே வந்து விட்டான். வீல் சேரில் அமர்ந் திருந்த கேசவனைப் பார்த்தவுடன் ஒரு கணம் மனச்சாட்சி உறுத்தி விட்டது.



"ரொம்ப சாரிப்பா... வேணும்னு செய்யலே... சூழ்நிலை அப்படியாகிப் போச்சு... ரொம்ப மன்னிச்சுக்க..." என்று ஆயிரம் முறை மன்னிப்புக் கேட்டான்.

யாரும் எதிர்பாராத விதமாக அந்த நேரம் ரங்கசாமியே வந்தார். தமிழழகன் பதறிப் போனான்.

"சார்! தப்பா நெனச்சுக்காதீங்க... உண்மையாவே பணம் புரட்ட முடியலே..." என்று வெகுவாக வருத்தப்பட்டான்.

"பாரப்பா... நியாயமாச் சம்பாதிச்ச பணம்... கை விட்டுப் போனா... எப்படி இருக்கும்? உழைச்சுச் சம்பாதிக்கற வனுக்குத்தான் அது... புரியும்!" என்றார் கடுப்பாக.

தமிழழகன் அடி வாங்கியவன் போல் மௌனமாகி விட்டான்.

பெட்டியிலிருந்து ஆயிரம் ரூபாய்க் கட்டுக்களாக முப்பது லட்சத்தையும் கொடுத்து விட்டான்.

கேசவன் பேச முடியவில்லை யென்றாலும் சைகை செய்தார். குழறலாகப் பேச்சு வந்தாலும் வெளியாட்களிடம் பேசுவதில்லை. குடும்பத்து ஆட்களிடம் மட்டும் பேசுவார். மற்றவர்களிடம் எழுதிக் காட்டினார்.

"போனது போகட்டும்... விடு!" என்று எழுதிக் கொடுத்தார்.

சற்று நேரம் இருந்து பேசி விட்டுக் கிளம்பினான். கேசவன் ரங்கசாமியின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு நன்றி தெரிவித்தார்.

ரங்கசாமி இருக்கும் போது பிரேம்குமார் அடக்கமாய் நின்று கொள்வான். இப்போதும் அப்படியே நின்று கொண் டிருந்தான்.

ரங்கசாமி கேசவனைப் பார்த்துப் புன்னகைத்தார். "பாருங்க கேசவன்... இந்தக் காரியம் முடிச்சுக்குடுத்தா... எனக்கு ஒரு கைம்மாறு செய்யறதாச் சொல்லியிருக்கீங்க..." என்று நினைவு படுத்தினார்.

ஆமாம், என்பது போல் அவர் அழுத்தமாகத் தலையாட்டினார்.

"முதல்ல உங்களுக்கு உடம்பு நல்லாகணும்... தேறினவுடனே... கேட்பேன்... மறுக்கக் கூடாது," என்றார்.

அவர் மீண்டும் சம்மதத்தின் அறிகுறியாகத் தலையாட்டினார்.

"என்னம்மா... சந்திரிகா... நீதான்... சாட்சி..." என்று சிரித்தார்.

சந்திரிகா வியப்பாய்ப் பார்த்தபடி சரியெனத் தலையாட்டினாள்.

"நான் கிளம்பட்டுமா?" என்று கிளம்பினார். அந்த நேரம் ராம் பிரகாஷ் வந்தார்.

"போயிட்டானா... அந்தத் தமிழழகன் பய?" என்றபடி...

"நீ எங்கப்பா...வர்றே?" என்று ரங்கசாமி கேட்க...

"சும்மாயிருங்கண்ணா... நான் வந்திருந்தேன்னா... கட்டிப் புரண்டு சண்டையே போட்டிருப்பேன். அவ்வளவு கோபம்... அதனால்... அவன் கார் போறதைப் பார்த்துட்டுத்தான் வந்தேன்!" என்றார் வெகு எரிச்சலாக.

"நானே... ரெண்டு தட்டுத் தட்டியிருப்பேன். அந்தப் பழைய ரங்கசாமி இப்ப இல்லை... அதனால தப்பிச்சான். சரி விடு... காரியம்... பெருசா... வீரியம் பெருசா..." என்று நகர்ந்தார்.

பிரேம்குமார் கூட நகர்ந்தான். "நீ எங்கப்பா வரே... சந்தோஷமான விஷயம் நடந்திருக்கு... கொஞ்ச நேரம்... இருந்து... கேசவன்கிட்டே பேசிட்டு வா" என்று வாய் சொன்னாலும், அவர் கண் சந்திரிகாவைக் குறும்பாகப் பார்த்தது. சந்திரிகா முகம் சிவக்க அவசரமாக வேறு பக்கம் பார்த்தாள்.

கிளம்பியே விட்டார்.



கேசவனின் முகத்தில் பெருத்த நிம்மதி தெரிந்தது. பணத்தைப் பிரேம் குமார் கையில் கொடுத்து மகளிடம் கொடுத்து என்னென்ன செய்ய வேண்டுமென இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் எழுதிக் காட்டினார்.

"ஒரே வாரந்தான்டா... நீ எழுந்துருச்சு நிக்கறே!" என்றார் ராம்பிரகாஷ்.

சந்திரிகா... மகிழ்ச்சியாக அவர்களுக்கு ஒரு விருந்து தயாரித்தாள். அவர்கள் வீட்டுப் புல்வெளியில் டேபிள் போட்டு விருந்து பரிமாறினாள்.

"இங்க... பாரு... எழுதிக் காட்றதை... நிறுத்து... குழறலாவே பேசு..." என்றார் ராம்பிரகாஷ்.

நர்ஸை அழைத்து ஸ்பீச் தெரபிஸ்டைத் தன்னிடம் பேசுமாறு தகவல் கொடுக்கச் சொன்னார்.

அத்தையும் அன்றைக்குத்தான் பல நாட்களுக்குப் பிறகு மகிழ்வாகச் சிரித்துக் கொண்டிருந்தாள். உணவு முடிந்ததும் அப்பாவை அறைக்குக் கொண்டு போய் விட்டு விட்டு வந்தாள். அவர் போவதற்கு முன் பிரேம்குமாரின் கைகளைப் பிடித்துக் கொண்டு கண் கலங்க நன்றி சொன்னார். ராம் பிரகாஷ் அவரோடு அவர் அறைக்குச் சென்று பேசிக் கொண்டிருந்தார். அத்தையும் தம்பியிடம் பேசப் போனபோது... சந்திரிகாவுக்கும் பிரேமுக்கும் தனிமை கிட்டியது.

சந்திரிகா சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். பிரேம் எதிரில் அமர்ந்து அவளுக்குப் பரிமாறினான்.

"ரொம்ப... ரொம்ப... தாங்க்ஸ் பிரேம்..." என்று தழுதழுத்தாள்.

"தாங்க்ஸ்... தேவி... ஆனா... வீட்ல விருந்து குடுத்தே சமாளிக்கட்டே!" என்றான்.

"இல்லை, பிரேம்... வீட்லன்னாதான் அப்பாவையும் இன்வால்வ் பண்ண முடியும்... அதான்... உங்களுக்கும் ட்ரீட் தரேன்," என்றாள்

''ஓ.கே. ஓ.கே. புரிந்தது!'' என்று சிரித்தான்.

''தேவி... தமிழழகன் இப்போ ஒரு பெரிய அரசியல் புள்ளியோட பினாமி. அந்தத் தைரியத்துலதான் தெனாவெட்டான பேச்சு.. அப்பா அந்தப் புள்ளி கிட்டயே பேசினாரு... அப்பா, நீங்கள்ளாம்... அரசியலுக்குப் புதுசு... எங்க அரசியல் வேற மாதிரி... புரிஞ்சுக்கப்பா..ன்னாரு. அவ்வளவுதான். அலறியடிச்சுட்டு வந்துட்டான்!'' என்று சிரித்தான்.

அந்த மெர்க்குரி விளக்கின் ஒளியில் தங்கள் குடும்பத்துக்காக ஒரு பெரிய காரியம் சாதித்துக் கொடுத்து விட்டு வரிசைப் பற்கள் தெரியச் சிரிக்கிற அவனைப் பார்த்து... சந்திரிகா உலகம் மறந்தாள். கண்களால் பருகிக் கொண்டாள். அவள் பார்வை பார்த்து அவன் சிரிப்பதை நிறுத்தினான்.

''ஹேய்... தேவி!'' என்றான் கிறக்கமாக. அவள் மௌனமாய் அமர்ந்திருந்தாள்.

''அப்படிப்பார்க்காதே... அப்புறம்... நான் வேற ஆளாயிடு வேன்... என்னைத் தப்பு சொல்லாதே...'' என்றான் உள்ளடங் கிய குரலில்.

அவளும் சளைக்காமல், ''என்ன ஆவீங்களாம்?'' என்றாள் கை கழுவியபடியே... அவன் எழுந்து அவளை எட்டிப் பிடிக்க முயன்ற போது... அவள் நழுவினாள். எனினும் சற்று வெளிச்சம் குறைந்த அந்த மாடிப் படிகளின் ஓரத்தில் அவன் கைகளில் சிக்கிக் கொண்டாள்.

''மேடம்... ரொம்ப ஹேப்பியாய்... இருக்கீங்க! ஒரே ஒரு பரிசு கொடுங்க!'' என்று கெஞ்சினான்.

அவள் லேசாக அவன் கன்னத்தில் ஒரு முறை தன் மென்மையான இதழ்களைப் பதித்து விட்டு ஓடிவிட்டாள்.

அவள் போவதைப் புன் சிரிப்புடன் பார்த்துக் கொண்டு சற்று நின்ற பிரேம் அவன் அப்பாவின் அறை நோக்கிச் செல்லத் திரும்பியபோது... அத்தையும்... ராம்பிரகாஷும்...



அந்தத் திசையில் பார்த்தபடி திகைத்துப் போய் நின்று கொண் டிருந்தார்கள்....

பிரேம்குமார் முகம் சிவக்க நகர்ந்து விட்டான்.

## 16



''வில்லாதி வில்லன்... எங்கிட்டேயே மறைச் சுட்டானே...'' என்று முணுமுணுத்தார் ராம் பிரகாஷ்.

அத்தையம்மா திகைத்துப் போய் அவர் முகத்தைப் பார்த்தாள். ''ஏம்ப்பா... இது நடக்கற காரியமா? கேசவன் ஒத்துக்குவானா?'' என்று முணுமுணுத்தாள்.

''கேசவன்... ஒத்துக்கறதா... கோயமுத்தூர் நகரம் முழுக்க சல்லடை போட்டுச் சலிச்சாலும் பிரேம்குமார்... மாதிரிப் பையன் கிடைக்கணுமே... போங்கக்கா... நீங்க. எனக்கொரு பெண்ணிருந்தா... பிரேம்குமாருக்குத் தாராளமா... கொடுப்பேன்... நான் பேசறேன்... கேசவன்கிட்டே... கவலைப்படாதீங்க...'' என்று விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

அத்தையம்மா சந்திரிகாவின் அறைக்குப் போனாள். அவள் தலையணையில் முகம் பதித்துக் கொண்டு கண்களில் கனவோடு படுத்துக் கொண்டிருப்பதைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு,

''சந்திரி!'' என்று மென்மையான குரலில் அழைத்தாள்.

''அத்தை...'' என்று வாரிக் கருட்டிக் கொண்டு எழுந்தாள்.

''ஏம்மா... ரங்கசாமி... பரம்பரையா பெரிய குடும்பம் அவங்க இந்தக் கல்யாணத்துக்கு...'' என்று இழுத்தாள்.

அவள் ஆச்சரியமாக அத்தையின் முகம் பார்த்தாள்.

''எல்லாத்தையும் பார்த்தேன்!'' என்று கருக்கமாக அவள் கூறவும்... சந்திரிகா முகம் சிவக்கத் தலை குனிந்து கொண்டாள்.

''மாமாவுக்குத் தெரியும்... அவர் சம்மதிச்சுட்டாரு... மகன் சந்தோஷம்தான்... எங்களுக்குச் சந்தோஷம்னு... சொல்லிட்டாரு...'' என்றாள்.

''ஓ!'' என்றாள்.

சந்திரிகாவே தொடர்ந்தாள்.

''ஆனா... அப்பாவுக்குப் பூரணமா உடம்பு குணமாகாம... கல்யாணம் இல்லேன்னு சொல்லியிருக்கேன். ரெண்டு வருஷம்னாலும் சரி... காத்திருக்கேன்னு... பிரேம்... சொல்றாரு...'' என்றாள்.

''ஓ...'' என்றாள் மறுபடியும்.

சந்திரிகா அத்தையின் முகம் நிமிர்ந்து பார்த்தாள்.

''அத்தை... என்னைத்தப்பா... நினைக்காதீங்க. பிரேம்... என்னோட பாரத்தையெல்லாம் தன் தோள்ல வாங்கிக்கிட்டாரு... நம்ம பிரச்னைகளை யெல்லாம்... ஒவ்வொண்ணா தீர்த்துகிட்டு வர்றார்...'' என்று அவன் செய்த விசயங்களை யெல்லாம் சொன்னாள்.

அந்த விந்தியாவின் விவகாரத்தைச் சொன்ன போது அத்தை அதிர்ந்தே போனாள்.

''அடிப்பாவி... இப்படியெல்லாம் செய்வாங்களா... என்ன?'' என்று கொதித்தாள். பிறகு... சந்திரிகா தொடர்ந்தாள். எல்லாம் சொல்லி முடித்ததற்குப் பின்பு... ''இது எல்லாம் செய்யலைன்னாலும் அவரை எனக்குப் பிடிச்சிருக்கு!'' என்றாள்.

அத்தை அர்த்தத்துடன் புன்னகைத்தாள். ''பிரேம்... நல்ல பையன் தான் சந்திரிகா... உனக்குக் கிடைக்கிறது... அதிர்ஷ்டம்தான்... ஆனா...'' என்று இழுத்தாள்.

சந்திரிகா... 'அத்தை... நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னு... தெரியுது... எல்லை மீற மாட்டாரு!'' என்றாள் முகம்சிவக்க.



அத்தை பெருமூச்சு விட்டாள். அவள் தலையை அன்புடன் தடவிக் கொடுத்தாள். ''என்ன செய்யறது? கேசவன் நல்லா இருந்தா... இவ்வளவு நல்ல சம்பந்தம் கிடைச்சதுக்கு உடனே கல்யாணம் ஏற்பாடு செய்திருக்கலாம்,'' என்றாள்.

''அது பரவாயில்லை அத்தே... அப்பா உடம்பு தேறினாப் போதும்... மத்ததெல்லாம் அப்புறம் பார்க்கலாம்,'' என்றாள்.

அத்தை புரிந்து கொண்டாள். அவளுடைய உதவிகளுக்கும் பொறுமைக்கும்தான் தன் மருமகள் பரிசு கொடுத்திருக்கிறாள் என்று.

சற்றுப் பேசிக் கொண்டிருந்து விட்டு நகர்ந்தாள்.

ராம் பிரகாஷ் யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

பிரேம் குமாரின் மனம் சந்திரிகா பால் ஈர்க்கப்பட்டதைப் பற்றி அவர் தவறாக நினைக்கவில்லை. இந்த வயதுக்கு இயற்கைதான் என்றுதான் நினைத்தார். இந்தத் திருமணம் நிகழும்போது ஏற்படக் கூடிய சிக்கல்கள்தான் அவரை அச்சுறுத்தின.

கேசவன் இதுவரை தன் உலகமே சந்திரிகாதான் என்பது போல் இருந்தார். பத்துப் பேர் சுற்றிலும் அமர்ந்து மது அருந்தினால் கூடத் தொட மாட்டார். அவர்கள் செய்கிற கலாட்டாக்களைப் பார்த்துக் கிண்டல் செய்து சிரிப்பாரே ஒழிய பலவீனங்களுக்குள் சிக்கிக் கொள்ளமாட்டார்.

''என் மகள் என்னைத் தெய்வமா நினைக்கிறா. அவ முன்னாடி நான் தள்ளாடிக்கிட்டுப் போய் நின்னா... அந்தத் தாயில்லாக் குழந்தை எப்படி நொறுங்கிப் போகும்!'' என்று ராம்பிரகாஷிடம் சொல்லுவார்.

தொழிலில் நலிவு ஏற்பட்டபோதும், தமிழழகன் ஏமாற்றிய போதும் கூட உள்ளே வைத்து விழுங்கிக் கொண்டுதான் இருந்தாரே தவிர, தன்னுடைய சிறு கவலை கூடச் சந்திரிகாவுக்குத் தெரியக் கூடாது... என்பதில் உறுதியாக இருந்தார்.

அப்படிப் பொத்திப் பாதுகாத்த மகளை எப்படிப் பிரித்திருக்க முடியும்... அதற்காகச் சந்திரிகாவுக்கு இதைவிட நல்ல மாப்பிள்ளை கிடைக்குமா... என்ன? அவ்வளவு பெரிய குடும்பத்தைச் சேர்ந்த பையன் வீட்டு மாப்பிள்ளையாக வருவானா... என்ன? - என்று எண்ணிக் குழப்பிக் கொண்டார்.

வியாபாரப் பிரச்னைகளினால் ஏகிறிய இரத்த அழுத்தம் தான் ஸ்ட்ரோக்குக் காரணம் என்றால் சந்திரிகாவைப் பிரிகிற தனிமை அவரை மரணத்தின் வாயிலுக்கே இழுத்துச் சென்றாலும் சென்று விடும் என்ற அச்சம் ராம்பிரகாஷுக்குத் தோன்றியது.

மறுபடியும் யோசனையில் ஆழ்ந்தார்.

டெலிபோன் ஒலித்தது.

பிரேம்குமார் எடுத்தான். அந்தப்புறம் ராம்பிரகாஷ்.

"பயங்கரமான... ஆள்றா... டேய்... நீ வில்லாதி வில்லன்" என்று கலாட்டா செய்தார்.

"அங்கிள்!" என்று அவன் வெட்கத்துடன் சிரித்தான். "இல்லைங்க... அங்கிள்... சந்திரிகாவோட போல்ட்னெஸ்... பாசம்... நல்ல குணம்... எல்லாத்தையும் பாத்து..."

"மயங்கிப் போயிட்டியாக்கும்!"

"அங்கிள் நீங்க புரிஞ்சுக்க மாட்டீங்களா என்ன? லைலா ஆன்ட்டி பின்னாடியே சுத்தினீங்களாம்... அந்தக்காலத்துல..." என்றான் குறும்பாக.

"அப்படிப் போடு..." என்று சிரித்தார் ராம்பிரகாஷ். "அதென்னப்பா... அந்தக் காலத்துலங்கறே... இப்பதானப்பா... சமீப காலத்துல... ஒரு இருபது இருபத்திரண்டு வருசத்துக்கு முன்னாடி..." என்றார்.

"ஆமாமா... ரொம்ப... தொடர் மாதிரி... சமீபம்..." என்று அவனும் சிரித்தான்.



பிறகும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார். தன் மனதில் தோன்றிய கவலைகளை யெல்லாம் சொன்னார். பாரமிறங்கினாற் போல் உணர்ந்தார்.

ஆனால் இப்போது பிரேம்குமார் நெஞ்சில் பாரம் ஏறிக் கொண்டது.

ஆமாம்... இது பெரிய பிரச்னைதான். இதை எப்படித் தீர்ப்பது... என்ற குழப்பம்தான் மிஞ்சியது.

அப்போதுதான் மீண்டும் அந்த யோசனை தோன்றியது, வலுப்பட்டது.

அவன் யோசனையில் இருந்த போதே சற்று நேரத்தில் சந்திரிகா அழைத்தாள்.

"பிரேம்!" என்றாள்.

"சொல்லும்மா."

"பிரேம்... நம்ம விஷயம் அத்தைக்குத் தெரிஞ்சிருச்சு..." என்றாள்.

"ஆமாமா... அத்தைக்கு மட்டுமில்ல... ராம்பிரகாஷ் அங்கிளுக்கும்தான் தெரிஞ்சிருச்சு!" என்றான் பிரேம்குமார்.

"ஓ...! என்றாள். பின், "எல்லாம் உங்களால்தான்... வீட்டில் வச்சு... கலாட்டா செஞ்சா... என்ன அர்த்தம்?"

"என்னால இல்லை... தேவியாரே... உங்களாலதான்... இன்னைக்கு அப்படியொரு கருணைப் பார்வை வீசிட்டீங்க... நானும் மனுஷன்தானே..." என்றான் கிறக்கமான குரலில்.

அந்தப் பக்கம் அவள் ஒன்றும் பேசவில்லை. "தேவி..." என்றான் சற்று மௌனத்திற்குப் பிறகு... பிறகு, "தெரியட்டுமே... என்னைக்காவது ஒரு நாள் தெரியத்தானே போகுது. ராம்... அங்கிள்... அத்தையம்மாவைச் சமாளிச்சுக்கறேன்னுட்டாரு... ஆனா... அடுத்தபடியா உங்கப்பாவுக்குத் தெரியணும். அவருக்குத் தெரிஞ்சா... அவரு எப்படி எடுத்துக்குவாரோன்னுதான் கவலையா... இருக்கு!" என்றான்.

"இல்லை... அப்பா புரிஞ்சுக்குவாரு... உங்கப்பா மாதிரித் தான்... எனக்குப் பிடிச்சிருந்தா சரிம்பாரு... அப்புறம்... உங்களை மாதிரி கிடைக்கணுமே!" என்றாள்.

"எங்களை மாதிரின்னா... அது... எப்படி...?"

"உங்களை மாதிரின்னா... பர்ஸனாலிட்டி, படிப்பு... அறிவு, கூடவே கொஞ்சம் ஜொள்ளு..." என்று சிரித்தாள்.

"ஹேய்..." என்ற அவனும் கடகடவென்று சிரித்தான். பின் "மேடம்! ஜொள்ளு... பண்றதுன்னா என்னன்னு நாங்க... இன்னும் கோடி கூடக் காட்டலை. நீங்க தாங்க மாட்டீங்க!" என்று மறுபடியும் சிரித்தான்.

அந்த நேரத்தில் சந்திரிகாவுக்குப் பிரேமின் அம்மா சென்ற முறை சென்றிருந்த போது... அவன் செய்த சின்ன வயதுக் குறும்புகளை யெல்லாம் சொல்லிச் சிரித்தது நினைவுக்கு வந்தது. கலகலவெனச் சிரித்தாள்.

"தெரியும்... தெரியும்..." என்றாள்.

"என்ன... தெரியும்..." என்று அவன் குழம்பினான்.

"நீங்க செஞ்ச குறும்பெல்லாம் அத்தை அன்னைக்குச் சொன்னாங்க..." என்றாள்.

"ம்... ஹூம்... மாமியாரும், மருமகளும்... சேர்ந்து அப்படி என்னத்தைப் பேசுனீங்கன்னு அன்னைக்கே நெனைச்சேன்... இப்பப் புரியுது..." என்று சிரித்தான் பிரேம். பிறகு. "ஹேய்! நீ கெட்டிக்காரிதான். அம்மாவுக்கு உன்னை ரொம்பப் பிடிச்சுப் போச்சு. தெரியுமா..." என்றான் ஆழ்ந்த குரலில்.

"தேவி... நானே... உன்னைக் கூப்பிடணும்னு இருந்தேன்... ஒரு முக்கியமான விஷயமா உங்கிட்டே பேசணும்னு இருந்தேன்..."

"சொல்லுங்க," என்றாள் சீரியஸாக.



சந்திரிகா எப்போதும் இப்படித்தான். அவன் விளையாட்டுப் பேச்சுப் பேசும்போது அவளும் வாயாடுவாள். ஆனால், அவன் சீரியஸ் மேட்டருக்குத் தாவினால் அவளும் சட்டென்று மாறி விடுவாள்.

"தேவி... அங்கிள் ரொம்பக் கவலைப்படறார். மாமாவுக்கு உடம்பு பூரணமாக் குணமானாலும் உன்னை விட்டுட்டு இருக்கமாட்டாருங்கறாரு. அது பிரச்னையில்லை. இங்கயும், அங்கயும் மாத்தி மாத்தி ஸ்டே பண்ணிக்கலாம்... ஆனா இப்ப.... உனக்கும் கடையைப் பார்த்துக்க வேண்டியிருக்கு... பிராப்பர்ட்டீஸ் மெயின்டெனன்ஸ்க்கு நேரம் ஒதுக்க வேண்டியிருக்கு..." என்றவன் அவள் மௌனம் பார்த்து -

"என்ன கேக்கறியா?" என்றான்.

"கேக்கறேன்... சொல்லுங்க," என்றாள்.

"இப்ப... இந்த உடம்பு தேர்ற நேரத்தில் அவருக்குத் தனிமை உணர்வு வந்தரக் கூடாதுங்கறாரு..." என்றான்.

"என்ன செய்யறது... பிரேம்... எனக்குப் புரியலையே..." என்றாள்.

"அதான்... அதான்... நான் ஒரு யோசனை வச்சிருக்கேன்..." என்றான்.

"சொல்லுங்க..." என்றாள்.

"ஆனா... நீ எப்படி எடுத்துக்குவையோ... அப்படின்னு யோசனையா யிருக்கு..." என்றான்.

அந்தப் பக்கம் அவள் தவித்துப் போனாள். "என்ன... பிரேம்... இப்படிச் சொல்றீங்க... நீங்க எது செய்தாலும் எங்க நன்மைக்காகத்தான் இருக்கும்னு எனக்கு தெரியாதா?" என்றாள் நெகிழ்ந்த குரலில்.

அவனும் அந்தப் பக்கம் நெகிழ்ந்து விட்டான். 'தாங்க்ஸ் டார்லிங்... தாங்க்யூ... வெரிமச்!"

"ஃபாரின்ல எல்லாம் பெரிய வீடுகள்ல, நிறைய கவனிக்க வேண்டியிருந்துச்சுன்னா... ஹவுஸ் கீப்பர்ன்னு ஒருத்தரை அப்பாயின்ட் செய்துக்குவாங்க... அது மாதிரி... யாராவது ஒருத்தரை... அப்பாவுக்கு பி.ஏ.ன்னு போட்டா என்னன்னு தோணிச்சு..." என்றான்.

அந்த யோசனை அவளுக்கு வெகுவாகப் பிடித்துப் போனது. "செய்யலாம்... பிரேம்," என்றாள் உற்சாகமாக.

"அடுத்து நான் சொல்றதையும் கவனமாகக் கேட்டுக்க... மாமாவுக்கு இப்ப ரொம்பத் தேவை... கவனிப்பு, அதுவும்... ஹெல்ப்புக்கு லேடீஸ் யாராவது... இருந்தா நல்லாயிருக்குமில்ல!" என்றான்.

"ஆமா..." என்றாள் யோசனையாக.

"அப்படியெல்லாம்... இங்க எந்த லேடி வருவாங்க... அதுவும் வீட்டோட தங்கறதுன்னா..." என்றாள்.

"அதான்... நான் என்ன நெனக்கறேன்னா... சாருமதி ஆன்டியைக் கேட்டா என்ன? ராம் அங்கிள் சொல்றதையெல்லாம் கேட்டா... அவங்களும்... லோன்லியாத்தான் ஃபீல் பண்றாங்க... ரெண்டு வருஷம்... மெடிகல் காலேஜ்ல படிச்சிருக்காங்க வேற... இதை ஒரு ஹெல்ப்பாகச் செய்யங்கன்னு கேட்கலாமா?" என்றான்.

"ஒத்துக்குவாங்களா?"

"நீ சம்மதம் சொன்னா... நான் பேசிப் பார்க்கறேன்," என்றான்.

"சரிங்க... பிரேம்," என்றாள்.

"அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டுச் சிரித்தான் பிரேம்... "எங்க நீ வேண்டாம்னு சொல்லிடுவியோன்னு நெனச்சேன்."

"நீங்க சொல்லி மறுக்க முடியுமா?" என்று அவளும் சிரித்தாள்.



"நாங்க சொன்னா மறுக்க மாட்டீங்க... ஆனா... நாங்க கேட்டா மறுப்பீங்க!" என்றான்.

"என்ன மறுத்தேனாம்?" என்றாள் பொய்க் கோபத்துடன்.

"ஐயய்யோ, கோபிச்சுக்காதீங்கம்மா... நீங்க குடுக்கத் தயாரா இருந்தா... கேக்கறதுக்கு... நெறைய இருக்கு..."

"என்ன.... பிரேம், நீங்க?" என்றாள் வெட்கத்துடன்.

"என்ன... என்ன பிரேம்.. நீ என்ன நினைச்சே.. நான் நீ பாட்டுப் பாடிக் கேட்கணும். கதை சொல்லிக் கேட்கணும். உன்னைப் பத்தி உங்கப்பாவைப் பத்தி எல்லாம் உன்னை நிறையப் பேசவிட்டுக் கேட்கணும்ன்னு நெனைச்சேன். நீ எதை நினைச்சே?"

"ஐயோ! போதுமே.." என்ற அவள் சிரிக்கவும்.

"இல்லையே! போதாதே! இன்னும் கொஞ்சம் பேசணுமே.." என்றான் பிரேம். பிறகு, "சரி... தேவி! நீ ரெஸ்ட் எடு... இன்னைக்கு இந்தத் தமிழழகன் மேட்டரே படுத்தி எடுத்துருச்சி... குட்நைட்!" என்று ஆஃப் செய்தான்.

சந்திரிகா மகிழ்ச்சியாய் உறங்கிவிட்டாள். ஆனால், பிரேம் வெகு நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

## 17



பிரேமும், ராம்பிரகாஷும் திகைத்துப் போனார்கள். பேச்சை எடுத்தவுடனே சாருமதி ஒரேயடியாக மறுத்து விட்டார்.

"அண்ணா, நீங்க என்ன நினைச்சீங்க? இது இந்தியா, அமெரிக்கா இல்லை. அப்படி எல்லாம் ஒரு பெண் போய் இன்னொரு வீட்டில் தங்க முடியுமா என்ன? என்னண்ணா, இப்படிக் கேட்கறீங்க?" என்று வெகுவாக மறுத்தார்.

"உலகத்தைப் பத்தி எதுக்கும்மா ரொம்ப யோசிக்கறே? உன்னோட பிரச்சினைகளுக்கு எத்தனை பேர் கை

குடுத்தாங்க. கஷ்டம் வந்தவுடனே எல்லாரும் விலகித்தான் போனாங்க. ஏன், நான் வந்து போறதையே ஒரு விதமாய்ப் பேசினாங்க. தூரத்து உறவு முறைக்கும் அண்ணன்தாங் கறதுக்கப்புறம்தான் பேச்சை நிறுத்தினாங்க!'' என்றார் ராம்பிரகாஷ்.

சாருமதி அதை யெல்லாம் ஏற்றுக் கொண்டார். ஆனால், அவர்கள் வேண்டுகோளை மறுத்தார். ''அண்ணா, உங் களுக்குத் தெரியும். மூணு சிஸ்டர்ஸ் வீட்டில்... அவங்க பெரியவங்க எப்படி எடுத்துக்குவாங்களோ... வேண்டா மண்ணா...'' என்றார்.

அப்போதுதான் ராம்பிரகாஷ் ஒரு வெடியைப் போட்டார். ''சாருமதி... இதுவரை நான் இந்த மாதிரி யெல்லாம் பேசினதில்லை. இப்ப பேச வேண்டியிருக்கு. எப்பவாவது உன் சிஸ்டர்ஸ் மூணு பேர்லயும் யாராவது ஒருத்தராவது தீபாவளி, பண்டிகைன்னு எங்க வீட்டுக்கு வாங்கன்னு கூப்பிட்டிருக்காங்களா. உன்கிட்ட வாங்கறதுலதான இருக் காங்களே ஒழிய உனக்கு ஏதாவது செஞ்சிருக்காங்களா, யோசிச்சுப் பாரு.'' என்றார்.

சாருமதி திகைத்துப் போனார். ஆமாம். இதுவரை யாரும் தன்னிடம் அப்படிக் கேட்டதில்லைதான். அவங்களுக்கு அப்படித் தோணலை, பாவம் என்று சமாதானம் செய்து கொண்டார்.

''இருக்கட்டும்ண்ணா. அவங்களுக்குத் தெரிந்தது அவ் வளவுதான். அவங்க என்னைத் தாய், தந்தை மாதிரி நெனைச்சுக்கறாங்க. தே டேக் மீ ஃபர் க்ரான்டெட்...'' என்று மென்மையாகச் சிரித்தார்.

''சரிம்மா... ஆனா சந்திரிகா எவ்வளவு உனக்காக உருகிப் போறா தெரியுமா? அது மட்டுமில்லை. தன்னோட அப்பா தனக்காகச் செஞ்ச தியாகங்களை அந்தப் பொண்ணு புரிஞ்சுக்கற மாதிரி, ஏன் உன் சிஸ்டர்ஸ் புரிஞ்சுக்கலை?'' என்றார்.



சாருமதி மறுக்க முடியாமல் அமைதியாய் அமர்ந்திருந்தார்.

''பேருக்குத்தாம்மா... பி.ஏ. ஆனா சாரு ஆன்ட்டி வந்தா ஒரு ஃபிரண்ட், ஃபிலாசஃபர், கைடு எனக்குக் கிடைப்பாங்க. அவங்களுக்கும் பொழுது போகும்! அப்படீங்கறா.''

''என்ன இருந்தாலும்?''

''ஒண்ணும் கவலைப்பட வேண்டாம்மா. உனக்குத் தனியா உள்ளேயே கெஸ்ட் ஹவுஸ் குடுத்துடுவாங்க.'' என்றார்.

சாருமதி மீண்டும் யோசித்தார்.

பிறகு தீர்மானமாக, ''வேண்டாம்ண்ணா. அது சரி வராது!'' என்று மறுத்து விட்டார்.

ராம்பிரகாஷும், பிரேமும் பெருத்த ஏமாற்றத்துக்கு உள்ளானார்கள்.

சந்திரிகா கூடத்தான்.

அந்த வாரமெல்லாம் சாருமதி யோசனையிலேயே இருந்தார்.

இதுவரை சாருமதி தன் தங்கைகள் தங்கைகள் என்று அவர்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பார். தான் ஒரு தாயின் இடத்தில் இருப்பதாகப் பாவித்துக் கொண்டிருந் தார். வேறு நினைத்ததே யில்லை. அவ்வளவு ஏன்? ஒரு சமயம் கருப்பையில் ஏதோ சின்னப் பிரச்சினை என்று வந்தபோது எடுத்து விடுங்கள் என்று ஆபரேஷனே செய்து கொண்டு விட்டார்.

ஆனால் ராம்பிரகாஷ் எழுப்பிய கேள்வி அவரையும் யோசிக்க வைத்தது.

உண்மைதான், மூன்று தங்கைகள். சவிதா, கவிதா, சந்யா மூவரும் ஒரு நாளும் பண்டிகைகளுக்கு அழைத்ததில்லை. அது மட்டுமில்லை. மூன்று பேருமே கணவன்மார் சாருமதியின் மேல் அக்கறை காட்டினால் லேசாய்க் கடுப்

பாகிறார்கள் என்று சமீப காலமாகப் புரிந்திருந்தது. அதனால் அவரே ஒதுங்கித்தான் இருந்தார்.

விடுமுறை நாட்களில் வருவார்கள். வேலை சரியாக இருக்கும். குழந்தைகளை அவ்வப்போது கொண்டு வந்து விட்டுப் போவார்கள். சின்னவள் சத்யாவுக்குக் கல்யாணமாகி ஒரு வருடம்தான் ஆகி இருந்தது. இனிமேல்தான் தலைப் பொங்கல் சீர் செய்ய வேண்டும்.

இப்படியேதான் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. தன்னைப் பற்றி நினைக்க நேரமே இருந்ததில்லை.

இன்றைக்கு ராம்பிரகாஷ் பற்ற வைத்துவிட்டுப் போன ஒரு பொறி அவளுக்குள் நெருப்பாய்ப் பற்றிக் கொண்டது.

பார்க்கலாம். பொங்கலுக்கு ஒரே வாரந்தான் இருக்கிறது. இந்த முறை பரிசோதித்து விட வேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டார்.

அடுத்த நாள்,

கவிதாவும், சவிதாவும் குழந்தைகளுடன் காலையிலேயே வந்து விட்டார்கள்.

வீடு கலகலப்பாக இருந்தது. பிற்பகல் ஹாலில் விச்ராந்தி யாக ஆளுக்கொரு பக்கம் பாயில் படுத்துக் கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள்.

சவிதா, "ஏங்கா.. சத்யாவுக்குப் பொங்கலுக்கு என்ன செய்யப் போறே?" என்றாள்.

"இன்னும் முடிவாகலைடி. அவளுக்கு நல்லாச் செய் யணும். லேட் மேரேஜ் வேற. இருபத்தேழு வயசே பொண்ணுக்குன்னு பேசிச்சாங்க. நான் சீரெல்லாம் எந்தக் குறையுமில்லாம செய்வேன்னு சொன்னதுக்கப்புறம்தான் ஒத்துக்கிட்டாங்க!" என்றார்.

சவிதாவும், கவிதாவும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.



கவிதா, "ஆமாமா.. ஆனா... என்ன செய்யறதா முடிவு செஞ்சிருக்கே?" என்றாள்.

"ஐயாயிரம் ரூபாய்க்குக் குறையாம அவங்க மாமியார் பட்டுப் புடவை எதிர்பார்க்கறாங்க. அது போக மாப்பிள் ளைக்கு டிரஸ்!" என்றார்.

"ஓ..." என்றார்கள்.

சற்று நேரம் அமைதி நிலவியது.

கவிதா மெதுவாக, "அக்கா.. அப்படின்னா.. எங்களுக்கும் ஏதாவது துணி மணி எடுத்துக் குடு. எங்களோட தலைப் பொங்கலுக்கு சிம்பிளாத்தானே செஞ்சே!" என்றாள்.

"அதுக்கென்ன, செஞ்சாப் போச்சு!" என்று சாருமதி சொல்வார் என்று எதிர்பார்த்து இருவரும் காத்திருக்க, சாருமதி ஒரு நீண்ட மௌனம் சாதித்தார். பிறகு,

"இப்பதானேம்மா.. சத்யா கல்யாணத்தப்ப உங்க ரெண்டு பேருக்கும் பட்டுப் புடவை எடுத்துக் கொடுத்தேன். அதையே சொல்லிச் சமாளிங்க!" என்றார் அழுத்தமாக.

இருவரின் முகமும் விழுந்து விட்டது. சவிதா மெதுவாக, "அக்கா.. உனக்கும் நல்ல பென்ஷன் வருது. வாடகை வேற வருது. செஞ்சா.. என்னக்கா?" என்றாள்.

"உண்மைதாம்மா. ஆனா.. எனக்கே.. நாளைக்கு முடி யலைன்னா, செலவுக்குப் பணம் வேணுமில்லை. நீங்க குடும்பம் குழந்தைங்கன்னு பிஸியாய் இருக்கீங்க. என்னைப் பார்த்துக்க யார் இருக்காங்க?" என்றார்.

"ஏங்கா.. நாங்க இருக்கோமில்லை. பார்த்துக்க மாட் டோமா?" என்று இருவரில் யாராவது ஒருவர் சொல்வார்கள் என்று ஆசையாய் எதிர்பார்த்தார்.

இருவரும் சற்று நேரம் மௌனம் சாதித்தார்கள்.

"ஆமாம்... அதுவும் சரிதான்..." என்றாள் கவிதா.

சாருமதியின் மனத்தில் வலி ஏற்பட்டது. இது நாள்வரை இப்படியெல்லாம் தான் ஏன் யோசிக்கவில்லை. இவர்களைப் புரிந்து கொள்ள வில்லை என்று வருந்திக் கொண்டார். ஆனாலும் மனது கேட்கவில்லை.

"பார்க்கறேம்மா. என்ன செய்ய முடியுமோ.. செய்ய றேன்." என்றார்.

மாலையில் சத்யா வந்தாள். எல்லாருமாகக் கடைக்குப் போனார்கள். துணிமணிகள் தேர்ந்தெடுத்தார்கள். மற்ற இருவருக்கும் ஆயிரம் ரூபாய் விலையில் எடுத்துக் கொடுத்தும் சமாதானம் ஆகாமல் இருந்தார்கள்.

எப்போதும் வாரியிறைக்கிற சாருமதியக்கா இன்றைக்கு ஏன் இப்படி யோசிக்கிறாள் என்று அவர்களுக்குப் புரிய வில்லை.

ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டே, சாருமதி சிரித்தபடி, "இந்தத் தடவை உங்க யாராவது ஒருத்தர் வீட்டுக்குப் பொங்கலுக்கு வரலாம்னு இருக்கேன்!" என்றார்.

உடனே சத்யா பதறிப் போய், "ஐயோ, அக்கா.. இவர் ரெண்டு நாளைக்கு முன்னமே உங்க வீட்டுக்குப் போயிரலாம்னு சொல்லிக்கிட்டிருக்காரு. நீ பாட்டுக்குக் கிளம்பிராதே!" என்றாள்.

சாருமதி புன்னகைத்தார். "கவலைப் படாதே.. சும்மா சொன்னேன்." என்றார்.

வீட்டுக்கு வந்ததற்குப் பிறகும் சற்று நேரம் இருந்தார்கள். "நீங்க பேசிக்கிட்டிருங்க.. சத்யாவோட பிளவுஸ் தைக்கக் குடுத்துட்டு வரேன்." என்று பக்கத்தில் இருந்த கடைக்குப் போனார்.

திரும்பி வந்தபோது தங்கைகள் பேசிக் கொள்வது காதிலே விழுந்தது. நின்றார்.



கவிதா.. "என்னடி, சவிதா.. அக்கா என்ன நம்ம வீட்டுக்குப் பொங்கலுக்கு வரேங்கறா.. மாமன், மச்சான் வீட்டுக்கு அப்படிப் போகக் கூடாதுன்னு தெரிய வேண்டாம்?" என்றாள்.

"அது மட்டுமில்லை கவிதா.. எங்க மாமியார், உங்கக்கா, ராசியில்லாதவ, கல்யாணம், குழந்தைன்னு எந்த ராசியும் வாய்க்காதவ. இங்க கூட்டிக்கிட்டு வந்து உழப்பற வேலையெல்லாம் வேண்டாம்னு முதல்லேயே கண்டிஷன் போட்டாச்சு!" என்றாள்.

"ஏங்க்கா.. இப்படிப் பேசறீங்க. அக்காவுக்குத்தான் நம்மளை விட்டா யார் இருக்கா?" என்றாள் சத்யா.

"சும்மாயிரு.. உனக்கு இன்னைக்குப் பட்டுப் புடவை கிடைச்ச ஜோர்ல பேசறே. அதுவுமில்லாம உங்க மாமியார் மாமனார் நல்ல டைப்!"

"என்னத்தை.. நல்ல டைப்! வீடெல்லாம் யார் பேர்ல இருக்கு. உங்கக்காவுக்கப்புறம் உங்களுக்குத்தானேன்னு ஏகப்பட்ட கேள்வி." என்றாள் சத்யா சலிப்பாக.

"நீ என்ன சொன்னே?" என்றாள் கவிதா.

"நான் என்ன சொன்னேன்? 'எங்கக்கா.. எங்களுக்காக எவ்வளவோ கஷ்டப்பட்டிருக்கா. அவ இருக்கறவரைக்கும் இந்தப் பேச்சே கிடையாது. அதை விடப் பெரிய பாவம் வேற இல்லைன்னு..!' சொன்னேன். ஆனா.. நீங்க சொல்றது நெஜம்தான். அக்காவைக் கூப்பிட்டுக்கிட்டுப் போயெல்லாம் வச்சுக்க முடியாது. அக்கா பாவம்தான்!" என்று பெருமூச்சு விட்டாள்.

"அதுக்கென்ன செய்யறது? அவ வாங்கிட்டு வந்த வரம் அப்படி. வயசானாப் பார்க்கலாம். ஏதாவது ஒரு முதியோர் இல்லத்துல விட்டுற வேண்டியதுதான்!" என்றாள் சவிதா.

சாருமதி கசப்பாகப் புன்னகைத்துக் கொண்டார்.

களைத்தபடி உள்ளே நுழைந்தார். உடனே கவிதாவும், சவிதாவும் முகத்தை மென்மையாக மாற்றிக் கொண்டதைப் பார்த்து உள்ளுக்குள் புன்னகைத்துக் கொண்டார்.

தங்கைகள் போன பிறகு வெகு நேரம் யோசித்தார்.

பிரேம்குமாருக்குச் சந்திரிகாவின் மேல் நாட்டம் விழுந்திருப்பதையும் சந்திரிகா வியாபாரத்தைத் தூக்கி நிறுத்திருப்பதையும் அப்பாவுக்கு சரியானவுடன்தான் கல்யாணம் என்று சந்திரிகா சொல்லியிருப்பதையும் ராம்பிரகாஷ் அவளிடம் சொல்லியிருந்தார்.

கேசவனை எண்ணியபோது அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. 'பரவாயில்லை! கொடுத்து வைத்தவர். இப்படி ஒரு மகள் கிடைப்பதற்கு!'' என்று எண்ணிக் கொண்டார்.

மனதில் தன்னை வயதான காலத்தில் முதியோர் இல்லத்திற்கு அனுப்ப உத்தேசித்திருக்கிற தங்கைகளின் தீர்மானம் ஓடிக்கொண்டே இருந்தது.

சத்யா மாப்பிள்ளையுடன் வந்து தலைப் பொங்கலுக்குத் தங்கிவிட்டுப் போனதற்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்தார்.

போனை எடுத்தார். ராம்பிரகாஷிடம், "அண்ணா, சந்திரிகாகிட்டே நான் அந்த வேலைக்கு வரேன்னு சொல்லுங்க." என்றார்.

"நிஜம்மாவாம்மா..." என்றார் ராம்பிரகாஷ்.

செய்தி கேட்டு, "அக்கா.. வேலைக்கா போறே?" என்று போன் செய்த சவிதாவிடம், "ஆமாம்மா.. உங்களுக்குச் சீர் செனத்திபெல்லாம் நிறையத் தேவை யிருக்கு. பணம் வேணுமே. அதான்.." என்றார்.

சவிதா வாயடைத்துப் போனாள்.



கவிதா கேட்டபோது, "ஆமாம்மா.. இப்ப சரி.. நல்ல ரத்தம் ஓடுது. வயசான காலத்துல உங்க வீடுகள்ல தங்க முடியாது. எங்கயாவது முதியோர் இல்லத்துக்குத்தான் போகணும். அதுக்கு இப்ப இருந்தே பணம் சேர்த்தாத்தானே, ஏதோ.. நல்ல இடமாப் போய்த் தங்க முடியும்..." என்றார்.

கவிதாவும் வாயடைத்துப் போனாள்.

18



சாருமதி வந்ததற்குப் பிறகு வீட்டில் நிறைய மாற்றம் தெரிந்தது.

வீட்டில் வேலைக்காரர்கள் அத்தையைப் பெரியம்மா என்றும், சந்திரிகாவைச் சின்னம்மா என்றும் சாருமதியை பி.ஏ.மேடம் என்றும் அழைத்தார்கள்.

பெருத்த தயக்கத்துடன் சாருமதி அந்த வீட்டிற்கு வந்தார். ஆனால், மிகக் கௌரவமாக நடத்தப்பட்டார். அத்தையும் அவரிடம் அன்பாக இருந்தாள்.

சொத்து விவகாரங்கள், நிலம் தொடர்பான பட்டு வாடாக்கள், வேலையாட்கள், கடையாட்கள் சம்பளம் என்று பொறுப்புக்களைப் பிரித்துக் கொடுத்து விட்டார்கள்.

அப்பாவின் அறைக்கு அருகிலேயே பி.ஏ.வுக்கு ஒரு சிறு அலுவலக அறை ஒதுக்கி விட்டார்கள். சாருமதியும் வங்கியில் வேலை செய்தவர் என்பதால் சிறப்பாகவே கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டார்.

அத்தைக்கும் துணையாய் இருந்தார். சில நேரங்களில் நேரம் கிடைத்தால் சமையல்கூடச் செய்தார். மற்றவர்களும் அவரைக் குடும்பத்தில் ஒருவராகவே நடத்தினார்கள். அந்த அளவுக்குச் சந்திரிகா வேலைக்காரர்களுக்கு அறிவுரை கொடுத்திருந்தாள்.

கேசவனுக்கும் பெரிதும் உதவியாய் இருந்தார். அவருடைய தேவைகளைப் புரிந்து கொண்டு நர்ஸ்களை மேற்

பார்வை செய்வது, என்று அவருக்குத் தன் நட்பைக் கொடுத்தார்.

நாளாக ஆகச் சாருமதியின் மேல் கேசவனுக்குப் பெரும் மரியாதை தோன்றியது. உள்ளூர அனுதாபமும் இருந்தது. எவ்வளவு அருமையான பெண்! தனக்கென்று ஒரு வாழ்க்கை கிடைக்காமல் போனவர். அதிலும் அவரது தியாகத்தைச் சற்றும் உணராத தங்கைகள் என்று ராம்பிரகாஷ் மூலம் கேள்விப்பட்டிருந்தார். எனினும் அவர் அனுதாபத்தை விரும்புவதில்லை என்றும் அறிந்திருந்தார்.

ஒருநாள் சாருமதி, 'அற்புதப் பெண்' என்று ஒரு புத்தகம் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தார். கண் தெரியாத, வாய் பேசாத, காது கேளாத, ஹெலன்கெல்லர் எப்படித் தன் குறைகளையெல்லாம் ஜெயித்து உலகை வலம் வந்தார் என்ற வரலாற்றைக் கூறும் புத்தகம். உடம்பு முழுவதும் அசைக்க முடியாமல் வெறும் கண்ணை மட்டுமே அசைக்க முடிந்த போதும், அதை வைத்துக் கொண்டு ஒரு முறை சிமிட்டினால் ஏ, என்றும் இரண்டு முறை சிமிட்டினால் பி என்றும் ஒரு புத்தகத்தையே எழுதிய.. சாதனையாளரைப் பற்றிச் சொன்னார். இதை யெல்லாம் கேட்கக் கேட்கக் கேசவன் தெம்பாகி எழுந்தார்.

பேச ஆரம்பித்து விட்டார், ஒரே மாதத்தில். இடது பக்கம் அலுமினிய ஊன்றுகோலைப் பிடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்திருந்தார்.

சாருமதியின் தங்கைகளும் வந்து அவ்வப்போது தங்கிப் போனார்கள். அத்தையும், சந்திரிகாவும் எதையும் காட்டிக் கொள்ளாமல் நன்கு உபசரிப்பார்கள். சாருமதி மட்டும் என்றால் அவர்கள் வீட்டிலேயே சாப்பிட்டுக் கொள்வார்.

தங்கைகள் வந்தால் குவார்ட்டர்ஸில் சமைத்துக் கொள் வார்கள். அவர்கள் கிளம்பும்போது தோட்டத்துக் காய்கறி, பழம் என்று காரில் போட்டு அனுப்புவார்கள். அதனால், அவர்களுக்கும் குஷிதான்.

கவிதா, சவிதாவின் மாப்பிள்ளைமார்களும் வந்து பார்த்து விட்டுப் போவார்கள். கேசவனுக்கு என்னமோ சாருமதியின்



தங்கைகளை விட, அவர்கள் மேல் என்று தோன்றியது. சாருமதியின் தியாகத்தை அவர்கள் புரிந்து கொள்கிறார்கள் என்று தோன்றியது.

சந்திரிகா இரவு வந்ததும், சாருமதியிடம் கலகலவென்று பேசிக் கொள்வது கேசவனுக்கு நிறைவாகவே இருந்தது.

பிரேம்குமார் இந்த மாதம் அமெரிக்காவில் இருந்தான். சந்திரிகா ஒரு நாள், "பேசாமல் இங்கேயே ஒரு பேராசிரியர் வேலை பார்த்து விடலாம்," என்றாள்.

அவன் சிரித்தான்.

"தேவி.. இங்கு பத்து வருஷம் சம்பாதிப்பதை! விசிட்டிங் புரொஃபசர் என்று முறையில் ஒரே வருஷத்தில் சம்பாதித் துடுவேன், தெரியுமா?" என்றான். "அது மட்டுமில்லை. "உலக அளவில் நம்ம பொருளாதார அறிவுக்கு இருக்கிற மதிப்பே தனிதான் தெரியுமா?" என்று டம்பம் வேறு அடித்தான்.

"டம்பாச்சாரி..." என்று சந்திரிகா சிரித்தாள்.

ஒரு நாள் சந்திரிகா, "பிரேம்.. நம்ம தமிழ் இலக்கியங்கள்ல பொருளாதாரம் பத்தி நிறையச் சொல்லியிருக்காங்க, தெரியுமா?" என்றாள்.

"ம்.. ஹூம்?" என்று சுவாரசியமானான்.

"ஆமா.. உதாரணமாகப் பாருங்களேன். ஆடம்ஸ்மித்தான் ஃபாதர் ஆஃப் எக்கனாமிக்ஸ்ங்கறாங்க... ஆனா, இங்க தாத்தா, கிராண்ட் ஃபாதர்ல்லாம் இருக்காங்க, தெரியுமா?" என்றாள்.

சிரித்துவிட்டு, "ரியலி?" என்றான்.

"ஆமாம் பிரேம். பாருங்க ஒரே ஒரு குறள்.

'ஈட்டலும் இயற்றலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.'

"இந்தக் குறள்ல உங்க ப்ரொடக்ஷன் டிஸ்டிரிப்யூஷன் எக்ஸ்சேஞ்ச் எல்லாம் வருதா.. இல்லையா?" என்றாள்.

அவன் தீவிர யோசனையில் ஆழ்ந்தான். அதற்குப் பிறகு ஒரு புத்தகம் உருவாவதற்குச் சந்திரிகாவும் சாருமதியும் பெருமளவில் உதவி செய்தார்கள். உலக அளவில் புகழ் பெற்றது அந்தப் புத்தகம்.

சந்திரிகாவுக்கு இப்போதெல்லாம் டிசைன்ஸ் வரைவதற்கு நிறைய நேரம் கிடைத்தது. சந்திரிகாஸ் டிசைன்ஸ் மேலும் மேலும் புகழடைந்து கொண்டு வந்தது. சாருமதி அந்தக் குடும்பத்தில் நிலவுகிற அன்பையும் ஒருவருக்கொருவர் காட்டிக் கொள்கிற ஆதரவையும் பார்த்து உள்ளூர நிறைவாய் இருந்தார்.

ஒரு நாள் சந்திரிகா ரகசியம் பேசுவது போல், "சாரு ஆன்ட்டி! அப்பாவுக்கு நாளைக்குப் பிறந்த நாள். இன்னைக்கு நைட் அவர் தூங்கினதுக்கப்புறம் நமக்கு வேலையிருக்கு" என்றாள்.

கேசவனுக்குத் தன் பிறந்த நாள் நினைவே இருக்கவில்லை. ஆனால் அவர் தூங்கியதற்குப் பின் சின்னதாக ஒரு பேப்பர், ஜிகினா எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு 'ஹேப்பி பர்த்டே' என்று ஜொலித்தது. அவர் கண் விழித்தவுடனேயே பார்க்கிற மாதிரி எதிர் சுவரில் கட்டினார்கள்.

இடது பக்கம் விழித்தால் அந்தப் பக்கம் ஒரு வாழ்த்து. வலது பக்கம் விழித்தால் அந்தப் பக்கம் ஒரு பரிசு என்று பூனைப் பாதம் வைத்து நடந்து சந்திரிகா, அத்தை, சாருமதி என்று ஏற்பாடுகள் செய்தது ரொம்ப த்ரில்லிங்காக இருந்தது.

சாருமதி அன்றைக்கு அதிகாலையிலேயே வந்து விட்டார்.

ஏழு மணிக்கு, "அப்பா... குட்மார்னிங்! ஹாப்பி பர்த் டே..." என்று குரல் கொடுத்து விட்டு ஒதுங்க, கண் விழித்த அப்பா சுற்றிலும் இருந்த ஏற்பாடுகளைப் பார்த்து நெகிழ்ந்து போனார்.



"தாங்க்ஸ்... சந்திரிம்மா..!" என்று நெற்றியில் முத்தம் வைத்தார். சாருமதிகூட ஒரு புத்தகம் பரிசு கொடுத்தார். மாலையில் விருந்து அமர்க்களப்பட்டது.

அதைவிடச் சந்திரிகாவின் பர்த்டேக்குக் கேசவன், சாருமதி, அத்தை என்று சேர்ந்து கொண்டு அலங்காரம் செய்து அமர்க்களப்படுத்தியிருந்தார்கள்.

பிரேம்குமார் இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே டிரிப்பை முடித்துக் கொண்டு வந்திருந்தான்.

அன்றைக்கு நல்ல விருந்து அவர்கள் வீட்டில். மாலையில் சந்திரிகாவுக்கு விருந்து கொடுக்கக் கேசவனிடம் அனுமதி கேட்டான் பிரேம்குமார். அனுமதித்தார்.

அனுப்பிவிட்டு ஆனால் யோசனையில் ஆழ்ந்தார்.

"ஏங்க... சாருமதி.. சந்திரிகாவுக்கும் இனிக் கல்யாணம் செய்யணுமில்லே?" என்றார்.

"ஆமா... சார்.. சந்திரிகாவைப் போல ஒரு மகள் கிடைக்கறதுக்கு நீங்க ரொம்பக் குடுத்து வச்சிருக்கணும்!" என்றார்.

"உண்மைதான்!" என்றார் கேசவன், பெருமிதத்துடன். "இன்ஃபாக்ட் உண்மையிலே இப்ப எஜமானி அவதான். நானும் ஒரு பக்கம் விழுந்து கிடக்க, தொழிலும் விழுந்து போன சூழ்நிலையில எப்படித்தான் என் மக சமாளிச்சாளோ... ஐம் வெரி ப்ரவுட் ஆஃப் ஹெர்.." என்றார்.

சாருமதி தன்னை மறந்து, "உண்மைதான்... சார்.. உங்க குடும்பத்தைப் பார்க்கும்போதுதான், நான் இழந்த விஷயங்கள் என்னென்னன்னு எனக்குப் புரியுது." என்று ஆழ்ந்த வேதனையுடன் சொன்னபோது, கேசவன் திகைத்துப் போனார்.

"ஓ.. ஐம் சாரி, உங்களை வருத்தப்படுத்தினதற்காகச் சொல்லலை... ஆனா.. நீங்களும் ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கை தான் வாழ்ந்திருக்கீங்க. ஆனா.. உங்க [illegible]

புரிஞ்சிக்கலை. என் மக புரிஞ்சிக்கறா. அவ்வளவுதான்,'' என்றார். பிறகு ஆறுதல் போல, 'வாழ்க்கைன்னா எல்லாந்தான். நானும் உங்களைப் போலத் தனிமையை அனுபவிச்சிருக்கேன்,'' என்று தன் கடந்த காலக் கஷ்டங்களைச் சொன்னார். கடைசியாக, ''கவலைப்படாதீங்க.. கண்டிப்பா கடவுள் உங்களுக்கு ஏதோ நல்லது வச்சிருப்பான்!'' என்றார்.

''பிரேம், கார் எங்கே போகுது?'' என்றாள் சந்திரிகா.

''நம்ம வீட்டுக்கு,'' என்றான்.

''ஓ...'' என்றாள். வீட்டுக்குள் நுழைந்தால்... அத்தை, மாமா.. ஒருவரையும் காணவில்லை.

''ரெண்டு பேரும் கோயிலுக்குப் போயிருக்காங்க. எட்டு மணிக்கு வருவாங்க. நீ.. வா..'' என்று தனது அறைக்கு அழைத்துப் போனான்.

அங்கே ஹாலில் வைத்து ஒரு கேக் தயாராய் இருந்தது. இவர்கள் வருவதைப் பார்த்தவுடன் வேலைக்காரர்கள் தயாராக உணவு வகைகளைக் கொண்டு வந்து வைத்துப் போனார்கள்.

தங்கள் இருவருக்கு மட்டும் கேக் வெட்டச் செய்து, ''ஹாப்பி பர்த் டே மேடம்!'' என்று வாழ்த்தி.. ஒரு பார்சலை நீட்டினான்.

ஆழ்ந்த பச்சை நிறத்தில் பார்டர் வைத்த பட்டு கடிதார். அறையை நோக்கிக் கையை காட்டினான். அவள் அணிந்து கொண்டு வந்தாள்.

''குட்.. யு..'' என்று புன்னகைத்தான். பிறகு, ''பின்னே நம்ம செலக்ஷனாச்சே!'' என்று மீண்டும் சிரித்தான்.

''தாங்க்ஸ்.. பிரேம்,'' என்றாள் வெட்கத்துடன்.

''ப்ளஷர் இஸ் மைன்,'' என்றான்.

''எப்படித் தெரியும் பர்த் டேன்னு..'' என்றாள்.



''உங்கப்பா, சாருமதி ஆன்ட்டி.. அத்தையம்மா எல்லாரும் ஒரு வாரமா போன் பண்ணிக்கிட்டிருக்காங்க. உனக்குத் தெரியாதா? நாலு நாளைக்கு முன்னால சாரு ஆன்ட்டிதான் சொன்னாங்க. ஷெட்யூலையே மாற்றி லெக்சர்ஸ் முடிச்சிட்டு ஓடி வந்தேன்,'' என்றான். இரு கைகளையும் நீட்டினான். அவள் மகிழ்வாய் அடைக்கலமாகிக் கொண்டாள்.

''ஹேய்.. லுக்கிங் கிராண்ட்!'' என்று சற்றுக் கொஞ்சிக் கொள்ள அனுமதித்தாள். பிறகு விலகப் பார்க்கையில், ''ஹேய்.. ரெண்டு மாசமாச்சு.. தனிமை கிடைச்சு. கொஞ்ச நேரம் இப்படியே இரு,'' என்றான்.

அவன் கொஞ்சுகிற விதம் பார்த்து அவன் மார்பில் முகம் பதித்துக் கொண்டு சிரித்தாள். அவன் கிறங்கிப் போனான். மெதுவாக விலகிக் கொண்டாள். பிறகு கலகலவென்று பேசிக் கொண்டு சாப்பிட்டார்கள். சாப்பிட்டு முடித்த பிறகு, ''சந்திரி.. உங்க அப்பாகிட்ட எப்பச் சொல்றது?'' என்று கேட்டான்.

''இப்பக் கூட சொல்லலாம். ஆனா, ஐய்யயோ.. பிரேம் குமாரா மாப்பிள்ளை? இப்படிச் சிக்கிட்டியேம்மான்னு அதிர்ச்சியாகிப் போய் மறுபடியும் ஏதாவது ஆச்சுன்னா...'' என்று கலகலவென்று குறும்பாகச் சிரிக்க, அவன் கிறக்கமாகப் பார்த்துக் கொண்டு நின்றான்.

விழுங்குவது போன்ற அவன் பார்வை கண்டு அவள் தலையைக் குனிந்து கொள்ள இடது கையால் தன்னருகில் இழுத்துப் பரிசைக் கொடுத்தான்.

''சிக்கிக்கிட்டது யாராம். நீயா.. நானா?'' என்று மயக்கக் குரலில் பேசவும், அதன் பாதிப்பில் அவள் மௌனமாகி விட்டாள்.

முகம் மலர புதிய கடிதாரில் வந்து தனக்கு 'குட்நைட்' சொல்லி விட்டு, ''ரங்கசாமி அங்கிள் வீட்டில் எடுத்து வச்சிருந்தாங்கப்பா...'' என்று விளக்கம் சொல்லி விட்டுப் போகிற மகளை யோசனையுடன் பார்த்தார் கேசவன்.

சந்திரிகா அதோடு நிற்கவில்லை. சாருமதியின் அறைக்குப் போனாள்.

"ஆன்ட்டி!" என்று எட்டிப் பார்த்தாள்.

"என்னம்மா..." என்று அவர் வாஞ்சையாய்க் கேட்க -

"தாங்க்ஸ்... ஆன்ட்டி. பிரேமுக்கு நீங்கதான் சொன்னீங்களாம். தாங்க்ஸ் ஃபார் எவ்ரிதிங்!" என்று கட்டிக் கொண்டு அவர் கன்னத்தில் முத்தம் வைத்தாள்.

சாருமதி நெகிழ்ந்து போனாள். கண் கலங்கினாள். "ஆன்ட்டி...?' என்ற அவள் கேள்விக் குறியாய்ப் பார்க்கவும்.. "சந்திரிகா.. இப்பதான் நான் இழந்த விஷயங்கள் என்னென்னு புரியுது. உன்னை மாதிரி ஒரு மகள் கிடைக்கக் கொடுத்து வைக்காமல் போனேனே!" என்று கண் கலங்க..

"ஏன்.. ஆன்ட்டி... நானே உங்க மகதான்னு நெனைக்கக் கங்க!" என்று அமைதிப்படுத்தி அறைக்கு வந்தாள்.

படுக்கையில் படுத்துக் கொண்டு அன்றைக்குப் பிரேம்குமார் உளறிய கொஞ்சல்களை யெல்லாம் நினைத்துக் கொண்டு தனக்குள் புன்னகைத்துக் கொண்டாள்.

அவன் தனக்காக ஏங்குவதும், தவிப்பதும் இன்பமாகவும் இருந்தது. கஷ்டமாகவும் இருந்தது. அப்போதுதான் அவளுக்கு அது தோன்றியது.

இன்னமும் வாழ்க்கை இன்னதென்று உணராத தனக்கே இப்படி இருக்கிறதே. அப்பா எப்படித் தவித்திருப்பார்? ஏன் சாருமதி ஆன்ட்டி கூட எவ்வளவு இழந்திருக்கிறார் என்று தோன்றியபோதுதான், அந்த எண்ணம் அவளுக்குள் உதித்தது.

பிரேம்குமாரிடம் பேச வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள். ஃபோன் செய்தாள். அவன் அந்தப்புறம் சிரித்தான். "எப்படா இப்படி ஒரு யோசனை உனக்கு வரும்னு காத்துக்கிட்டிருந்தேன், அம்மணி!" என்றான்.



## 19



அடுத்த நாள்.

அடுத்த நாள் அந்த விஷயம் பற்றியே பிரேம் குமாரிடம் துளைத்தெடுத்துக் கொண்டிருந்தாள். பிரேம்குமார் கூடச் சற்றுப் பொறுமையிழந்தான்.

"சந்திரி, இதபாரு. நீ நெனைக்கிற வேகத்துல எல்லாம் ஆகாது. முதல்ல, மாமா தானே சுயமா நடக்க ஆரம்பிக்கட்டும்," என்றான்.

அதுவும் நடந்தது. ஒரே மாதத்தில் அப்பா தானே நடக்க ஆரம்பித்தார். வீட்டிலேயே அலுவலக அறையில் வந்து அமர்ந்து கொடுக்கல் வாங்கல்களை மேற்பார்வை பார்க்க ஆரம்பித்தார்.

நல்ல நாள் பார்த்து அவர் கடைக்கு வருவது பற்றித் தீர்மானித்திருந்தார்கள்.

கடைக்குக் காரில் வந்து இறங்கிய போது தம்பு மற்றும் கடை ஊழியர்கள், சந்திரிகா எல்லாரும் கைதட்டி வரவேற்றார்கள். கிட்டத்தட்ட ஒரு வருடம்.

நெகிழ்ந்து போனவராய்க் கடையைச் சுற்றிலும் ஒரு நோட்டம் விட்டார்.

"ரொம்பத் தேங்க்ஸ்டா, சந்திரி..." என்று அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு நெகிழ்ந்து போனார்.

தம்பு ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

அந்த நேரம் பிரேம்குமாரும் அங்கே இருந்தான்.

"அங்கிள்... அப்பா கடைக்கு வரும்போது பத்திரமா கடையை நல்ல விதமா ஒப்படைக்கணும்னு சந்திரிகா சபதமே எடுத்துக்கிட்டாப்பல..." என்றான்.

"ஆமாப்பா... "ஐ'ம் ப்ரவுட் ஆஃப் ஹெர். இன் ஃபாக்ட் இப்ப அவதான் முதலாளி. நான் வெறும் மேனேஜர்தான்!" என்று மகளைத் தோளோடு சேர்த்துக் கொண்டார்.

பேருக்கு இரண்டு மணி நேரம் இருந்து விட்டுப் புறப்பட்டார். தம்பு கொண்டு வந்து விட்டு விட்டுப் போனார்.

வழக்கம் போல் சந்திரிகா கடைக்குப் போய் விடுவாள். அப்பா கொஞ்ச நேரம் இருந்து விட்டுப் போய் விடுவார்.

வீட்டிலும் மற்ற விவகாரங்களைச் சாருமதி பார்த்துக் கொண்டார் என்பதால் பெரிதும் கஷ்டமாக இருக்கவில்லை.

இதற்கிடையில் பிரேம்குமார் வந்தாலே மகள் முகம் மலர்வதையும் யாரும் பார்க்காத நேரங்களில் அவர்கள் பார்வைப் பரிமாற்றங்களையும் கண்டும் காணாதது போல் கவனித்துக் கொண்டார்.

தம்புவிடம் மெதுவாக விசாரித்தார்.

"என், தம்பு சார், இந்தப் பிரேம்குமார். ரொம்ப ஹெல்ப் செய்தானா.. என்ன?"

"ரொம்பவா.. சந்திரிகா பாப்பாவுக்கு மாரல் சப்போர்ட்டே அவருதான். பாப்பாவை ரொம்பப் பிடிக்கப் போச்சு!" என்றார் தம்பு உற்சாகமாக.

"பிரேம்குமார் மாதிரி ஒரு நல்ல பையன் கிடைக்கணுமே. எந்தப் பொண்ணுக்கு அதிர்ஷ்டமோ," என்றார் தம்பு வேண்டுமென்றே.

"ஓ..." என்றார் கேசவன். பிறகு சற்றுக் கழித்து, "நம்ம சந்திரிகாகிட்டே நெருங்கிப் பழகறானோ...?" என்றார்.

தம்பு தயக்கத்துடன் அவரைப் பார்த்தார்.

"பரவாயில்லை.. உள்ளதைச் சொல்லுங்க," என்றார்.

"ஏதோ.. நாட்டம் இருக்கிற மாதிரிதான் தெரியுது," என்றார் தம்பு.

கேசவன் அப்போது, "தம்பு சார், நான் முந்தியெல்லாம் கடையாட்கள்கிட்டே குடும்பம் பத்திப் பேசக் கூடாதுன்னு நெனப்பேன். ஆனா.. நீங்க குடும்பத்தில் ஒருத்தரா இருந்து



நீங்கள்ளாம் உதவி செய்திருக்கீங்க.. சொல்லுங்க.. நீங்க என்ன நினைக்கறீங்க?" என்றார்.

தம்பு அவர் முகத்தை ஒரு நிமிடம் ஆழ்ந்து பார்த்தார்.

"பிரேம்குமாருக்கு மட்டுமில்லை.. ரங்கசாமி அண்ணாவுக்குக் கூடப் பாப்பாவைப் பிடிச்சிருக்கு..." என்றார்.

கேசவன் சிரித்தார். "எனக்குத்தான் கடைசியில தெரிஞ்சிருக்கு..." என்றார்.

"அப்படியில்லங்க.. முதலாளி, உங்க உடம்பு இருந்த நிலைமை அப்படி," என்றார் தம்பு.

"உண்மைதான்..." ஒரு பெருமூச்சுடன் ஏற்றுக் கொண்டார் கேசவன்.

"ஆனா.. பாப்பா இன்னும் ஒரு வருஷத்துக்கு அந்தப் பேச்சே வேண்டாம்ங்குது. நீங்க பூரணமா குணமாகணுங்குது!" என்றார் தம்பு.

"ம்..." என்று கேட்டுக் கொண்டார்.

அதற்குப் பிறகும் கேசவன் சும்மாயிருக்கவில்லை. ராம் பிரகாஷிடம் பேசினார். அக்காவிடம் பேசினார். விவரங்களைச் சேகரித்துக் கொண்டார். கடைசியாகப் பிரேம் குமாரை விருந்துக்கு வீட்டுக்கு அழைத்தார்.

சாருமதி, ராம்பிரகாஷ் என்று எல்லாரும் கலந்து கொண்டார்கள்.

பிறகு எல்லாரும் கிளம்பினார்கள். பிரேம்குமாரை மட்டும், "இருப்பா.. போகலாம்!" என்று தங்க வைத்தார்.

கடைசியாகச் சந்திரிகா கூட குட்நைட் சொல்லி அறைக்குப் போய் விட்டாள்.

பிறகு அவரும், பிரேம்குமாரும், உலக மார்க்கெட் நிலவரம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு, பிரேம், "நான் கிளம்பட்டுமா அங்கிள்?" என்றான்.

"பிரேம்... நான் உடம்பு சரியில்லாம இருந்தப்ப.. நிறைய ஹெல்ப் செஞ்சியாம்.. ரொம்ப நன்றிப்பா," என்றார் ஆத்மார்த்தமாக.

"இதுல எல்லாம் என்ன இருக்கு அங்கிள்," என்றான்.

அவர் வாஞ்சையாய்ப் புன்னகைத்தார். பிறகு தன் மேஜையின் மேல் இருந்த பேப்பர் வெயிட்டை உருட்டிய படியே,

"ஏம்ப்பா.. என் மகளை உனக்கு ரொம்பப் பிடிச்சுப் போயிட்டதா பேசிக்கறாங்களே.. அப்படியா?" என்றார்.

அவன் முகம் சிவந்து போனது. எதிர்பாராமல் வந்த இந்தக் கேள்வி அவனுக்குத் திகைப்பை ஏற்படுத்தியது. உடனே சமாளித்துக் கொண்டான்.

லேசாக வெட்கம் மிளிர, மேஜையைப் பார்த்தபடி, "ஆமா.. அங்கிள்," என்றான்.

உலக அளவில் அவனுக்கிருக்கிற மதிப்பு அவருக்குத் தெரியும். தனது மகள் மேல் வைத்த அன்பின் காரணமாக ஏதோ சின்னப் பையனைப் போல் வெட்கத்தில் அவன் தடுமாறுவதைப் பார்த்து அவர் புன்னகைத்துக் கொண்டார்.

"அப்பா.. நீங்க ரொம்பப் பெரிய இடம். எனக்குப் பயமாயிருக்கப்பா," என்றார்.

அவன் திடுக்கிட்டுப் போனான். பிறகு அழுத்தமாகச் சொன்னான். "அங்கிள்.. அன்பு அந்தஸ்து பார்க்கறதில்லை. உங்களுடையதும் ஒன்னும் குறைந்து போனதில்லை. உங்க பொண்ணை அழகுக்காகவோ.. பணத்துக்காகவோ நான் நேசிக்கலை. ஷி இஸ் எ பார்ன் ஃபைட்டர். உங்களுக்கு முடியாமப் போனப்ப எப்படிச் சூழ்நிலைகளை எதிர்த்து நின்னாங்கறதைப் பக்கத்துல நின்னு பார்த்தேன். ஷி இஸ் சிம்பிளி கிரேட்!" என்றான் உணர்ச்சிகரமாக.

அவர் மௌனமாக ஒரு வியப்போடு கேட்டுக் கொண்டிருந்தார். அவன் தொடர்ந்தான்.



"அங்கிள்.. உலக அளவிலே நான் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கேன். ஆனா.. ஏன்னு தெரியலை. சந்திரிகாவுடன், பழகிய பழக்கத்திலே இவதான். எனக்கு என்று என் மனசு அழுத்தமா சொல்லிடுச்சு. நான் ஆழ் மனசின் குரலுக்கு எப்பவுமே மதிப்புக் கொடுக்கறவன், அங்கிள். அதுதான்.. பழக ஆரம்பிச்சேன். ஆனா.. இப்ப.." என்று ஒரு கணம் நிறுத்தினான்.

அவர் வசியம் செய்யப்பட்டவர் போல் பார்த்துக் கொண்டிருந்தார்.

"அங்கிள்... இதை உங்ககிட்ட சொல்லலாமா இல்லையான்னு தெரியல. ஆனா.. உங்க மக..என் மனசு பூரா நிறைஞ்சிருக்கா.. பாரதி சொன்னானே.. யாதுமாகி நின்றாய், என்னுளே நிறைந்தாய்ன்னு அப்படி," என்றான்.

கேசவன் நெஞ்சுருகிப் போனார்.

அவர் மௌனம் பார்த்துச் சற்றே அவன் அச்சம் கொண்டான்.

"அங்கிள்?" என்றான் கேள்விக் குறியாய்.

கேசவன் தன்னை மீட்டுக் கொண்டார்.

"ரொம்ப சந்தோஷம்பா!" என்றார் நெகிழ்ந்த குரலில் பிறகு,

"உங்க அப்பா..." என்று இழுத்தார்.

"அப்பாவுக்குச் சம்மதம்தான்," என்றான், நிம்மதி நிறைந்த குரலில். பிறகு அவனே தொடர்ந்தான். "ஆனா... இன்னும் ஒரு வருஷம். நீங்க கம்ப்ளீட்டா ரெடியாகற வரை மேரேஜ் இல்லை," என்றான்.

கேசவன் ஒன்றும் பேசவில்லை. பிறகு சந்திரிகாவின் இளவயது நிகழ்வுகளைப் பற்றியெல்லாம் அவனிடம் ஆர்வமாகப் பகிர்ந்து கொண்டார். அவனும் மிகவும் ஆர்வமாய்க் கேட்டுக் கொள்வதைப் பார்த்து உள்ளூரச் சிரித்துக் கொண்டார்.

"லவ்லி.. கேர்ள்!" என்று சிலாகித்துக் கொண்டான். அவர் புன்னகைத்துக் கொண்டார். பிறகு மன நிறைவோடு விடை பெற்றுக் கொண்டான்.

அன்றிரவே சந்திரிகாவை செல்போனில் அழைத்து அப்பா தன்னை விசாரித்ததைச் சொன்னான் பிரேம்குமார்.

மறுநாள் காலை அப்பாவின் எதிரில் வர வெட்கப்பட்டுக் கொண்டு போக்குக் காட்டிக் கொண்டிருந்தாள் சந்திரிகா. அப்பா சிரித்துக் கொண்டார். அன்றைக்கெல்லாம் இந்த நாடகம் தொடர்ந்தது.

இரவும் அப்பாவின் அறைக்குப் போகவில்லை. அவர் கீழே வருவதற்குள்ளாகப் பேருக்குச் சாப்பிட்டு விட்டு அறைக்கு ஓடிப் போய் விட்டாள்.

"அக்கா! எங்க சந்திரி..?" என்றார் கேசவன் கைகழுவியபடி.

"ரூம்ல இருப்பா.. இன்னைக்கு என்னமோ.. ரூம்ல போய்ப் போய் ஒளிஞ்சுக்கறா.. சாப்பாடும் சரியாய்ச் சாப்பிடலை!" என்றாள். அவர் புன்னகைத்துக் கொண்டார்.

மகளின் அறைக்கே போனார்.

"சந்திரிகா..." என்று வாஞ்சையாய் அழைத்தார்.

ஜன்னல் ஓரமாக ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த சந்திரிகா திரும்பிப் பார்த்தாள்.

"அப்பா..!" என்று முறுவலித்தாள். அவர் உள்ளே நுழைந்து சேரில் அமர்ந்து கொண்டார்.

"என்னடா.. காலையில் இருந்து கண்லயே பட மாட்டேங்கறே..." என்றார் புன்னகையுடன்.

அவள் அவரை ஒரு முறை நிமிர்ந்து பார்த்து விட்டு வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள்.

"அதுக்குள்ள பிரேம்.. சொல்லியாச்சா?" என்று சிரித்தார்.

அவள் வெட்கத்துடன் நிற்பதைப் பார்த்தபோது, அவள் தாயின் நினைவு வந்து, அவர் மனத்தில் அலை மோதி மறைந்தது. ஆனால், இப்போது அதைப் பற்றிப் பேச்செடுக்க வேண்டாம் என்று கட்டுப்படுத்திக் கொண்டார்.



"நல்ல பையன்தாம்மா...?" என்றார்.

"ஆமாம்ப்பா," என்று மகள் அவசரமாகச் சொல்வதை மனதில் குறித்துக் கொண்டார்.

"எல்லாம் சரிம்மா... கல்யாணம் இன்னும் ஒரு வருஷத்துக்கு வேண்டாங்கறியாம்," என்றார்.

"ஆமாம்ப்பா... நீங்க கம்ப்ளீட்டா ரெடியாகணும்," என்றாள்.

அவர் குனிந்து பார்த்துக் கொண்டார்.

"இன்னும் என்னம்மா.. ரெடியாகணும்?" என்றார்.

"அப்பா.. இப்பத்தான் உடம்பு தேறியிருக்கு. அதுல என்னைப் பிரிஞ்சு.. வேற எப்படியிருப்பீங்க?" என்றாள்.

அவர் பெருமூச்சு விட்டார். "பெண்ணைப் பெத்த எல்லாருக்கும் ஏற்படுகிற கஷ்டம்தானேம்மா!" என்றார்.

"இருக்கலாம்ப்பா. ஆனா.. உங்களைப் பிரிஞ்சு என்னால இருக்க முடியாதுப்பா!" என்று அவர் மடியில் தலை வைத்துத் தரையில் அமர்ந்து கொண்டாள்.

"சரிம்மா.. கொஞ்சம் தள்ளிப் போடலாம். ஒரு ஆறு மாசம். அதுக்கு மேலே அந்தப் பையனைக் காக்க வச்சா.. நல்லாயிருக்காதும்மா!" என்றார்.

சந்திரிகா எழுந்தாள். கட்டிலில் அமர்ந்து கொண்டார். அப்பாவைப் பார்த்தாள்.

"ஏம்ப்பா... இப்படிச் செய்யலாமா?" என்றாள்.

"என்ன?" என்றார்.

"நீங்க.. ஒரு மேரேஜ் பண்ணிக்கங்களேன்!" என்றாள்.

"வ்வாட்...?" என்று அதிர்ந்து போனார்.

"நிஜம்தான்ப்பா..." என்றாள் சந்திரிகா.

அவர் வெடிச் சிரிப்புச் சிரித்து விட்டார்.

"அட ஏம்மா.. நீ.. ஆகற விஷயத்தைப் பாரம்மா!" என்று எழுந்து போனார்.

அவர் போவதைச் சந்திரிகா தீவிரமாய்ப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

"ஆகற விஷயம்தான்ப்பா..." என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.

## 20



மும்பையிலிருந்து அழைத்தான் பிரேம் குமார். "சந்திரிகா, நான் மும்பையிலிருந்து பேசறேன். இங்க.. ஹெட் ஆபீஸ் பக்கம் வந்து ரொம்ப நாளாச்சேன்னு கன்னா ரொம்பக் கோபிச்சுக்கறான். நேற்று திடீர்னு வந்துட்டேன். கோபிச்சுக்காதே!" என்றான்.

"ம்.. சரி.." என்றாள்.

அதோடு நிற்காமல் மும்பையில் அடுத்த வாரத்தில் 'ஹெரிட்டேஜ் ஆப் இந்தியா' என்ற தலைப்பில் நான்கு நாட்கள் ஒரு கருத்தரங்கு நடைபெற உள்ளதாகவும், அதில் சந்திரிகாவின் பெயரையும், சாருமதியின் பெயரையும் பதிவு செய்திருப்பதாகவும் சொன்னான்.

"அப்பாவை விட்டுட்டு... எப்படி?" என்று தயங்கினாள் சந்திரிகா.

"நான் அப்பாகிட்டே பேசிக்கிறேன்..." என்று சொல்லி விட்டான்.

போனார்கள். விமான நிலையத்தில் ட்ரிம்மாக வந்து நின்று வரவேற்றான் பிரேம்குமார். இடம் கிடைப்பதே அரிதான மும்பையில் அவனும் அவன் பங்குதாரரும் இரண்டு கிரவுண்ட் இடத்தில் முன்னாலே ஒரு சிறிய ஆபிஸ், சற்றுப் பின்னாலே கீழ்த் தளத்தில் இரண்டு படுக்கையறை, மேல்தளத்தில் இரண்டு படுக்கையறை இருக்கிற மாதிரி காம்பாக்டாக ஒரு கெஸ்ட் ஹவுஸும் வைத்திருந்தார்கள்.



சின்னதாக ஒரு நீச்சல் குளம் வேறு.

முதல் நாள் முக்கிய இடங்களைச் சுற்றிக் காட்டினான். முதல் இரண்டு நாட்களும் கருத்தரங்கு சிறப்பாகக் கழிந்தது. மூன்றாம் நாள் ஜுவல்லரி டிசைன்ஸ் பற்றிச் சந்திரிகாவையும் ஒரு லெக்சர் கொடுக்க வைத்தான்.

கோட் சூட்டில், ஃபார்மல் உடைகளில் என்று பிரேம்குமார் கருத்தரங்கை நடத்திய விதமும் அந்த அறிவு ஜீவன்களின் கூட்டத்தில் அவனுக்கிருந்த மதிப்பும் பார்த்த சந்திரிகாவுக்குத் தன்னிடம் குழைந்து கொண்டும் கிறங்கிக் கொண்டும் நிற்கிற பிரேம் குமாரின் இன்னொரு பக்கம் புரிய வந்தது. சற்று மலைத்துத்தான் போனாள்.

பிரேம்குமாரும் கூடச் சந்திரிகா அழகான ஆங்கிலத்தில் நகை வடிவமைப்பு பற்றிப் பேசிய விதம் கண்டு சிலாகித்துக் கொண்டான். நான்காம் நாள் கருத்தரங்குக்கு முன்பு ஒரு நாள் விடுமுறை வந்தது.

விடுமுறையன்று மும்பையில் தன் தோழி ஒருத்தி இருப்பதாகவும் அவர் வீட்டில் ஒரு நாள் தங்குகிறேன் என்றும் சாருமதி சொன்னார். சாருமதி மும்பைக்கு வருவதற்கு முன்பாகவே ராம்பிரகாஷ் அவர் மனத்தில் ஒரு கேள்வியைப் போட்டு வைத்திருந்தார்.

"சாரு, உனக்குன்னு ஒரு வாழ்க்கை கிடைக்கறதாயிருந்தா அதைப் பத்திப் பரிசீலிப்பியா?" என்று.

"இந்த வயசிலா?" என்று சாருமதி திகைத்தாள்.

"ஏம்மா... ஏன்... கூடாது.. இனிமேல் அமையற எந்த உறவும் ஃபிஸிகல் அட்ராக்ஷனுக்காக மட்டும் இருக்காது. மெச்சூரிட்டாத்தான் இருக்கும். வயசான காலத்துல தனிமைங்கிறது ரொம்பக் கொடுமையானதும்மா. யோசிச்சுப் பாரு" என்று சொல்லியிருந்தார்.

சாருமதிக்குத் தன் தோழியிடம் அது பத்தி விவாதிக்க வேண்டியிருந்தது போகிறேன் என்று போனாள்.

கெஸ்ட் ஹவுஸில் பிரேம்குமாரின் அமெரிக்க நண்பன் ரோஜரும், அவன் தோழி எலிஸபெத்தும் வேறு தங்கியிருந்தார்கள். கீழ்த் தளத்தில் ஒரு தளத்தில் பிரேமும், மற்றொரு அறையில் அவர்களும் தங்கியிருந்தார்கள். மேலே சந்திரிகா ஒரு அறையிலும் சாருமதி ஒரு அறையிலும் தங்கியிருந்தார்கள்.

விடுமுறைக்கு முதல் நாளிரவு சந்திரிகா அப்பாவைக் கூப்பிட்டுப் பேசினாள். "அப்பா... பிரேமுக்கு இங்க ரொம்ப நல்ல பேரு. ரொம்ப மரியாதை..." என்று அவள் புகழைப் பாடுகிற மகளின் பேச்சக் கேட்டுக் கேசவன் சிரித்துக் கொண்டார். ஆனால், லேசான பொறாமை கூடத் தோன்றியது.

மகளும் இல்லாமல், சாருமதியும் இல்லாமல் வீடு வெறிச்சோடிக் கிடந்த மாதிரி இருந்தது.

ராம் பிரகாஷ் ஒரு முறை வந்து போனார். ரங்கசாமிகூட ஒரு நடை வந்து விட்டுப் போனார். என்றாலும் அக்காவிடம்,

"ஏங்க்கா... ஒரு நாலைந்து நாள் இந்தப் பொண்ணை விட்டுட்டு இருக்க முடியலியே. சாருமதி மேடமாவது இருந்திருக்கலாம். ரொம்ப கஷ்டமா.. இல்லை," என்றார்.

அத்தையம்மா ஒரு நிமிடம் அவரை ஆழ்ந்து பார்த்து விட்டு, "ஆமாம்ப்பா... பொழுதே நகர மாட்டேங்குது. நீயாவது கடைக்குப் போயிட்டு வர்றே. எனக்குப் பைத்தியமே பிடிச்சிரும் போல இருக்கு. சந்திரி கல்யாணமாகிப் போனா.. எப்படி இருக்கப் போறேனோ!" என்றவள் திடீரென்று,

"பேசாம.. சந்திரி சொல்கிற மாதிரி நீ ஒரு கல்யாணம் பண்ணிக்கோ," என்றாள்.

கேசவன் அதிர்ந்து போய்ப் பார்த்தார். "என்னக்கா.. விளையாடறியா?" என்றார்.



"விளையாடலைப்பா.. நிஜமாத்தான் சொல்றேன். நீயும் லோன்லியா ஃபீல் பண்ணக் கூடாதில்லை," என்றாள்.

"சும்மாயிருக்கா.. அவதான் சின்னப் புள்ளை. ஏதோ.. பேசறா.. நீயும் என்னக்கா?" என்றார். ஆனால்.. அன்று மாலை ராம்பிரகாஷும் அதே போலப் பேசவும் குழம்பிப் போனார்.

எல்லாக் கோணங்களிலிருந்தும் பிரேம்குமார் காய் நகர்த்திக் கொண்டிருக்கிறான் என்பது, பாவம்! அவருக்குத் தெரியவில்லை.

அங்கேயும் சந்திரிகா அப்பாவிடம் பேசி விட்டு போனை வைத்தவள் முகத்தில் லேசான வருத்தம் இருந்தது.

"பிரேம்.. அப்பா.. பாவம்.. ரொம்பப் போரடிக்கு துங்கறார். ரெண்டு பேரும் வேற வந்துட்டோமே!" என்றாள்.

"ஹேய்.. ரொம்பக் கவலைப்படாதே. போரடிக்கணும். லோன்லியா ஃபீல் பண்ணணும். எதிர்காலத்தைப் பத்தி யோசிக்க ஆரம்பிக்கணும்கறதுக்காகத்தானே இந்த ஏற்பாடே!" என்று பிரேம்குமார் சிரித்தான்.

சந்திரிகா திகைத்துப் போய்ப் பார்த்தாள்.

"ஆமா, பின்னே. நாலு மாசம் கழிச்சு நடக்க இருந்த கருத்தரங்கை ஃப்ரிப்போன் பண்ணி, ஐயா என்னென்ன வேலையெல்லாம் செஞ்சிருக்கேன். எல்லாம் எதுக்கு? தேவியார் கூட ஒரு நாலைஞ்சு நாள் ஒரே கூரைக்குக் கீழே பொழுது கழியணும்னுதான்!" என்றான்.

"ஐயோ.. பிரேம்.. யு ஆர் இம்பாசிபிள்," என்று சந்திரிகா அதிசயித்துப் போனாள்.

அன்றிரவு.

மேல் தளத்தில் தன்னறையில் தனியாய் இருக்கச் சந்திரிகாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஒன்பது மணியிருக்கும்

இறங்கி வந்தாள். "பிரேம்.. கொஞ்ச நேரம் நடந்துட்டு வரலாமா?" என்று நடந்து விட்டு வந்தார்கள்.

உள்ளே நுழைந்தபோது எதேச்சையாகத் திரும்பி ரோஜரின் அறையைப் பார்த்த சந்திரிகா திகைத்துப் போனாள்.

மேலை நாட்டுக் கலாசாரத்திற்கேற்ப சுற்றுப்புறம் பற்றிக் கவலைப் படாமல் ரோஜரும், எலிசபெத்தும் நெருக்கத்தில் இருந்தார்கள். எலிசபெத்தும் அவனுக்குச் சரியாக வேகம் காட்டுவதைப் பார்த்து அதிர்ந்து போனாள். முகத்தை வேகமாகத் திருப்பிக் கொண்டாள். இரண்டு கன்னங்களும் சிவந்து விட்டன. சட்டெனத் தன் அறைக்கு ஓடி விட்டாள். பிரேம்குமார் குறும்பாகச் சிரித்துக் கொண்டு, "ஹேய், ரோஜர்.. க்ளோஸ் த டோர்.. மேன்!" என்று கதவைச் சாத்திவிட்டுத் தன்னறைக்குப் போய் விட்டான்.

ஒரு மணி நேரம் போயிருக்கும். ஒரு பொருளியல் தொடர்பான புத்தகத்தைத் தன் கையில் வைத்துக் கொண்டு படித்துக் கொண்டிருந்த பிரேம்குமார், அறை வாசலில் நிழலாடுவதைக் கண்டு திரும்பிப் பார்த்தான். சந்திரிகா நின்று கொண்டிருந்தாள்.

வாஞ்சையாய்ப் புன்னகைத்தாள்.

"என்னடா?" என்றான்.

"அங்க தனியா.. கஷ்டமாயிருக்கு. தூக்கம் வரலே," என்றாள் மெல்லிய குரலில்.

ஒரு நீள சோஃபாவில் அமர்ந்து கொண்டு எதிரில் ஒரு சேபாலை இழுத்துப் போட்டுக் காலை நீட்டிக் கொண்டிருந்த பிரேம் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

"வா!" என்று வலது கையை நீட்டினான். அவள் ஓடி வந்து ஒட்டிக் கொண்டாள். தோளில் சாய்த்துக் கொண்டான். அவள் தன்னை அறியாமல் உணர்ச்சி வசப்பட்டிருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டான்.



"பிரேம்.. தூக்கம் வரலை!" என்று அவன் முகம் பார்த்தாள். அவனுக்கும் உள்ளே கிளர்ச்சி ஏற்பட்ட போதும், எச்சரிக்கையாக நிதானித்துக் கொண்டான்.

"நோ.. பிராப்ளம்டா.. பேசிட்டிருக்கலாம்," என்று தன் வெளிநாட்டு அனுபவங்களை நிறையச் சொல்லிச் சிரிக்க வைத்தான். அவளுடைய கடை அனுபவங்களையும் சுவாரசியமாகக் கேட்டுக் கொண்டான். புத்தகம் எழுதிய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டான். பிறகு தூக்கம் அவள் கண்களைத் தழுவியதைக் கண்டு தன் மடியிலேயே சாய்த்துக் கொண்டு உறங்கச் செய்தான்.

நன்றாக அவள் உறங்கி விட்டாள் என்பது தெரிந்ததும், தனது கட்டிலில் படுக்க வைத்து விட்டு, தான் சோஃபாவில் கால் நீட்டிப் படுத்துக் கொண்டான். முகத்தில் புன்னகை உறைந்திருந்தது.

ஊரில் இருக்கிற போதெல்லாம் தனிமை கிடைத்தால் தன் அணைப்பில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறவன், இன்றைக்கு அவளே இளகிய மனநிலையில் இருந்த போதும் தனக்கு ஏன் அத்து மீறுகிற துணிவு வரவில்லை என்று எண்ணிக் கொண்டான். சிரித்துக் கொண்டான்.

தொட்டு விடுகிற தூரத்தில் இருக்கிறாள். ஆனால் என்று எழுந்து குழந்தை போல் உறங்குகிற அவள் முகம் பார்த்துக் கொண்டு சற்று நின்றான். பின்னந் தலையைக் கோதிக் கொண்டான். 'எவ்வளவு அருமையான பெண் இவள்!' என்று எண்ணிக் கொண்டான்.

அழகு, அறிவு, உழைப்பு.. என்று போன வாரத்தில் ஒரு நாள் சொன்னாள். "பிரேம், எல்லா மனிதர்களுக்கும் மூன்று கோணத்தில் வாழ்க்கை இருக்கணும், தெரியுமா? தனிப்பட்ட உணர்வுகள்.. குடும்பம், வாழ்க்கை, அது போகச் சமுதாயத்துக்கென்று ஏதாவது செய்யணுங்கறது. எனக்கு இந்தக் கடையைப் பார்க்க வந்தது ஒரு பக்கம் ரொம்ப நிறைவா இருக்கு. நாட்டுப்

பொருளாதாரத்துக்கும் நம்ம பங்கைச் செய்யறோம்னு ஒரு நிறைவு!'' என்றாள்.

பிரேம்குமார் ஒத்துக் கொண்டான். ஆனால், விளையாட்டாக, ''அதென்ன... டைரக்டா மூணாவது விஷயத்துக்குப் போயிட்டே... ரெண்டாவதையும் கொஞ்சம் நினைக்கக்க,'' என்றான்.

அவளும் முணுமுணுத்தபடி, ''அதுக்கு ஒரு நேரம். அந்த நேரம்... வரட்டும்,'' என்றாள்.

இன்று காலையிலும் ஒரு விஷயம் நடந்தது.

பிரேம்குமார் காலையிலேயே நீச்சல் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தான். ரூபேஷ் கன்னாவின் மகன் வேறு நீச்சல் கற்றுக் கொள்கிறேன் என்று வந்திருந்தான்.

அவனோடு ஓட்டி அடித்துக் கொண்டு பிரேம் குமார் கரையேறிய சமயம் சந்திரிகா ''பிரேம்,'' என்று அழைத்துக் கொண்டு ஏதோ கேட்பதற்காக வந்தாள். அவன் தோற்றம் பார்த்துச் சட்டென்று முகம் சிவக்க... ''நான் அப்புறம் பேசறேன்,'' என்று போய்விட்டாள்.

ஒரு கல்வியாளனாக, நண்பனாக, காதலனாகப் பல்வேறு கோணங்களில் அவனைப் பார்க்க நேர்ந்த பாதிப்பு அவளுக்கு. உறங்குவதற்கு முன்பு தன்னோடு நெருங்கி நெருங்கி இழைந்தபடி அவள் அமர்ந்து கொண்ட விதம் நினைவுக்கு வரவும் புன்னகைத்துக் கொண்டான். உறங்குவதற்கு நேரமாகி விட்டது.

சந்திரிகா காலையில் ஆறு மணிக்கே விழித்தவள், தான் பிரேம்குமாரின் அறையில் படுத்துக் கொண்டிருப்பது கண்டு திடுக்கிட்டுப் போனாள். தானே அவனைத் தேடி வந்ததும் அவனுடன் உரையாடிக் கொண்டிருந்ததும் நெருங்கி இழைந்து கொண்டதும் நினைவு வர, வெட்கம் மேலிடத் திரும்பிப் பார்த்தாள். பிரேம்குமார் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தான்.



தங்கள் ஊரில் தனிமை கிடைத்தால் சீண்டுகிறவன், நேற்று மிகவும் கண்ணியமாக நடந்து கொண்ட விதம் நினைத்துப் பெருமையாகவும் இருந்தது. அவன் முகத்தில் விழிக்க வெட்கமாகவும் இருந்தது.

தன் அறைக்கு ஓடி வந்து விட்டாள். காலை ஏழு மணிக்கெல்லாம் சாருமதியும் வந்து விட்டார்.

காலை உணவுக்குச் சந்திரி இறங்கி வரவில்லை.

''என்னமோ... தெரியலை. பிரேம், ரூமுக்கே அனுப்பச் சொல்றா,'' என்றபடி வந்த சாருமதியிடம் -

''நீங்க சாப்பிடுங்க ஆன்ட்டி. நாளைக்கே ஊருக்குப் போறீங்க. இப்படிச் சேர்ந்து சாப்பிட முடியுமா... என்ன, நான் கூட்டிட்டு வரேன்,'' என்று போனான் பிரேம்.

அறை வாசலில் நின்று, ''தேவி,'' என்றான்.

அவள் திரும்பிப் பார்த்தாள். ஏனோ அவன் முகம் பார்க்க மறுத்தாள். பிரேம்குமார் நெருங்கி, ''ஹேய்... என்ன ஆச்சு?'' என்றான்.

அவள் மீண்டும் தலையைக் குனிந்து கொண்டாள். அவனுக்குப் புரிந்து விட்டது.

தன்னறையைத் தேடி அவளே வந்தது குறித்துத் தான் அவளைக் கீழாக எண்ணி விடுவோமோ... என்று இப்போது அவள் தவிப்பது புரிந்தது. அணைத்துக் கொண்டான்.

''அட்டா... யாரைத் தேடி வந்தீங்களாம்? என்னைத்தானே என் மகாராணி... என்னைத் தேடி வராம... பின்னே யாரைத் தேடுவீங்களாம். இப்பதான்... லேசா தேவியாருக்கு விஷயங்கள் புரிய ஆரம்பிச்சிருக்குன்னு நான் சந்தோஷத்துல மிதக்க ஆரம்பிச்சிருக்கேன். நீ... என்ன?'' என்று மகிழ்ச்சியாய்ச் சிரித்தான்.

அவள் அவன் மார்பில் முகம் பதித்துக் கொண்டாள்.

"சந்திரி.. திஸ்.. இஸ்.. ஆல்.. நாச்சுரல். நம்ம நாட்டில் நிறைய விஷயங்களைத் தப்பாப் புரிஞ்சுகிட்டிருக்காங்க. நீ.. என்னுடையவள். என் கூட டைம் ஸ்பென்ட் செய்யத் தேடி வந்தா.. என்ன, நாம நண்பர்களும் கூடத்தான்.. இல்லையா? என்ன சில்லி கேர்ள்!" என்று சிரித்தான்.

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். "பிரேம்.. யு.. ஆர்.. எ ஜென்டில் மேன்.." என்றாள்.

அவன் பெருமூச்சு விடுவது போல் நடித்தான். "ம்.. என்ன செய்யறது? ரங்கசாமியின் மகன், கேசவனின் மகளை.. அவ்வளவு சீக்கிரம் முறையில்லாம.. நடத்திரலாமா என்ன? முடியாதே.." என்று மறுபடியும் பெருமூச்சு விட்டான்.

அவள் சிரித்து விட்டாள். "இந்தத் தொல்லைக்குப் பேசாம நான் கீழயே சாப்பிட வர்றேன்," என்று நகர்ந்தாள்.

"தேவி.." என்றான் கிறங்கிய குரலில். திரும்பிப் பார்த்தாள். பின்னந் தலையைக் கோதியபடி, அவன் பார்வையால் விழுங்கிக் கொண்டிருந்தான்.

"ஹேய்.. அத்தனையும்.. வேஷம்.. நம்பீராதே.." என்று அடிக் குரலில் சிரித்தான்.

அவள் விக்கித்துப் போய் நின்றாள்.

"அத்தனைக்கும்.. வட்டியும் முதலுமாக வசூல் செஞ்சுருவேன்.. ஞாபகம் வச்சுக்க..." என்றான்.

அவள் மீண்டும் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள். ஆனால் சட்டென அவன் தன்னை மீட்டுக் கொண்டான். அவளைத் தட்டிக் கொடுத்து ஆசுவாசப்படுத்தி அழைத்துக் கொண்டு போனான்.

அதற்குப் பிறகும் அவள் ஊருக்குக் கிளம்புகிற வரையிலும் மிகக் கண்ணியமாக நடத்தி அனுப்பி வைத்தான். இடையிலே ஒரு முறை மட்டும் -



"சந்திரி.. ஒரு நாள்.. ஒரே நாள் இவ்வளவு அவஸ்தைப் பட்டுட்டமே. உங்கப்பா.. பாவம்.. இல்லை..! சாருமதி ஆன்ட்டி கூட இல்லை!" என்றான்.

அவள் மனப்பூர்வமாக ஒத்துக் கொண்டாள். அதற்குப் பிறகு இருவரும் சாருமதியிடம் பேசினார்கள். ஊருக்குப் போன பின் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றித் திட்டமிட்டுக் கொண்டார்கள்.

21



அடுத்த வாரத்தில் ஒரு நாள்.. மாலை.

"அப்பா...!" என்று வந்து நின்றாள் சந்திரிகா.

"என்னம்மா?" என்றார்.

"அப்பா.. சாருமதி ஆன்ட்டி ரெஸிடென்ஷியலா இருக்கிறதை விட்டுட்டு அவங்க வீட்டிலிருந்து வரேங்கறாங்க..!" என்றாள்.

"ஓ..! ஏனாம்?" என்றார்.

"இல்லப்பா.. கேசவன் சாருக்கு உடம்பு சரியில்லாதவரை ஹெல்ப்பிற்கு ஆள் தேவையிருந்தது. இப்பவும் எதுக்கு வீட்டோட உட்கார்ந்துக் கிட்டிருக்காளாம்னு அவங்க சொந்தக்காரங்க பேசிக்கிறாங்களாம்."

கேசவன் சற்று நேரம் சிந்தனையிலாழ்ந்தார். பிறகு, "அது சரிம்மா.. நம்மளாலே அவங்களுக்கு எதுக்குச் சிரமம்? ஆனா.. அவங்க ஹெல்ப் நமக்கும் தேவையாத்தான் இருக்கு!" என்றார்.

"சரிம்மா.. ஆபிஸ் டைம் மாதிரி ஏதாவது குடுத்தா.. வருவாங்களா?" என்று கேட்டார்.

"அது வேண்ணா வரேங்கறாங்க!" என்றாள்.

"சரி... அப்படியே ஃபிக்ஸ் பண்ணிடு," என்றார்.

மாலை வேளைகளில் சந்திரியும் நேரம் கழித்து வந்தாள். அதனால் அவரும் வழக்கம் போல் கடைக்கு வர ஆரம்பித்தார்.

இதற்கு இடையில் ராம்பிரகாஷ், சாருமதியிடம் பேசிப் பேசித் தயார் செய்தார். கேசவன் மட்டும் பிடி கொடுக்காமல் நழுவிக் கொண்டிருந்தார். இத்தனைக்கும் சாருமதியை மனதில் வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று யாரும் கோடிட்டுக் காட்டவில்லை.

திடீரென்று ஒரு நாள் அக்காவிடம், 'அக்கா.. இனி டிலே பண்ண வேண்டாம்னு நினைக்கிறேன். சந்திரிகாவுக்குக் கல்யாணம் செஞ்சர்லாம்னு பார்க்கறேன்,'' என்றார்.

ரங்கசாமியின் வீடு தேடிப் போனார். அவரிடம், ''சார்.. கைம்மாறு கேட்பேன். செய்யணும்னு சொன்னீங்களே... நீங்க கேட்கறதுக்கு முன்னாடியே நானே குடுத்தர்லாம்னு முடிவு செஞ்சுட்டேன்...'' என்றார்.

ரங்கசாமி மிகவும் வரவேற்று உபசரித்தார்.

பிறகு, ''நான் என்ன கேட்கப் போறேன்னு.. நினைச்சீங்க...'' என்று கேட்டார்.

''நீங்க கேட்கறதுக்கு முன்னாலேயே நானே கேட்டுர்றேன். என் மகளை இந்த வீட்டு மருமகளா ஏத்துக்கிட்டு வாழ வைக்கணும்,'' என்று கைகூப்பினார்.

ரங்கசாமி அவர் தோளைத் தட்டிக் கொடுத்துவிட்டுச் சிரித்தார்.

''அது நீங்க கேக்கறதுக்கு முன்னாலயே முடிவாயிடுச்சு. ஆனா.. நான் கேக்கறது வேற விஷயமாச்சே,'' என்றார்.

''சொல்லுங்க.. என்னால முடிஞ்ச வரைக்கும் பார்க்கறேன்,'' என்றார் கேசவன்.

''உங்களால முடியக் கூடியதுதான்... நான் கேக்கறதெல்லாம் உங்க பொண்ணு இங்க வரும்போது.. எந்தக் கவலையும்



இல்லாம நிம்மதியா... வரணும்.. இங்க நிம்மதியா.. இருக்கணும். அதுக்கு வழி செய்ங்க!'' என்றார்.

கேசவன் திகைத்துப் போனார்.

''ஆமாங்க.. சம்பந்தி.. உங்களைப் பொறுப்பான கைகள்ல ஒப்படைச்சிட்டு வரணும்னு உங்க பொண்ணு நினைக்குது. என் மகனும் நினைக்கிறான். நானும் அது தப்பில்லைன்னுதான் நினைக்கிறேன்,'' என்றார்.

கேசவனுக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. வாயடைத்துப் போனார்.

''இதெல்லாம்.. நடக்கற விஷயங்களா?'' என்றார்.

''நடக்கணும்னு நெனைக்குதுங்களே ரெண்டும், என்ன செய்யறது?'' என்று சிரித்தார்.

''அது சரி.. யோசிக்கிறதுக்கு டைம் எடுத்துக்கங்க. ஆனா, அதுக்கு முன்னாடி பிரேம்குமார், சந்திரிகா கல்யாணத்துக்கு ஒரு நிச்சயதார்த்தம் நடத்திக்கலாம். ஆறு மாசம் தள்ளிக் கல்யாணம் வச்சுக்கலாம்,'' என்று முடிவாக அறிவித்தார்.

அப்படியே நிச்சயதார்த்தம் நடத்தினார்கள்.

ரங்கசாமி உதவிக்கு வரக்கூடும் என்று சந்திரிகா எதிர் பார்க்கவே யில்லை.

''எப்படி பிரேம்?'' என்று ஆச்சரியப்பட்டாள்.

உண்மையில் பிரேம்குமார் அப்பாவிடம் விவரமாகப் பேசினான்.

''அப்பா.. நீங்களும் அம்மாவும் இங்க பிரியமாய் இருக்கிறதைப் பார்க்கும்போது, நம்ம அப்பாவுக்கு இப்படி இல்லையேங்கற ஏக்கம் கூடச் சந்திரிகாவுக்கு வரலாம். ஏன் என்கூட மனசார நிம்மதியா வாழ முடியுமான்னுகூட எனக்குச் சந்தேகம்தான்...'' என்றான்.

பிறகு மெதுவாகச் சாருமதியைப் பற்றிச் சொன்னான். அதுவும் ரங்கசாமி, "அது சரிப்பா.. இத்தனை பெரிய பெண்ணை மகளா ஏத்துக்கறதுக்கு ஆள் வேணுமே?" என்று கேட்டபோது பொருத்தமான இடத்தில் எடுத்துச் சொன்னான்.

சாருமதி பற்றிக் கேட்டதும், அவரும் ஏற்றுக் கொண்டார். "தப்பில்லை!" என்ற முடிவுக்கு வந்தார்.

பேச வந்தவுடன் ஒரு நாள் கேசவனே சாருமதியிடம் பேசினார். "மேடம்.. சம்மதிச்சிட்டீங்களா.. என்ன?" என்று.

சாருமதி புன்னகைத்தார்.

"உங்களோட கருத்தைத் தெரிஞ்சிகிட்டதுக்கப்புறம் தான்," என்றார் தயக்கமாக.

வாழ்க்கையில் அடிபட்ட இரண்டு உள்ளங்களும் வெகுவாகப் பரிசீலித்த பின் சம்மதம் தெரிவித்தார்கள்.

ஒரே மாதத்தில் கல்யாணம் வைத்தார்கள். காலையில் சிம்பிளாக ஒரு கோவிலில் கல்யாணம். மாலையில் ஒரு கிராண்ட் ரிசப்ஷன்.

ராம்பிரகாஷ் தம்பதி சாருமதியைத் தாரை வார்த்துக் கொடுக்க, கேசவனின் உறவினர்களில் ஒரு வயதான தம்பதியர் தாரை வாங்கிக் கொண்டார்கள்.

இது கோயமுத்தூரில் ஒரு செய்தியாகக் கூட ஆனது. சந்திரிகாவைப் பேட்டி கண்டார்கள்.

"இது எங்கள் குடும்ப விஷயம். சொந்த விஷயம். ஆனால், மனித வாழ்க்கை எல்லா உணர்வுகளையும் நியாயமான முறையில் முறைப்படுத்திக்கிறதிலே தப்பில்லை.. நானும் நிம்மதியா இருக்க முடியும். அப்பாவும் நிம்மதியா இருக்க முடியும்னு தான் இந்த ஏற்பாடு," என்று சுருக்கமாக முடித்துக் கொண்டாள்.

ராம்பிரகாஷும் பிரேம்குமாரும் ஏற்பாடுகளை ஜமாய்த் தார்கள்.



பெண் வீட்டு அழைப்பு, மாப்பிள்ளை வீட்டு அழைப்பு என்று இரண்டு நாட்கள் வேகமாக ஓடின. ராம்பிரகாஷிடம், கேசவன், 'பாருப்பா... இதுக ரெண்டும் பண்ற கூத்தைப் பார்த்தா.. எனக்குச் சிரிப்பா.. வருது.. ஏதாவது முதலிரவு கிரவுன்னு வெளிச்சம் போடப் போறாங்கப்பா.. ஜாக்கிரதை." என்று எச்சரித்து வைத்திருந்தார்.

சவிதா, கவிதா, சத்யாவிற்கு.. இதில் கொஞ்சம் சம்மதம். வெகுவாகப் பயம் இருந்தது. ஆனால், அவர்களது கணவன் மார் சாருமதியின் மீது பிரியம் வைத்திருந்தார்கள். அவர் களும் முன்னால் நின்று செய்தார்கள்.

மெது மெதுவாகத் திட்டமிட்டு இத்தனையும் செய்து முடித்த பிரேம்குமாரை நினைத்தால்.. சந்திரிகாவுக்கு ஆச்சரி யம்தான்.

திருமணம் முடிந்து மூன்று நாட்கள் ஆகியிருக்கும். உறவினர்கள் கூட்டம் ஓய்ந்திருந்தது. ராம்பிரகாஷும், பிரேம் குமாரும் நாளுக்கான விஷயம் நாகரீகமாகக் கையாளப்பட வேண்டும் என்ற சூழலை ஏற்படுத்தியிருந்தார்கள்.

அன்றைக்கு மாடியில் ஹாலில் அமர்ந்து கொண்டிருந்தார் கேசவன்.

"அப்பா...!" என்று வந்தாள் சந்திரிகா.

"என்னம்மா..." என்றார் அன்புடன்.

அவர் அருகில் அமர்ந்து கொண்டாள்.

"அப்பா... சந்திரிகா... சந்தோஷத்துக்காகத்தான் ஒத்துக் கிட்டேன்னு பிரேம்கிட்டே சொன்னீங்களாம்," என்றாள்.

"ஆமாம்மா," என்றார்.

"ஆனா.. இப்படி யோசிக்கப் பாருங்க. சாரும்மாவை நெனைச்சுப் பாருங்க. அவங்க அவங்களுக்காகவே நேசிக்கப் படுவதற்கு, எல்லாத் தகுதிகளும் உள்ளவங்கப்பா," என்றாள்.

அவர் திகைத்துப் போய் மகளைப் பார்த்தார்.

"ஆமாம்ப்பா.. நமக்காக இல்லாமல் ஏதோ ஒரு காரணத்துக்காகத்தான் நாம தேவைப்படறோம்ங்கற எண்ணம் அவங்க மனசை வரலாமாப்பா?" என்றாள்.

"ஓ..." என்றார்.

தனக்கே பாடம் எடுக்கிற மகளை வாஞ்சையாய்ப் பார்த்தார்.

"சொல்லும்மா.. நீ எப்படிச் சொல்றயோ அப்படி இருக்கறேன்."

முதல் நாள் நடந்த நிகழ்வு அவருக்கு நினைவு வந்தது. சாருமதி அவர்களது அறையில் துணிமணிகள் மடித்துக் கொண்டிருந்தார். அப்பா சேரில் அமர்ந்து அதைப் பார்த்துக் கொண்டு ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.

"அப்பா..." என்று ஏதோ கேட்க வந்த சந்திரிகா, அவர்கள் இருவர் மட்டுமே இருப்பதைப் பார்த்து.. "நான் அப்புறம் வரேன்," என்று நகர்ந்தாள்.

சாருமதி, "சந்திரி.. இங்க வா," என்று அழைத்தார்.

"ரொம்ப டிப்ளமாடிக்கா நடக்கறதா.. நினைப்பாக்கும்!" என்று சிரித்தார்.

"அம்மா... அப்பாகிட்ட எந்த டிப்ளமஸியும் தேவையில்லை என்ன?" என்று புன்னகைத்தார்.

"சரிம்மா..." என்று சந்திரி உடனே முகம் மலர்ந்தாள். அது நினைவுக்கு வரவும், கேசவன் மகளிடம் சொன்னார்.

"ஆமா... சந்திரிகா.. நீ சொல்றது சரிதான். சாரு அந்த மாதிரி வேடிதான். அன்பை அள்ளிக் கொடுத்து.. ஆனா.. பதில் அன்பு கிடைக்காமப் போனவ. ஷி.. டிசர்வ்ஸ் அஃபெக்ஷன்!" என்றார் மெல்லிய குரலில்.

"வெரி குட்பா!" என்று சிரித்தாள் சந்திரிகா. "அதனாலே.. உங்க உலகத்துல சந்திரிகாவுக்கு இடமே இல்லை. உங்களுக்கு இப்பத்தான் முப்பது வயசாம்.. அம்மாவுக்கு இருபத்தைஞ்சாம்!" என்று சிரித்தாள்.



கேசவனும் சிரித்தார். "நல்லா.. ஆச்சம்மா.. அப்ப உனக்கு வாலிபாப்தான் வாங்கித் தரணும்!" என்று சிரித்தார்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, "சரிப்பா.. குட்நைட்," என்று கிளம்பினாள் சந்திரிகா.

"சந்திரிகா," என்றழைத்த கேசவன், "எப்படிம்மா.. நீ இந்த அளவுக்கு யோசிக்கற பெரிய மனுஷியானே?" என்றார் வியப்பாக.

"அப்பா.. ஜாக்கிரதை. நான் இப்ப உங்க மகள் இல்லை. உங்களோட தாய்.. தெரியுமா?" என்று சிரித்து விட்டுப் போனாள்.

கேசவன் நிஜமாக நெகிழ்ந்து போனார். "உண்மைதான். தாய்.. தான்.. நீ," என்று நினைத்துக் கொண்டார்.

சாருமதியைத் தான் எப்படி நடத்த வேண்டும் என்று அவ்வளவு அழகாகக் கோடி காட்டி விட்டாள். 'ஆமாம்.. எல்லாருக்கும் இருத்தலுக்கு ஓர் அர்த்தம் வேண்டும்,' என்று நினைத்துக் கொண்டார்.

மகளின் பக்குவம் அவருக்கு வியப்பைத் தந்தது என்றால் சாருமதியின் பக்குவம் அதைவிட வியப்பைத் தந்தது.

அன்றைக்கு ஒரு மணி நேரத்துக்கு மேல் திருமண நிகழ்வுகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

பிரேம்குமாரும், சந்திரிகாவும் தங்களுக்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள். அப்போது எதிர்பாராத விதமாகச் சாருமதி ஒன்றைச் சொன்னார்.

"உண்மையில.. இந்தக் கல்யாணத்துல.. சந்திரிகா.. எனக்கு மகளாவாங்கறதுக்காகத்தான்.. நான் ஒத்துக்கிட்டேன்," என்றார்.

கேசவன் இடிஇடியென்று சிரித்தார். பிறகு மகள் சொன்னதைச் சொன்னார்.

"நீயென்ன... சாரு.. இப்படிச் சொல்றே? அப்ப எனக்காக ஒத்துக்கலையா?" என்றார்.

என்னதான் கம்பீரத்தோடு நடந்து கொண்டாலும், காட்டினாலும் அந்தக் கணத்தில் அவரும் ஒரு பெண்தான் என்பதைக் காட்டினார்.

முகம் சிவந்து போனது. "உங்களைப் பிடிக்காம ஒத்துப் பேனா.." என்றார். "பிடித்துத்தான் சம்மதித்தேன்," என்றார்.

"ஆனா.. கூடவே.. சந்திரி போனஸ் இல்லே," என்று கேசவன் மீண்டும் சிரித்தார்.

"சாரு," என்றார்.

"ம்," என்றார்.

"நீயும் ஒரு அற்புதப் பெண்தான். அன்பின் வடிவம். எப்பவும் போல நீ உன் சிஸ்டர்ஸுக்கும் செய்யலாம். அவங்களுக்கும் இது பிறந்த வீடுதான். அதோடு.. இந்தக் குடும்பத்தையும்.. உங்கிட்ட ஒப்படைக்கிறேன். பார்த்துக்க," என்றார்.

சாருமதி உணர்ச்சியுடன் தலையாட்டினார்.

"என்னையும்தான்.. ஒப்படைக்கிறேன். கவனிச்சுக்கம்மா," என்று குறும்பாகச் சிரித்தார்.

சந்திரிகா அன்று காலையில், "சாரும்மா.. அப்பாவுக்கு மூடு வந்து ஜோக் அடிச்சாருன்னா.. நெனைக்க நெனைக்க சிரிக்கணும் தெரியுமா? பயங்கர ஜாலி டைப்!" என்று சிரித்தது நினைவுக்கு வந்தது.

சாருமதி கேசவனிடம் அதைச் சொல்லவும், இரண்டு பேரும் சிரித்துக் கொண்டார்கள்.

## 22



"குட்மார்னிங்.. சந்திரிகா!" என்று அடுத்த நாள் காலை அறைக்கே தேநீரை எடுத்துக் கொண்டு சாருமதி வரவும்,

"அம்மா. நீங்களா? ப்ளீஸ்.. டோன்ட் ஸ்ட்ரெய்ன் யுவர்செல்ப்!" என்றாள் சந்திரிகா வியப்பாய்.



"நோ.. நோ.. இட்ஸ் எ ப்ளஷர்!" என்று புன்னகைத்தார் சாருமதி.

"சீக்கிரம் குளிச்சிட்டு வா," என்று பரபரப்பாகச் சமையலை மேற்பார்வை பார்க்கப் போய்விட்டார்.

சந்திரிகாவும் விரைவாகக் குளித்து உதவி செய்யப் போனாள். சமையல்காரர்களுக்கு மெனு சொல்லிவிட்டுக் கேசவனின் தேவைகளைக் கவனிக்கச் சாருமதி மாடிக்குப் போனபோது, அத்தையும், சந்திரிகாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். நிறைவாய் உணர்ந்தார்கள்.

சற்று நேரம் கழித்து அவர்கள் அறைக்குப் போன சந்திரிகா, "அம்மா.. அந்தப் பீரோவில் உங்களுக்காக நானும், அப்பாவுமா செலக்ட் செஞ்ச புடவைங்க இருக்கு. நீங்க கல்யாணப் புடவைக்காக அளவு ப்ளவுஸ் குடுத்தீங்களே.. அதை அளவு வைச்சு... ப்ளவுஸ் கூடத் தைக்க வைச்சாச்சு. அதைத்தான் நீங்க உடுத்தணும்," என்று காட்டினாள்.

சாருமதி நெகிழ்ந்து போனார்.

"அப்பா.. இன்னைக்கு பிரேம் வீட்டில் ரெண்டு பேருக்கும் விருந்து.. மத்தியானம் ஒரு மணிக்கு. பிரேம் வந்து பிக்கப் செஞ்சுடுவார். அப்பா! என் பிரண்ட்ஸ் எல்லாம் ரொம்ப நாளாக் கூப்பிடறாங்க. அவங்களோட ஒரு சினிமாவுக்குப் போயிட்டு மத்தியானம் லஞ்சுக்கு அங்க வந்துடறேன். என்ன?" என்று புறப்பட்டாள்.

கதவு வரை போனவளை அழைத்து, "சந்திரி.. பணம் வேண்டாமா? இந்தா.." என்று அப்பா நீட்டவும், "தாங்க்ஸ்ப்பா..." என்று வாங்கிக் கொண்டாள்.

"அம்மா.. டேக் கேர்," என்று கையசைத்து விட்டுப் போனாள்.

போகிற மகளைப் பெருமையாய்ப் பார்த்துக் கொண்டு திரும்பிய கேசவன் அதே அன்பு மனைவியின் முகத்திலும்

தெரியக் கண்டு திருப்தியானார். ஏதோ நினைத்தவர் போல், "இந்தாம்மா.. உனக்கும்.. ஒரு அமௌன்ட் செலவுக்குக் கையில வைச்சுக்க..." என்று பணத்தைத் திணித்தார்.

"எனக்கு.. எனக்கு.. பணம் இருக்கு." என்று திணறினார் சாருமதி.

கேசவன் லேசாக அவரை அணைத்துக் கொண்டு சொன்னார்.

"பாரு.. சாரு.. போதும். நீ எல்லாருக்கும் செய்தது போதும். உன் வாடகை மத்த பணம் எல்லாத்தையும் அக்கவுண்ட்ல வச்சுக்க.. உன் தங்கைகளுக்குச் செய்யறதுக்கு ஆகும். இங்கயும் இரண்டு அபார்ட்மென்ட் வாடகை உனக்காம். மகள் ஒதுக்கி வச்சிருக்கா. அப்புறம் எது வேணும்னாலும்.. என்கிட்ட கேக்கணும். தெரியுதா?" என்றார்.

சாருமதி நம்ப முடியாதவரைப் போல் அவரைப் பார்த்தார். அவர் இரு கண்களிலும் நீர் நிறைந்து விட்டது.

கேசவனின் தோளில் முகம் புதைத்துக் கொண்டு கண்ணீர் வர அழுதார்.

"என்ன.. சாரு.. என்ன ஆச்சு?" என்று கேசவன் பதறிப் போனார். சற்று அழுத சாருமதி அவர் பதற்றம் பார்த்துக் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

"இல்லைங்க.. எனக்குப் பணத்துக்கு எப்பவும் குறைவு இருக்கலே. ஆனா.. அம்மா அப்பா.. போனப்புறம் இப்படிக் கேக்கறதுக்குக் கூட ஆள்.. இல்லாமப் போச்சு. அதுதான்..." என்று தழுதழுத்தார்.

"ஓ.." என்று ஒரு கணம் உருகிப் போனார் கேசவன். சாருமதியின் தலையை அன்புடன் கோதிக் கொடுத்தார்.

"மறந்துரு.. சாருமதி.. அதெல்லாம் முடிஞ்சு போச்சு," என்று தேற்றினார். பிறகு சொன்னார். "ஆனா.. இந்த சந்திரி.. சின்னவளா இருக்கறப்பவே, நான் குடுக்கிற பாக்கெட் மணியில சேமிச்சு வச்சு.. பரிசுகள் வாங்கிக் கொடுப்பா," என்றார்.



தன் தங்கைகள் ஒரு நாளும் அப்படியெல்லாம் நினைத்தது கூட இல்லை என்பதைச் சாருமதி சொல்லவில்லை. நினைத்துக் கொண்டார்.

கேசவன் சாருமதியைத் தன்னருகில் அமர்த்திக் கொண்டார். "சாரு.. உன்னுடைய தியாகங்களுக்காகத்தான், கடவுள் சந்திரியை மகளாகக் குடுத்திருக்கார். பாரு, என்னைத் துளைச்செடுத்து.. அப்பா, சாரும்மாகிட்டே எத்தனை புடவை இருந்தா என்ன, நீங்க எடுத்துக் கொடுத்தாதான் சந்தோஷம்னு கூப்பிட்டுப் போய் என்னையே செலக்ட் பண்ணச் சொல்லி..." என்று சிரித்தார்.

"அம்மா.. அம்மா..ன்னு அவளுக்குத்தான் ஒரே த்ரில்!" என்று சிரித்தார். பிறகு, "அதே பொண்ணு எனக்கு நேத்து வந்து மறைமுகமா... அட்வைஸ். உனக்குக் குறை ஒண்ணும் வச்சரக் கூடாதாம். சந்தோஷமா நடத்தணும், அப்படி இப்படின்னு..." என்று சிரித்தார்.

பிறகு மெதுவாகத் திரும்பிச் சாருமதியை ஆழமாக ஒரு பார்வை பார்த்தார். "சாரு.. உனக்கொண்ணும் குறையில்லையே. வீடு பிடிச்சிருக்கா.. சூழல் பிடிச்சருக்குதானே?" என்றார்.

சாருமதி சற்றே வெட்கத்துடன் அவரை ஒரு முறை நிமிர்ந்து பார்த்தார். பிறகு அவர் மார்பில் முகம் புதைத்துக் கொண்டார். மெலிதான குரலில் சொன்னார்.

"குறையா? இங்கேயா? பசியா இருந்தவளுக்கு அமிர்தமே கிடைச்ச மாதிரி.. திகைச்சுப் போயிருக்கிறேன். வெரி.. லக்கி.. ஐ..ம்!" என்றார்.

கேசவன், "வெரி லக்கி வீ ஆர்னு சொல்லு," என்று திருத்தினார். பிறகு.. "சரி.. சாரு.. நீ போய்க் கொஞ்ச நேரம் அக்காகிட்டே பேசிட்டு வா. நான் ஒரு சின்னத் தூக்கம் போடறேன்," என்று சாய்ந்து கொண்டார்.

"சரிங்க... என்று சாருமதி எழுந்தார். கேசவன் மீண்டும் சிரித்தார். "சாரு.. இந்தச் சந்திரியைப் பார்த்தியா. அவ இருந்தா.. நாம ஃப்ரீயா இருக்க மாட்டமாம். தம்புகிட்டே சொல்லி இவளே டிக்கெட்டை வாங்கிட்டு ஃபிரண்ட்சையெல்லாம் ஃபோன் பண்ணி வரச் சொல்லிட்டு ஃபிரண்ட்ஸ் கூப்பிடறாங்கன்னு பொய் வேற. ஐயோ.. ஐயோ!" என்று சிரித்தார்.

சாருமதியும் "ஸ்வீட் கேர்ள்!" என்று புன்னகைத்து விட்டுக் கீழிறங்கிப் போனார்.

ரங்கசாமியின் வீட்டில் விருந்துக்கு ராம் பிரகாஷையும் அழைத்திருந்தார்கள்.

கலகலப்பாக இருந்தது. உணவுண்டு முடித்த பின், 'சித்த பேசிட்டு இருங்கப்பா. நான் ஒரு சின்னத் தூக்கம் போடறேன்," என்று ரங்கசாமி உறங்கப் போனார்.

"உட்காரம்மா. நீ கேசவன்கிட்டே.. கொஞ்சம் பேசலாம்," என்று ராம் பிரகாஷ் இருவரையும் தன் எதிரில் உட்கார வைத்துக் கொண்டார்.

சந்திரிகா ஸ்டோர் ரூமில் சுண்ணாம்பு டப்பாவைத் தேடிக் கொண்டிருந்தாள். பிரேம்குமார் வந்து.. "அந்த பீரோவுக்குப் பின்னால் இருக்கும் பாரு..!" என்று எடுத்துக் கொடுத்தான்.

வெற்றிலையைத் தட்டில் வைத்துக் கொண்டிருந்த சந்திரிகாவிடம் "ஏன், சந்திரி.. உங்கப்பாவுக்கும், சாரு ஆன்ட்டிக்கும் ஏதோ சடார்னு நாலைஞ்சு வயசு குறைஞ்சு போன மாதிரி இல்லை," என்றான் புன்னகையுடன்.

சந்திரிகா அவன் முகம் பார்த்துப் புன்னகைத்து, "ஆமாம்," என்பது போல் தலையாட்டிக் கொண்டு வெளியே வர, அந்த நேரம் ராம்பிரகாஷும் அப்பாவும் பேசிக் கொள்வது கேட்டு நின்றாள்.

"என்னப்பா.. கேசவா.. சடார்னு ஆளு அஞ்சு வயசு குறைஞ்ச மாதிரி ஆயிட்டே!" என்று அதையே சொல்லிக்



கொண்டு கலாட்டா செய்தார். கேசவன் சிரித்துக் கொண்டார். பிறகு சாருமதியிடம், "என்ன, சாரு! உங்கண்ணன் என்னமோ கேக்கறானே, சொல்லு." என்று கிண்டல் செய்தார்.

சாருமதி முகம் சிவக்கத் தலை குனிந்து கொண்டார்.

"சந்திரிகா.. ஒரே அட்வைஸ். எனக்கு முப்பது வயதுதான் ஆச்சாம். உன் சிஸ்டருக்கு இருபத்தைஞ்சுதான் ஆச்சன்னு நெனைச்சுக்கணுமாம். சாரும்மாவை அவங்களுக்காகவே நேசிக்கணுமாம். அதுக்கான எல்லாத் தகுதியும் அவங்களுக்கு இருக்காம்," என்று சிரித்தார்.

ராம் பிரகாஷும் சாருமதியும் கண்களை அகல விரித்துக் கொண்டு கேட்டார்கள் என்றால், பிரேம்குமார்,

"ம்.. அப்படியா.. சந்திரிகா!" என்பது போல் அவளைப் பார்க்கவும், அவள் மீண்டும் அவனைப் பார்த்து வாஞ்சையாய்ப் புன்னகைத்தாள். கேசவன் மீண்டும் தொடர்ந்தார்.

"எப்பம்மா.. நீ இவ்வளவு பெரிய மனுஷியா ஆனேன்னு கேட்கறேன். அப்பா.. ஜாக்கிரதை.. இப்ப நான் மக இல்லை. உங்க தாய், தெரியுதாங்கறா. ஒரேயடியா மிரட்டறாப்பா," என்று நெகிழ்ந்த குரலில் சொல்லவும், ராம்பிரகாஷும், சாருமதியும் கனத்த அமைதியில் அமர்ந்து கொண்டார்கள்.

பிரேம்குமார் தன் இடக் கையால் சந்திரிகாவைத் தோளோடு இறுக்கிக் கொண்டான்.

கேசவன் தொடர்ந்தார். "ஆளாளுக்கு மிரட்டறீங்கப்பா.. சாரு.. ஏதாவது குறையிருந்தா.. சொல்லிடம்மா.. மாத்திக்கறேன்," என்று மீண்டும் கிண்டல் செய்தார். "என்னடா.. டாக்டர்.. நீ ஏதோ நம்ம வகையில உனக்கு ஒரு வருவாய் வந்துட்டிருந்தது. இப்பப் பாரு. சாரு நமக்கு பிரஷர் ஏறாம பார்த்துக்குவாப்ல. உனக்கு வருமானத்துல ஒரு துண்டு விழுந்துக்க போ," என்று ஒரு இளைஞனைப் போலச்

சிரிப்பதை ராம்பிரகாஷ் வாஞ்சையாய்ப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார்.

பிறகு...

"சும்மாயிருங்க!" என்று வெட்கத்துடன் சாருமதி சிரிப்பதைப் பார்த்துச் சந்திரிகா தன் வருங்காலக் கணவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"ஏன் பிரேம்... சாரும்மா வெட்கப்படும்போது எவ்வளவு அழகாக இருக்காங்க, இல்லை. அப்பாவைக் கூட இப்படிப் பார்க்கறப்போ... எவ்வளவு நல்லா இருக்கு," என்று கசிந்துருகினாள்.

பிரேம்குமார் சுற்றுப்புறம் மறந்தான். லேசாக அவள் நெற்றியில் இதழ் பதித்து விட்டுச் சொன்னான்.

"எனக்கு அதெல்லாத்தையும்... விட... என் சந்திரிகா... எப்படி இவ்வளவு உயரத்துக்குப் போனான்னு ஒரே மலைப்பா... இருக்கு!" என்றான் - உணர்ச்சிகரமான குரலில். அவன் முகம் போன விதம் பார்த்து, "ஐயோ... நின்னா ஆபத்துப்பா!" என்று விலகி ஓடிவிட்டாள்.

வீட்டிலும் சூழல் மாறியிருந்தது.

அப்பாவும் சந்திரிகாவும் சேர்ந்து கொண்டு சாருமதியைக் கலாட்டா செய்து கொள்வார்கள். சில நேரங்களில் சாருமதியும் அப்பாவும் சேர்ந்து கொண்டு அவளைக் கிண்டல் செய்தார்கள்.

அன்று காலை உணவுக்கு வந்து அமர்ந்த கேசவன், "சாரு! இன்னைக்கு யாரு டிபன் செய்தது, நீயா?" என்றார்.

"ஆமா. உங்களுக்குப் பிடிச்ச இட்லி உப்புமா!" என்றாள் அவள்.

"சந்திரி... எதுக்கும் ஒரு தடவைக்கு இரண்டு தடவையா பிரே பண்ணிக்கலாமா?" என்று சிரித்தார்.

"போச்சுப்பா... அம்மா வந்ததுக்கப்புறம்தான் ஆளே நீங்க செழிப்பா இருக்கறீங்களாம். ராம்பிரகாஷ் அங்கிள் சொல்றாரு," என்றாள் சந்திரிகா.



"அவன் சொல்வான்ம்மா... ஏன்னா... சாரு அவன் சிஸ்டராச்சே," என்று மீண்டும் சிரித்தார்.

அந்த நேரம் அத்தை வரவும் கேசவன் அமைதியாகி விட்டார்.

"என்னப்பா... என்ன, புள்ளையை எதுக்கு மிரட்டறே..." என்று அவளும் கலாட்டாவில் கலந்து கொள்ள, கேசவன் ஆச்சர்யமானார்.

பிறகு வீடு, மீண்டும் கலகலப்பாகியது.

அத்தை கேசவனிடம் தனியாக, "ஏம்ப்பா... மீனா... இருந்தப்ப இருந்த மாதிரி வீட்டுல பழைய களை வந்திருக்கல்ல!" என்றாள்.

ஆனால் பிரச்னைகளும் முளைத்தன. சாருமதியின் தங்கைகளால்.

23



கவிதாவுக்கும், சவிதாவுக்கும் இவ்வளவு காலம் தங்களுக்கு என்று வாழ்ந்த அக்கா தனக்கென்று ஒரு வாழ்க்கை அமைத்துக் கொண்டது ஒரு அடிதான். ஆனால் கல்யாணத்தின் போதும் அதற்குப் பிறகும் கேசவனும், சந்திரிகாவும் அவர்களுக்கு எந்தக் குறையும் வைக்காமல் நிறைவாகவே செய்ததால் சற்றுக் குளிர்ந்து போனார்கள்.

கவிதாவின் மாமியார் அப்படியே பிளேட்டைத் திருப்பிப் போட்டு, "பரவாயில்லை... உங்கக்கா... அதிர்ஷ்டசாலிதான். லேட்டானா கூட நல்ல இடமாத்தான் கிடைச்சிருக்கு!" என்று சிலாகித்துக் கொண்டார்.

கவிதா அதை வந்து அக்காவிடம் ரிலே செய்ய, அவர் கசப்பாகப் புன்னகைத்தார்.

அன்றைக்கும், அப்படித்தான்.

கேசவனும், சந்திரிகாவும் கடைக்குப் போயிருந்தார்கள்.

காலையிலேயே வந்த கவிதா புறப்படாமல் இருந்தாள். உணவு நேரம் இருக்கும். சந்திரிகாவின் அறைக்குள் நுழைந்தவள் சந்திரிகாவின் டேப் ரெக்கார்டரை எடுத்துக் கொண்டு வந்து கீழ்ஹாலில் அமர்ந்து பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

சாருமதி சமையலில் மும்முரமாக இருந்ததால், அதைக் கவனிக்கவில்லை.

சந்திரிகா அந்த டேப்ரிக்கார்டரை மிகவும் பிரியமாய் வைத்திருப்பாள். அப்பா அவளது பதினெட்டாவது பிறந்த நாளுக்கு வாங்கிக் கொடுத்ததாம்.

மொட்டை மாடியில், ஹாலில், படுக்கையறையில் எப்போது நேரம் கிடைத்தாலும் அது அவளுடன் இருக்கும்.

எந்தவிதமான அறிவிப்பும் இல்லாமல், அதை எடுத்துக் கொண்டு வந்து கவிதா கேட்டுக் கொண்டிருந்ததைச் சாருமதி அப்போதுதான் பார்த்தார்.

"கவிதா.. இது சந்திரியோடதாச்சே. அவ ரூம்ல போய் எடுத்துட்டு வந்தியா, என்ன?" என்றார் கடுப்பாய்.

"ஆமா.. இதில் என்ன இருக்கு?" என்றாள் கவிதா அலட்சியமாக.

"என்ன இருக்கா? சந்திரிகாவோட எந்தப் பொருளையும் எடுக்கறதுன்னா மாமாவே யோசிப்பார். நீயென்ன நீ?" என்றார்.

கவிதா உடனே கோபமாக, "என்னக்கா.. எல்லாரும் என்னமோ சந்திரி.. சந்திரின்னு உருகறீங்க... நீயும் இந்த வீட்டு எஜமானிதான், தெரிஞ்சுக்கோ!" என்றாள் குரலை உயர்த்தி.

சரியாக அந்த நேரம் உணவுக்காக வந்த சந்திரிகாவும், அப்பாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு வெளியே தயங்கி நின்றார்கள்.



சாருமதி டேப் ரெக்கார்டரை ஆஃப் செய்து கையில் எடுத்துக் கொண்டார்.

"பாரு.. கவிதா.. சந்திரிகாவைப் பத்திப் பேசறதுக்கு உனக்கு எந்தத் தகுதியும் கிடையாது. தெரியுதா?" என்றார்.

"ஏன் அவ என்ன அப்படி உசத்தி?" என்றாள் காட்டமாக.

"ஏன்னா.. அவதான் சொன்னாலும் சொல்லவிட்டாலும் இந்த வீட்டோட எஜமானி. ஏன்னா அவ யாரையும் அதிகாரம் செய்யறதில்லை. அன்புதான் செலுத்தறா. உங்களை மாதிரி தனக்கு என்ன ஆகணும்னு பார்க்கறதில்லை. மாமாவுக்கு உடம்பு சரியில்லாமல் போனப்ப எப்படி எல்லாத்தையும் சமாளிச்சான்னு உனக்குத் தெரியாது. என்னை எவ்வளவு நேசிக்கறான்னு உனக்குத் தெரியாது. உனக்கு அதெல்லாம் புரியவும் புரியாது." என்றார்.

கவிதா சற்றும் சளைக்காமல், "ஜாக்கிரதைக்கா. இது ஒரு வகையான டெக்னிக். உன்னை நல்லா எக்ஸ்ப்ளாய்ட் செய்யறா!" என்றாள்.

சந்திரிகா திகைத்துப் போய் அப்பாவைப் பார்த்தாள். அவர் வேதனையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

சாருமதி யாரும் எதிர்பாராத விதமாகக் கவிதாவை ஓங்கி ஒரு அறை அறைந்தார். "கவிதா, இந்தக் குட்டிக் கலகம் செய்யற வேலையெல்லாம் இன்னையோட நிறுத்திக்கோ. இந்தக் குடும்பம், ஒரு பாசமான குடும்பம். உன் எல்லை தெரிஞ்சு நடக்கறதுன்னா.. வா.. இல்லைன்னா.. வராதே.. ஏதோ உங்களுக்கும் வந்துட்டுப் போறதுக்குப் பிறந்த வீடுன்னு ஒன்னு இருந்தாத்தான் மதிப்பு. புரிஞ்சுக்கோ. நான் இந்த வீட்டில் வேலைக்காரின்னு நெனச்சாலும்.. சரி.. அப்படி இருக்கறதுல எனக்கு சந்தோஷம்தான். இனமே.. சந்திரிகாவைப் பத்தி எதுவும் பேசாதே!" என்று சரேலென்று விலகிப் போய், சந்திரிகாவின் அறையில் டேப் ரிக்கார்டரை

வைக்கப் போனார். கவிதா திகைத்துப் போய் அமர்ந்து விட்டாள்.

ஒரு மாதிரியாகத் தேற்றிக் கொண்டு அப்போதுதான் உள்ளே நுழைந்தது போல் இருவரும் நுழைந்தார்கள்.

கவிதாவும் எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

சந்திரிகா ஆழ்ந்த யோசனையோடு மௌனமாகச் சாப்பிட்டாள். சாருமதி தவித்துப் போய் விட்டார்.

"ஏன், சந்திரி.. உடம்பு.. சரியில்லையா.. என்னவோ எப்படியோ இருக்கே.. ஏம்மா?" என்று திரும்பத் திரும்பக் கேட்டார்.

கேசவன் கூடச் சந்திரிகாவைக் கேள்விக் குறியோடு பார்த்தவர், பிறகு, "விடு.. சாருமதி.. அவளுக்கு ஏதோ மூட் சரியில்லை. இந்தப் பிரேம் பய வேற வந்து மூணு நாலு நாளாச்சு!" என்று கிண்டல் செய்து சிரித்து, சூழ்நிலையை இதமாக்க முயன்றார்.

சரியாக அந்த நேரத்துக்குப் பிரேம் வந்தான்.

கவிதா முகத்தை உர்ரென்று வைத்துக் கொண்டு, சாருமதியிடம் போய், "அக்கா.. நான் கிளம்பறேன்," என்றாள்.

சாருமதி, "வேண்டாம்.. கவிதா.. உடனே கிளம்பாதே. கொஞ்ச நேரம் இருந்துட்டுப் போ!" என்றார்.

அவளும் சோஃபாவில் போய் அமர்ந்து கொண்டாள். சந்திரிகா பிரேமிடம் கூடச் சரியாகப் பேசவில்லை. தன் அறைக்குப் போய் விட்டாள்.

நிலைமையைச் சமாளிக்கக் கேசவன், "வாப்பா.. பிரேம். நாம கொஞ்ச நேரம் முன்னாடி சிட் அவுட்ல உட்கார்ந்து பேசலாம்," என்று அழைத்துப் போனார்.

"அங்கிள்.. ஏன் சந்திரிகா ஒரு மாதிரி இருக்கா?" என்று கேட்டான்.



கேசவன் நடந்ததைச் சொன்னார்.

"என்னப்பா.. இது இந்த லேடீஸ் மனசையே புரிஞ்சுக்க முடிய மாட்டேங்குது. நேத்து என்னாச்சு தெரியுமா? உங்க ஆன்ட்டி வந்து.. சந்திரியை நினைச்சா... எனக்குப் பொறாமையா இருக்குங்கறா. ஏமாங்கறேன். எப்படி உங்க மனசு பூரா இடம் பிடிச்சு வச்சிருக்கா, அப்படிங்கறா. நான் அதிர்ச்சியாய்ப் பார்க்கறேன். ஐயய்யோ. நான் பாலிட்டிக்ஸ்வா கலாட்டா செய்தேன். உங்களுக்குத் தெரியாது, சந்திரிகா என்கிட்டே காட்டற கள்ளமில்லாத பிரியம்.. ரொம்ப உசத்தியானது. என்னமோ.. நானே அவளைப் பெத்து வளர்த்த மாதிரி நினைக்க ஆரம்பிச்சிட்டேன். அப்படிங்கறா," என்றார் நெகிழ்ச்சியுடன்.

"ஆனா.. இன்னைக்குச் சொந்தத் தங்கச்சியப் பிடிச்சி அந்த வாங்கு.. வாங்கறா," என்றார்.

பிரேம்குமார் உடனே சென்ற வாரம் நடந்த நிகழ்ச்சி ஒன்றைச் சொன்னான். போன வாரம் ஒரு நாள் சந்திரிகா அவன் தோளில் சாய்ந்து கொண்டு, ஏன், பிரேம்.. மனசு ரெண்டு விதமா வேலை செய்யுமா, என்ன?" என்று கேட்டாள்.

"ஏன்டா.. அப்படிக் கேட்கிறே?" என்றான் அவன்.

"இல்லை.. அப்பாவுக்குச் சாரும்மா அமைந்தது ரொம்பச் சந்தோஷமாய் இருக்கு. ஆனா.. என்னைவிட அவங்களுக்குத் தான் உரிமை அதிகம்னு நெனைக்கறப்போ.. பொறாமையாகவும் இருக்கு!" என்றாள்.

அவன் சிரித்தான். "அசடு.. உனக்குண்டான இடம் உனக்கு, அவங்களுக்கு உண்டான இடம் அவங்களுக்கு. குழப்பிக் காதே," என்றான்.

"சரிதான்." என்று ஏற்றுக் கொண்டாள். அதைச் சொன்னான்.

கேசவன் சற்று நேரம் சிந்தனையிலாழ்ந்தார். "ஆமாப்பா.. இதெல்லாம் ஒரு வகைப் போட்டிதான். உன்னோட அன்பு.. பெரிசா, என்னோட அன்பு பெரிசான்னு. ஆனா, சந்திரிகா அதை பாஸிட்டிவா வெளிப்படுத்தறா. பாரு.. அந்தக் கவிதா.. நெகட்டிவா வெளிப்படுத்தறா," என்றார்.

அந்த நேரம் சந்திரிகா இறங்கி வந்தாள். மீண்டும் பழையபடி கலகலப்பாகி விட்டாள். அதைப் பார்த்துக் கேசவனும் பிரேம் குமாரும் ஹாலுக்கு வந்தார்கள். சற்று நேரம் எல்லாரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

கவிதா, "நான் கிளம்பறேன்," என்று கிளம்பினாள். அப்போது சந்திரிகா அவள் கையைப் பிடித்துக் கொண்டு, "கவிதாக்கா.. நான் உங்ககிட்டே கொஞ்சம் பேசணும். வாங்க," என்று அழைத்துப் போனாள்.

சாருமதி அந்தப்புறம் சமையலறையில் இருந்தார். கேசவனும், பிரேம்குமாரும் திடுக்கிட்டுப் போய்ப் பின் தொடர்ந்து போய்ப் பார்த்தார்கள்.

சந்திரிகா கவிதாவின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். பிறகு சொன்னாள்.

"கவிதாக்கா.. நீங்களும் சாரும்மாவும் பேசியதை நான் கேட்டேன். அம்மாவை நான் எக்ஸ்பிளாய்ட் பண்றதாச் சொன்னீங்க!" எனவும், இதை எதிர்பாராத கவிதா திகைத்துப் போய் நின்றாள்.

"கவிதாக்கா, நான் எங்கப்பாவுக்கு உடம்பு சரியில்லாமப் போனதுக்கப்புறம்தான் ஒரு அப்பாவின் அருமையை, அன்பின் அருமையை எல்லாம் உணர்ந்தேன். தனிமையில தவிக்க நினைப்ப.. பிரேம்.. வந்தார். அன்பையும்.. பிரி யத்தையும் வாரிக் கொடுத்தார்.

"அப்பாவை எப்படிடா தனியாய் விடறதுன்னு யோசிச் சப்ப.. ராம் பிரகாஷ் அங்கிள் எங்களுக்குச் சாரும்மாவை



அறிமுகப் படுத்தினார். ரெண்டு பேரோட தனிமையும் போகும், எனக்கும் அம்மா.. அப்பா கிடைப்பாங்கன்னுதான் யோசிச்சேன். வேற எந்த உள்நோக்கமும் இல்லை."

"சந்திரி..." என்று கவிதா ஏதோ சொல்ல ஆரம்பிக்கவும், "இருங்கக்கா.. நான் பேசிடறேன்," என்றாள். "அக்கா! இந்த வீட்ல.. நாங்க பொருட்களுக்கு முக்கியத்துவம் குடுக்கற தில்லை. உணர்வுகளுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக் கறோம். அக்கா... இந்த வயசுக்கு.. எனக்கு.. ஏற்பட்ட பிரச் சினைகள்ல நான்... ஒண்ணு புரிஞ்சுகிட்டேன். பணம் இன் னைக்கு வரும். நாளைக்குப் போகும். ஆனா, அன்பு மட்டும் தான் வாழ்க்கை பூராவுக்கும் வருங்க்கா. ஆரும்ங்கறதுதான் அது.. அதை நாங்க உங்களுக்கும் நிறையத் தரத் தயா ராயிருக்கோம். சாரும்மா... ஏதோ கோபத்திலே பேசிட் டாங்க. நீங்க எப்பவும் போல வரலாம். உங்களுக்கும் இது பிறந்த வீடுதான்," என்றாள்.

கவிதா வாயடைத்துப் போனாள். "தாங்க்ஸ் சந்திரி," என்று கூறி அசடு வழியத் தலையாட்டி விட்டுக் கிளம்பினாள்.

அறை வாசலில் கேசவனும் பிரேம்குமாரும் நிற்பதைப் பார்த்து, இன்னும் வழிந்து விட்டு, "நான் வரேன்," என்று போனாள்.

பிரேம்குமார் சந்திரிகாவின் முகத்தைப் பார்வையால் விழுங்கிக் கொண்டிருந்தான்.

"என்ன நடக்குது இங்கே?" என்று வந்த சாருமதியை அவன் கண்டு கொள்ளவேயில்லை.

"ஷ்..." என்று வாயில் விரல் வைத்துக் காட்டிய கேசவன், சாருமதியை அந்தப்புறம் அழைத்துக் கொண்டு போக.. திரும் பிய சந்திரிகா பிரேமின் பார்வை பார்த்துப் புன்னகைத்தாள்.

ஒரே எட்டில் அவளை நெருங்கிய பிரேம்குமார் இறுக அணைத்துக் கொண்டான். "ஹேய்.. சந்திரி.. மை ஸ்வீட் டார்லிங்," என்று கொஞ்சி மகிழ்ந்தான்.

அவன் கனவில் இருப்பது போல அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"நான் சொன்னது நிஜம்தானே... பிரேம். கடைசியில்.. என்ன மிச்சம்.. அன்புதானே?" என்றாள்.

"தட்ஸ்.. ட்ரூ.. மை.. ஸ்வீட் ஹார்ட்! தட்ஸ் ட்ரூ..." என்று மனதார ஒத்துக் கொண்டான்.

## 24



அறையில் காத்துக் கொண்டு இருந்தான் பிரேம்குமார்.

திருமணம் முடிந்து மூன்று நாட்கள் ஆகி இருந்தன. வெகு சிறப்பாக நடந்து முடிந்திருந்தது.

"எங்கள்.. அந்தரங்கம்.. அதை எல்லோரும் அறிய நடத்த வேண்டியதில்லை," என்று ராம்பிரகாஷிடம் பிரேம்குமார் அழுத்தமாகச் சொல்லியிருந்தான். அதனால் உறவினர் கூட்டமெல்லாம் போன பிறகு, இன்றைக்கு முதலிரவு என்று முடிவு செய்திருந்தார்கள்.

திருமணம் நடந்த விதம் பற்றி அசை போட்டுக் கொண்டிருந்தான்.

சிரித்துக் கொண்டான். சந்திரிகா மனசு போலவே எல்லாம் நிறைவாக நடந்து முடிந்திருந்தது. அவள் விருப்பம் போலவே நகரின் எல்லா அனாதை இல்லங்களிலும், முதியோர் இல்லங்களிலும் நல்ல உணவு வழங்க ஏற்பாடு செய்திருந்தான்.

இரண்டு பக்கத்தவர்களும் ஆர்வமாகப் பொறுப்பெடுத்துக் கொண்டு காரியங்களை வெகு செம்மையாக நடத்திக் கொடுத்திருந்தார்கள்.



சந்திரிகாவின் அறையில் இருந்த அவளது டிரஸிங் டேபிளில் இருந்த அலங்காரப் பொருட்களை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்து விட்டு வைத்தான். கண்ணாடியில் பார்த்துத் தலை கோதிக் கொண்டான்.

'என்ன செய்கிறாள் இன்னும்?' என்று எண்ணிக் கொண்டான்.

கீழே சந்திரிகாவைக் காணாமல் தேடிய சாருமதி சமையலறையில் அவள் தயங்கியபடி நிற்பதைப் பார்த்துத் தனக்குள் புன்னகைத்தபடி நெருங்கினார்.

"என்ன சந்திரிம்மா.. பிரேம்.. ரூமுக்குப் போய்ப் பத்து நிமிஷத்துக்கு மேல ஆச்சு!" என்றார்.

சந்திரிகா வெட்கத்துடன் அவரை நிமிர்ந்து பார்த்து விட்டு, "எனக்குப் பயமாயிருக்கு." என்றாள்.

சாருமதி வாஞ்சையாய்ப் புன்னகைத்தார். "நல்ல பொண்ணும்மா.. பிரேம்கிட்ட என்ன பயம். இதெல்லாம் வாழ்க்கையில ஒரு அம்சம்தானே... ஓடு.. ரொம்பக் காக்க வைக்காதே!" என்று செல்லமாக மிரட்டி அனுப்பி வைத்தார்.

தயக்கமும், வெட்கமும் கலக்கமுமாய் வந்து நிற்கிற தன் மனைவியைப் பார்த்துப் பிரேம்குமார் புன்னகைத்துக் கொண்டான். கதவை அவனே சாத்தினான்.

கட்டிலில் தன் கைப்பிடியில் சாய்த்துக் கொண்டான்.

"ஹேய்... இவ்வளவு நேரம் என்ன செய்தே! இங்க ஒருத்தன் காத்துக்கிட்டிருக்கிறது தெரியலையா என்ன?" என்றான்.

"அதுதான் பயம்," என்றாள் அவள் வெட்கத்துடன்.

"ஹேய்..." என்று கலகலவென்று சிரித்தான். "பெரிய பிஸினஸ் மேக்னட்! ஜுவல் டிசைனர்! இத பார்றா... பயமாம்!" என்று சிரித்தான்.

"அது வேற.. இது வேற," என்றாள் சந்திரிகா.

அவன் மென்மையாக அணைத்துக் கொண்டான். "ஒன்னும் பயப்படத் தேவையில்லை. தேவியாருக்கு எப்படிப் பிடிக்குதோ... அப்படி.. என்ன..! இப்பக் கொஞ்ச நேரம் பேசிக்கிட்டிருக்கலாமா?" என்றான்.

"ம்..." என்றாள். பிறகு அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு, "உங்களை யாரு அப்படியெல்லாம் சொல்லச் சொன்னாங்க. அதுவும் அப்பாகிட்ட போய்," என்றாள்.

"அப்படி.. என்ன சொன்னேன்?" என்றான் கேள்விக்குறியாய்.

"பாரதியார் என்னுள்ளே நிறைந்தாய்ன்னு சொன்ன மாதிரி உங்க மக எனக்குள்ளே பூராவும் நிறைஞ்சிருக்கான்னு சொன்னீங்களாம். அப்பா அதை அம்மாகிட்ட சொல்லி, அவங்க ராம்பிரகாஷ் அங்கிள்கிட்டே சொல்லி.. அவரு என்னை ஒரே கலாட்டா பண்ணி மானத்தை வாங்கறாரு..." என்றாள் புகார் போல.

அவன் அவளை ரசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

"நிஜந்தானே.. சொன்னேன்!" என்றான்.

அவள் ஒன்னும் சொல்லத் தெரியாமல், சற்று நேரம் அவன் சட்டைப் பட்டனைத் திருகிக் கொண்டிருந்தாள். அவன் கிறக்கமான குரலில் -

"ஏன் அப்படிச் சொன்னேன்னு கேட்க மாட்டியா?" என்றான்.

"ஏனாம்?" என்றாள்.

"சந்திரி.. உங்கப்பா ஆஸ்பத்திரியில் இருந்தப்போ எல்லாவு இக்கட்டான நிலைமை. வேறொரு பெண்ணா யிருந்தா.. ஒன்னு, எனக்கு மட்டும் ஏன் இப்படின்னு நொறுங்கிப் போயிருப்பாங்க. இல்லை.. பைத்தியம் பிடிச்சிருக்கும். ஆனா.. நீ எதையும் யோசிக்காம களத்திலே இறங்கி ஃபைட் செஞ்சியே.. அப்ப ஒரு இருபது பர்சென்ட் என் மனசிலே இடம் பிடிச்சே."



"ம்," என்றாள்.

"அப்புறம் உங்கப்பாக்குச் சுயநினைவு வந்தப்ப.. அவர் முகந்தடவிப் பாசத்தைக் கொட்டினியே.. அப்ப ஒரு இருபது பர்சென்ட்!" என்றான்.

"அப்புறம்.. அந்த வித்தியா.. விஷயத்துல பொறாமைப் பட்டியே.. அப்ப ஒரு பத்துப் பர்சென்ட்," என்றான். குரல் தீவிரமாக இருந்தது.

"அப்பதான்.. உனக்கு ஒரு பரீட்சை வைச்சேன்," என்றான்.

அவள் சட்டென்று விலகி அவன் முகம் பார்த்தாள்.

"ஆமா.. பரீட்சைதான்," என்றான்.

அவள் அவன் முகத்தைக் கண் கொட்டாமல் பார்த்தாள்.

"நீ உங்கப்பாவை ரொம்ப நேசிக்கிறேன்னு எனக்குத் தெரியும். எப்படிப் பிரிஞ்சு இருப்பேன்னு தயங்கினே. ஆனா.. ஒருத்தர் மேல வருகிற அன்பு எப்ப முழுமையாகும் தெரியுமா.. அவங்களுக்காக அவங்க நிலைமையில யோசிக்க. எல்லாத்தையும் விட்டுக் கொடுக்கிறப்ப. அதனாலதான் சாருமதி ஆன்ட்டியை உனக்கு அறிமுகப்படுத்திட்டு.. நான் ஒதுங்கி நின்னு வேடிக்கை பார்த்தேன். ஏன் பிரேம்.. அப்பாவுக்கு.. ஒரு கல்யாணம் செஞ்சாலாமான்னு கேட்டியே. அப்பதான் இன்னொரு நாப்பது பர்சென்ட்!" என்று சிரிச்சான்.

"தொண்ணூறு பர்சென்ட்தானே ஆச்சு? இன்னொரு பத்து பர்சென்ட் இருக்கே," என்று அவள் குறும்பாகச் சிரிக்க, அவன் முகம் நோக்கிக் குனிந்தான். சற்றுக் கழித்து நிமிர்ந்தான்.

அவள் விக்கித்துப் போனாள். அவன் தோளில் முகம் பதித்துக் கொண்டு இருந்தவள் நிமிரவில்லை.

"அன்றைக்குக் கவிதாவுக்குப் புத்திமதி சொன்னியே.. அப்ப, 'நாங்க இங்க பொருட்களுக்கு மதிப்புக் குடுக்கறதில்லை

உணர்வுகளுக்குத்தான் மதிப்புக் கொடுக்கறோம்!'னு.. சொல்லி அனுப்பிட்டு, 'நான் சொல்றது நிஜம்தானே! அன்புதானே கடைசியா.. மிஞ்சறது பிரேம்!'ன்னு.. பார்த்தியே. அன்னைக்கு..'' என்றவன் அவளைச் சற்று நேரம் பதில் பேச விடவில்லை.

அவள் அவனிடமிருந்து வெட்கத்துடன் விலகிக் கொண்டாள். அவளைத் தாபத்துடன் பார்த்தபடி, ''எங்கெங்கேன்னு கேட்க மாட்டியா?'' என்றான்.

பதில் பேசவில்லை.

''இங்கே இதயத்துக்குள்ளே.. மனசுக்குள்ளே... அதைத் தாண்டி ஆத்மாவுக்குள்ளே!'' என்றான். அவள் உருகிக் கரைந்தாள்.

''கவிதாவுக்கு நீ பதில் சொன்ன விதம் பார்த்துட்டு வீட்டுக்குப் போனதுக்கப்புறம் அம்மாகிட்டே சொன்னேன்.

''அம்மா.. இப்பதான். கேசவன் அங்கிள் செட்டிலாயிட்டாரே.. சீக்கிரம் கல்யாணத்துக்கு.. நாள் பாருங்கன்னு,'' என்று சிரித்தான்.

''ஓ.. அதுதான்.. அத்தை என்னைப் பார்த்துக் கிண்டலா சிரிக்கக்கிட்டே இருந்தாங்களா!'' என்றாள். பிறகு.. ''பிரேம், நீங்களும்தான் என் மனசு பூராவும் நிறைஞ்சிருக்கீங்க,'' என்றாள்.

''சும்மா சொன்னா எப்படி? நிரூபிச்சுக் காட்டு,'' என்றான்.

''இனிமே வாழ்க்கை பூரா அதைத்தானே செய்யப் போறேன்,'' என்று அவள் சொல்லவும்,

''இல்லாட்டி விட்டு விடுவோமா?'' என்றான் - இழைந்து நெருங்கியபடி.

''பிரேம்.. சாரும்மா.. சொல்றாங்க. உங்களை மாதிரியே.. ஒரு பேரக் குழந்தை வேணுமாம். நானும் நீங்களும் உலகம் பார்க்கக் கிளம்பிட்டாலும், அவங்க பொறுப்பா வளர்த்துக் கொடுப்பாங்களாம்,'' என்றாள்.



''இரண்டாவது.. சொன்னியே.. அதை வேணா.. இப்போது பார்க்கலாம். குழந்தை எல்லாம் குறைந்தது ஒரு வருஷத்துக்குப் பேசக் கூடாது,'' என்றான்.

''ஏன்?'' என்றாள்.

''என்ன ஏன்னு கேட்கறே. ஏற்கெனவே ஒன்றரை வருஷம் காத்திட்டிருந்தாச்சு. அப்புறம், குழந்தைன்னு வந்தா, நாலடி தள்ளியே நிக்க வச்சிருவீங்க,'' என்றான்.

பிறகு, ''தேவி.. நீயே ஒரு குழந்தை. நானும்தான். நமக்குப் புரிஞ்சுக்க வேண்டிய விஷயங்களே நிறைய இருக்கு,'' என்றான்.

''ஐயோ... ரொம்பக் குழந்தை போங்க,'' என்று அவளும் கிண்டல் செய்தாள். அவன் ஆழப் புன்னகைத்துக் கொண்டான்.

தந்தைக்கே தாயாகிக் கனிந்த அந்தப் பெண்ணுக்குக் காதலில் எப்படிக் கரைவது என்ற பாடங்களை மெல்லச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தான்.

கிறக்கக் குரலில், ''தேவி.. உன்னோட அன்பு எப்படி உலகளாவியதோ.. அது மாதிரி.. என் காதலும் உலகளாவியது தான். இந்த மாசமே.. அமெரிக்கா கிளம்பறோம். இரண்டு மாசம் கழிச்சு.. லண்டன்.. அப்புறம் ஆஸ்திரேலியா. எல்லாப் பாடத் திட்டத்திலேயும் மாறாத ஒரு விஷயம் இருக்கு,'' என்றான்.

''என்ன?'' என்றாள்.

''இதுதான்! இப்ப நடக்குதே.. இதுதான்!'' என்று அவன் சிரித்தான்.

''ஐயோ.. பொருளாதார வல்லுநர் ஆரம்பிச்சுட்டார்,'' என்று அவள் சிரித்தாள்.

''கோல்ட் மார்க்கெட் நிலவரம் தெரியணுமில்லை?'' என்று அவன் பதில் கொடுத்தான்.

"கோல்ட் மார்க்கெட்!" என்று அவள் விழித்தாள்.

"ஆமாம். தங்கப் பெண்ணே!" என்றான் குறும்பாக.

"ஐயோ.. பிரேம்!"

இருவரும் சிரித்தார்கள்.

நேரம் ஓடியது.

அன்பின் வடிவான இரண்டு இளம் உள்ளங்கள் காதலும் அன்பின் பூரண வடிவம்தான் என்று கற்றுக் கொள்ள ஆரம்பித்தார்கள்.